T. 3791

# ஆராய்ச்சிக் கட்டுரைகள்

முதல் தொகுதி

டாக்டர். ந. சஞ்சீவி.

# ஆராய்ச்சிக் கட்டுரைகள்

## முதல் தொகுதி

**டாக்டர் ந. சஞ்சீவி,** எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
டிப். மானிடவியல்,
டிப். அரசியல்-ஆட்சியியல்.
தமிழ்த்துறைத்தலைவர், பச்சையப்பர் கல்லூரி, காஞ்சீபுரம்.
*(1950—1960)*
துணைத்தமிழ்ப் பேராசிரியர் சென்னைப் பல்கலைக்கழகம்.
*(1960— )*

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**
59, பிராட்வே · சென்னை-1.

விலை: ரூ. 7-00

பரிதிமாற்கலைஞர் நூற்றாண்டு வெளியீடு, 1970.
ரா. இராகவையங்கார்

உரிமை ஆசிரியருக்கே

## ஆசிரியரின் மற்ற நூல்கள்

### இலக்கியம்:

ங்ககாலச் சான்றோர்கள்
ணர்வின் எல்லை
லம்புத்தேன்
லப்பதிகார விருந்து
ாற்றிலே மிதந்தவை
டிவெள்ளி வேதநாயகர்

### ரலாறு:

ானங்காத்த மருது பாண்டியர்
ருதிருவர்
306
ம்மந்தான் கான்சாகிபு
வலூர்ப் புரட்சி
ருபெருந்தலைவர்கள்
ரத்தலைவர் பூலித்தேவர்

### ாது:

ந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்

---

முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம்.

**உரிமையுரை**

ஆராய்ச்சித் தமிழ் வளர்த்த
ஆண்மையாளர்

**நற்றமிழர்—நாவலர்**

**டாக்டர்.**

**ச. சோமசுந்தர பாரதியார்** எம். ஏ , பி. எல்.

**அவர்கள்**

நல்வீர நினைவுக்கு

## நன்றியுரை

அணிந்துரை அருளிய ஆராய்ச்சி அறிஞர், டாக்டர் **கமில் சுவெலபில்** அவர்கட்கும், எட்டாண்டுக் காலமாய்த் தாயுள்ளத்தோடு **'ஆராய்ச்சிக் கட்டுரை'**களைத் தமது முத்தமிழ் அச்சக மணி வயிற்றில் வைத்துக் காத்த ஆருயிர் நண்பர் திரு.சி. **காளப்பர்** அவர்கட்கும் எளியேன் நன்றி என்றும் உரியது.

வழக்கம் போல அச்சுத்தாள்களை வழுவின்றித் திருத்தி உதவிய பெரும்புலவர் — பேராசிரியர் — **மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை** அவர்கள் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

**ந. சஞ்சீவி**
**15—8—'70**
இந்திய விடுதலைத் திருநாள்
*(திருவள்ளுவர்-2001)*

# FOREWORD

**Ceskoslovenska Akademie Ved V Praze dne**
**Orientalni Ustav 1-11-1962**
**Lazenska 4, Praha 1- Mala Strana**
**tel. 663-19, 663-96**

Mr. N. Sanjeevi has a knack for choosing most interesting themes for his essays, written in the best of style, in alliterative, chaste prose of very high order. The present volume of his essays shows above all the surprising width of his interests–he is equally well versed in history, in literary criticism and in philology. Take for instance his essay on Tamil loan words in Malay; though I cannot agree with all of his identifications and though I think that he has slightly over estimated the Tamil influence on Malay, yet his is the first really thorough and detailed treatment of this highly important subject, a firm point of departure for all future research in this direction. On his essay on the art of essay-writing in Tamil; here, again, in spite of certain reservations I have towards his-for my taste-too high and too noble style, I think that it is easily the best which has ever been written on this subject in Tamil. It has given me a lot of pleasure to read his detailed and most devoted report on the life and work of Prof. R. P. Sethu Pillai whom I had the privilege to know personally. Equally important and path-breaking are the other two contributions to this volume.

I hope that in future Mr. N. Sanjeevi will bring out more of such outstanding works which combine critical approach with ardent love for Tamil and with conscious effort after the best style possible.

**Sd. Dr. Kamil Zvelebil, C. Sc.,**
**Oriental Institute,**
**Prague.**

(TRUE COPY)

# அணிந்துரை

**டாக்டர் கமில் சுவெலபில்**

**செக்ஸ்லோவாகிய**

*கீழகக் கலை ஆராய்ச்சிக் கழகம், லாவென்ஸ்கா—4*

**பிராகுவா—1.**

***1—11—1962***

கருத்தைப் பெரிதும் கவரும் பொருள்களைக் கண்டெடுத்துக் கட்டுரைகள் வரைவதில் திரு. ந. சஞ்சீவி அவர்கள் தனித் திறமை வாய்ந்தவர். நல்ல தமிழில் எதுகை மோனை கலந்த இன்னொலி மிக்க மிகச்சிறந்த உரைநடையில் எழுதுவதிலும் அவர் வல்லவர். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்தம் இக்கட்டுரைத் தொகுப்பு அவருடைய வியத்தகு ஈடுபாடுகளின் அகலத்தைக் காட்டுகிறது. வரலாறு, இலக்கியத் திறனாய்வு, ஒப்பிலக்கணம் முதலிய பல துறைகளிலும் ஒத்த புலமையுடையவராய் அவர் சிறப்புற்றிலங்குகிறார். சான்றாக, 'மலாய் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள்' என்ற கட்டுரையைக் காணலாம். தமிழ் மொழிச் சொற்கள் என்று அவர் அடையாளங் கண்டு காட்டும் மலாய்ச் சொற்கள் எல்லாவற்றையும் நான் தமிழென்று ஒப்புக்கொள்ளத் தயங்குகின்றேன். மலாய் மொழியில் தமிழ் பெற்றிருக்கும் செல்வாக்கினை அவர் சிறிது மிகைப்படுத்திக் கூறுகின்றார் என்றும் நான் கருதுகின்றேன். எனினும், மிக்க சிறப்பு வாய்ந்த இப்பொருள் பற்றி முதன்முதலாக மிக விரிவாகவும் தெளிவாகவும் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சி அவருடையதே என்பதை நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன். இத்துறையில் எதிர்கால ஆராய்ச்சிக்கு வழி காட்டும் வகையில் அவர் பழைய பாதையிலிருந்து விலகி, நிலையாகத் தமக்கென்று ஒரு தனி வழியை அமைத்துக்கொண்டிருக்கிறார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அடுத்துக் 'கட்டுரைக்கலை' பற்றிய அவருடைய கட்டுரையைக் காணலாம். இதிலும் மிக உயர்ந்த சிறந்த நடைபற்றிய அவருடைய கருத்துகள்

சிலவற்றில் எனக்கென்று சில தயக்கங்கள் இருந்தாலும், இப்பொருள் பற்றி இதுவரை தமிழில் எழுதப்பட்ட எவற்றினும் இதுவே மிகச் சிறந்த கட்டுரை என்று எளிதில் கூறலாம் என்று எண்ணுகிறேன். பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளையை நேரிற்கண்டு பழகும் பேற்றினைப் பெற்ற யான், அவருடைய வாழ்வும் தொண்டும் பற்றி விளக்கமும் வழிபாட்டுணர்ச்சியும் நிறைந்த கட்டுரையைப் படித்துப் பேரின்பம் பெற்றேன். இதைப் போன்றே இந்தத் தொகுதியி லுள்ள மற்ற இரு கட்டுரைகளும் சிறப்பு வாய்ந்தனவும் புது வழி திறப்பனவும் ஆகும்.

ஆராய்ச்சி நோக்கும், ஊற்றமிக்க தமிழ்க்காதலும், ஒல்லும் வகையெல்லாம் சிறந்த நடையில் எழுதவேண்டும் என்ற உணர்வும் இணைந்தும் இழைந்தும் விளங்கும் இத் தகைய சிறப்பு மிக்க நூல்கள் இன்னும் பலவற்றை வருங் காலத்தில் திரு. ந. சஞ்சீவி அவர்கள் வழங்குவார்கள் என நான் நம்புகிறேன்.

**டாக்டர். கமில் சுவெலபில்**, சி. எஸ்சி.,
கீழகக்கலை ஆராய்ச்சிக் கழகம்,
**பிராகுவா.**

**தமிழாக்கம்**

பேராசிரியர்
**க. த. திருநாவுக்கரசு,**
எம். ஏ., எம். லிட்.,
டிப். மானிடவியல்
திருக்குறள் ஆராய்ச்சித் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்

## உள்ளுறை

அணிந்துரை

நன்றியுரை

1. பதிற்றுப்பத்துள் மூன்றும் பத்து — 1

2. மலாய் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள் — 62

3. தமிழர் உலகுக்கு வழங்கியவை — 121

4. கட்டுரைக்கலை — 150

5. பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் பெருந்தமிழ்த்தொண்டு — 192

இணைப்பு — 251

# 1

# பதிற்றுப் பத்துள் மூன்றும் பத்து[1]

## 1. முன்னுரை

செந்தமிழ்க் காவலராய்ச் சிறந்து விளங்கும் தலைவரவர்களே, தமிழ்ப்பெருமக்களே, வணக்கம்!

சங்கம் மருவிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாய் விளங்கும் பெருமை சான்றது பதிற்றுப் பத்து. இலக்கியச் சிறப்பும் வரலாற்று மாண்பும் ஒருங்கே பெற்று விளங்கும் இச்சீரிய தொகைநூல் பத்துப்பத்து அகவற்பாக்கள் உள்ள பத்துப் பகுதிகளைத் தன் அகத்தேகொண்டு திகழ்வதால், பதிற்றுப்பத்து என்னும் பெயரைப் பெறலாயிற்று என்பதை அறிஞர் அறிவர். ஆசிரியப்பாவினால் இயன்ற புறப்பொருள்பற்றிய நூறு செய்யுள்களைத்

1. பதிற்றுப்பத்து மாநாட்டுச் சொற்பொழிவு.

தன்பால் கொண்டிருப்பினும், ஒவ்வொரு பத்தும் தனித்தனியே ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்று, ஒவ்வொரு பேரரசரைப் பாராட்டுவதனால், இந்நூல் பத்து வேறு பகுதிகளாகியது.

எட்டுத்தொகை நூல்களுள் பல்வகையாலும் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு பெருநூல் பதிற்றுப் பத்து எனல், மிகையாகாது. படைப்புக் காலந் தொட்டு நம் இன்பத் தமிழகத்தில்—தாயகத்தில்—மேம்பட்டு வரும் குடிகள் சேர சோழ பாண்டியர் எனப்படும் மூவேந்தர் குடிகளாகும். 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்றார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார். தமிழகத்தைக் கோல் கோடாது ஆட்சி புரிந்த சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் வரிசையுள் முதன்மை படைத்தவர் சேரமன்னரே ஆவர். அவர்களது பெரும்புகழை முற்றிலும் விரித்துப் பேசும் பெற்றியுடைய சங்கநூல் பதிற்றுப்பத்தே ஆகும். புறநானூறு போன்ற பிற சங்க நூல்களால் ஒரு சில சேர மன்னர்களைப்பற்றி நாம் அறியலாமெனினும், அச்சேர மன்னர்களின் வரலாற்றையும் சிறப்பையும் முழுவதும் விரித்துரைக்கும் விழுமிய நூலாய் விளங்கும் சீர்மை இப்பதிற்றுப்பத்திற்கே உரியதாகும்.

இந்நூலில் அமைந்துள்ள பத்துப் பகுதிகளையும் பாடிய புலவர் பதின்மர். ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சேர வேந்தனைப்பற்றிப் பேசுகிறது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம்,

தூக்கு, பெயர் என்பவற்றை விளக்கும் குறிப்புகள் அமைந்துள்ளன. துறையின் பெயர் பிற தொகை நூல்களில் இருப்பினும், வண்ணம், தூக்கு, பெயர் என்பன அவற்றில் காணப்படவில்லை. பதிற்றுப்பத்தில் உள்ள ஒவ்வொரு பாட்டிலும் பொருளாற் சிறப்புடைய தொடர் ஒன்றே அவ்வப் பாட்டின் பெயராய் அமைந்திருக்கும் அருமை எண்ணி எண்ணி இன்புறற்குரியது. ஒவ்வொரு பத்தின் முடிவிலும் அப்பத்தின் பாட்டுடைத் தலைவன் பெயரும், செயல்களும், அவனைப் பாடினோர் பெயரும், பத்துச் செய்யுள்களின் பெயர்களும், பாடிய புலவர் பெற்ற பரிசிலும், சேர அரசன் ஆண்ட கால அளவும் ஒவ்வொரு பதிகத்தால் குறிப்பிடப்பட்டுள்ளன.

பண்டு சேரநாட்டை ஆண்ட சேரமன்னர் இரு கிளையினராகக் காணப்படுகின்றனர். ஒரு கிளையினர் உதியன் சேரலாதன் வழியினர். மற்றொரு கிளையினர் இரும்பொறை வழியினர். இவருள் முன்னவர் வஞ்சியைத் தலைநகராகக்கொண்டு உள் நாட்டுப் பகுதியினையும், பின்னவர் தொண்டியைத் தலைநகராகக்கொண்டு கடற்கரைப் பகுதியையும் ஆட்சி புரிந்தனர். இவ்விரு வழியினரும் தாயத்தினராவர். இவர்களுள் எண்மரைப் பற்றிய வரலாறு இப்பொழுது நாம் காணக்கிடைத்துள்ள பதிற்றுப் பத்துப் பாடல்களால் உணரப்படுகிறது. அவருள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்

சேரல், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் ஆகிய ஐவரும் உதியன் மரபினர். செல்வக் கடுங்கோ வாழியாதன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய மூவரும் இரும்பொறை மரபினர் ஆவர்.

## 2. பல்யானைச் செல்கெழு குட்டுவன்

இவருள் ஒருவனாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனே நாம் ஆராயப்புகும் மூன்றாம் பத்திற்குரிய பாட்டுடைத் தலைவன். புகழ் மலிந்த இவன் வரலாற்றுப் பெருமை மூன்றாம் பத்தைப் பாடி அருளிய பாலைக் கௌதமனார் பாடல்களாலும் அவற்றைத் தொடர்ந்து அமைந்துள்ள பதிகத்தாலும் ஒருவாறு நாம் உணர இயல்கின்றது.

எண்ணிலடங்காச் சேரவேந்தர்களுள் வரலாற்றுப் புகழ் வாய்ந்த முதற்பெரு வேந்தனாய் நமக்குக் காட்சி அளிப்பவன் உதியன் சேரலாதனே ஆவன். பாரதப் போரில் இருதிறப் பெரும்படைகளுக்கும் அப்போர் முடியும் வரை பெருஞ்சோறு அளித்து அழியாப்புகழ் கொண்ட வேந்தன் இவனே என்று அறிஞர் பாராட்டுவர். அத்தகைய பெரும்புகழ் வாய்ந்த உதியன் சேரலாதனுக்கு வெளியன் வேண்மாள் நல்லினி வாயிலாகப் பிறந்த மைந்தர் இருவராவர். அவருள் மூத்தோன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆவன்; இளையவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன். இச்செய்திகள்,

"மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்
... ... ... ... ...
இமைய வரம்பன் நெடுஞ்சேர லாதன்."

"இமைய வரம்பன் தம்பி அமைவர
... ... ... ...
பல்யானைச் செல்கெழு குட்டுவன்."

(பதிற்றுப்பத்து, பதிகம் : 2, 3)

எனவரும் பாடற் பகுதிகளால் இனிது விளங்கும்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் உதியன் மரபின் புகழ் விளங்கத் தோன்றிய முன்னோர்களுள் ஒருவன்; நிகரற்ற வீரத்திருவினன்; கொடை வளம் மிக்கவன்; கல்வி கேள்விகளாற் சிறந்து மெய்யுணர்வு நிரம்பப் பெற்றவன். இவ்வுண்மைகள் யாவும் இவன் புகழ் பாடும் பாலைக் கௌதமனார் பாடல்களாலும் மூன்றும் பத்திற்குரிய பதிகச் செய்யுளாலும், அதைத்தொடர்ந்து அமைந்துள்ள உரைநடைப் பகுதியாலும், சான்றோர் பிறர் வாக்காலும் தெள்ளிதிற்புலனாகும். போர்க்களத்தில் மாற்றார்க்கு அஞ்சாது முன்னின்று போர் உடற்றிப் பகைவர்தம் கொள்ளற்கரிய அரண்களை அழித்து வெற்றி தரும் விறல் மிக்க யானைகள் பல கொண்ட பெரும்படை உடைமையால், இச்சேரன் 'பல்யானைச் செல்கெழு குட்டுவன்' எனப் போற்றப்பட்டான். இவ்வுண்மையை 'அமர்கோள் நேரிகழ்ந்து ஆரெயில் கடக்கும் பெரும்பல்யானைக் குட்டு

வன்' என்ற பதிற்றுப்பத்து அடிகள் வலியுறுத்துகின்றன. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்பதற்குப் 'பல யானைகளாகிய மேகத்தையுடைய குட்டுவன்'' என்று பொருள் விரிப்பர் பேராசிரியர் மு. இராகவையங்கார்.[1]

### 3. பாலைக்கௌதமனார்

பாலைக்கௌதமனார் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் போற்றிப் பாடியுள்ள மூன்றாம் பத்துச் செய்யுள்கள் யாவும் தித்திக்கும் கரும்பனைய சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுதியாக உடையனவாகும். பாலைக்கௌதமனார் குட்டுவனது அரசவையில் நெடுங்காலம் இனிது உறைந்து அவன் அன்பையும் ஆற்றலையும் நன்குணர்ந்த பெரியார் என்பது அவர் பாடல்களை உணர்ந்து கற்பார் உள்ளத்திற்குப் புலனாகாமற்போகாது. பழம் பெருஞ்சேரவேந்தனாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனது பெருவரலாற்றை ஒருவாறேனும் நாம் இன்று உணர்ந்து இன்பக்களி எய்தத் துணைபுரியும் பாடல்கள் பாலைக்கௌதமனார் பாடல்களே என்று எண்ணும்போது நம் நெஞ்சம் நன்றி உணர்ச்சியால் விம்மிதம் அடைகிறது!

பாலைக்கௌதமனார் சங்க காலச் சான்றோர்களுள் தலை சிறந்த பெருமகனார் ஆவர். பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப்பெற்ற அந்நல்லிசைப் புல

1. சேரவேந்தர் செய்யுட்கோவை: முதல்தொகுதி, பக்கம், 10.

வர் பெருந்தகையார் ஒருசிறிதும் பொருள்நசையிலா உத்தமப் பண்பினராய் வாழ்ந்த தகைமையினை எண்ணுந்தொறும் மெய்சிலிர்க்கின்றது! புலவரைப் போற்றுவதையே வாழ்வின் சிறந்த பயனாகக் கொண்டு விளங்கிய குட்டுவன்பால் கௌதமனார் கேட்ட பரிசில் எது என்பதை மூன்றும் பத்தின் பதிகத்தைத் தொடர்ந்துள்ள உரைநடைப் பகுதி நமக்கு அறிவிக்கின்றது.

> "பாடிப்பெற்ற பரிசில், 'நீர் வேண்டியதுகொண்மின்' என, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்' என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்க, பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்."

இப்பகுதியைப் படிப்பார் நெஞ்சம் கல்லாயினும் அது கனலிற்பட்ட வெண்ணெயென உருகாதோ! புலன் அழுக்கற்ற அந்தணாளராகிய பாலைக் கௌதமனாரின் வேண்டுகோளைச் செவிமடுத்தவன் சேரவேந்தன். வேண்டுவோர்க்கு வேண்டுமவை வழங்கும் விறலுடையோனாகிய குட்டுவன், புலவர் பெருமானாரது வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தான். இச்செய்தியைப் பழமொழி பாடிய மூன்றுறை அரையனார் குறிப்பாகவும் அதன் பழைய உரைகாரர் வெளிப்படையாகவும் கூறியுள்ளனர்.[1] சேரர் குடியின் புகழ் விளங்கப் பிறந்த பெருமகனாராகிய இளங்கோ அடிகளும் இவ்வரலாற்றை,

1. பழமொழி—316

"நான்மறை யாளன் செய்யுள் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோன்." (சிலம்பு. 28:137-8)

என்று தம் காவியத்துள் பொன்னே போலப் போற்றியுள்ளார். மற்றும் உச்சிமேற்புலவர் கொள் நச்சினர்க்கினியர், 'இதில் இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனர் துறக்கம் வேண்டினரென்று குறிப்பு வகையாற் கொள்ளவைத்தலின், இது வஞ்சிப் பொருளில் வந்த பாடாணாயிற்று' (தொல். புறத்.25) என்று வரையும் உரைப்பகுதியும் ஈண்டுக் கருதற் பாலது. இவ்வாறு உரையாலும் பாட்டாலும் போற்றப்படும் இந்நிகழ்ச்சி இன்றும் மலைநாட்டில் கர்ணபரம்பரைக் கதையாய்,–சரித்திரமாய்–வழங்கி வருகிறதென்பர்.[1]

## 4. குட்டுவனின் முன்னோர்

இனி, பாலைக்கௌதமனரின் உள்ளம் கவர்ந்த உத்தமனகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பற்றிச் சிந்திப்போம்: குட்டுவன் முன்னோர் மாசிலாப் புகழ் வாய்ந்த பெருஞ்சிறப்புடைய வராவர். அவர் பெருமையைப் பாலைக் கௌதமனர் போற்றியுள்ள திறம் கற்பார்க்குக் கழிபேருவகை அளிப்பதாகும். 'குட்டுவன் முன்னோர் தம் குடி மக்கள் தீமை அகற்றி நன்மை புரிந்தும், பிறரை வருத்தாமலும், மற்றவர் பொருளை விரும்பாமலும், குற்றமற்ற அறிவினராய்ச் செவ்விய அறநெறியிலே

1. பதிற்றுப்பத்து: டாக்டர். உ. வே. சா. பதிப்பு, (1941) பக்கம், 18.

ஒழுகியும், தம் காதல் மனைவியரைப் பிரியாமல் இல்லறம் நடத்தியும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பியும், மூப்பும் பிணியும் இன்றி ஆண்டு பல வாழ்ந்தும், இன்பம் துய்க்கும்படி நெடுங்காலம் ஆட்சி புரிந்த வலியோர்,' என்று வாயாரப் போற்றியுள்ளார் வாய்மை தவருத சொல்லினராகிய புலவர் பெருமானர்.

"தீதுசே ணிகந்து நன்றுமிகப் புரிந்து
கடலுங் கானமும் பலபய முதவப்
பிறர்பிறர் நலியாது வேற்றுப்பொருள் வெஃகாது
மையி லறிவினர் செவ்விதி னடந்துதம்
அமர்துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
ஊழி யுய்த்த வுரவோர்." (பதிற்றுப்பத்து. 22 5-11).

என்பது காண்க.

## 5. கொடை வளம்

புகழ் சான்ற பெருமக்கள் கால்வழியிலே தோன்றிய குட்டுவன் அலந்தார்க்கும் இரந்தார்க்கும் அருள் மழை பொழியும் தண்முகிலாய் விளங்கினன்; புலவரையும் பாணரையும் போற்றிப் புகழ் கொண்டான். அவன் கொடை வளம் பொய்யா வானமும் கண்டு நாணும் தன்மையதாய்த் திகழ்ந்தது. குட்டுவன்பால் சென்ரூர் பெறும் விருந்தின் சிறப்பினைப் பாலைக்கௌதமனர் சுவை பொதுளக் கூறும் பெற்றி படிப்பார்க்குப் பேரின்பம் தருவதாகும்.

"குட்டுவனே, சூல் கொண்ட கருமுகிற்கூட்டம் கார்காலத்து மழை பெயலைப் பெய்யாது மறந்த வழியும் நீ அளிக்கும் பெருவிருந்து வற்றாத வள முடையது. அரிசியைக் குற்றிக்குற்றிப் பூண் தேய்ந்த உலக்கையையும், அடைச்சேம்பு போன்ற சோறு சமைக்கும் மிடாவினையும், கூரிய வாள் கொண்டு கொத்துதலால் ஊனும். குருதியும் படிந்து சிவந்து தோன்றும் மரக்கட்டையையும் நின் அட்டிற்சாலையில் காண்பார் மதி மருளும். உண்பாரும் தின்பாருமாய் வருவோர் அளவிறந்து இருந்த போதும் நின் விருந்துவளம்—சோற்றுவளம்—குன்றாத புதுமையினை உடையதாய்ப் பொலிந்தது. இத்தகைய விருந்து வளத்திற்குக் காரணமான நின் செல்வவளம் வாழ்வதாக!' என இவ்வாறு குட்டுவனின் கொடை வளத்தை மனமாரப் போற்றி வாழ்த்துகின்றார் சங்கப் புலவர் பாலைக்கௌதமனார்.

"உண்மருந் தின்மரும் வரைகோ ளறியாது
குரைத்தொடி மழுகிய வுலக்கை வயின்றோ
றடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவின்
எஃகுறச் சிவந்த வூனத் தியாவரும்
கண்டுமதி மருளும் வாடாச் சொன்றி,

* * * *

பேரா யாணர்த்தால்; வாழ்கநின் வளனே!"

(பதிற்றுப்பத்து. 24 : 18-22 ; 30)

அவரே பாடலில் குட்டுவன் தன் மற்றொரு நாடெல்லாம் பசுமையற்று வற்கடமுற்ற காலத்திலும் ஓம்பா ஈகையுடையனாய் விளங்கும் திறத்தினை

வாயாரப் புகழ்ந்துள்ளார். ‘இலை உதிர்ந்துபோன உன்னமரத்தின் சிறுசிறு கிளைகளிலே சிள்வீடென்னும் வண்டுகள் ஒலிக்கும் தன்மையான பெருவறங் கூர்ந்த காலத்து, வயல்களெல்லாம் உலர்ந்து போய் விட்டன. அந்நிலையில் இசைக்கருவிகளையிட்டுச் சுருக்கிக்கட்டிய பையோடு ஊர் மன்றங்களை அடைந்து ஆங்கே மறுகுகளின் சிறைக்கண்ணே நின்று பாடுவர் கூத்தரும் பாணருமாகிய பரிசிலர். அவர்தம் கடும்பசி நீங்க உண்ண வகை செய்வான் குட்டுவன். பொன்னுபரணங்கள் பலவற்றை அவர்கள் மகிழ்ந்து பூணப் பரிசிலாக அளிப்பான். அவற்றை அழகுற அணிந்த கலைஞர் கூட்டம் ‘நெஞ்சு மலி உவகையோடு’ ஆடிப்பாடும். அது போழ்து குட்டுவன் சிறிதே நறவுண்டு சிறு மகிழ்ச்சியோடு இருப்பினும் பெருவிலையினை யுடைய அணிகலன்கள் பலவற்றை அகமகிழ்வோடு அள்ளி வழங்குவான்.

“ அலந்தலை யுன்னத் தங்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து
நிலம்பை தற்ற புலங்கெடு காலையும்
வாங்குபு தகைத்த கலப்பைய ராங்கண்
மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப்
பொன்செய் புனையிழை யொலிப்பப் பெரிதுவந்து
நெஞ்சுமலி யுவகைய ருண்டுமலிந் தாடச்
சிறுமகி ழானும் பெருங்கலம் வீசும்
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ !”

(பதிற்றுப்பத்து. 23: 1-10

இவ்வாறு கலைஞர் கூட்டம் களிப்புற்று ஆட வேண்டுவன புரிந்த வள்ளல் குட்டுவன் வெற்று ஈர நெஞ்சினன் அல்லன். உணர்வுவழிப்பட்ட போது ஒன்றுமறியாக் குழந்தை போல மிக எளியனாய் அவன் இருப்பினும், அறிவுவழிப்பட்டபோது அவன் கூர்த்த மதியையும் இணையிலா ஆற்றலையும் எவராலும் அளந்து காணவியலாது. இவ்வுண்மையைக் கௌதமனாரே தம் பாடல் ஒன்றில் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார். 'நிலமும், நீரும், நெருப்பும், காற்றும், விசும்பும் ஆகிய ஐந்தனையும் அளந்து முடிவு காணினும், குட்டுவனது பெருமை அளந்து காணற்கு மிகவும் அரியது!' என்பது கௌதமனார் அனுபவத்தால் அறிந்த உண்மை.

> "நீர்நிலந் தீவளி விசும்பொ டைந்தும்
> அளந்துகடை யறியினும் அளப்பருங் குரையை."
>
> (பதிற்றுப்பத்து. 24: 15-16)

இவ்வாறு அளந்து காணற்கு அரிய பெருமையுடையவனாய் விளங்கிய குட்டுவன்—காட்சிக்கு எளியனாய் விளங்கிய கருணை மாமுகில்—தன் செங்கோலால் சேரவள நாட்டை வாழ்வித்த திறம் செஞ்சொற்புலவராகிய கௌதமனார் பாடல்களில் அழகொழுகும் சொல்லோவியங்களாய் அமைந்துள்ளன:

## 6. செங்கோற்சிறப்பு

குட்டுவனுடைய தலைநகரில் இருபெரு வேள்விகள் நடைபெறுகின்றன. ஒன்று அந்தணர் புரியும் வேதவேள்வி; இன்னொன்று, இல்லறத்தார் புரியும்

விருந்து வேள்வி. அந்தணர் வேள்வியிலும் ஆவுதிப் புகை எழும்புகின்றது. விருந்தினரைப் போற்றும் ஆட்டு வாணிகர் வீடுகளிலும் நெய்யாவுதிப் புகை கிளம்புகின்றது. அந்தணர் வேதவேள்வியில் எழும் நறும்புகையையும், அன்பு மாருது விருந்தின்ராய் வருவோரைப் போற்றும் ஆட்டு வாணிகர்தம் மனையில் தாளிதம் செய்து நாடி வந்த விருந்தினர்க்கு நல்லன்போடு படைக்கும் புகை எழுந்த ஊன் சோற்றிலே உருக்கிய நெய்யை ஊற்றும்போது எழும் நெய்ப்புகையையும் வானிடை வாழும் தேவர்கள் பெரிதும் விரும்புவார்கள்.

" உருகெழு மரபிற் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடரெழு தோறும்
விரும்புமெய் பரந்த பெரும்பெய ராவுதி
வருநர் வரையார் வார வேண்டி
விருந்துகண் மாரு துணீஇய பாசவர்
ஊனத் தழித்த வானிணக் கொழுங்குறை
குய்யிடு தோறு மாரு தார்ப்பக்
கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்
அடுமை யெழுந்த வடுநெய் யாவுதி
இரண்டுடன் கமழு நாற்றமொடு வானத்து
நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி "

(பதிற்றுப்பத்து. 21 : 5-15)

என்பது காண்க.

"குட்டுவ! இடமகன்ற உன் நாட்டில் மக்கள் பசியும் பிணியும் பகையுமின்றி இனிது வாழுமாறு நீ செங்கோல் செலுத்தும் திறத்தால் விளைவு

குன்றுதலில்லை. வெற்றி வீரர்கள் போரில்லாமையால் அம்புவிடும் தொழிலை அறவே மறக்கும்படி ஆயிற்று. கோடை நீடுதலால் மலை அருவி வளமிழந்த பெரிய வறட்காலத்திலும் கரை கடந்து செல்லும் பேரியாறு தழைகளைச் சூடிக்கொண்டு போர் விரும்பிப் படையெடுத்து வருவாரைப் போலப் பெருக்கெடுத்து வரும். அப்போது அப்பெருக்கினைத் தடுக்க விளைபுலங்களில் உண்டாகும் பூசலல்லது வேறு போர்க்கொடுமை எதுவும் இல்லாத நாடு உன் நாடு. இவற்றால் உன் தேயம் வியக்கத்தக்க செல்வம் கொழிப்பதாய்ச் சிறந்து விளங்குகின்றது,'' என்னும் கருத்தைக் கொண்டது பின் வரும் பாடல்:

"திருவுடைத் தம்ம பெருவிறற் பகைவர்
பைங்கண் யானைப் புணர்நிரை துமிய
உரந்துரந் தெறிந்த கறையடிக் கழற்காற்
கடுமா மறவர் கதழ்தொடை மறப்ப
இளையினிது தந்து விளைவுமுட் டுறுது
புலம்பா வுறையுள் நீதொழி லாற்றலின்
விடுநிலக் கரம்பை விடரளை நிறையக்
கோடை நீடக் குன்றம் புல்லென
அருவி யற்ற பெருவறற் காலையும்
நிவந்துகரை யிழிதரு நனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன்புலம் வாய்பரந்து மிகீஇயர்
உவலை சூடி யுருத்துவரு மலிர்நிறைச்
செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே.''

(பதிற்றுப்பத்து: 28)

## 7. போரும் புகழும்

குட்டுவன் கோலின் தன்மையை இதுகாறும் கண்டோம். இனி அவன் வேலின் வெம்மையையும் சிறிதே காண்போம்:

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் களம்பல கண்டவன். கனவிலும் தோல்வியைக் கண்டறியாதவன். அவன் வாழ்வு கண்ட வெற்றிகள் பலப் பல. அவற்றுள் சிறந்தன இரண்டைத் தம் பாடல்களில் குறிப்பிடுகின்றார் பாலைக் கௌதமனார். அவற்றுள்ளும் தலையாய சிறப்பு வாய்ந்ததும் அவன் உம்பற்காட்டை வென்ற வெற்றியே ஆகும். கடல் மலை நாட்டில் உம்பற்காடு ஒரு சிறு பகுதி. அதனை வேழக்காடு என்றும் வழங்குவர். அப்பகுதியில் களிறுகள் மிகுதியாகக் காணப்படும். கருக் கொண்டு உணவின்றிக் கிடந்த பெண்புலிக்கு உணவினைக்கொண்டு தருவான் விரும்பி நீண்ட பெருங் கோடுகளையுடைய யானை ஒன்றைக் கொன்று வீழ்த்தியது ஓர் ஆண் புலி. அடியுண்ட களிற்றை அதன் செங்குருதி பரந்த பாறைகளிலெல்லாம் படியுமாறு ஈர்த்துச் சென்றது அப்புலி; தன் அன்புடைய துணைக்கு அதை அளித்து மகிழ்ந்தது; அவ்வெற்றிச் செருக்கால் புல் தரையில் வீழ்ந்து புரண்டது. இத்தகைய கொடுமையுடையது அவ் வேழக்காடு. இதனை அறிந்த யானைகள் அக்கானுறை வாழ்வை வெறுத்து வழியில் கிடக்கும் பலாக் கனிகளைத் தின்றுகொண்டே வெளியேறும் என்று உம்பற்காட்டைத் தாயங்கண்ணனார் தாம் பாடி

யுள்ள அகநானூற்றுப் பாடல் ஒன்றில் சித்திரித்துக் காட்டுகிறார்.[1] உம்பற்காடு ஐந்நூறு சிற்றூர்களைக் கொண்டதொரு சிறுநாடு.[2] தன்னைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனால் பிரமதாயமாகக் கொடுக்கப் பெற்ற பெருமை வாய்ந்தது இப்பகுதி. செங்குட்டுவனிடம் இவ்வும்பற்காட்டின் வருவாயினைப் பரணர் பரிசிலாகப் பின்னொரு காலத்தே பெற்றார். இவ்வுண்மையை இரண்டாம் பத்தின் பதிகத்தைத் தொடர்ந்துள்ள உரைநடைப் பகுதியாலும் ஐந்தாம் பத்தின் பதிகத்தைத் தொடர்ந்துள்ள உரைநடைப் பகுதியாலும் நன்கு உணரலாம். இவ்வாறு வண்டமிழ்ப் புலவர் பலரும் விரும்பும் வளம் கொழிக்கும் நாடாகிய உம்பற்காட்டைத் தன்னதாக்கி அவண் தன் செங்கோலாட்சி நிலவுமாறு செய்தான் பல்

1. கொடுமுள் ளீங்கை சூரலொடு மிடைந்த
வான்முகை யிறும்பின் வயவொடு வதிந்த
உண்ணுப் பிணவி னுயக்கந் தீரிய
தடமருப் பியானை வலம்படத் தொலைச்சி
வியலறை சிவப்ப வாங்கி முணங்குநிமிர்ந்து
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி
பயிலிருங் கானத்து வழங்கல் செல்லாது
பெருங்களிற் றினநிரை கைதொடூஉப் பெயருந்
தீஞ்சுளைப் பலவின் தொழுதி யும்பற்
பெருங்காடு.................. (அகநானூறு, 357)

2. உம்பற்காடு-திருவிதாங்கூர் மாநிலத்தின் வடமேற்கிலுள்ள யானைமலைப் பகுதியாம் என்றும், வைக்கத்துள்ள ஒரு வீட்டிற்கு உம்பற்காட்டு வீடு என்ற வழக்கு இன்றும் உள்ளது என்றும் கூறுவர். (Cera Kings By K. G. Sesha Aiyar, P. 4.)

யானைச் செல்கெழு குட்டுவன். இவ்வும்பற் காட்டில் அகப்பா என்ற இடத்தில் பேரரண் ஒன்று இருந்தது.[1] மாற்றூர்க்குச் சிறந்த அரணாய் அது விளங்கியமையை அறிந்தான் குட்டுவன். அகப்பாவிலிருந்த அரிய அரண்கள் பல நிகரற்ற பலமுடையனவாய் இருந்தன. ஆங்கே இரு திறப்படைகளும் மாறு கொண்டு போரிடுதற்கு வேண்டிய பெரிய செண்டுவெளி இருந்தது. கணையமரம் செறிக்கப் பெற்ற நீள்வாயில்கள் இருந்தன. ஐயவித் துலாம் போன்ற அரிய இயந்திரப் படைகள் பல இருந்தன. காவற்காடும் ஆழ்ந்து அகன்ற கிடங்குகளும் ஓங்கி உயர்ந்த மதில்களும் காண்பார் கண்களை மருட்டும் தன்மையனவாய் நின்றன. ஒன்னார் அணுகுதற்கு ஒண்ணா அருமையும் பெருமையும் பெற்று விளங்கிய அவ்வரணைக் குட்டுவன் நாற்படையுடனும்சென்று அழித்துக்கைக்கொண்டான். இப்பெருஞ்செயலைப் பாலைக் கௌதமனார் வியந்து பாடுகின்றார்:

" உழைப்பொ லிந்தமா
இழைப்பொலிந்த களிறு
வம்புபரந்த தேர்
அமர்க்கெதிர்த்த புகன் மறவ ரொடு
துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறந்தலை
ஓங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீ ரையவிக்
கடிமிளைக் குண்டு கிடங்கின்

1. படம்: பதிற்றுப்பத்து: ஔவை. சு. து. பதிப்புப் பார்க்க.

நெடுமதில் நிரைப்பதணத்
தண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த
பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ!"

(பதிற்றுப்பத்து: 22: 17-27)

குட்டுவன் அடைந்த இப்பெருவெற்றியினை அவன் வழி வந்த இளங்கோ அடிகளும் தம் காவியத்தில் பொறித்துள்ளார்.

"மிகப்பெருந் தானையொ டிருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திறல்"

(சிலம்பு, 28: 143-4)

இவ்வாறு குட்டுவன் அரிய பெரிய வெற்றிகள் அடைவதற்குப் பெருங்காரணமாய் விளங்கியது அவனுடைய பெரும்பல் யானைப் படையுடைய வரம்பில் தானையின் சிறப்பேயாகும். குட்டுவனது பாசறை, வன்மைக்கு எல்லையாகிய எல்லா நலன்களும் பொருந்தி விளங்கியது. அப்பாசறையில் போர் வேட்கையால் பரபரப்பும் துடிதுடிப்பும் கொண்ட வீரர் கணக்கற்றவராய்ச் செறிந்துகிடந்தனர். அவர்கள் நாண் களைதலில்லாத வில்லை எந்நேரமும் ஏந்தி இருப்பர். அவர்கள் கையினின்றும் அம்பு கணப்போதும் அகலாது. இத்தகைய சினம் கொண்ட மறவரின்—'உடலெமக்குச் சுமை' என முனியும் வீரரின்—துணை இருக்கும் போது குட்டுவன் வெற்றிமேல் வெற்றிபெற்றதில் வியப்பும் உண்டோ? பாலைக் கௌதமனர் இத்தகைய படை வீரர்களின் ஆற்றலைப் பாடியிருக்கும் திறம் கற்று மகிழ்தற்கு உரியது.

"விரவுவேறு கூலமொடு குருதி வேட்ட
மயிர்புதை மாக்கண் கடிய கழற
அமர்கோள் நேரிகந் தாரெயில் கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன்
வரம்பில் தானை பரவா வூங்கே."

(பதிற்றுப்பத்து, 29 : 11-15)

* * * *

"குலையிழி பறியாச் சாபத்து வயவர்
அம்புகளை வறியாத் தூங்குதுளங் கிருக்கை
இடாஅ வேணி யியலறைக் குருசில்."

(பதிற்றுப்பத்து, 24 : 12-14)

பழந்தமிழ் நாட்டில் நாளும் போர்ப்பறை முழங்கிய வண்ணம் இருந்தது. முடிகெழு வேந்தர் தம்முள் ஒரு சிறிதும் ஒற்றுமைப்பண்பு இலராய் ஒருவரை ஒருவர் எதிர்த்து அழிப்பதற்குரிய சமயம் பார்த்து வாழ்ந்து வந்தனர். இதனல் சேர சோழ பாண்டியரிடையே ஓயாது போர் நிகழ்ந்தது. சேரர் குடியில் தோன்றிய பல்யானைச் செல்கெழு குட்டுவன் அறிவிலும் ஆற்றலிலும் தன்னேரில்லாத் தலைவனய் விளங்கிய தகைமை கண்டு ஏனைய இரு பெருவேந்தர் நெஞ்சிலும் பொருமைத்தீக் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. வேளிர் சிலரைத் துணையாகக் கொண்டு அவ்விருபெரு வேந்தரும் குட்டுவனை எதிர்த்தனர்; வஞ்சினம் கூறினர். குட்டுவன் அவர்கள் படைச்செருக்கையும், மனச் செருக்கையும் அழித்தான். அவருக்கு அரணக அமைந்திருந்த கடல் அரணையும் காட்டரணையும் நொறுக்கி

எறிந்தான். குட்டுவனது பேராற்றலை அறிந்த பகை மன்னர் அவன் வேலுக்கு அஞ்சி வாழலாயினர். இச்செய்தியினை மூன்ரும் பத்தின் இறுதிப் பாடல் நமக்கு எடுத்துரைக்கின்றது.

> "பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
> கடலவும் காட்டவும் அரண்வலியார் நடுங்க"
>
> (பதிற்றுப்பத்து, 30 : 30–31)

இவ்வாறு வேந்தரும் வேளிரும் அஞ்சி நடுங்கும் ஆற்றலை உடையவனுயிருந்த சேர வேந்தன் போர் முனைக்குப் புறப்படுங்கால் முரசுறை கடவுளுக்குப் பலியிட்டு வழிபாடு ஆற்றுவான். காண்பார் அஞ்சத் தக்க அச்செயலைப் பாலைக் கௌதமனர் சுவை ததும்பச் சொல்லோவியமாய் எழுதிக்காட்டுகின்ருர்.

சேர வேந்தனது மயிர்க்கண் முரசம் விண்ணதிர முழங்கும். முரசுறை கடவுளுக்குப் பலியிட்டு மந்திரம் கூறுவோனுகிய 'உயர்ந்தோன்' எண்டிசையும் அதிர, மறவர் நெஞ்சில் சினத்தீக் கிளர்ந்தெழ, மந்திரங்களை முழங்குவான். குருதி கலந்து கள்ளுடனே அவன் படைக்கும் பலியினைத் தீண்டப் பெரிய கண்களையுடைய பேயும் அஞ்சும். தெய்விக ஆற்றல் படைத்த அப்பலியினை எறும்பும் மொய்யா. ஆயினும், அப்பலியினைக் கரிய கண்ணுடைய காக்கையும் பருந்தும் இருந்து உண்ணும். (அவ்வாறு அவை உண்ணல் போரில் வெற்றி உண்டாதற்குரிய நிமித்தம் ஆகும்). அந்நிலையில் குட்டுவனது முரசம் மண் அதிர முழங்கும். அம்முரசொலி செருப்புகல்

மறவரைக் குரலெடுத்துப் பாடும் இசைவிருந்தோடும் பெருஞ்சோற்று விருந்தை உண்ணக் கூவி அழைக்கும்.

"முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய் முழங்கும் மந்திரத்
தருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்
உயர்ந்தோ னேந்திய வரும்பெறற் பிண்டம்
கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலி
எறுப்பு மூசா விறும்பூது மரபிற்
கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார
ஓடாப் பூட்கை யொள்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவர்
உருமுநில னதிர்க்குங் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியும்
கடுஞ்சின வேந்தே! நின் றழங்குகுரன் முரசே."

(பதிற்றுப்பத்து, 30:32-44)

## 8. அழிவால் விளைந்த அவலம்

எமனை ஒத்த வீரர்களையுடைய குட்டுவனது படை பகைவர் நாட்டில் சீறிப் பாய்ந்தால், அந்நாட்டுக்கு நேரும் அழிவு சிறிதாமோ? அவ்வாறு நேர்ந்த அவலக் காட்சிகள் பலவற்றை மூன்றும் பத்து நம் கண்முன்னே கொண்டுவந்து காட்டுகிறது. குட்டுவன் தன் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் அளக்கலா காப் போர்வெறி கொண்டவனாய் இருந்திருத்தல் வேண்டும். மூன்றும் பத்திலுள்ள பெரும்பான்மைப் பாடல்கள் அவன் போர் வெற்றியையும் ஆற்றலைச்

சினத்தால் பகைவர் நாட்டிற்கு அவன் விளைத்த இழவினையுமே படம் பிடித்துக் காட்டுகின்றன. குட்டுவன் சினத்தால் விளைந்த பேரழிவினை ஆசிரியர் கௌதமனார் சொற்சித்திரங்களாக்கிக்காட்டுந்திறன் நம் உள்ளத்தை உருக்குகின்றது! சேரவேந்தனது சினம் கெழுமிய சிவந்த கண்களில் படாதவரையில் அந்நாடுகள் சோலைவனமாயிருந்த காட்சியும் அவன் கோபப்பார்வை பட்டதும் அவை பாலைவனங்களாய் மாறிய பரிதாபக் காட்சியும் கௌதமனார் பாடல் களில் படம்படமாய் விளங்குகின்றன:

'பகைவர் நாடு நீர்வளம் செறிந்த நன்னாடு. எந் நாளிலும் அந்நாட்டில் பெருகி வரும் புதுப்புனலைத் தடுத்து நிறுத்துவோர் பறையறைந்து செய்யும் ஆர வாரமும், நீர் விளையாடுவோர் செய்யும் ஆரவாரமும், பல்வேறு விழாக்களிலே திரண்ட மக்கள் செய்யும் ஆரவாரமும் மிகுதியாய் இருக்கும். வற்றாத வளங் கொழிக்கும் அத்தகைய நாடுகள், குட்டுவ, நின் சினத்திற்கு இலக்கானமையால் ஆங்கே பட்டப் பகலில் குறுநரிகள் ஊளையிடும்; கோட்டான்கள் கூவும்; அவற்றின் குரலொலிக்கு ஒப்பப் பேய்கள் ஆடும்.

"போர்த்தெறிந்த பறையாற் புனல்செறுக் குநரும்
நீர்த்தரு பூசலி னம்பழிக் குநரும்
ஒலித்தலை விழவின் மலியும் யாணர்
நாடுகெழு தண்பணை சீறினை யாதலிற்
குடதிசை மாய்ந்து குணமுதற் றோன்றிப்
பாயிரு ளகற்றும் பயங்கெழு பண்பின்
ஞாயிறு கோடா நன்பக லமயத்துக்

கவலை வெண்ணரி கூவுமுறை பயிற்றிக்
கழல்கட் கூகைக் குழறுகுரற் பாணிக்
கருங்கட் பேய்மகள் வழங்கும்
பெரும்பா ழாகுமன் னளிய தாமே!"

(பதிற்றுப்பத்து, 22: 28-38)

*          *          *

'பகைவர் நாடு மண்வளமும், மரவளமும், மலர் வளமும், மக்கள் மனவளமும் நிறைந்த நாடு. நாளும் நீங்காத புது வருவாயையுடைய இடமகன்ற அந்நாடுகள் நின் வலியும் புகழும் அறியா வேந்தரின் பேதைமையால் மக்கள் போக்கு வரவற்ற பாலை நிலமாயின; புல் நிறைந்து சிற்றிடமுமின்றி முட்செடிகள் மண்டித் தூர்ந்தன. தமக்கே உரிய பெரிய அழகை எல்லாம் அவை இழந்து நின்றன. நெடு நிலை மாடங்கள் நிறைந்த அவ்வூர்கள் காட்டுப் பசுக்கள் தங்கள் ஏறுகளுடன் கூடி உறையும் காடுகளாயின. குட்டுவ, நின்னைக் காண விரும்பி வரும் யாங்கள் அவற்றைக் கண்டோம்.'

"நின்னயந்து வருவேங் கண்டனம் புன்மிக்கு
வழங்குந ரற்றென மருங்குகெடத் தூர்ந்து
பெருங்கவி னழிந்த வாற்ற வேறுபுணர்ந்
தண்ணன் மரையா வமர்ந்தினி துறையும்
விண்ணுயர் வைப்பின காடா யினநின்
மைந்துமலி பெரும்புக ழறியார் மலைந்த
போரெதிர் வேந்தர் தாரழிந் தொராலின்."

(பதிற்றுப்பத்து, 23: 11-17)

*          *          *

'குட்டுவ, இடி என ஒலிக்கும் முரசுடன் குதிரைகள் வேகமாகப் பறந்தோடும்படி நீ தேரோட்டிய பகைவரது அகன்ற நாடுகள் பெரிதும் பாழாயின. அந்நாட்டில் உன் குதிரைகள் வழங்கிய வயல்களிலே பின்பு கலப்பைகள் உழா ஆயின; உன் மதயானைக் கூட்டம் மிதித்த வயல்கள் பின்பு வளங்காணலை அறியா ஆயின; உன் வீர மறவர்கள் சேர்ந்த மன்றங்கள் கழுதைகளால் உழப்பட்டன; நீ சினந்த அரசனது அரணுள்ள நகரங்கள் பின்பு தமக்குக் காவலர் வைக்கப்படா ஆயின; தீப்பட்டு எரிந்த காட்டுப் பக்கங்கள் ஆண்டலைப் புட்கள் வழங்கும் கடுநெறி உடையனவாகவும், ஆறலை கள்வர் பொருகின்ற போரிடங்களாகவும் மாறின'

"மாவா டியபுலம் நாஞ்சி லாடா
கடாஅஞ் சென்னிய கடுங்கண் யானை
இனம்பரந் தபுலம் வளம்பரப் பறியா
நின்படைஞர், சேர்ந்த மன்றங் கழுதை போகி
நீ, உடன்றோர் மன்னெயில் தோட்டி வையா
கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப்
பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கின்
ஆண்டலை வழங்குங் கானுணங்கு கடுநெறி
முனையகன் பெரும்பா ழாக மன்னிய
உருமுழற் றிரங்கு முரசிற் பெருமலை
வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்கக்
கடும்பரிக் கதழ்சிற ககைப்பநீ
நெடுந்தே ரோட்டியபிற ரகன்றலை நாடே."

(பதிற்றுப்பத்து-25)

* * *

'பகைவர் நாட்டில் ஒருகால் தேர் ஓடிய வயல்கள் அது ஓடிய அளவிலே சேறுகிப் பின் உழுதற்கென்று ஏர் பரவா ஆயின. பன்றிகள் கிழங்கு உண்ண உழுத கொல்லைப் புனங்கள் அவை உழுத அளவிலே புழுதியாகிப் பின்பு கலப்பை செலுத்த வேண்டாவாயின. மத்துக்கள் ஒலிக்கின்ற மனைகள் அம்மத்தொலி மிகுதியால் இனிய வாத்திய ஒலிகள் ஒலியா ஆயின. இவ்வாறு வளம் செறிந்திருந்தது நின் பகைவர் நாடு. நின் சினத்திற்கு இரையான பின் அவற்றிற்கு இப்பொழுது நேர்ந்துள்ள நிலை மிகவும் இரங்கத்தக்கது. மழை பெய்யாததால் செழிப்பெல்லாம் சிதைந்தது. 'இது காலக் கொடுமை' என்று கண்ணீர் உகுத்துக் கையைப் புடைத்தவராய் மெலிந்த நெஞ்சுடன், சிறுமை மிக்கனர் மக்கள். அவர்கள் வாழ்ந்த மனைகள் பாழானமையால் பீர்க்குப் படர்ந்து கடிய காட்டு வழிகள் ஆயின. முன்பு இந்நாட்டின் வளத்தைக் கண்டறிந்தவர்க்கும் பழைய நிலையை நினைக்குமிடத்துத் துன்பம் பெரிதும் தோன்றும். யானும் அதற்கு நோகின்றேன்.'

"தேஎர் பரந்தபுல மேஎர் பரவா
களிறு டியபுல நாஞ்சி லாடா
மத்துர றியமனை யின்னிய மிமிழா
ஆங்குப், பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின்
நோகோ யானே நோதக வருமே
பெயன்மழை புரவின் றாகி வெய்துற்று
வலமின் றம்ம காலையது பண்பெனக்
கண்பனி மலிர்நிறை தாங்கிக் கைபுடையூ

மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூரப்
பீரிவர் வேலிப் பாழ்மனை நெருஞ்சிக்
காடுறு கடுநெறி யாக மன்னிய
முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்
உரும்பில் கூற்றத் தன்னநின்
திருந்துதொழில் வயவர் சீறிய நாடே.''

(பதிற்றுப்பத்து, 26)

* * * *

'தழை உடையையும் மலர் மாலையையும் அணிந்த வரும் கள்ளுண்டு களித்துக் கூடியிருப்போருமான உழவர் மகளிர் பறவைகள் வயல்களில் புகுந்து பயிர் கட்குத் தீங்கு புரியாதிருக்க வேண்டித் தெளிந்த குர லோசையால் அவற்றை ஓட்டுவர். ஆனல், தம்மைக் கடியஎழுந்த பெண்கள் ஒலியை இனிய இசை முழக் குவோரின் ஒலி கேட்ட பழக்கத்தாலே பண் ஒலி யாகவே கருதிக் கோலமயில்கள் சோலைகளிலே தோகை விரித்தாடும்; சேறுபட்ட வயல்களில் சிக் கிய வண்டிகளின் வலிய சக்கரங்கள் உருண்டு விரைந்து செல்லும்படி தூண்டி வெருட்ட நல்ல எருதுகள் அவற்றைக் கடப்பதற்காக வருந்தி முயலும் காலத்து, ஓட்டுவோர் இடும் ஆரவாரம் அல்லாமல் போரின் ஆரவாரத்தை என்றும் அறியா பகைவர் நாடுகள். இத்தகைய சீரிய நாடுகளில் விளங்கிய பேரழகு, குட்டுவ, நின் சீற்றத்தால் அழிந்து ஒழிந்தது.'

"சிதைந்தது மன்றநீ சிவந்தனை நோக்கலின்
தொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி

அலர்த்த வாம்ப லகமடி வையர்
சுரியலஞ் சென்னிப் பூஞ்செய் கண்ணி
அரிய லார்கைய ரினிதுகூ டியவர்
துறைநணி மருத மேறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பிற்
பழனக் காவிற் பசுமயி லாலும்
பொய்கை வாயிற் புனல்பொரு புதவின்
நெய்தன் மரபி னிரைகட் செறுவின்
வல்வா யுருளி கதுமென மண்ட
அள்ளற் பட்டுத் துள்ளுபு துரப்ப
நல்லெருது முயலு மளறுபோகு விழுமத்துச்
சாகாட் டாளர் கம்பலை யல்லது
பூச லறியா நன்னாட்
டியாண ரருஅக் காமரு கவினே.”

(பதிற்றுப்பத்து, 27)

மேற்கண்ட பாலைக்கௌதமனாரின் பாடல்களைப் படிக்கும்போது நம் சிந்தனை எங்கெங்கெல்லாமோ செல்கின்றது. அறிவும் நாகரிகமும் மிகவும் வளர்ந்துவிட்டதாகக் கருதப்படும் இவ்விருபதாம் நூற்றாண்டிலேயே போர் இன்னும் தவிர்க்க முடியாத ஒரு தீமையாகவே நிலைத்து நிற்கிறது என்றால், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்த சமுதாயம் போரைத் தவிர்த்திருக்க முடியாது என்பது தெளிவு. என்றாலும், அந்நாளிலேயே போரின் கொடுமையை எண்ணிச் சான்றோர்களின் நெஞ்சம் எவ்வெவ்வாறெல்லாம் குமுறியது என்பதைப் பாலைக் கௌதமனாரின் பாடல்கள் உள்ளங்கை நெல்லிக்கனியென நமக்கு விளக்கிவைக்கின்றன.

"ஆங்குப், பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின்
நோகோ யானே நோதக வருமே!"

(பதிற்றுப்பத்து, 26: 4–5)

என்ற சொற்களில் புலவர் பெருமானின் அளவற்ற மனத்துயரம் புலனாகிறது அன்றோ? சீற்றத்தால் விளையும் சிறுமையை-அழிவால் விளையும் அவலத்தை இத்தகைய பாடல்கள் வாயிலாக எடுத்துரைத்துக் குட்டுவன் போன்ற நாடாளும் வேந்தன் நெஞ்சை நல்வழிப்படுத்தச் சங்ககாலச் சான்றோர் கருதினர் போலும்! அவ்வாறு காலத்தை ஒட்டிச் சமாதானத் தூதுவர்களாய் அவர்கள் செய்த சீரிய முயற்சியினைத் தமிழ்நெஞ்சம் படைத்தார் உணர்ந்து போற்றுதல் ஒருதலை.

பாலைக் கௌதமனார் எண்ணிய எண்ணம் திண்மையுடையது. எனவே, அது வீணாகவில்லை. 'போர்! போர்!' என்று தினவெடுத்த தோள்களையுடைய வீர மறவர்களுக்குத் தலைமை தாங்கி ஈரநெஞ்சம் சிறிதுமின்றி எதிரி நாடுகளை உழக்கிய குட்டுவன் செவிகளில் தண்டமிழ்ச் சான்றோராகிய பாலைக் கௌதமனார் பக்குவமாகக் கூறிவந்த மொழிகள் தக்க பயன் அளித்தன. வீரருள் வீரனாய் வாழ்க்கையைத் தொடங்கிய குட்டுவன், ஞானிகளுள் ஞானியாய்த் தன் வாழ்க்கையை முடிக்க உறுதி பூண்டான். கலிங்கப்போரைக்கண்டு அசோகப் பேரரசரின் நெஞ்சம் அருள் நெறிப்பட்டது போன்று, குட்டுவனது நெஞ்சம் கருணைக் கடலாயிற்று. பல்யானைச் செல்கெழு குட்டுவன்

பிறக்கும் பொழுதே 'இமயவரம்பன் தம்பி' என்ற பெரும்புகழொடு பிறந்தான்; தன் தோள் வலியாலும் வாள் வலியாலும் தமிழகத்தின் நிகரில்லாத் தலைவனாய்த் திகழ்ந்தான்;[1] நால்வகைப் படைகளையும் நன்கு பேணி வைத்திருந்தான்; உம்பற்காட்டைத் தன் உடைமையாக்கினான். அகப்பா என்னும் பேரரணை எறிந்து பகல் தீ வேட்டான். கொங்கு நாட்டையும் பூழி நாட்டையும் வென்றான்; கடுங்கண் மறவராகிய மழவரைத் தன் கருத்துவழி நடப்போர் ஆக்கிக்கொண்டான்; 'பூழியர் கோவே' என்றும், 'மழவர் மெய்மறை' என்றும், 'ஆகெழு கொங்கர் நாடகப்படுத்த வேல்கெழுதானை வெருவரு தோன்றல்' என்றும் புலவர் பாடும் புகழ் பெற்றான்;[2] இவ்வாறு தான் அடைந்த தன் வெற்றி வாழ்வை வியனுலகமெல்லாம் கண்டு போற்றி வியக்குமாறு செயற்கருஞ் செயல் ஒன்று செய்தான். தன் பல்யானைப் பெரும்படையைக் குணகடலுக்கும் குடகடலுக்கும் ஒரே காலத்தில் அனுப்பி, அவ்விரு கடல்நீரும் ஒரு பகலிலேயே வருமாறு செய்தான்; அவ்வாறு கொண்டுவரப்பட்ட இருகடல் நீரிலும் படிந்து ஆடிப் பெருமையுற்றான். இவ்வாறு குட்டுவன் பெற்ற பெருமையினை,

"உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினோன்." (சிலம்பு 28 : 145–146)

என்று இளங்கோ அடிகள் பெருமிதத்துடன் பாராட்டுகின்றார்.

1. பதிற்றுப்பத்து, 22 : 17 - 20
2. பதிற்றுப்பத்து, 21 ; 23 ; 24 ; 22 ; 15.

இங்ஙனம் போரால் விளைந்த புகழின் எல்லையைப் பெருவிழாவாய்க் கொண்டாடிய குட்டுவன் தன் நாட்டு அயிரைமலையில் கோயில் கொண்டுள்ள கொற்றவைத் தெய்வத்தைத் தன் குலத்தார் செய்துவரும் வழிபாடு வழுவாத வகையில் வழிபட்டு மகிழ்ந்தான். இறுதியாக இருப்பத்தைந்து ஆண்டுகள் போர்மலிந்த — புகழ்மலிந்த — ஆட்சி நடத்திய குட்டுவன், பிறவாப் பெருநெறி காணப் பெருவிழைவு கொண்டான். மண்ணை அடக்கி வாழும் வாழ்வினும் மனத்தை அடக்கி வாழும் வாழ்வே சிறந்ததெனத் தெளிந்தான்; மண்ணரசாள்வதிலும் விண்ணரசாள்வதே மேலென விரும்பினன்; உயிர்களை வதைத்து அழித்து ஒழித்து நாசமாக்குவதினும் உற்றநோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாது தவவாழ்வினை மேற்கொள்வதே சாலச் சிறந்ததென உணர்ந்தான்; தன் குலத்தில் தனக்கு முதியாரை மதியோடு ஒத்த தன் தண்ணளியால் தழீஇக்கொண்டு அவர்க்குத் தன் நாட்டைப் பகுத்துக் கொடுத்தான்; ஓங்கு புகழும் உயர்ந்த கேள்வியும் ஒருங்கே படைத்திருந்த தன் ஆசிரியராகிய நெடும்பாரதாயனர் காட்டிய ஞான நெறியே செல்ல வைராக்கியம் கொண்டான்; துறவு உள்ளம் பூண்டு தன் ஆசிரியரைப் பின் தொடர்ந்து நாடு நீங்கிக் காடு போந்தான்; வீடு பெற்றான். வீரருள் வீரனய் விளங்கிய ஒரு பேரரசன் வாழ்வு ஞானியருள் ஞானியர் போற்றும் தவவாழ்வாய் முடிந்தது. உணர்ச்சியும் உருக்கமும் நிறைந்த இவ்வரலாற்றை மூன்றாம் பத்தின் பதிகம் அழகுறப் பாடுகிறது.

“ இமைய வரம்பன் தம்பி அமைவர
உம்பற் காட்டைத் தன்கோல் நிறீஇ
அகப்பா எறிந்து பகற்றீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்துக்
கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி
அயிரை பரைஇ ஆற்றல்சால் முன்பொடு
ஒடுங்கா நல்லிசை உயர்ந்த கேள்வி
நெடும்பார தாயனுர் முந்துறக் காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவனைப்
பாலைக் கௌதமனுர் பாடினர் பத்துப்பாட்டு.”

(மூன்றும் பத்து, பதிகம்)

## 9. பழந்தமிழக இயற்கை—நிலவளம்

சங்க இலக்கியப் புலவர்கள் இயற்கையின்பால் கொண்டிருந்த ஈடுபாடு ஒப்புயர்வற்றது. இயற்கை இன்பத்தை ஐம்புலன்களாலும் ஆரத்துய்த்த அச் சான்றோர்கள் அவ்வின்பத்தைத் தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாடல்களாய் வடித்து வைத்துள்ளார்கள். அவர்களுள் தலைசிறந்த ஒருவரே பாலைக் கௌதமனர். அவர் பாடியுள்ள பாடல்கள் பழந் தமிழகத்தின் நில்வளத்தை—இயற்கை அன்னை நானில அரங்கில் ஆடிய அழகுக் கூத்தினை—கவினுற எடுத்துக்காட்டுகின்றன. ஐவகை நிலங்களின் வளங்களையும் அவர் பாடியுள்ள திறன் மகிழ்ந்து போற்றற்குரியது.

மருதம் :

நீர்வளம் நிறைந்த பகுதி மருதம். ஆங்கே மருத மரங்கள் தம்பால் பல புள்ளினம் தங்கி ஒலிக்க ஓங்கி நிற்கும் செறிவினையுடைய பெரிய பரப்பிட மாகிய மணல் மலிந்த பெருந்துறைக்கண் விளை யாடும் இளமகளிரால் பூவும் தளிரும் பறிக்கப்படுத லால் காஞ்சி மரங்கள் சிதைந்த நிலையில் காட்சி அளிக்கும். முருக்க மரங்கள் தாழ்ந்து பூக்களைச் சொரிதலால் உயர்ந்த நெருப்புப்போலத் தோன் றும். அடைகரையில் சங்குகளும் நாரைகளும் செவ் விய வரிகளுடைய நாரையினத்துப் பறவைகளும் திரியும். கழனிக்கு வாயிலாக உள்ள பொய்கையைச் சார்ந்த விளை நிலத்தில் அழல் போலும் பூவினை உடைய தாமரை மலர்ந்திருக்கும். வளையணிந்த விளையாட்டு மகளிர் பறியாமையால் தாமே மலர்ந்த ஆம்பல் எங்கும் நிறைந்திருக்கும். இத் தகைய காட்சிகள் நிறைந்தது நீங்காத புது வருவா யுடைய அகன்றலை நாடு.

"மருதிமிழ்ந் தோங்கிய நளியிரும் பரப்பின்
மணல்மலி பெருந்துறைத் ததைந்த காஞ்சியொடு
முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புறழ் அடைகரை
நந்து நாரையொடு செவ்வரி உகளும்
கழனி வாயிற் பழனப் படப்பை
அழல்மருள் பூவின் தாமரை வளைமகள்
குருஅது மலர்ந்த ஆம்பல்
அருஅ யாணரவர் அகன்றலை நாடே."

(பதிற்றுப்பத்து, 23: 18–25)

மருதவள நாட்டில் நீர் வளம் இடையறாமல் இருத்தலின், காலமல்லாத காலத்தும் கரும்பு முற்றிக்கிடக்கும். அதனை அறுத்துக்கொள்வதோடு ஒழியாது அதன் அரிகாலையும் அகழ்ந்து சிதைத்து ஆங்கு மலரும் பல வகைப் பூக்களையும் கொண்டு மக்கள் மலர் விழா எடுப்பார்கள். தேன் சொரிய நின்ற மருதமரங்களை வெள்ளிய நுரையைச் சுமந்து பாய்ந்து வரும் சிவந்த புதுவெள்ளம் அடியோடே சாய்க்கும். அவ்வெள்ளத்தை அணை கோலித் தடுப்பான் வேண்டிக் கனத்த வைக்கோற் புரிகள் கொண்டு மணற்கோட்டைகளைக் கட்டுவர். அவையும் அவ்வெள்ளத்தில் சிதைந்து கரைந்து போகும். அது கண்ட மக்கள் முன்னினும் அதிக முயற்சியோடு உயரமும் திண்மையும் பொருந்திய அணைகளை ஆக்கி நீரைத் தடுத்து வென்றி காண்பார்கள். அப்போது அவர்கள் செய்யும் மகிழ்ச்சி ஆரவாரம் மிகப்பெரிதாய் விளங்கும். வெள்ளத்தைச் சிறைப்படுத்தி வெற்றியும் மகிழ்ச்சியும் கொண்ட மக்கள் கூட்டம் நாட்டின் மூதூர்க்கண் நிகழும் திருவிழாவிற்குச் சென்று அதனைக் கண்டு மிகுந்த ஆரவாரத்துடன் மீளும்.

"கால மன்றியும் கரும்பறுத் தொழியாது
அரிகா லவித்துப் பலபூ விழவின்
தேம்பாய் மருத முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலநாழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாயம்

முழவிமிழ் மூதூர் விழவுக்காணூஉப் பெயரும்
செழும்பல் வைப்பிற் பழனப் பாலும்.''

(பதிற்றுப்பத்து, 30: 14-21)

முல்லை:

வானுற ஓங்கிய மரங்கள் அடர்ந்த காடும் காடு சார்ந்த பகுதியுமாகிய முல்லை நிலத்துக் காடுகளில் பல்வகைப் பூக்களும் உதிர்ந்து வாடிக்கிடக்கும். அக் காடுகள் தாம் பயன் பல அளிக்கும் தன்மையினின்றும் திரிந்து செவ்வரக்குப் போன்ற நுண்ணிய மணல் பொருந்திய மட்குன்றுகளைக்கொண்டு விளங்கும். ஒள்ளிய நெற்றியையுடைய மகளிர் காலில் செருப்பணிந்து அப்பகுதிகளில் திரிவர்.

''பல்பூஞ் செம்மற் காடுபய மாறி
அரக்கத் தன்ன நுண்மணற் கோடுகொண்டு
ஒண்ணுதல் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும் பிறவும்.

(பதிற்றுப்பத்து, 30: 26-29)

குறிஞ்சி:

மலையும் மலைசார்ந்த இடமுமாகிய இக்குறிஞ்சி நிலத்தின் அழகை மூன்றும் பத்தின் இறுதிப் பாடலில் ஆசிரியர் சிறப்பாகப் பாடியுள்ளார். குறிஞ்சி நிலப்பகுதிகளை அடுத்து முல்லைநிலப் பகுதிகளும் உள்ளன. இவ்விருநிலங்களிலும் வாழ்ந்த மக்கள் வாழ்க்கையும் மனப்பாங்கும் அறிவதற்குப் பேரின்பம் தருவனவாகும். காந்தட்பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியினைத் தலையில் அணிந்து கொலை புரியும் வில்லினைக் கையிலே ஏந்தி வரும்

வேட்டுவர் செவ்விய ஆமாவின் இறைச்சியுடனே காட்டிடத்து வாழும் வலிமை பொருந்திய யானையின் தந்தத்தையும் கொண்டு வருவர்; செல்வச் செழுமை நிறைந்த புன்புலவைப்பில் இருந்த பொன்னுடைக் கடைத்தெருக்களிற் புகுவர்; ஆங்கே தாம் கொண்டு வந்த இறைச்சியையும் தந்தத்தையும் கொடுத்து விட்டு, அவற்றிற்கு ஈடாகப் பொன்னைப் பெறுமல் வடித்த கள்ளை வாங்கி உண்பர். உயிர்க்கொலை புரியும் வேட்டுவர் உள்ளம் இருந்தவாறு அது!

> "காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
> செங்கோட் டாமா னூனொடு காட்ட
> மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
> பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்
> குன்றுதலை மணந்த புன்புல வைப்பும்."

(பதிற்றுப்பத்து, 30 : 9-13)

வில்லும் அம்பும் கொண்டு விலங்குகளை வேட்டை யாடித் திரியும் பண்பினரே குன்றக் குறவர். அவர்கள் மனைகளும் எளிய மனைகள்; ஆயினும், அவை அன்பின் உறைவிடங்கள். குறவர் தம் மனைகளை வரகின் வைக்கோலால் வேய்ந்திருப்பர். அவர்கள் தொழில்களுள் முதன்மையானது தினைக் கொல்லையை உழுது பயிர் செய்வதாகும். அவர் களுடைய அன்பகங்களில் மணமிக்க காட்டு மல்லிகை வளரும். அன்பு பொங்கும் அவர்தம் இல்லங்களில் நடைபெறும் இல்லறத்தின் சிறப்பு இணையில்லாததாகும். தம் வீட்டிற்கு வரும் விருந் தினர்க்குத் 'தன்னை உண்டாரை வேறெதுவும்

உண்ண விரும்பாதவாறு செய்யும் சுவையும் கருப்புக் கட்டியைப் பொடிசெய்து கொழித்தெடுத்த நுண்ணிய பூழி போலும் தோற்றமும்' உடைய மெல்லிய திணைமாவை ஆர்வத்தோடு வரும் விருந்தினர் அனைவர்க்கும் முறைமுறையாக வேண்டுமட்டும் அளித்து மகிழ்வர்.

**"ஏனல் உழவர் வரகுமீ திட்ட**
**கான்மிகு குளவிய வன்புசே ரிருக்கை**
**மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்**
**புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்."**

(பதிற்றுப்பத்து, 30 : 22-25)

**நெய்தல் :**

அலை மோதும் கடலும் கடல் சார்ந்த பகுதியுமாகிய நெய்தல், ஏனைய நிலங்களுக்குச் சிறிதும் இளைக்காத வளம் வாய்த்ததாகும். விளையாடும் மகளிர் பூங்கொத்துக்களை விருப்புடன் கொய்தமையால் சிதறிக்கிடக்கும் ஞாழல் எனப்படும் புலிநகக் கொன்றை மரங்கள் நிறைந்த பெரிய நீர்த்துறைகளை உடையது நெய்தல் நிலம். அங்கே நீலமணியாற் செய்த பாத்திரங்களைப்போன்று கரிய இதழ்களை உடைய நெய்தற்பூக்கள் குளிர்ந்த கழிக்கண் மலர்ந்திருக்கும். அக்கழிகளில் மீன் வட்டமாடி புன்னையின் வெள்ளிய பூங்கொத்துக்கள் செறிந்த கிளைகளிடத்தே நாரை முதலிய பறவைகள் தங்கும். மக்கள் சென்று தங்குதற்குரிய கானற்சோலைகளில் செறிந்த மணல் அடைந்த கரையில் அடம்பங் கொடிகள் வளர்ந்திருக்கும். அவற்றை அலைத்து

வரும் அலைகளால் ஒதுக்கப்பட்ட சங்குகளின் கூட்டம் அலறிய வண்ணம் இருக்கும். வளையலறக் கேட்டு ஓடிப்போந்து அதன் முத்தை எடுக்க முனைவார், அவ்வளையுடனே எறியப்படும் பவளத்தையும் எளிதில் எடுத்துச் செல்வர். அத்தகைய வளமார்ந்தது நெய்தல் நிலம்.

பழந்தமிழகத்தின் நிலவளத்தை இதுகாறும் பொது வகையாற் கண்டோம். இனி மூன்றும் பத்தில் வேறு காரணங்களாற் சிறப்பாகக் குறிக்கப் பெறும் கொங்கு நாட்டைப்பற்றியும் பூழி நாட்டைப் பற்றியும் பாலைக் கௌதமனார் கூறும் செய்திகளை ஈண்டு அறிதல் பொருத்தமும்பயனும்உடையதாகும்.

**கொங்கு நாடு :**

பல்யானைச் செல்குழு குட்டுவன் தன் நெஞ்சுரனும் படை வலியாலும் வென்ற நாடுகளுள் சிறந்தன கொங்கு நாடும் பூழி நாடும் ஆகும். பண்டை நாளில் மூவேந்தர்பாலும் போர் நசை தோன்றுவதற்குப் பெருங்காரணமாய் இருந்தது இக்கொங்கு நாடு.[1] இந்நாட்டைச் சுற்றிலும் போர் வெறி கொண்ட மறவர் பலர் வாழ்ந்து வந்தனர். இத்தகைய பகுதியைத் தன் குருதி தோய்ந்த வேலின் திறத்தால் வென்று ஆண்டான் குட்டுவன்.[2] அவன்

1. Cera Kings : K. G. S. Aiyar, pp. 33-34.

2. குட்டுவன் தான் கைப்பற்றிய இப்பகுதிகளைத் தன் ஆணைக்கு உட்பட்டுக் கருவூரிலிருந்து ஆளுமாறு கருவூர் ஏறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரல் இரும்பொறையை நியமித்தான் என்பர் (Cera Kings: K. G. S. Aiyar, Chap. II, pp. 33-35.)

ஆட்சியின்கீழ்ப்பட்ட இந்நாடு, வேறு பல் வளமும் உடையதே எனினும், ஆற்று நீர்வளம் அவ்வளவாக இல்லாதது. எனவே, கொங்கு நாட்டு மக்கள் பெரிதும் கிணறுகளில் ஊறும் ஊற்றுவளத்தையே நம்பி வாழ்ந்தனர். கொங்கு நாட்டின் சிறந்த செல்வங்களுள் ஒன்ருய் இருந்தது கால்நடைச் செல்வமே ஆகும். கொங்கு நாடு மேட்டு நிலப்பகுதி. எனவே, அங்கு ஆனிரைக்கு வேண்டும் நீர் கிடைத்தல் அரிது. அதனுல் கொங்கர்கள் கூரிய இரும்புக் கோடரிகளைக்கொண்டு நிலத்தை அகழ்ந்து மிக ஆழ்ந்த கிணறுகளை அமைப்பர். அப்பிள்ளைக் கிணறுகளில் நீண்ட கயிறுகளில் பிணைக்கப்பட்ட சிறிய முகவைகளைக் கட்டி விட்டு நீர் முகப்பர். கொங்கு நாட்டில் நீர் கிடைத்தல் அருமையாதலால் நீர்வேட்கைகொண்டு அலையும் ஆனிரைகள் முகவைகளைக் கண்டவுடனே அவற்றின் குறுமையும் நீர்மையும் நோக்காது மொய்க்கும். அவ்வாறு மொய்ப்பனவற்றைக் கொங்கர் நீர் முகந்து உண்பிப்பர். பசு வளமிக்க கொங்கு நாட்டின் நிலை இத்தகையதாகும்.

> "பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
> சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தற்
> கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
> ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
> வேல்கெழு தானை வெருவரு தோன்றல்!"

(பதிற்றுப்பத்து, 22: 12–16)

**பூழி நாடு :**

கொங்கு நாட்டைப்போலக் குட்டுவனது வெற்றிக்கு இலக்கான நாடுகளுள் மற்றொன்று பூழி நாடு[1] ஆகும். இந்நாடு கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்றாகக் கூறப்படும். இது மலபார் மாவட்டத்தில் உள்ள பொன்னானித் தாலுக்காவில் அடங்கியது என்பர். இந்நாடு பண்டு நன்னன் குடியினரால் ஆளப்பட்டு வந்தது என்றும், இந்நாட்டார் அடுத்தார்க்குத் துன்பம் இழைக்கச் சிறிதும் பின் வாங்காத மறவர் என்றும் கூறுவர்.[2]

பூழி நாட்டில் சிறப்புடன் வாழ்ந்த குடியினர் ஆயர் ஆவர். அவர்கள் மிகப் பெரிய ஆனிரைகளையும் கணக்கற்ற களிறுகளையும் உடையவர்கள்; 'செருப்பு' என்னும் மலைக்கு உரியவர்கள். அவர்கள் முல்லைப் பூவாலாய கண்ணியணிந்து ஆனிரைகளைப் புல் நிறைந்த பரந்த வெளிகளில் மேய விட்டுவிட்டு, காட்டில் சிதறிக்கிடக்கும் மணிகளைப் பொறுக்கி வருவார்கள். மலை வளமும் மணி வளமும் பசும்புல் வளமும் நிறைந்த பூழி நாடு இத்தன்மையதாகும்.

" முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியல் செருப்பிற் பூழியர் கோவே !"

(பதிற்றுப்பத்து, 21: 20-23)

1. Malabar Manual: Vol, I. pp. 647, 666.

2. Cera Kings: K. G. S. Aiyar, p. 33.

அயிரை மலை :

இனி, ஒரு நாட்டுக்குச் சிறந்த அணிகலன்கள் அரண்கள் என்று ஆன்றோரால்[1] போற்றப்படும் மலை அழகினையும் ஆற்று வளத்தையும் ஆசிரியர் எவ்வாறு போற்றியுள்ளார் என்று நோக்குவோம்: சேரநாட்டைச் சேர்ந்த மலைகளுள் அயிரை மலை[2] சிறப்பு வாய்ந்ததாகும். இதனைச் சூழ்ந்த பயந்தழீஇய நாட்டைத் தம் வயமாக்கிக்கோடலை விரும்பிப் போதரும் பகை வேந்தர் போர் செய்து எளிதில் மேல்வாராவாறு குறுக்கே அரண்போலச் செங்குத்தாய் நிற்கும் இம்மலை.[3]

வற்றாத வளங்கொழிக்கும் தமிழகத்து ஆறுகளுள் ஒன்று பேரியாறு ஆகும். இவ்வாற்றின் அழகை,

> "கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
> நாகந் திலக நறுங்கா ழார

1. (i) இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. (குறள்: 737)

(ii) மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். (குறள்: 742)

2. (i) இது யானைமலைத் தொடர்களுள் ஒன்று; ஐவர்மலை என்று இக்காலத்து வழங்குவது. சேரவேந்தர் செய்யுட்கோவை பக்கம், X.

(ii) Cera Kings: K. G. S. Aiyar, p. 15.

3. "சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை யயிரைப் பொருந!"
(பதிற்றுப்பத்து, 21; 28–29)

முதிர்பூம் பரப்பி னொழுகுபுன லொளித்து
மதுகர ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாறு......" (சிலப், 25: 17-22)

என்று இளங்கோ அடிகள் புனைந்துரைத்துள்ள திறம் நினைந்து நினைந்து மகிழ்தற்குரியதாகும். வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளம் படைத்த இத்தகைய பேரியாறு பாலைக்கௌதமனார் உள்ளத்தைக் கவராமல் போகுமோ? 'கோடை நீட்டித்ததால் குன்றுகள் பொலிவிழந்து தோன்ற, அருவிகள் பொழியாது வற்றியுலர்ந்த பெரிய வறட்சிக் காலத்தும் கரையளவு உயர்ந்து நீர் பெருகி வழிந்து இழியும் அகன்ற இடத்தையுடைய பேரியாறு' என்னுங் கருத்தமையப் பாடுகின்றார் புலவர்.[1]

## 10. தெய்வங்கள்

இயற்கை வளங்களால் செழிப்புற்று விளங்கும் ஒரு நாட்டின் மக்களைப் பசியும் பிணியும் பகையும் தீண்டுவது அரிது. அமைதி அரசோச்சும் நாட்டில் உயர்ந்த நாகரிகம் ஓங்கி வளர்தல் இயற்கை. சிறந்த நாகரிகத்தின் மணி முடியே மாசற்ற சமயநெறி. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையைச் சங்க இலக்கியத்தைக்கொண்டு துருவி ஆராய்வார் அவர்பால் உயர்ந்த சமய நெறிகள் குடிகொண்டிருந்தன என

1. 'கோடை நீடக் குன்றம் புல்லென
அருவி யற்ற பெருவறற் காலையும்
நிவந்துகரை யிழிதரு நனந்தலைப் பேரியாறு.'
(பதிற். 28: 8-10)

உணர்தல் ஒருதலை. ஈண்டுப் பாலைக் கௌதமனார் பாடல்களில் வரும் இரு தெய்வங்களைப்பற்றிய குறிப்புக்களை மட்டும் ஓர்வோம்:

**முருகன் :**

குட்டுவனுடைய கூற்றை ஒத்த வலியுடை வீரர்கள் போரிட்டு அழித்த நாடுகள் முருகவேள் வெகுண்டு பொருது அழித்தலால் செல்வக்களியிழந்த சூரனின் மூதூர் போலும் என்று குறிப்பிட்டுள்ளார். இப் பகுதியைப் படிப்பார்க்கு மிகப்பழைய நாளிலேயே தமிழகத்தில் தெய்வ வழிபாடு பற்றி அதை ஒட்டிய புராணக் கருத்துக்களும் வழக்காற்றில் இருந்த வாய்மை புலனாகும்.

**கொற்றவை :**

முப்பதாம் பாடலில் பாலைக்கௌதமனார் போருக்குப் புறப்படும் சேரவேந்தன் 'முரசுறை' கடவுட்குப் பலியூட்டும் செய்தியினைச் சித்திரித் துள்ளார் என்பதை முன்னமே கண்டோம். அம்முரசுறை கடவுள் வீரர்க்கு வெற்றிதரும் கொற்றவைத் தெய்வம் என்று கருதுவர் அறிஞர்.[1] மேலும் 'தன்னாட்டு அயிரை மலையிலுள்ள கொற்றவைக் கடவுளைத் தன் முன்னோர் போலவே பலியிட்டு வழிபட்டு வந்தான் குட்டுவன்' என்பர்.[2]

1. Cera Kings K. G. S. Aiyar P. 16.

2. சேரவேந்தர் செய்யுட்கோவை : பக்கம், XI.

## 11. விலங்கினங்களும் பறவையினங்களும்

**யானை :**

பாலைக்கௌதமனார் பாடல்களில் விலங்குகளையும் பறவைகளையும் பற்றிய குறிப்புக்கள் பல உள்ளன. அவற்றை ஈண்டு ஆராய்வோம்: யானைப் படையை மிகுதியாக வைத்திருந்தமையால், 'பல் யானைச் செல்கெழு குட்டுவன்' என்ற பெயரையே ஒரு சேரவேந்தன் அடைந்தான் என்றால், யானைப்படைக்கு அந்நாளில் இருந்த மாட்சியினை என்னென்று உரைப்பது![1] இனி இவ்வளவு சிறப்பமைந்த விலங்கை-விலங்குகளுள் பெரிய விலங்கை-புலவர் எவ்வாறெல்லாம் கூர்ந்து நோக்கி இதன் அழகையும் ஆண்மையையும் சுவைத்துள்ளார் எனக் காண்போம்: படைகளுள் சிறந்த யானைப்படை.[2] மாற்றார் அணிவகுப்பைக் கிழித்துச் சென்று ஏனைய படைகள் உள்ளே நுழையுமாறு செய்யும் ஆற்றல் யானைப் படைக்கே உரியதாகும். பழந்தமிழ் நாட்டில் யானைகள் போருடற்றுவதில் தலை சிறந்து விளங்கின.[3] போர்க்குச் செல்லும் யானைக்குப் பொன்னரி மாலை, ஓடை, கிம்புரி முதலிய அணிவிப்பர்.[4] அவ்யானைகள் மதஞ்சொரியும் தலையும், பசிய கண்களும்,[5] கடுத்த பார்வையும் உடை

---

1. பதிற்றுப்பத்து: 29 : 14
2. இனியது: 40.
3. பதிற்றுப்பத்து, 21 : 17.
4. பதிற்றுப்பத்து, 22 : 18.
5. பதிற்றுப்பத்து, 22 : 2.

யனவாய் விளங்கும். அவற்றால் மிதித்து அழிக்கப்பட்ட வயல்கள் பின்னர் வளம் பயத்தல் இலவாகும்.[1] இயல்பாகவே யானைகள் தம்முள் ஒருங்கே அணி வகுத்துச் செல்லும் பண்பின. அத்தகையன போர் முனையில் அணிவகுத்து நின்றால் அவ்வணி வகுப்பை உடைத்து எறிவது எளிதோ?

குதிரை:

அரசனுக்குரிய நால்வகைப் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. போர்க்குச் செல்லும் விரைந்த செலவுடைய குதிரைகள் தலையாட்டத்தை உடையனவாய் விளங்கும்.[2]

பசு:

பழந்தமிழ் நாட்டின் சிறந்த கால்நடைச் செல்வம் பசுக்களாகும். நம் முன்னோர் இச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தனர். அவர்கள் ஆ காத்து ஓம்பிய அழகினைப் பாலைக் கௌதமனார் தம் பாடல்களில் சிறப்பாகப் போற்றியுள்ளார்.[3]

எருது:

நன்கு போற்றி வளர்க்கப்பட்ட நல் எருதுகளைப் பழந்தமிழ் மக்கள் வண்டிகளிற் பூட்டி வெளிச் செல்வர். அதுபோழ்து வண்டியின் உருளி சேற்றில் சிக்கிக்கொள்ளுமேல் 'மாட்டாது மடங்கிப் படுக்கும்

1. பதிற்றுப்பத்து, 25: 2.
2. பதிற்றுப்பத்து, 22: 17.
3. பதிற்றுப்பத்து, 21: 21. (ii) பதிற்றுப்பத்து, 22: 15.

ஏனை வலியில்லாத எருதுகளைப் போலல்லாது தம் வன்மை முழுதும் செலுத்தி மூக்கொற்றியும், தாளூன்றியும் அள்ளற் சேற்றினின்றும் நீங்க வலிக்கும்' முயற்சியுடையன அவ்வெருதுகள்.[1]

**மரையா :**

மரையா பெரிதும் காடுகளிலே வாழும் தன்மையன; பெரிய தோற்றம் உடையன; இணை இணையாகக் காட்சி அளிப்பன.[2]

**கழுதை :**

பண்டு பகைவர் புலங்களை ஏர்பூட்டி உழுவதற்குக் கழுதைகளைப் பயன்படுத்தினர்!

**நரி :**

பாழ் இடங்களில் கவர்த்த வழிகளில் இருந்து பிணந்தின்னும் வெள்ளிய குறுநரிகள் பசியால் ஊளையிட்டுக் கூவும்.[3]

**கூகை :**

கோட்டான்கள் எனப்படும் கூகைகளின் கண்கள் பிதுங்கின போன்றிருக்கும். இவை கூவும் ஒலி கொடிய கண்களையுடைய பேய்மகள் கூத்தாடத் துணை புரியும்.[4]

**சிதடு :**

சிதடு என்பது சிள்வீடென்னும் ஒரு வகை

1. பதிற்றுப்பத்து, 27 : 13.
2. பதிற்றுப்பத்து, 23 : 14.
3. பதிற்றுப்பத்து, 22 : 35.
4. பதிற்றுப்பத்து, 22 : 36.

வண்டு. இலை இல்லாமல் உலர்ந்த தலையினையுடைய உன்னமரத்தின் சிறு சிறு கிளைகளில் பொருந்தியிருந்து இச்சிதடுகள் செய்யும் ஓசை வண்டின் ஓசை போல இனிதாய் இராது.[1]

**கொக்கு :**

நீர் நிறைந்த இடங்களில் வாழும் கொக்கின் பார்வை கூர்மையானது. சேய்மையிலிருந்தே நுனித்து நோக்கும் ஆற்றலுடைய கொக்குகளால் விரைந்து குத்தப்படும் கடுமையினின்றும் மீன்கள் தப்புவது அருமை. எனவே, அவை கொக்குகளின் பரிவேட்புக்குப் பெரிதும் அஞ்சும்.[2]

**நாரை :**

நீர் இடையறாமல் நிற்கும் இடங்களில் தமக்கு வேண்டிய இரையை நிரம்பப் பெறுதலின், அவ்விடங்களில் விரும்பி வாழும் நாரைகள் பெரிய கால்களை உடையன; வளைந்து தலை சாய்ந்து கிடக்கும் நெல்வயலிடத்தே அயிரை முதலிய கொழுத்த மீன்களை உண்டு மகிழும். கானற் சோலைகளில் மீன் வேட்டமாடிய குருகுகள் வெள்ளியபூங்கொத்துக்களை உடைய புன்னைக் கிளைகளில் தங்கும்.[3] நாரை, செவ்வரி, குருகு, கொக்கு என்பன தமக்கிடையே சிறுசிறு வேறுபாடுகள் உடைய எனினும், ஏறக்

1. பதிற்றுப்பத்து, 23 : 2.
2. பதிற்றுப்பத்து, 21 : 27.
3. பதிற்றுப்பத்து, 29 : 4.

குறைய ஒரே இனத்தைச் சேர்ந்த பறவை வகை எனக் கருதுவர்.[1]

**ஆண்டலை :**

ஆண்டலை என்பது 'ஆண்மகன் தலைபோன்ற தலையையும் புள்ளினைப் போன்ற உடலையும் உடையதொரு பறவை' என்பர்.[2] காட்டுக்கோழி என்றும் கூறுவர்.[3] தீய்ந்து போன காடுகளிலும் வாழும் இயல்பின இவ்வாண்டலைப் புட்கள்.[4]

**காட்டுப்பன்றி :**

காட்டுப் பன்றியைக் 'களிறு' என்று குறிப்பர் பாலைக் கௌதமனாரும் பிறரும். கொல்லையில் உள்ள கோரையின் கிழங்குகளை உண்டற்கு இப் பன்றிகள் அவ்விடங்களை நன்கு கிளறிவிடும். அதனால் புழுதியாகிய பண்பட்ட புன்செய்க் கொல்லைகளைப் பின்பு கலப்பைகள் கொண்டு உழவேண்டுவதில்லை என்று கூறுவர் ஆசிரியர்.[5]

**காக்கையும் பருந்தும் :**

பிணமுகக்கும் காக்கையின் கண்கள் கரியனவாய் இருக்கும். பருந்தோடு சேர்ந்து காக்கைகள்

1. Tamil Lexicon. Vol II, P. 1014. பார்க்க
2. (i) பதிற்றுப்பத்து—டாக்டர். உ. வே. சா. பதிப்பு. பக்கம் 60 பார்க்க.
   (ii) Tamil Lexicon, Vol I. P. 221. பார்க்க.
3. பதிற்றுப்பத்து-ஔ. சு. து. பதிப்பு-பக்–108. பார்க்க.
4. பதிற்றுப்பத்து, 25 : 8.
5. பதிற்றுப்பத்து, 26 : 2.

பெரும்பேயும் சிற்றெறும்பும் உண்ண அஞ்சும் பலியையும் உண்ணும்.[1]

## 12. மரவகை, கொடிவகை, மலர் வகை

தாவர உலகின்மீது சங்கத் தமிழ்ப் புலவர் கொண்டிருந்த காதல் தணியாக் காதல் ஆகும். வாய்ப்பு நேர்ந்த வழியெல்லாம் அவர்கள் ஓங்கி உயர்ந்த மரங்களையும் பரவிப்படர்ந்த கொடிகளையும், அழகே வடிவான மலர்களையும் வருணிக்கத் தவறியதில்லை. அவ்வருணனைகளும் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த பெருமையுடையனவாகவே விளங்கல் சங்கத் தமிழின் தனிச் சிறப்பாகும்.

பாலைக் கௌதமனார் தம் பாடல்களில் மரவகைகளும், கொடி வகைகளும், மலர் வகைகளும் அளிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

நீர் வளம் நிறைந்த நாடுகளில் உள்ள மணல் மலிந்த பெருந்துறைகளில் மருத மரங்கள் தம்பால் பல புள்ளினங்கள் ஒலிக்க ஓங்கி நிற்கும்; அவற்றோடு காஞ்சி மரங்களும் சிறு மகளிரால் சிதைவுண்ட கோலத்தோடு காட்சி அளிக்கும். காஞ்சி மரங்களைப் போன்றே தாழநின்று பூக்கும் இயல்புடைய முருக்க மரங்களின் மலர்களை மகளிர் கொய்து சிதையாராகலின், அவை கீழே வீழ்ந்து வறிதே கிடக்கும்.

1. பதிற்றுப்பத்து, 30 : 39.

2. பதிற்றுப்பத்து, 23 : 18-20.

நெய்தல் நிலத்தில் தழைந்த ஞாழல் மரங்களும் புன்னை மரங்களும் நிறைந்து காணப்படும்.[1] கானற் சோலையின் கரையில் தாழ இருக்கும் அடும்பங் கொடியைத் திரை அலைத்து ஒதுக்கி இருக்கும்.[2] பீர்க்கங்கொடிகள் பாழ்மனை வேலிகளில் படர்ந் திருக்கும்.[3]

கார் காலத்தில் மலர்ந்து கற்புடை மங்கையர் போற்றி அணியும் முல்லையும், மகளிர் கைபோலும் காந்தளும், நெருப்பை ஒத்த நிறம் படைத்த முள்ளு முருங்கை மலர்களும், தாமரை மலர்களும், விளையாடு மகளிர் பறிக்க இயலாத வகையில் பழனத்தில் மலர்ந்திருக்கும் ஆம்பலும், இடையரூது மலர்ந்த குவளையும், வளைக்கை மகளிர் கொய்யும் வள்ளையும், நீலநிற நெய்தற்பூக்களும் பாலைக் கௌதமனார் பாடல்களில் வழங்கும் காட்சியின்பம் கண்டு களித் தற்குரியதாகும்.[4]

பழந்தமிழ் நாட்டின் நானில வளத்தைப் பாலைக் கௌதமனார் சித்திரித்துள்ள பகுதிகளைப் பார்த்த போதும், கொங்கு நாட்டைப் பற்றியும் பூழி நாட்டைப் பற்றியும் ஆராய்ந்த போதும் பல்வகை நிலப்பகுதிகட்கும் உரிய மக்களின் வாழ்க்கையை ஒருவாறு கண்டுள்ளோம். ஈண்டுப் பழந்தமிழ்

1. *பதிற்றுப்பத்து*, 30: 1, 3.

2. *பதிற்றுப்பத்து*, 30: 6.

3. *பதிற்றுப்பத்து*, 26 : 10.

4. *பதிற்றுப்பத்து*, 21 : 33; 21: 36; 23: 20; 23: 23; 23: 24; 27: 2; 27: 3; 29: 2; 30; 2.

நாட்டுச் சமூக வாழ்க்கையில் இன்றியமையாத இடம் பெற்றிருந்த வேறு சிலரைப் பற்றி மட்டும் காண்போம்.

## 13. மக்கள் இனம்

**அந்தணர்:**

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற அறுவகைத் தொழிலும் உடையராய் இருந்தனர் அந்தணர். 'பார்ப்பார்க் கன்றிப் பிறர்க்குப் பணிபறியலையே' என்று அரசர்களை நோக்கிப் புலவர் பாடும் தகையதாய் அவர்கள் வாழ்க்கை அமைந்திருந்தது.[1]

வேள்விகள் இயற்றும் வழக்கம் சங்ககாலத் தமிழகத்திலேயே மலிந்துவிட்டது என்றல் மிகையாகாது. அவ்வாறு அந்நாளில் வேள்வி இயற்றிய பெரியார் சொல்லிலக்கணத்தையும் பொருள் இலக்கணத்தையும் சோதிடத்தையும் வேத ஆகம நூல்களையும் மாசறக்கற்றிருந்தனர். கற்ற கல்வியின் பயனைப் பிற உயிர்கட்குத் தீங்கு செய்வதை நினைப்பிலும் கொள்ளாத நற்றவத்தோராய் அவர் திகழ்ந்தனர். பகலவனை ஒத்த வாய்மை நெறி வழுவாத வீரர்களாய் இருந்த அவர்கள் வேள்வித் தீ மூட்டி வழிபாடு ஆற்றுங்கால் அவர்கள் உள்ளத்தெழுந்த விருப்பம் மெய்யின்கண் பரந்து வெளிப்படும்.[2]

1. பதிற்றுப்பத்து, 24 : 6-8.
2. பதிற்றுப்பத்து, 21 : 1-7.

வீரர் :

பண்டு தமிழ் நாட்டின் வேலியாய்த் திகழ்ந்தவர்கள் வீரர்களே. புலித்தோலால் ஆகிய உறையில் புலால் நாறும் தங்கள் வாளை வைத்திருப்பார்கள்; நாளும் போரை விரும்புவார்கள்; வலக்கையில் வாளுயர்த்திப் பகைவர் அரண்களை அழித்து வெற்றி கொள்வார்கள்;[1] எமனை ஒத்த மொய்ம்பும் பின்னிடாப் போர்த்தொழிலும் உடையவர்கள். பிளத்தற்கு அரிய பகைவரின் யானைப் படையையும் பிளந்து உட்புகுந்து போருடற்ற வல்லவர்கள். குருதிக்கறை படிந்த கழற்காலும் கடுமாப்போலும் விரைந்த செலவுமுடைய வீரர்கள் அவர்கள்.

மழவர் :

பழந்தமிழ் வீரர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தவர் மழவர். அவர்கள் வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை எனப் போர்க்குரிய கண்ணிகள் பலவற்றையும் அணிவார்கள். ஒரு வகை வீரர்களாகிய அவர்கள் குதிரைப்படையை வைத்திருந்தார்கள்; போருடற்றுவதில் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள்.

பாணர் :

கலை மலிந்த நாடு பழந்தமிழ் நாடு. இசையையும் கூத்தையும் போற்றிப் பழந்தமிழ் நாட்டின் கலைச் சிறப்பை நாளும் செழுமை உடையதாக்கியவர்கள் வயிரிய மக்களே. பை ஒன்றில் தங்கள் இசைக் கருவிகளைத் தொகுத்துக் கட்டியிருப்பார்கள். குற்ற

1. பதிற்றுப்பத்து, 24 : 2-5.

மற்ற திவவுயாழினையுடைய வயிரியர் அவ்யாழைப் பண்ணொடு பொருந்த எழுப்பி, ஊர் மன்றத்தை அடைந்து, மறுகுகளின் சிறைக்கண்ணே நின்று பாடுவர். வரிசை அறிந்த வள்ளல்கள் வழங்கும் பரிசில்களைப் பெற்று அவர்கள் மகிழ்ச்சியால் ஆடுவார்கள், பாடுவார்கள்.

## 14. இலக்கியவளமும் நயமும்

பாலைக்கௌதமனார் பாடல்களில் உள்ள இலக்கிய வளம், அவர் பாடல்களை ஊன்றிப் படிப்பார்க்குக் கழிபேருவகை அளிப்பதாகும். அணிகளுள் எல்லாம் சிறந்த அணி உவமை அணியாகும். எனவே, இவண் மூன்றாம் பத்திலுள்ள உவமைகளின் சிறப்பை மட்டும் சிறிது நினைவு கூர்வோம்:

1. "காலை யன்ன சீர்சால் வாய்மொழி." (பதிற். 21 : 4)
2. "வேயுறழ் பணைத்தோள்." (பதிற். 21 : 37)
3. "ஓரீஇயின போல இரவுமலர் நின்று
திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்."
(பதிற். 21 : 34-35)
4. "முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற முடைகரை."
(பதிற். 23 : 20)
5. "அழன்மருள் பூவின் றாமரை." (பதிற். 23 : 23)
6. "நெடுவயி னொளிறு மின்னுப்பரந் தாங்குப்
புலியுறை கழித்த புலவுவா யெஃகம்." (பதிற். 24 : 1-2)
7. "அடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவின்."
(பதிற். 24 : 20)

8. "உருமுறழ் பிரங்கு முரசிற் பெருமலை
வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்க."
(பதிற். 25 : 10–11)

9. "முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்
உரும்பில் கூற்றத் தன்னநின்
திருந்துதொழில் வயவர்." (பதிற். 26:12–15)

10. "அரக்கத் தன்ன நுண்மணல்." (பதிற். 30: 27)

என வரும் உவமைகள் உன்ன உன்னப் பேரின்பம் தருவன.

பயில்தொறும் பண்புடையார் தொடர்பு போல நவில்தொறும் நயம்மிகப் பயக்கும் ஈரிடங்களை மட்டும் இங்கே காண்போம் :

பூழி நாட்டில் 'செருப்பு' என்னும் பெயர் தாங்கிய மலை ஒன்று உளது. அவ்வாறே 'அயிரை' என்ற பெயர் தாங்கிய இலக்கியப் புகழ் சிறந்த மலை ஒன்றும் உளது. இவ்விரு மலைகளையும் பற்றிக் குறிப்பிடும்போதும் 'மிதியாகிய செருப்பல்லாத செருப்பென்னும் மலை' என்றும், 'கொக்கிற்கு அஞ்சா(மீன் அன்று ஆதலால்)நெடிய அயிரை மலை' என்றும் ஆசிரியர் சொற்பொருள் நயம் ததும்பப் பாடும் திறம், தமிழ் மொழியின் அழகையும் புலவரின் நுண்மாண் நுழைபுலத்தையும் புலப்படுத்துகின்றது.

## 15. பெயர்க்காரணம்

பதிற்றுப்பத்தில் உள்ள ஒவ்வொரு பாடலுக்கும் அப்பாடலில் உள்ள சிறந்த சொற்றொடர் ஒன்று காரணமாக அழகிய பெயர் அமைந்துள்ளது

என்பதைத் தொடக்கத்திலேயே கண்டோம் அல்லவா? அதன்படிமூன்றும்பத்தில் உள்ள பத்துப் பாடல்களுக்கும் பத்து அழகிய பெயர்கள் அமைந்து உள்ளன.[1] அப்பெயர்களையும் அவை அமைந்த காரணங்களையும் ஈண்டுக் காண்போம்:

**1. அடுநெய் ஆவுதி :**

சேரன் தலைநகரில் இருபெருவேள்விகள் நடைபெற்றன. ஒன்று, வேத வேள்வி; மற்றொன்று, விருந்து வேள்வி எனக் கண்டோம் அன்றோ? விருந்துபோற்றும் இல்லறவேள்வியில் விருந்தினரை உண்பித்தற்குச் சமைக்கப்படும் உணவின்கட் பெய்யப்படும் நெய்யை 'அடுநெய் ஆவுதி' என்று புலவர் சிறப்பித்துள்ளமையால், இப்பாட்டு இத் தொடரால் பெயர் பெற்றது.

**2. கயிறு குறுமுகவை :**

ஆற்றுநீர் வளமற்ற கொங்குநாட்டில் பிள்ளைக் கிணறுகளில் நீண்ட கயிறுகளில் சிறிய முகவை களைப்பிணைத்துப் பயன்படுத்துவர், 'தன்னால் நீர் வாங்குவது பெரிதன்றித் தன் கயிற்றையே நின்று வாங்கப்படும் முகவை'களாக அவை விளங்கும். அவற்றைக் 'கயிறுகுறுமுகவை' என்று கவிஞர் சிறப்பித்துள்ளமையால், அச்சொற்றொடரே இப் பாட்டிற்குப் பெயராயிற்று.

---

1. இப்பகுதி பற்றிய விரிவான விளக்கங்கட்குப் பதிற்றுப்பத்து டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் பதிப்பையும், ஔவை. சு. து. அவர்களின் பதிப்பையும் காண்க.

**3. ததைந்த காஞ்சி:**

விளையாட்டு மகளிர் பலரும் தளிரும் முறியும் தாதும் பூவும் கொய்தலால் சிதைவுபட்டுக் கிடக்கும் காஞ்சி மரத்தைத் 'ததைந்த காஞ்சி' என்றார் புலவர். அச்சொற்றொடரே இப்பாட்டிற்கு அமைந்த பெயர் ஆயிற்று.

**4. சீர்சால் வெள்ளி:**

ஏனைய கோளினும் நாளினும் வெள்ளி மிக்க வொளியுடையது. அது சிறிது வடக்கே ஒதுங்கித் தாழ்ந்து விளங்குதலின் 'வறிது வடக்கிறைஞ்சிய வெள்ளி' என்றும், அது மழை வளந்தரும் கோள் களுள் தலைமையாயதாதலின், 'சீர்சால் வெள்ளி' யென்றும் வழங்கும் சிறப்புடையதெனினும், ஏனைக் கோள்களுடன் கூடியிருந்தாலன்றி மழை வளம் சிறவாமை தோன்றப் 'பயங்கெழு பொழுதொடு ஆநியம் நிற்ப' என்று விதந்தும் கூறியுள்ளார் ஆசிரியர். இத்தகைய பெருமைக்குரிய 'சீர்சால் வெள்ளி' பாட்டிலும் பெற்றுள்ள சிறப்பிடம் கருதி இச்சொற்றொடரே இப்பாட்டிற்குப் பெயராயிற்று.

**5. கானுணங்கு கடுநெறி:**

காட்டுத்தீயால் வெந்து கரிந்து கிடக்கும் நிலத் தில் உள்ள அஞ்சத்தக்க வழியை 'கானுணங்குகடு நெறி' என்று ஆசிரியர் கூறியுள்ளமையான், இப் பாட்டிற்கு இச்சொற்றொடரே பெயராயிற்று.

**6. காடுறு கடுநெறி:**

முள்ளும் தழையும் மண்டி எவ்வுயிரும் நடந்து செல்ல ஒண்ணுக் கடுமையதாய் உள்ள காட்டு வழி

யினைக் 'காடுறு கடுநெறி' என்றார் ஆதலின், இப் பெயர் அமைந்தது.

7. தொடர்ந்த குவளை :

'ஆண்டுதோறும் இட்டு ஆக்க வேண்டாது பண்டு இட்டதே ஈடாக எவ்வாண்டிற்கும் தொடர்ந்து' செழித்து வளர்ந்து விளங்கும் குவளை மலர்க் கூட்டத்தைத் 'தொடர்ந்த குவளை' என்றமையால் இப்பெயர் அமைந்தது.

8. உருத்துவரு மலிர்நிறை :

சேர நாட்டின் சிறந்த ஆறாகிய பேரியாறு பெருக்கெடுத்துப் பொருவது குறித்துக் கண்ணியும் மாலையும் சூடிவரும் மள்ளர்போலத் தழைகள் தாங்கி வரும் காட்சியை 'உவலை சூடி உருத்துவரு மலிர் நிறை' என்றார். அதனால், இப்பெயர் அமைந்தது.

9. வெண்கை மகளிர் :

வளையணியாத வெறுங்கையுடைய மகளிரை 'வெண்கை மகளிர்' என்றமையால், இப்பெயர் அமைந்துள்ளது.

10. புகன்றவாயம் :

மாற்றார் படைப்பெருக்கை எதிரூன்றி நின்று தடுத்துப் பற்றிச் சிறை செய்து வெற்றியுற்ற வீரர் கூட்டம் மேலும் அச்செயலையே விரும்புதல்போல நீர்ப்பெருக்கை அணையிட்டுத் தடுத்து ஆரவாரிக்கும் மக்கள் கூட்டத்தைப் 'புகன்ற ஆயம்' என்று சிறப்பித்ததால் இப்பெயர் வந்தது.

## 16. புலவர் உள்ளம்

பாலைக்கௌதமனார் திருவுள்ளம் – தமிழ் உள்ளம் — போர் விரும்பாப் பேருள்ளம் — இயற்கைத் தேனுண்டு பாடும் இன்ப உள்ளம்—வறுமைக்கும் எளிமைக்கும் இரங்கும் விழுமிய உணர்வுள்ளம்—வீரத்தையும் கருணையையும் கண்டு இறுமாப்பும் இறும்பூதும் கொள்ளும் சிறந்த உள்ளம்—அவர் பாடல்களில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் விளங்கக் காண்கிறோம். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் உள்ளத்தில் இருந்த பேருணர்வு அவர் கருத்தைக் கவர்ந்த குட்டுவனைப் பற்றியதே ஆகும் என்றால் மிகையாகாது.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் தன் காதல் மனைவியுடன்—பெருந்தேவியுடன்—இருந்த காட்சி, புலவர் பெருமானுக்குக் கண்ணிறைந்த காட்சியாய் விளங்கியிருத்தல் வேண்டும் என்பது அவர் பாடல்களில் இரண்டு இடங்களில் வரும் இனிய குறிப்புக்களினால் நன்கு புலனாகிறது. கற்புடைய பெருந்தேவியின் சிறப்பை — அழகை — எல்லாம் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பத்தியோடு போற்றிய பாலைக்கௌதமனார் இறுதியாக,

> … … … ‘ இவளொடு
> ஆயிர வெள்ளம் வாழிய பலவே! ’
>
> (பதிற்றுப்பத்து, 21 : 37-38)

என்று வாய் நிறைந்த சொற்களால் வாழ்த்தும் பகுதியைப் படிக்கும்போது நம்மை அறியாமல் நம் மனம் உருகிவிடுகிறது! பழந்தமிழ்ப் புலவரின் கலையுள்

ளம்—கடவுள் உள்ளம்—நம்மை ஆட்கொண்டுவிடுகிறது! ஆம்; அவர் வாழ்த்திய வாழ்த்து வீணாகிவிடவில்லை. அவரும் அவர் உள்ளத்தைத் திறைகொண்ட மன்னனும் அவன் பெருந்தேவியும் இன்றும்—பாட்டுலகில்—புகழ் வடிவில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வண்ணமே தமிழோடு தமிழாய் அவர்கள் புகழுரு என்றும் நிலைத்திருக்கும். பாலைக்கௌதமனார் சேரனை இன்பவாழ்வு வாழும் படி வாழ்த்திய வாழ்த்து, உலகில் உள்ள ஒவ்வோர் உயிரையும் அவ்வாறே வாழுமாறு வாழ்த்திய வாழ்த்தொலிபோல இன்றும் நம் செவிகளில் எதிரொலிக்கின்றது. அதுதான் நிறைமொழி மாந்தர் மறை நிகர் மொழியின் ஆற்றல் போலும்!

## 17. உயர்ந்த உண்மை

உலகமெல்லாம் வாழ வேண்டும் என்ற பெருங் குறிக்கோளுடன் உலக உயிர்களுக்கு எல்லாம் உயிராய்—தாயாய்—தெய்வமாய் விளங்கிய அரசனை வாழ்த்திய பாலைக்கௌதமனார், மன்பதை உய்யக் கூறிச்சென்ற மணிமொழிகள் பலவாகும். அவற்றுள் இன்றும் நமக்குப் பெரிதும் பயன்படக் கூடிய சிறந்த ஓர் உண்மையில் மட்டும் இப்பொழுது சிந்தனையைச் செலுத்துவோம்:

இன்று நாம் வாழும் யுகம் 'அரசியல் யுகம்'—அரசியல் கலவாத எதுவும் விளங்காமற் போகும் காலம் இது. இத்தகைய யுகத்தில் ஒரு நாட்டின் அரசியல் பழுதின்றி உலகம் போற்றத்தக்க வகையில் நடைபெறுவதற்குரிய ஒரு நல்லறிவுரையை—

ஒப்பிலாத மணிமொழியை—வழங்கி நிற்கின்றன மூன்றும் பத்தின் இரண்டாம் பாடலின் முதல் நான்கு அடிகள். 'கையிகந்த சினமும், கையிகந்த காமமும், கையிகந்த கண்ணோட்டமும், பகைவர்க்கு அஞ்சி நடுங்கலும், பொய்ம் மொழியும், அன்பு மிகவுடைமையும், வரம்பு மீறிய தண்டனைகளை வழங்கலும் இவ்வுலகத்தே அறமறிந்து செய்யும் அரசுமுறை நடத்தற்குப் பெரிய வழியடையாக நிற்கும்தீங்குகளாகும். பலகாலும் சிந்தித்துப் பயன் காணக்கூடிய சிறந்த ஓர் அறிவுரையைச் செந்தமிழ் நலம் மிக்க ஒரு பாட்டில் புலவர் எவ்வளவு அழகாகப் பொதிந்து வைத்துள்ளார் பாருங்கள்![1] பாலைக் கௌதமனர் கூறிய அறிவுரை ஈராயிரம் ஆண்டுகட்குமுன் வாழ்ந்த முடிகெழு மூவேந்தருள் ஒருவனுக்குத் தான். ஆயினும், 'எல்லாரும் இந்நாட்டு மன்னராகி' யுள்ள இந்நாளில்–முடியரசு தொலைந்து குடியரசு மலர்ந்துள்ள இந்நாளில்–முன்னினும் ஈராயிரம் மடங்கு அதிகமாகவே பாலைக்கௌதமனர் சொல்லிச் சென்ற பேருண்மையை நாம் போற்றிப்பயன்படுத்த வேண்டிய இன்றியமையாத நிலையில் இருக்கின்றோம். பாலைக்கௌதமனர் நமக்குச் சொல்லிச் சென்ற அறிவுரை மிகச் சிறந்தது; பயனுடையது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அவ்வுண்மை

1. "சினனே காமங் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை
தெறல் கடுமையொடு பிறவுமிவ் வுலகத்
தறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்."

(பதிற்றுப்பத்து, 22 : 1-4)

வழி நின்று நாம் நம் தாயகத்தை—தமிழகத்தை—உலகின் கண்களில் உயர்த்துவோமாக! நம் தமிழன்னையின் 'நெஞ்சுமலி உவகை'யைப் பெறுவதற்கு அதனினும் சிறந்த தொண்டு உலகில் உண்டோ?

மூன்றாம்பத்தின் ஆசிரியராகிய பாலைக்கௌதமனார் எத்தனையோ அருந்தமிழ்ப் பாடல்களை இயற்றி இருக்கக் கூடும். பாலை பாடுவதில் வல்லவராதலால் இவரைப் பாலைக் கௌதமனார் என்று சிறப்பித்து வழங்கினர் என்று கூறுவர். ஆயினும், மூன்றாம் பத்துப் பாடல்களைத் தவிர, புலமை நலங் கனிந்தொழுகுந் தன்மையவாய் இவர் பாடிய வேறு பாடல்களைச் சங்க இலக்கியத் தொகுதியினுள் காணக்கூடவில்லை. கருத்து வேறுபாடின்றிப் பாலைக் கௌதமனார் பாடியனவாகவே இன்று நாம் நம்பக்கூடிய பாடல்கள் பதிற்றுப் பத்திலுள்ள மூன்றாம் பத்துப் பாடல்களே.[1] இப்பத்துப் பாடல்களும்-247 அடிகளும்-இல்லையானால், நாம் ஒரு பெரு வேந்தனைப்பற்றிய செய்திகளுள் எதையும் அறிந்திருக்கமாட்டோம்; அவ்வாறே பாலைக்கௌதமனார் என்ற சிறந்த சான்றோரைப் பற்றியும் ஒரு சிறிதும் தெரிந்திருக்கமாட்டோம். இதை எண்ணும்போதே நம் மனத்தில் ஒரு வகையான அச்சமும் பத்தியும் கலந்து தோன்றுகின்றன அல்லவா?

1. (i) பாடினோர் வரலாறு: பதிற்றுப்பத்து, டாக்டர். உ. வே. சா. பதிப்பு (1941), பார்க்க.

(ii) புறநானூறு—ஔவை சு. து. பதிப்பு, பக்கம்-336 பார்க்க.

பதிற்றுப்பத்தும் அதன் பழைய உரையும் தமிழ் மக்கட்குக் கிடைத்த அழியாப் பெருஞ் செல்வம். அச்செல்வத்தை உடைமையாலேயே நாம் 'செல்வர்கள்' என்ற இறுமாப்போடு வாழலாம். அச்செல்வத்தின் பெருமையை நமக்கு முதன் முதலாக எடுத்துக்காட்டிய பெருமை காலஞ்சென்ற தமிழ்க்கடலாகிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களையே சாரும். அப்பெரியார்க்கும், அவர் பதிப்பித்த அந்நூலின் துணைகொண்டு சங்கத் தமிழின் வரலாற்றுச் சிறப்பை வையகமெல்லாம் அறியுமாறு, 'சேர வேந்தர்' பற்றி அரிய ஆராய்ச்சி நூல் எழுதிய அறிஞர் திரு. கே. ஜி. எஸ். ஐயர் அவர்கட்கும், அண்மையில் பதிற்றுப்பத்துக்கு விளக்க உரை கண்டு விழுமிய தொண்டாற்றியுள்ள திரு. ஔவை. சு. து. அவர்கட்கும், அறிஞர்கள் ஏட்டளவில் செய்த முயற்சியை எல்லாம் நாட்டுமக்களின் இயக்கமாக மாற்றி வருபவரும் இப்பதிற்றுப்பத்து மாநாட்டைக் கூட்டுவித்த நற்றமிழ்த் தொண்டருமாகிய திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கும் தமிழகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

வாழ்க சங்கத் தமிழ்!

# 2

# மலாய் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள்*

## 1

மலாய் மொழியில் தமிழ்ச் சொற்கள் மலிந்துள்ளன. இதற்குக் காரணம், அந்த மொழி வழங்கும் நாட்டிற்கும் நமது தாயகத்திற்கும் பல்லாயிரம் ஆண்டுகளாய் நிலவி வந்துள்ள மிக நெருங்கிய அரசியல், பொருளாதார, கலைத் தொடர்புகளே ஆகும். ஆராய்ச்சி அறிஞர்களின் நூல்கள்[1] வாயிலாகத் தெளிவு பெறும் இவ்வுண்மையை நேரில் கண்டு களிக்கும் நற்பேறு யான் மலாய் நாட்டில் இருபத்தொரு நாள்களுக்குமேல் சுற்றுப் பயணம் செய்த போது எனக்குக் கிடைத்தது.

---

* சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாகிய 'கிழக்கு நாட்டுக்கலை, ஆராய்ச்சி இதழ்'—தொகுதி XVI — Part II இல் வெளியிடப்பெற்றது.

1. (அ) டாக்டர் சுவாமி சத்தியானந்தா—மலாயாச் சரித்திரம் (1958)

(ஆ) F. J. Moorhead—A History of Malaya and her neighbours (1957)

(இ) Dr. Swami Satyananda—Influence of Indian culture in Malaya & Malaysia (1955)

(ஈ) R. V. Winstedt—Malaya and its history முதலியன

இப்பொழுதும் மலாயாவில் எட்டிலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். 1957-ஆம் ஆண்டுக் குடியிருப்புக் கணக்குப்படி மலாயாக் கூட்டரசில் மொத்த மக்கள் தொகை 62,76,915. இதில் மலாயர் 43·7%; மலேஷியர் 5·4%; சீனர் 38·6%; இந்தியர் 11% (இவர்களுள் பெரும்பாலார் தமிழரே); ஐரோப்பியர் 0·2%; யுரேஷியர் 0·2%; மற்றவர்கள் 0·9%. சிங்கப்பூர் அரசின் மொத்த மக்கள் தொகை 14,56,400. இதில் மலாயர் 7·9%; மலேஷியர் 4·5%; சீனர் 77·5%; இந்தியர் 7·6% (இவர்களுள் பெரும்பாலார் தமிழரே); ஐரோப்பியர் 0·9%; யூரேஷியர் 0 9%; மற்றவர்கள் 0·7%[2] இப்புள்ளி விவரங்களிலிருந்து இன்றும் மலாய் நாட்டில் மூன்றாவது பெரிய இனம் தமிழ் இனமே என்பது தெளிவாகும்.

மலாயரே மலாயா நாட்டுப் பழங்குடியினர் அல்லர். கி. மு. 2000 ஆண்டளவில் யூனானிலிருந்து (Yunan) வந்து குடியேறிய அம்மக்கள், காலப்போக்கில் மலாய் மண்ணில் குடியேறிய பல்வேறு இனத்தவரிடமிருந்து பல்வேறு நாகரிக முறைகளையும் கற்றுக்கொண்டார்கள்.

‘மலாயா’ என்ற பெயரிலேயே தமிழ் மணம் கமழக் காணலாம். இப்பெயர் அமைந்த காரணத்தை ‘மலாயாச் சரித்திரம்’ என்னும் தமிழ்

2. டாக்டர் சுவாமி சத்தியானந்தா–மலாயாச் சரித்திரம், பக்- 14.

நூலின் ஆசிரியர் டாக்டர் சத்தியானந்தா பின் வருமாறு விளக்கியுள்ளார்:[3]

"'மலாயா' என்னும் சொல் ஒரு தமிழ்ப் பதமாகும். இந்தப் பெயர் எப்படி உண்டாயிற்று? பழைய காலத்திலே முதன்முதலாகக் கிழக்கிந்திய நாடுகளுக்கு வந்து ஆங்காங்கே இராச்சியங்களை நிறுவினவர்கள் தென்னிந்தியாவில் உள்ள கிழக்கு மலைத் தொடரைச் சார்ந்த பிரதேசங்களிலிருந்த தமிழர்களே. இவர்கள் மலைப் பிரதேசங்களிலிருந்து வந்தபடியாலும், மலேஷியா நாடுகளில் மலைகள் நிறைந்திருந்தமையாலும், தாங்கள் ஸ்தாபித்த இராச்சியங்களுக்கு 'மலாயா' (மலை) என்னும் பெயரைச் சூட்டினார்கள். இதினின்றே மலாயா, மலேஷியா என்னும் சொற்கள் பிறந்தன. முதன்முதல் மலாயா ஜாதியாருக்கு நாகரிகம் அளித்தவர்கள் தமிழர்களே."

டாக்டர் சத்தியானந்தாவின் கருத்தையே ரோல்ண்டு பிராடெல் (Roland Braddell) என்ற மேலை நாட்டு அறிஞரும் வலியுறுத்தியுள்ளார். அவர் கருத்து வருமாறு: "மலாயாவுலகிற்கு முதன் முதலாக நாகரிகத்தை அளித்தது இந்தியாவே. தென்னாட்டுத் தமிழர்களே பழங்காலத்திலேயே இந்தியாவின் தலை சிறந்த மீகான்களாய் விளங்கினார்கள்".[4]

---

3. டாக்டர் சுவாமி சத்தியானந்தா — மலாயாச் சரித்திரம், பக். 21-2.

4. டாக்டர் சுவாமி சத்தியானந்தா — மலாயாச் சரித்திரம், பக். 28.

மலாயா என்னும் பெயரிலே தமிழ் மணங் கமழ்வதைப் போன்றே 'சிங்கப்பூர்' என்ற பெயரிலும் செந்தமிழோசையைக் கேட்கலாம். சோழர் குடியில் தோன்றிய நீல உத்தமச் சோழன் என்ற வேந்தனே முதன்முதலாக இத்தீவிற்குச் 'சிங்கப் பூர்' என்று பெயரிட்டான் என்பர் ஆராய்ச்சியாளர்.[5] அதற்குக் காரணம், கி. பி. 1160இல் ரிந் தாங் தீவை (Riau Island) ஆண்டு வந்த நீல உத்தமச் சோழன் ஒரு நாள் தனது பரிவாரத்துடன் 'இருள்' என்னும் பொருளுடைய 'தூமாஸ்' என்னும் வடசொல்லடியாகப் பிறந்த 'துமாசிக்' என்ற பெயருடைய சிங்கப்பூரை அடைந்தான். சிங்கப் பூர் நதி முகத்துவாரத்தில் இறங்கிய அவ்வேந்தனும் அவன் பரிவாரத்தாரும் சிங்கம் போன்ற ஒரு விலங்கைக் கண்டனர். அதனால் 'துமாசிக்'கைச் 'சிங்கப்பூர்' என வழங்கலாயினர். இச்செய்தி பழைய மலாய் வரலாற்றிலும் காணப்படுகிறது.

கி. பி. முதல் நூற்றாண்டு முதற்கொண்டே மலாயாவுக்கும் தமிழகத்திற்கும் இடையே நிலவி வந்த பல துறைத் தொடர்புகள் மலாயாவில் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டுக்களாலும் கற்கோயில்களாலும் வேறு பல புதைபொருள்களாலும் விளக்கமுறுவது போன்றே மலாயா மக்களின் பழக்க வழக்கங்களாலும் மொழியாலும் உறுதி பெறுகின்றன. மலாயா நாட்டுப் பெரிய மன்னர் முதல் எளிய குடியானவன் வரை அனைவரும் தமி

5. டாக்டர் சுவாமி சத்தியானந்தா — மலாயாச் சரித்திரம், பக். 32, 77.

முகம் வழியாகச் சென்ற இந்திய (பிற்காலத்தில் இஸ்லாமிய) சமயக் கோட்பாடுகட்கும் சடங்குகட்கும் நம்பிக்கைகட்கும் எவ்வாறு இலக்காகியுள்ளனர் என்பதை மேற்கு நாட்டு ஆராய்ச்சி அறிஞர் நூல்களே விரிவாய் விளக்குகின்றன. சான்றாக, 'மலாயா நாடும் அதன் வரலாறும்' என்ற தலைப்பில் சர். ரிச்சர்டு வின்ஸ்டெட்டு என்பவர் வரைந்துள்ள ஆங்கில நூலின் மூன்றாவது இயலைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.[6] இந்த இயலில் அறிஞர் ரிச்சர்டு வின்ஸ்டெட்டு அரிதின் ஆராய்ந்து கூறும் கருத்துக்களின் சாருக அவர் எழுதியுள்ள பின் வரும் வாசகங்களைக் கூறலாம்:

"இந்தியாவே மலாயா மக்களின் உலகியல் வாழ்க்கையிலும் ஆன்மிக வாழ்க்கையிலும் 19-ஆம் நூற்றாண்டு வரை மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. அதன் விளைவாக எழுத்து, சமயம், அரசியல் முறை, சட்டம், சோதிடம், மருத்துவம், இலக்கியம், சிற்பம், உலோக வேலை, பட்டு நெசவு ஆகிய துறைகள் அனைத்திலும் மலாயா மக்கள் இந்தியாவிற்கே பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள்." இவ்வுண்மையை ஆங்கில மொழியில் உள்ள சிறந்த கலைக் களஞ்சியமாகிய 'என்ஸைக்கிளோபீடியா பிரிட்டானிக்கா'வும் தடையின்றி ஏற்றுக்கொள்கிறது. மலாயா மொழியின் தலைசிறந்த நூலை எழுதியவரே

6. Sir Richard Winstedt—Malaya and its history—pp. 24-32.

7. Encyclopaedia Britanica (1960) — Vol. 14, pp. 711, 719, 721-2.

தமிழ் இரத்தத் தொடர்புடையவராய் இருக்கக் காண்கிறோம்.[8]

இவ்வாறு பெருங்கடலாலும் பிரிக்க முடியாத வகையில் மலாயா மக்கள் வாழ்க்கையில் தமிழின் செல்வாக்கும் பல்லாற்றானும் ஊடுருவி இருந்தமையால், அம்மக்களின் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள் மிகப் பலவாக இடம் பெற்றிருத்தல் இயற்கை. ஆனால், தமிழ் வழக்குச் சொற்கள் அனைத்தும் தமிழ் வேர் உடையன அல்ல. அவற்றுள் சில பல வடமொழி வேர் உடையனவாய் இருத்தல் கூடும். ஆயினும், அவை பெரும்பாலும் 'வடவெழுத்து ஒரீஇ' தமிழொலி மரீஇத் தமிழ்—தமிழர் வாழ்வில் கலந்தே மலாயாவிற்குப் பயணமாயின என்பதை மறத்தல் இயலாது.[9] அவ்வாறு பெரும்பாலும் 'திரைகடலோடித் திரவியம் தேடிய' தமிழர் வாயிலாக மலாய் மொழியில் கலந்து மிளிரும் இலக்கிய வழக்கு அல்லது பேச்சு வழக்குடைய நானூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் வழக்குச் சொற்களின் அகர வரிசை வருமாறு.[10]

---

8. (i) Sir Richard Winstedt—Malaya & its history—p. 21.

(ii) ,, ,, —The Malayas—A cultural history [1950] —pp. 151—2.

9. தமிழ் வழக்கே பெறாத வடமொழிச் சொற்களும் பலவாக மலாய் மொழியில் உள்ளன.

10. இந்நூலின் முன்னுரையில் இப்பட்டியல் பற்றியுள்ள குறிப்புக்களைக் காண்க.

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 1 | அக்ஸர Aksara | எழுத்து | அட்சரம் |
| 2 | அகம் Agam | உயர்ந்த-கட்டமைந்த ஆண்மையுள்ள | ஆகம் |
| 3 | அகாமா Agama<br>இகாமா Igama<br>உகாமா Ugama | சமயம் | ஆகமம் |
| 4 | அகா(க்) Aka(k) | அக்காள் | அக்காள் |
| 5 | அகாஸ் Akas | விண் | ஆகாசம் |
| 6 | அங்காசா Angasa | விண் | ஆகாசம் |
| 7 | அங்காரா Angkara | சிறப்பாகப்பெண்களைத் துன்புறுத்தல்; விலங்குத்தனம்; நீதிமன்ற நெறியை மீறல்; முதலாளிகள் தன்னலம். | ஆங்காரம் |
| 8 | அங்குஸ்(சா) Angkus(a)<br>(அகுஸ் Akus) | அங்குசம் | அங்குசம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 9 | அங்கோடா Anggota | உறுப்புக்கள், உறுப்பினர் | அங்கம்; அங்கத்தினர். |
| 10 | அங்சா Angsa | அன்னம் | அம்சம் (ஹம்ஸம்) |
| 11 | அங்சோகா Angsoka | அசோகம் | அசோகம் |
| 12 | அச்சார Achara | வழிவழி ஒழுக்கம்; நிலை பெற்றுவிட்ட நடைமுறை; வழக்கம், சட்டமுறை; வழக்கு, ஆய்வு; நிகழ்ச்சி நிரல். | ஆசாரம் |
| 13 | அச்சாரம் Acharam | மண உறுதி; கணையாழி | அச்சாரம் |
| 14 | அச்சு (மெங்) Achu (meng) | ஆயுதங்கொண்டு அச்சுறுத்து; போலியாகத் தாக்கு; வார்ப்பு அச்சு | அச்சுறுத்து; அச்சு |
| 15 | அசல் Asal | மூலம் | அசல் |
| 16 | அசா Asa | நம்பிக்கை | ஆசை |
| 17 | அட்ஜுவன் Atjuan | அச்சு வளர்ப்பு | அச்சு |
| 18 | அடி Adi | உயர்ந்த | அதி |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 18 | (a) அடிஅடி Ati-ati | எச்சரிக்கை | அடே, அடே? |
| 19 | அடிகார Adikara | அதிகாரம் | அதிகாரம் |
| 20 | அடிரட்ன Adiratna | தூய இரத்தின நகை; உருவகமாகப் பெண் | அதிரத்னம் |
| 21 | அடு Adu | விலங்குகளைப்படைகளை போரிடச் செய் | அடு |
| 22 | அடோ Adoh | வலி அல்லது துன்பத்தால் ஓலமிடல் | அடே |
| 23 | அண்டாம் Andam | மணமகள் கொசுவத்தைச் சரி செய் | அண்டு |
| 24 | அண்டை Andai | அருகில் | அண்டை |
| (a) | அதா, Ataw அதவா Atawa | அது அல்லது இது | அதா? அதுவா? |
| (b) | அதி Adi | உயர்ந்த | அதி |
| (c) | அதிகார Adikara | அதிகாரம் | அதிகாரம் |
| (d) | அதிரத்ன Adiratna | உயர்ந்த இரத்னவகை | அதிரத்தினம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 25 | (அ) திராஜா Diraja | அரசகுடி, பெரிய பட்டம் | அதிராசன் |
| 26 | அந்டாரா Antara | இடையிடம்; இடைவேளை | அந்தரம் |
| 27 | அநியாய Aniaya | அநியாயம்: கொடுமை; அடக்கி ஒடுக்கு | அநியாயம் |
| (a) | அனுக்கிரகா Anugerah (a) | அனுக்கிரகம் | அனுக்கிரகம் |
| 28 | (அ) நேகா Aneka | வகை | அநேகம் |
| 29 | அபம் Apam | அப்பம் | அப்பம் |
| 30 | (அ) பா Abah (பாபா) | அப்பா | அப்பா |
| 31 | (அ) மா Amah | அம்மா | அம்மா |
| 32 | அய்யோ Ayohai | கருத்தை ஈர்க்க அழைக்கும் ஒலி; துன்பத்தைப் புலப் படுத்தும் ஒலி | ஐயோ |
| 33 | அரம் Aram | நெஞ்சில் கரவு கொள்ளல் | கரம் |
| 34 | அல்பா Alpa | அல்பம்; அற்பம். | அல்பம்; அற்பம். |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 35 | அல்மாரி Almari | அலமாரி | அலமாரி |
| 36 | அனுக்கிரகா Anugerah (a) | கடவுள் அருள்; அரசன் அல்லது மேலோரிடம் இருந்து பரிசு | அனுக்கிரகம் |
| 37 | அஸ்டகோனு Astakona | எண்கோணம் | அட்டகோணம் |
| 38 | அஸ்டா Asta | எட்டு | அட்ட(அஷ்ட) |
| 39 | ஆ! ஓ! Ah! oh! | வெறுப்பாலும் துன்பத்தாலும் எழும் ஒலி | ஆ! ஓ! |
| 40 | ஆ! ஓ! Aho | ஆகா! | ஆகா! |
| 41 | ஆங்ஸோக Angsoka | அசோகப்பூ | அசோகு |
| 42 | ஆச்சி Achi | அக்காள் | ஆச்சி (செட்டி நாட்டு வழக்கு) |
| 43 | ஆயா Ayah | அப்பா; இந்திய செவிலித்தாய். | ஐயா; ஆயா. |
| 44 | ஆர்ய Aria | ஆரியன்; ஓர் உயர்ந்த பட்டம் | ஆரியன் |
| (a) | ஆரா Arah | வழி | ஆறு |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 45 | ஆஸ்டானு Astana (இஸ்டானு) Istana | அரண்மனை; இருக்கை | ஆஸ்தானம் |
| 46 | ஆஸ்ரம் Asrama | தங்குமிடம்; குடியிருப்பு; மடம். | ஆச்ரமம் (ஆஸ்ரமம்) |
| 47 | இங்கூ Inggu | பெருங்காயம்; இங்குலிகம் | இங்குலிகம் |
| 48 | இஞ்சா Inja | இஞ்சி | இஞ்சி |
| 49 | இட்டா Iddah | இடை வேளை | இடை |
| 50 | இடம் Idam | பெரிதும் ஆசைகொள்; சிறந்த உணவை அல்லது உருவகமாக முதலையை விரும்புதல். | இட்டம் |
| 51 | இந்டிர லோகா Indera loka | இந்திர உலகம் | இந்திரலோகம் |
| 52 | இந்டிரா Indera | மேருமலைக் கடவுள்; மழைக் கடவுள் இந்திரன்; அரசமுடி; ஐம்புலன். | இந்திரன்; இந்திரியம் |
| 53 | இஸ்டான Istana | ஆள்வோன்; அரண்மனை. | தானம் |

| வ. ஒண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 54 | இஸ்தரி Isteri | மனைவி, பெண் | ஸ்திரீகள் |
| 55 | இலை Elai | ஏடு, தாள், இலை | இலை |
| 56 | உச்சாப் Uchap | சொல், பேசு, சொற்பொழிவாற்று, உபதேசம் செய், கடவுட்கு நன்றி பாராட்டிப் பிரார்த்தனைசெய் | உச்சரி |
| 57 | உட்டமா Utama | உயர்ந்த | உத்தமம் |
| 58 | உட்டரா Utara | விண் | உத்தரம் |
| 59 | உண்டில் Undil | உண்டியல் | உண்டியல் |
| 60 | உபசாரா Upachara | சடங்கு; மணமகனுக்குத் தலையில் தொங்க விடும் பொற்பூ. | உபசாரம் |
| 61 | உம்பாமா Umpama | உவமை | உவமை |
| 62 | உவாய் Uai | அம்மா | ஆய் |
| 63 | ஐயா Ayah | தந்தை | ஐயா |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் பெயர் |
|---|---|---|---|
| 64 | ஒண்டெ<br>Onde(h) | தேங்காய், மாவு இவற்றால் ஆகிய தித்திப்பு உருண்டை. | உருண்டை |
| 65 | க்ரணு<br>Kirana | கதிர் | கிரணம் |
| 66 | கங்கா<br>Gangga | கங்கை ஆறு | கங்கை |
| 67 | கங்சா<br>Gangsa<br>Kangsa | வெண்கலம் | வெண்கலம் |
| 68 | கஞ்சி<br>Kanji | கஞ்சி | கஞ்சி |
| 69 | கட்டில்<br>Katil | கட்டில் | கட்டில் |
| (a) | கட்டை<br>Katai (K) | கட்டையன், குள்ளமானவன் | கட்டை |
| 70 | கடா<br>Gada | போரிட உதவும் கதை | கதை |
| 71 | கடுக்கா<br>Kedekai<br>Kedekik | கடுக்காய் | கடுக்காய் |
| (a) | கந்தை<br>Kandai | கொடி மரப்பாய் | கந்தை |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 72 | கப்லா Kepala | தலை, தலைமை, தலைவன், தலைப்பு. | கபாலம் |
| 73 | கபல் Kapal | கப்பல் | கப்பல் |
| 74 | கபுரா Gapura | அரண்மனை வாயில் | கோபுரம் |
| 75 | கம்பீரா Gembira | வேலை செய்ய உற்சாகம் | கம்பீரம் |
| 76 | கமண்டலம் Kemandalam | கமண்டலம் | கமண்டலம் |
| 77 | கர்டாமுங்கு Kardamunggu | கிராம்பு | கிராம்பு |
| 78 | கருடா Garuda | கருடன் | கருடன் |
| 79 | கல்தை Kaldai | கழுதை | கழுதை |
| 80 | கலா Kala | காலம்; சிவன் | காலம்; காலன் |
| 81 | கன்யா Kenya | கன்னி | கன்னி |
| 82 | கான்டெவா Gandewa | வில் | காண்டீபம் |
| 83 | காமா Kama | காமன் | காமன் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| (a) | கெர்மா Kerma கெராமா Karama | கர்மம் | கர்மம் |
| 84 | காவல் Kawal | காவல் | காவல் |
| 85 | கிரகன Gerhana | கிரகணம் | கிரகணம் |
| 86 | கிரி Giri | மலை | கிரி |
| 87 | கிலிங் Keling | தமிழ், தெலுங்கு | கலிங்கம் |
| 88 | கிஸ்ஞ Kesna | கிருட்டிணன் | கிருட்டிணன் (கிருஷ்ணன்) |
| 89 | குட்டு Kutu | கூட்டம், சங்கம் | கூட்டு |
| (a) | குட்டையன் Kuttaian | குள்ளமானவன் | குட்டையன் |
| (b) | குட்டைச்சி Kuttaichi | குள்ளமானவள் | குள்ளமானவள் |
| 90 | குடா Kuda | குதிரை | குதிரை |
| (a) | குடாங் Gudang | கிடங்கு | கிடங்கு |
| (b) | குண்டு Gundu | உருண்ட; பந்துபோன்ற | குண்டு |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 91 | கும்குமா Kumkuma<br>குங்குமா Kungkuma | குங்குமம் | குங்குமம் |
| 92 | கும்பக்காரா Kumbakara | குடஞ் செய்வோன் | கும்பக்காரன் |
| 93 | கும்பல் Gumpal | ஒன்ருக, கூம்பலாக | கும்பல் |
| 94 | கும்பா Kumba | கும்பம், குடம், யானையின் மத்தகம் | கும்பம் |
| 95 | குமரி Kumari | முருகன் மனைவி, சிவன் மனைவி | குமாரி |
| 96 | குமாரா Kumara | முருகன், மகன் | குமரன், குமாரன் |
| 97 | குயில் Kuil | இந்துக்கோயில் | கோயில் |
| 98 | குர்னியா Kurnia | அருள் | கருணை |
| 99 | குரு Guru | ஆசிரியன் | குரு |
| 100 | குருண்டம் Gurindan | பழமொழிகளாகிய நீதிகளுடைய பாட்டு | கிரந்தம் |
| (a) | குலை Kulai | தொங்குதல் | குலை |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 101 | குளிகா<br>Guliga | குளிகை | குளிகை |
| 102 | குன்டெரி<br>Kenderi | குன்றி மணி | குன்றி மணி |
| 103 | குஸ்டா<br>Kusta | குட்டம் | குட்டம்,<br>(குஷ்டம்) |
| 104 | கூடை<br>Kudai | கூடை | கூடை |
| a) | கூலி<br>Kuli | கூலி | கூலி |
| 105 | கெடலை<br>Kedelai | கடலை | கடலை |
| 106 | கெடிகா<br>Ketika | நேரம் | கடிகை |
| (a) | கெடுமி<br>Kadumik | குடுமி | குடுமி |
| 107 | கெடை<br>Kadai | கடை | கடை |
| (a) | கெண்டி<br>Kendi | சிறுவாயுள்ள பாத்திரம் | கெண்டி |
| (b) | கெத்தும்பெர்<br>Ketumber | கொத்துமல்லி | கொத்துமல்லி |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 108 | கெர்பாய் Kerpai | கடப்பாரை | கடப்பாரை |
| 109 | கெர்மி Kermi | கிருமி | கிருமி |
| 110 | கெராமா Kerama கெர்மா Kerma | சாபம் | கர்மம் |
| 111 | கெருள் Kerul | சுருட்டை மயிர் | சுருள் |
| 112 | கெரோடி Gerodi குருடி Gurdi | தமருசி, துளை கருவி | தவருசி |
| 113 | கெலிச்சி Kelichi | ஒரு மருந்துக் கொடி | கழற்சி |
| 114 | களகி Kalahi | சண்டை | கலகம் |
| 114 | (a) கூலி Kuli | கூலி | கூலி |
| 115 | கெஸ்டூரி Kesturi | கத்தூரி | கத்தூரி (கஸ்தூரி) |
| 116 | கொட்லம் Katlum | கொத்தளம் | கொத்தளம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 117 | கொண்டை Kundai | கொண்டை | கொண்டை |
| 118 | கொலம் Kolam | குளம் | குளம் |
| 119 | கோகிலா Kokila | மைனு | கோகிலா; கோகிலம் |
| 120 | கோசா Kosa | அங்குசம் | அங்குசம் |
| 121 | கோடா Kota | கோட்டை | கோட்டை |
| 122 | க்ஷத்திரியா Kasteria | இந்து போர் வீரன் | க்ஷத்திரியன் |
| 123 | சக்கெரா Chakera | சக்கரம் | சக்கரம் |
| 124 | சத்தி Sakti | சத்தி | சத்தி |
| 125 | சக்ரவாலா Chakerawala | சக்கரவாளம் | சக்கரவாளம் |
| 126 | சகாலியன் Sakalian | எல்லோரும் | சகலரும் |
| 127 | சகி Saki | தோழி | சகி |
| 128 | சங்கா Sangka | கருத்து, ஐயம், எதிர் பார்த்தல். | சங்கை |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 129 | சட்டிய<br>Setia | உண்மையுள்ள | சத்தியம் |
| 130 | சட்டியவான்<br>Setiawan | உண்மையுள்ளவன் | சத்தியவான் |
| 131 | சடுர்<br>Chator | சதுரங்கம் | சதுரங்கம் |
| (a) | சதை<br>Satai | சதை | சதை |
| 132 | சந்டோசா<br>Sentosa | மகிழ்ச்சி | சந்தோஷம் |
| 133 | சந்திரவாங்ஷ்<br>Santhirawanksh | சகோரப் பறவை | சகோரம் |
| 134 | சப்டா<br>Sapta | ஏழு | சப்தம் |
| 135 | சம்பூர்ணு<br>Sempurna | முழுதும் | சம்பூர்ணம் |
| 136 | சமா<br>Sama | சமம் | சமம் |
| 137 | சமுட்ரா<br>Samudra<br>செமுத்ரா<br>Semudera | கடல் | சமுத்திரம் |
| 138 | சயம்பரா<br>Sayembara | மணமகளைத் தேர்ந்தெடுக்க நடத்தும் போட்டி | சுயம்வரம் |

| வ, எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 139 | சர்வா<br>Sarwa | எல்லாம் | சர்வம் |
| 140 | சவுக்கு<br>Sauku | சவுக்கு | சவுக்கு |
| 141 | சவுடாரா<br>Saudara | உடன் பிறப்பு | சகோதரன் |
| 142 | சண்டரா<br>Chendera | சந்திர ஒளி | சந்திரன் |
| 143 | சாக்ஸி<br>Saksi | சாட்சி | சாட்சி |
| 144 | சாணை<br>Chanai | சாணை | சாணை |
| 145 | சாந்து<br>Chandu | அபின் | சாந்து |
| 146 | சாமி<br>Sami | சாமி | சாமி |
| 147 | சாஸ்டிர வான்<br>Sasterawan | இந்து சாத்திரங்களில் வல்லவன் | சாத்திரவான் |
| 148 | சாஸ்டிரா<br>Sastera | சாத்திரம் | சாத்திரம் |
| (a) | சிங்கா<br>Singa | சிங்கம் | சிங்கம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 149 | சிங்காஸனு Sing (g) asana | அரியணை | சிங்காசனம் |
| 150 | சிண்டானு Chendana | சந்தனம் | சந்தனம் |
| 151 | சித்தி Sidi | சாபவிடை | சித்தி |
| 152 | சிந்டாமணி Chintamani | சிந்தாமணிக்கல் | சிந்தாமணி |
| 153 | சிமிட்டி Simiti | குதிரையை விரட்டும் சம்மட்டி | சம்மட்டி |
| 154 | சிலம்பரா, Silambara, சிலம்பரி Silambari, | மணமகளைத் தேர்ந்தெடுக்கும் விழா | |
| 155 | சிலோஷ்மா, Selesema செமாஸ் Semas செசேமா Sesema | தலையில் நீர்க்கோவை | சிலேட்டுமம் |
| 156 | சீலிகட்டி Chelekati | சீவல் கத்தி | சீவல்கத்தி |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 157 | சுந்டாரி<br>Sundari | பெண்ணின் பெயர் | சுந்தரி |
| 158 | சுந்தி<br>Sunti | சுக்கு | சுக்கு |
| 159 | சும்மா<br>Chuma | சும்மா, வறிதே வஞ்சம் | சும்மா |
| 160 | சுமஸ்தா<br>Semesta | முற்றிலும் | சமஸ்தம் |
| 161 | சுளி<br>Sule | சுளுக்கு | சுளுக்கு |
| 162 | சுவாமி<br>Suami | கணவன் | சுவாமி |
| 163 | சூக், சூக்<br>Chuk, Chuk | வேட்டை நாய்கட்குக் குறிப்பிடும் ஒலி | சூ—சூ |
| 164 | சூட்ரா<br>Sudra | தீண்டப்படாதான், வெறுத்தவனைக் குறிக்கச் சொல்லும் சொல் | சூத்திரன் |
| 165 | சூரா<br>Churah | கூடை முதலியவற்றை வறிதாக்கு | சொரி |
| 166 | சூரியா<br>Suria<br>சூர்யா<br>Surya | கதிரவன் | சூரியன் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 167 | சூலம் Sula | சூலம் | சூலம் |
| 168 | சூலா Chula | ஒரு விலங்கின் கொம்பு | சூலம் |
| 169 | சூலை Sulai | மலடு | சூல் |
| 170 | சூன்யி Sunyi | வெறுமை | சூன்யம் |
| 171 | செக்கிரா Segera | விரைவாக | சீக்கிரம் |
| 172 | செக்ஸா Seksa | தண்டம் | சிட்சை |
| 173 | செஞ்சா Senja | கதிரவன் மறையும் மாலை வேளை | சந்தி |
| 174 | செட்டி Cheti | பணம் கடன் தரும் செட்டி | செட்டி |
| 175 | செட்டிரியா Cheteria | க்ஷத்திரியன் | க்ஷத்திரியன் |
| (a) | செட்டி வைரம் Settiwairam | வாணிகர் வாணிபம் புரியும் வைரம் | செட்டி வைரம் |
| 176 | செடிலிங்கம் Sedelinggam | செந்தூரம் | செந்தூரம் |
| 177 | செடெரனு Sederna | சாதாரணம் | சாதாரணம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 178 | செண்டாலா Chendala | சண்டாளன் | சண்டாளன் |
| 179 | செந்டவா Sendawa | செந்தூரம் | செந்தூரம் |
| 180 | செந்டி Sendi | ஒரு மனிதனின் உறுப்புப் பிணைப்புக்கள் | சந்தி |
| 181 | செந்டேரி Senteri | ஊர் சுற்றி | சென்றேறி ? |
| (a) | செந்தன Chendana | சந்தனம் | சந்தனம் |
| 182 | செம்பக Caempaka | செண்பகப்பூ | செண்பகம் |
| 183 | செர்ண Cherana | வெற்றிலையுடன் சேர்த்து உண்ணும் சூர்ணம் | சூர்ணம் |
| 184 | செரிட்டா Cherita செரிட்டெரா Cheritera | சரித்திரம் | சரித்திரம் |
| 185 | செரிப்பெலை Cherpelai | கீரிப்பிள்ளை | கீரிப்பிள்ளை |
| 186 | செருட் Cherut செருட்டு Cherutu | சுருட்டு | சுருட்டு |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 187 | செர்பு Cherpu | செருப்பு | செருப்பு |
| 188 | செலோகா Seloka | பாட்டாய் அமைந்த நான்கடிகள் | சுலோகம் |
| 189 | சென்டாயு Chendayu<br>ஜென்டாயு Jentayu | சடாயு | சடாயு |
| 190 | சே! Cheh | சே! (வெட்கம்) | சே! |
| 191 | ஸுகா Suaka | துறவிகளின் தியான நிலை, தாய்வழிச் சமுதாயத்தில் ஒரு மனிதன் தன் தாய் வீட்டில் அடைக்கலமாகப் புகுமிடம் | சுகம் |
| 192 | டட்காலா Tatkala | தற்காலம் | தற்காலம் |
| 193 | டாலம் Talam | உணவு, உண்ணும் உண்கலம் | தாலம் |
| 194 | டாலன் Taulan | தோழன் | தோழன் |
| 195 | டிவாஸா Dewasa | நேரம், நாள், பெருங் காலக்கூறு | திவசம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 196 | டென்டா Denda | தண்டம், தண்டனை | தண்டம், தண்டனை |
| 197 | டீவாங்கா Dewangga | நெய்தல் தொழிலைக் கண்டுபிடித்த இந்தியர் ஒருவர் பெயரால் அமைந்த துணி | தேவாங்கர் |
| 198 | டோஷா Dosa | பாவம் | தோஷம் |
| (a) | த்சம்மட்டி Tchammati | சம்மட்டி | சம்மட்டி |
| (b) | த்ஜோலியா Tjoliya | சோழியன் | சோழியன் |
| (c) | தக்காங் Takang | தக்கணம் | தக்கணம் |
| 199 | தக்ஷிஞ Daksina | தெற்கு | தட்சிணம் |
| 200 | தசா Dasa | பத்து | தசம் |
| 201 | தண்டு Tandu | ஆளைத் தூக்கிச் செல்லும் தூக்கி (டோலி) | தண்டு |
| 202 | தண்டில் Tandil | மேலாள், கப்பல் தோழன் | தண்டில்காரன் |
| 203 | தந்தா Danta | தந்தம் | த்ந்தம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 204 | தபா Tapa | தவம் | தவம் |
| 205 | தம்பி Tambi | இளைய உடன் பிறப்பு, வேலைக்காரப் பையன், செய்திகொண்டு வருவோன் | தம்பி |
| 206 | தம்பீரா Tambera | வெண்கலம் | தாம்பிரம் |
| 207 | தனி Tani | மதகுநீர் தாங்கும் பலகை | தண்ணி? |
| 208 | தாகம் Dahaga | தாகம் | தாகம் |
| 209 | தாம்பூல் Tambul | வெற்றிலைப்பாக்கு | தாம்பூலம் |
| (a) | தயிர் Taer | தயிர் | தயிர் |
| 210 | தாலி Tali | கயிறு | தாலி |
| (a) | தாலன் Taulan | தோழன் | தோழன் |
| 211 | தாளா Tala | தாழ்ப்பாள், தாளம் | தாள், தாளம் |
| 212 | தாண Dahana | தானம் | தானம் |
| 213 | திரி Teri | மூன்று | திரி |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 214 | திரை Tirai | திரை | திரை |
| 215 | தீர்க்காயு Dirgahayu | நீண்டவாழுள் | தீர்க்காயுள் |
| 216 | துக்கா Duka | துக்கம் | துக்கம் |
| 217 | துர்க்கா Durhaka | துரோகம் | துரோகம் |
| 218 | துர்கா Durga | சிவன் மனைவி, பெண்தெய்வம் | துர்க்கை |
| 219 | துர்ஜனு Durjana | கெட்ட | துர்ச்சனர் |
| 220 | துஸ்டா Dusta | தவருன சொல்; பொய் | தூடணை (தூஷணை) |
| 221 | தூதா Duta | தூதன் | தூதன் |
| 222 | தூபா Dupa | தூபம் | தூபம் |
| 223 | தூளி Duli | தூசி | தூளி, துளி |
| (a) | தெக்கணமுனை Tekkanamunai | தெக்கணமுனை | தெக்கணமுனை |
| 224 | தெமாகா Tembaga | செம்பு, பித்தளை, வெண்கலம் | செம்பு |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 225 | தெர்மவான் Dermawan | தருமவான் | தருமவான் |
| 226 | தெர்மா Derma | தருமம் | தருமம் |
| 227 | தெர்மாசா Termasa | வேடிக்கை, கேளிக்கை | தமாஷா |
| 228 | தெருயுசி Terusi | துரு | துரு |
| 229 | தேசா Desa | மாவட்டம் | தேசம் |
| 230 | தேவதா Dewata | இந்துக் கடவுள்கள் | தேவதைகள் |
| 231 | தேவா Dewa | இந்துக் கடவுள் | தேவன் |
| 232 | தேவி Devi | பெண்தெய்வம், அழகிய பெண், சிவன் மனைவி, திருமால் மனைவி, பயிர்களின் பெண் தெய்வம், நிலமகள் | தேவி |
| 233 | தேஜா Teja | கதிரவன் மறையும் போது காணப்பெறும் சிவப்பு மஞ்சள் நிற மேகங்கள் | தேஜஸ் |
| (a) | நகர் Nagar | நகர் | நகர் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 234 | நகாரா Negara | நாடு | நகரம் |
| 235 | நரகா Naraka | நரகம் | நரகம் |
| 236 | நரா Nara | மனிதன் | நரன் |
| 237 | நாகா Naga | வேதாளம் | நாகர் |
| 238 | நாடி Nadi | நாடி | நாடி |
| 239 | நாதா Nata | இளவரசன், அரசன் | நாதன் |
| 240 | நாமா Nama | பெயர் | நாமம் |
| (a) | நாழி Nali | நாழி | நாழி |
| 241 | நாஞ Nana | அண்ணன், மலாயாவில் தமிழ் மக்களை மரியாதையுடன் அழைக்கும் பெயர் | அண்ணன் |
| 242 | நித்ரா Nidera | தூக்கம் | நித்திரை |
| 243 | நிர்மலா Nirmala | தூய்மை | நிர்மலம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 244 | நிரை Nirai | வரிசை | நிரை |
| 245 | நிஸ்டா Nista | வசவு | நிஷ்டூரம் (நிட்டூரம்) |
| 246 | நீரா Nira | பதனீர் | (பத)நீர் |
| 247 | நீலம் Nilam | நீலமணி | நீலம் |
| 248 | நீலா Nila | நீல நிறம், நீலமணி, நீல நிறச் சாயம். | நீலம் |
| (a) | நெகரி Nageri | குடியிருப்பு | நகரி |
| 249 | நெச்சியா Neschaya | உறுதியாக | நிச்சயம் |
| 250 | நெலயான் Nelayan | மீனவன் | நெய்தலான் |
| 251 | நேகா Neka | வகை | அநேகம் |
| 252 | பக்தி Bakti | நன்றியுள்ள; தொண்டு | பக்தி |
| 253 | பக்சா Paksa | முன்கூட்டிச்சொல்லும் நேரம் | பட்சம் |
| 254 | பக்சி Pakshi | பறவை | பட்சி |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 255 | பகல் Bagal | போர்ச் சேவல் | சேவல் |
| 256 | பகை Bagai | வகை | வகை |
| 257 | பஜன் Bajan | பாடம் | பஜனை |
| 258 | பஹகி Bahagi | பகுத்தல் | பகு |
| 259 | பஹாய Bahaya | அபாயம் | அபாயம் |
| 260 | பங்சா Bangsa | இனம் | வம்சம் |
| 261 | பச்செலி, பச்செரி Pacheli, Pacheri | பச்சடி | பச்சடி |
| 262 | பசி Basi | பிசிர், கொசுர் | பிசிர், கொசுர் |
| 263 | பஞ்சா Pancha | ஐந்து | பஞ்ச |
| (a) | பட்டாணி Pattani | பத்தினி | பத்தினி |
| 264 | பட்டில் Batil | வட்டில் | வட்டில் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 265 | பட்மா Patma | தாமரை | பத்மம் |
| 266 | படா Bada | வடை | வடை |
| 267 | பண்டிதா Pandita | இந்து சமய முனிவன், புலவன் | பண்டிதன் |
| 268 | பத்மா Padma | தாமரை | பத்மம் |
| 269 | பந்தம் Pandam | பொருத்து | பந்தம் |
| 270 | பந்தாங் Bandong | ஓரிணையாகச் சேர்த்தல் | பந்தம் |
| 271 | பந்து Bandu | நண்பன், தோழன் | பந்து |
| (a) | பிரதன மந்திரி Prathan Manthiri | தலைமை அமைச்சர் | பிரதான மந்திரி |
| 272 | பருணு Baruna | வருணன் | வருணன் |
| (a) | பல்லவி Palawi | பல்லவர் | பல்லவர் |
| (b) | பவளம் Pawalam | பவழம் | பவழம் |
| 273 | பவித்திரா Pawitra | புனிதமான நீர் | பவித்திரம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 274 | பளிங்கம் Pelinggam | பளிங்கு | பளிங்கு |
| (a) | பறையா Pariah | பறையன் | பறையன் |
| (b) | பாக்கி Baki | மீதி | பாக்கி |
| 275 | பாகாகியா Bahagia | பேறு | பாக்கியம் |
| 276 | பாச்சா (மெம்) Bacha (mem) | படி | வாசி |
| (a) | பாசி Basi | ஊசிப்போன | ஊசிப்போன |
| 277 | பாஞ்சி Banchi | மரம் செதுக்கும் கருவி, வாய்ச்சி | வாய்ச்சி |
| 278 | பாட Pada | பாதம் | பாதம் |
| (a) | பாடை Badai | சுழற் காற்று; புயல் | வாடை |
| (b) | பாண்டியா Pandiya | ஒரு பழங்குடியின் பெயர் | பாண்டியர் |
| 279 | பாதாம் Badam | வாதுமை | வாதுமை |
| 280 | பாதுகா Paduka | பாதம் | பாதுகை |
| 281 | பாபா Baba | அப்பா | அப்பா |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
| --- | --- | --- | --- |
| (a) | பாமன் Paman | மாமன் | மாமன் |
| 282 | பாயு Bayu | காற்று, காற்றுக் கடவுள் | வாயு |
| 283 | பாரத் Barat | மேற்கு | பாரதம் |
| 284 | பாப Papa | பாவம் | பாவம் |
| 285 | பாவை Pawai | அரசன் அல்லது மாப்பிள்ளையின் ஆயம் | பரிவாரம் |
| 286 | பாஷா Bahasa | மொழி | பாடை(பாஷை); பாழை |
| 287 | பிச்சாரா Bichara | விசாரணை | விசாரணை |
| 288 | பெஞ்சாண Benchana | நாசம் | விநாசம் |
| (a) | பிகு Behu | இறுகல்; உறைதல் | பிகு |
| 289 | பிசி Bisi | வேசி | வேசி |
| (a) | பிசேக் Bisek | குசுகுசுவெனப் பேசல் | குசுகுசு |
| (b) | பிசை | சுறுசுறுப்பு, விரைவு முதலியன | விசை |
| (c) | பிடடாரி Bidadari | பிடாரி | பிடாரி |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
| --- | --- | --- | --- |
| 290 | பித்தம் Pitam | பித்தம் | பித்தம் |
| 291 | பித்துவான் Biduan | இசை நடனக் கலைஞன் | வித்துவான் |
| 292 | பிர்தாமா Pertama | முதன்மையான | பிரதம |
| 293 | பிர்தான Perdana | தலைமையான | பிரதான |
| (a) | பிர்தான மந்திரி Perdana manteri | தலைமை அமைச்சர் | பிரதான மந்திரி; பிரதம மந்திரி |
| 294 | பிரபு Perabu | இளவரசன் | பிரபு |
| 295 | பிரமஞ Berahman (a) | பிராமணன்-இந்து மதத் துறவி | பிராமணன் |
| 296 | பிரிட்டா Berita | செய்தி | வார்த்தை |
| 297 | பிலெங்கு Belenggu | விலங்கு | விலங்கு |
| 298 | பிஞசா Binasa | அழிவு | விநாசம் |
| 299 | பிஞட்டு Binatu | வண்ணார் | வண்ணார் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 300 | பினுரா Benara | வண்ணூர் | வண்ணூர் |
| 301 | பிங்கான் Pinggan | பிங்கான் | பிங்கான் |
| 302 | பீச்சகரா Pechakara | பீச்சாங்குழாய் | பீச்சாங்குழாய் |
| 303 | பீரம் Biram | யானை | வாரணம் ? ; வேழம் ? |
| 304 | பீஜி Biji | விதை | பிஜம் |
| (a) | பீஜி கெத்தும்பர் Biji ketumber | கொத்துமல்லி | கொத்துமல்லி |
| 305 | பீஸா Bisa | நஞ்சு | விஷம் (விடம்) |
| (a) | புக்டி Bukti | சான்று; ஆதாரம் | யுக்தி புத்தி |
| (b) | புங்கா Bunga | பூ | பூ |
| 306 | புட்டு Putu | புட்டு (உணவு) | புட்டு |
| 307 | புடி, பொடி Pudi, Podi | சிறுமணிகள், கலக்கு | பொடி |
| 308 | புத்தி Budi | அறிவு, ஒழுக்கம், பண்பு | புத்தி |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 309 | புத்திமான் Budiman | அறிவாளி | புத்திமான் |
| 310 | புத்தியா Budaya | பண்பட்ட | புத்தி |
| 311 | புத்ரா Putera | மகன், இளவரசன் | புத்ரன் |
| 312 | புத்ரி Puteri | மகள், இளவரசி | புத்ரி |
| 313 | புரா Pura | நகரம் | புரம் |
| 314 | புரி Puri | அரண்மனையில் அரசனின் தனியிடம்; பாலித்தீவில் ஒரு கோயில் | புரி |
| 315 | பெருஷா Perusa | ஆளும், வற்புறுத்தும் | புருஷா |
| 316 | புவனா Buana | புவனம் | புவனம் |
| 317 | புஸ்தக Pustaka | புத்தகம் | புத்தகம் |
| 318 | பூஆடை Puadai | அரசன் அல்லது மணமக்கள் நடக்க அல்லது உட்கார விரிக்கும் விரிப்பு | பூவாடை |
| 319 | பூசனா Busana | ஆடை | பூஷணம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 320 | பூட்டாக் Botak | வழுக்கை | மொட்டை |
| 321 | பூடலா Butala | பூதலம் | பூதலம் |
| 322 | பூடா Bota | பூதம் | பூதம் |
| 323 | பூத்தோ Butoh | ஆண்குறி | புட்டா |
| 324 | பூதா Buta | பூதா | பூதம் |
| 325 | பூபதி Bupathi | அரசன், உயர்நீதி மன்ற அலுவலாளன் | பூபதி |
| 326 | பூபாலா Bupala | இளவரசன் | பூபாலன் |
| 327 | பூமி Bumi | பூமி | பூமி |
| 328 | பூர்பா Purba | பழமையான | பூர்வ |
| 329 | பூஜா Puja | வழிபாடு | பூசை |
| (a) | பூஜி Puji | போற்று | பூசி |
| 330 | பெகவான் Begawan | புனிதமான, துறவிகள், இந்துமத குருமார்கள் | பகவான் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
| --- | --- | --- | --- |
| 331 | பெங்காண்டி Penganti | மணமகன் அல்லது மணமகள்; பூசாரியின் பெண் உதவியாள் | பெண்டாட்டி |
| 332 | பெங்காலா Bengala | வங்காளம், வங்காளி | வங்காளம் |
| 333 | பெடம் Petam | மணமகன் அல்லது மணமகள் நெற்றிப் பட்டம் | பட்டம் |
| 334 | பெடரா Betara | புனிதமான, இந்துக் கடவுள்கள் | பவித்திரம் |
| 335 | பெடா Peta | வரைப் படம் | படம் |
| 336 | பெடி Peti | பெட்டி | பெட்டி |
| 337 | பெட்டிராஸ் Peteras | பித்தலாட்டம் | பித்தலாட்டம் |
| 338 | பெடாலா Petala | பாதாளம் | பாதாளம் |
| 339 | பெடில் Bedil | துப்பாக்கி வெடி, வெடிமருந்து, வெடி | வெடி |
| (a) | பெண்டா Benda | பண்டம், பொருள், சொத்து | பண்டம் |
| 340 | பெண்டஹாரா Bendahara | முதலமைச்சர், படைத் தலைவர், இளவரசர் | பிரதமர் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| (a) | பெண்டஹாரி Bendahari | இடைக்கால மலாக்காவில் மன்னர் செயலாளர், பொருளாளர் | பண்டாரகர் |
| 341 | பெதாதா Peduta | தூதன் | தூதன் |
| 342 | பெந்தா Benda | பொருள் | (ெ)பந்தம் |
| 343 | பெர்சமா Perchuma | சும்மா; கையூட்டு | சும்மா |
| 344 | பெர்ட்வி Pertewi | பூமி | பிருத்வி |
| (a) | பெர்தமா Pertama | தலைமையான | பிரதம |
| 345 | பெர்மா Berma | பிரமன்; பர்மா | பிரமன்; பர்மா |
| 346 | பெர்மைசுரா Permaisura | அரசன் | பரமேசுவரன் |
| (a) | பெர்மைசுரி Permaisuri | அரசி | பரமேசுவரி |
| 347 | பெர்வாரா Perwara | அரசவைப் பெண்கள் | பரிவாரம் |
| 348 | பெர்வீரா Perwira | வீரன் | பெருவீரன் |
| 349 | பெர்னமா Pernama | முழுநிலா நாள் | பவுர்ணமி |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 350 | பெரந்தா Beranta | பரதன் | பரதன் |
| 351 | பெராகி Berahi | வேட்கை | விரகம் |
| 352 | பெராஸா Pereksa | தேர்வு | பரீட்சை |
| 353 | பெரிசியா Perchya | நம்பிக்கை | பரிச்சயம் |
| 354 | பெரிசை Perisai | கேடயம் | பரிசை |
| 355 | பெரிடா Berida | முதிய; அனுபவம் நிறைந்த | விருத்த் |
| (a) | பெரிய Peria | பெரிய மனிதன், அதிகாரி | பெரியர், பெரியன் |
| 356 | பெரிளி Perli | கேலி செய் | புரளி |
| 357 | பெரிமனு Permana | எண்ண முடியாத எண் | பருமன் |
| 358 | பெல்பகை Pelbagai | பலவகை | பலவகை |
| 359 | பெலாங்கிங் Pelangking | பல்லக்கு | பல்லக்கு |
| 360 | பெலிகாரா Pelihara | விலங்குகளை வளர்; குழந்தையை வளர்; பாதுகாத்தல் | பரிகாரம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 361 | பெலிபாஸ் Belebas | மூங்கில் பிளாச்சு | பிளாச்சு |
| 362 | பெலியா Belia | இளைய, புதிய | பால்யம் |
| 363 | பென்தலா Bentala | உலகம் | பூதலம் |
| 364 | பெனிகா Beniaga | வாணிபம் | வாணிபம் |
| 365 | பேடா Beda | வேறுபடுத்து; வேறுபாடு | பேதம் |
| 366 | பொன்னு Ponu | மணமகள் | பெண் |
| 367 | பொன்னென் Ponen | பொண்டுசெட்டி | பொண்டுசட்டி |
| 368 | போகா Boga | இன்பம் | போகம் |
| (a) | போலிஸ் Polis<br>போலிஸி Polisi | ஊர்க்காவலன் | போலீஸ் |
| 369 | மகரிஷி Maharesi | பெரிய இந்து சமய முனிவர் | மகரிஷி |
| 370 | மகா Maha | மிகவும் | மா;மகா |
| 371 | மகாதேவா Mahadewa | சிவன் | மகாதேவன் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 372 | மகாதேவி Mahadewi | துர்க்கை; சிவன்; மலாயாவில் மன்னரின் இரண்டாம் மனைவியின் பட்டப் பெயர் | மகாதேவி |
| 373 | மகாராணி Maharani | பேரரசி, சிலசமயங்களில் மலாய் மன்னர்களின் பட்டத்தரசிகளின் பெயர் | மகாராணி |
| 374 | மகாராஜா Maharaja | பேரரசன், மலாயா நாட்டு மன்னர்களின் பட்டப் பெயர். | மகராசன்; மகாராஜா |
| 375 | மகாடூடா Mahaduta | தூதுவன் | மகாதூதுவன் |
| 376 | மகாரூபா Maharuba | கடவுள் அல்லது பெண்ணின் பேரழகு | மகாரூபம் |
| 377 | மகாஜன Mahajana | பெரிய மனிதர்; பாட்டாளி மக்கள் | மகாச(ஜ)னம் |
| 378 | மக்கோத்தா Mahkota | மகுடம், அரசமுடி, மலாயாவில் சில இடங்களில் குறுநிலத் தலைவர்களின் பெயர் | மகுடம் |
| (a) | மங்கிஸ் Mangges | வங்குஸ்தான் பழம் | வங்குஸ்தான் |
| (b) | மங்கோக் Mangok | கிண்ணம் | மங்கு |
| 379 | மச்சம் Macham | வகை, தன்மை | மச்சம் ? |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 380 | மகசூல் Mahasul | கண்டு முதல், விளைச்சல் | மகசூல் |
| (a) | மட்டளி Madali | மத்தளம் (சுமத்திரா விலும்? சுமத்திரா வில் மட்டும்?) | மத்தளம் |
| | முட்டளி Mudali | | |
| (b) | மட்ஜம் Matjam | மறு, மச்சம் | மச்சம் |
| 381 | மடா Mada | யானையின் மதநீர் | மதம் |
| 382 | மடு Madu | மது | மது |
| 383 | மடுகரா Madukara | தேனீ | மதுகரம் |
| (a) | மந்தம் Mandam | மந்தம் | மந்தம் |
| (b) | மண்டி Mandi | நீராடு | மண்ணு, மண்டு |
| 384 | மந்திரா Mantera | மந்திரம் | மந்திரம் |
| (a) | மர்டு Merdu | மெல்லிய, இனிய | மிருது |
| (b) | மரிக்கர், Marikar, மரிக்கன் Marikan | செல்வ வணிகன், பட்டப் பெயர் | மரைக்காயர் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| (c) | மலாயு Melayu | மலாய்க்காரர் | மலாய்க்காரர் |
| (d) | மன்துவா Mentua மின்துவா Mintua மிருதுவா Mertua | மாமனூர், மாமியார் | மாமனூர், மாமியார் |
| (e) | மனான்று Menantu மினான்று Minantu | மருமகன்(ள்) | மணட்டுப் பெ(ஆ)ண் |
| (f) | மாக் Mak இமாக் Emak | அம்மா, தாய் | அம்மா |
| (g) | மாங்கா Mangga | மாங்காய் | மாங்காய் |
| (h) | மாசா Masa | காலம் | மாசம் |
| 385 | மாம்பூ Mambu | மலே வேம்பு | மலே வேம்பு |
| (a) | மாமாக் Mamak | தாய் மாமன்; அரசர்கள் முதுகுடித் தலைவரை அமைக்கும் முறை; இந்திய மலாய் இனக் கலப்புடையவரை மரியாதையுடன் அழைக்கும் முறை | மாமன் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| (b) | மாமி<br>Mami | மாமி, அத்தை | மாமி |
| 386 | மனுசியா<br>Manusia | மனிதன் | மனிதன், மனுஷன் |
| 387 | மாணிக்கம்<br>Manikam | மாணிக்கம் | மாணிக்கம் |
| 388 | மாராபுலை<br>Marapulai | மாப்பிள்ளை | மாப்பிள்ளை |
| 389 | மாயா<br>Maya | மாயை | மாயை |
| 390 | மாலா<br>Mala | வினைப்பட்ட, பிணத்திலிருந்து கசியும் நீர் | மலம் |
| 391 | மாலை | பூவிதழ்கள், அரசன் அல்லது மாப்பிள்ளையின் தலையில் அணிவிக்கும் பட்டம் | மாலை |
| 392 | மாளிகை<br>Maligai | அரண்மனையின் மேல் தளத்தில் இளவரசன் தங்குமிடம் | மாளிகை |
| (a) | மீசை<br>Misai | மீசை | மீசை |
| 393 | மீனு<br>Mina | மீன், ஒருவகை அணியிலுள்ள விலங்குரு | மீன் |
| 394 | முட்டு<br>Mutu | முத்து | முத்து |

| வ, எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 395 | முட்யா Mutia | முத்து | முத்து |
| (a) | முண்டம் Mundam | கைப்பிடி இல்லாத மூடியிட்ட பாத்திரம் | முண்டம் |
| (b) | முட்டியாரா Mutiara | முத்து | முத்து |
| (c) | முருங்கா Murungga | முருங்கைக்காய் | முருங்கைக்காய் |
| 396 | மூக்குத்தி Mukuti | மூக்குத்தி | மூக்குத்தி |
| (a) | மூக்கா Muga | முகம்; நூலின் ஏடு | முகம் |
| 397 | மூர்க்கா Murka | கோபம் | மூர்க்கம் |
| 398 | மூர்த்தி Murti | வடிவம், இந்து சமயத்தில் உள்ள மும்மூர்த்தி | மூர்த்தி |
| (a) | மூலா Mula | முதல், தொடக்கம் | மூலம் |
| 399 | மெம்பெலை Mempelai | மாப்பிள்ளை, மணப்பெண் | மாப்பிள்ளை |
| 400 | மெர்தங்கா Merdangga | மிருதங்கம் | மிருதங்கம் |
| 401 | மெர்து Merdu | இனிய | மிருது |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 402 | மெலாகா<br>Melaka | நெல்லிக்காய் | நெல்லிக்காய் |
| 403 | மெலாடி<br>Melati | மல்லிகை | மல்லிகை |
| 404 | மென்டெரி<br>Menteri | மந்திரி | மந்திரி |
| 405 | மெனியகா<br>Meniaga | வணிகம் | வாணிகம் |
| 406 | மெனட்டு<br>Menatu<br>பினட்டு<br>Binatu | வண்ணான் | வண்ணான் |
| 407 | மெட்டை<br>Metai | இருக்கை; பாய் மெத்தை | மெத்தை |
| 408 | மேகா<br>Mega | மேகம் | மேகம் |
| 409 | மேரு<br>Meru | மேரு மலை | மேரு |
| 410 | மொடல்<br>Modal | மூலதனம் | முதல் |
| (a) | மோகா<br>Moga | விரும்பல் | மோகம் |
| (b) | யுபாட்<br>ubat<br>ஒபாட்<br>Obat | மருந்து | ஔடதம் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 411 | யுத்தா<br>Yuda | போர் | யுத்தம் |
| 412 | யோக்யா<br>Yogia | சரியாக, பொருந்த, உண்மையான | யோக்யமான |
| 413 | யோஜனு<br>Yojana<br>யூஜனு<br>Yujana | மைல் அளவு | யோசனை, யோஜனை |
| 414 | ரசா<br>Rasa | சுவை உணர்வு | இரசம் |
| 415 | ரஞ்சுனு<br>Ranjuna | அருச்சுனன் | அருச்சுனன் |
| 416 | ரத்னு<br>Ratna | நகை | ரத்னம் |
| 417 | ரஹ்சியா<br>Rahsia<br>ரஹசியா<br>Rahasia | இரகசியம் | இரகசியம் |
| 418 | ராக்சசா<br>Raksasa | அரக்கன் | ராட்சசன் |
| 419 | ராகம்<br>Ragham | பண் | இராகம் |
| (a) | ராகு<br>Ragu | ராகு கிரகம் | இராகு |
| (b) | ராங்கி<br>Ranggi | ராங்கி | ராங்கி |
| (c) | ராயா<br>Raya | பெரிய | ராயர், அரையன் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 420 | ராஜா Raja | அரசன், அரசி, இளவரசன், இளவரசி, சதுரங்கத்தில் அரசன் என்னும் காய் | அரசன், ராஜா |
| 421 | ரிஜாக்சா Rijaksa | உருத்திராட்சம் | உருத்திராட்சம் |
| (a) | ரூபவான் Rupawan | அழகன் | உருவுடையோன், ரூபவான் |
| 422 | ரூபா Rupa | உரு, உருவம் | உரு, உருவம் |
| (b) | ரொட்டி Roti | ரொட்டி | ரொட்டி |
| 423 | ரோமா Roma | மயிர் | ரோமம் |
| 424 | லக்சமணு Laksamana | இலக்குமணன் | இலக்குமணன் |
| 425 | லக்சணு Laksana | ஒப்பு, உரு (பெண்), திறன் | இலட்சணம் |
| 426 | லக்சா Laksa | இலட்சம் | (இ) லட்சம் |
| 427 | லக்சுமி Laksmi | இலக்குமி | (இ) லக்குமி, இலட்சுமி |
| 428 | லவங் Lawang | (இ) லவங்கம் | (இ) லவங்கம் |
| 429 | லாடம் Ladam | இலாடம் | (இ) லாடம் |
| 430 | லாபா Laba | இலாபம் | (இ) லாபம் |
| (a) | லெப்பை Lebai | சமய உணர்ச்சி மிக்க மூத்தவர்; மசூதி அலுவலாளர் | லெப்பை |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| (b) | லெலோங் Lelong | ஏலம் | ஏலம் |
| 431 | லிங்கா Lingga | அடையாளமாய் எழுப்பப்பட்ட தூண் | இலிங்கம் |
| (a) | லிங்கம் Linggam | ஈயச்செந்தூரம் | செந்தூரம் |
| 432 | லெங்கஞ Lenggana | விருப்பமின்மை, தயக்கம் | (இ) லங்கணம் |
| 433 | லோகம் Logam | உலோகம்; திண்மம் | உலோகம் |
| 434 | லோகா Loga | இடம், இந்துக்கள் கூறும் சுவர்க்கம் | உலகம்; லோகம் |
| 435 | லோபா Loba | (உ) லோபம் | (உ) லோபம் |
| 436 | வங்சா Wangsa | வம்சம் | வம்சம் |
| 437 | வர்கா Warga | குடும்பம், நாடில்லாதவன் | வர்க்கம் |
| 438 | வர்ஞ Warna | நிறம், சாதி | வர்ணம் |
| 439 | வருஞ Waruna | வருணன் | வருணன் |
| 440 | வளவி Walwi | வளையல் | வளையல் (வளவி) |
| 441 | வனிதா Wanita | பெண் | வனிதை |
| 442 | வாயு Wau | காற்று | வாயு |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 443 | வார்தா Warta | செய்தி, அறிக்கை, செய்தித்தாள் | வார்தா |
| (a) | விலா Wila | வில்வம் | வில்வம் |
| 444 | விவாஹா Wiwaha | திருமணம் | விவாகம் |
| 445 | வீரா Wira | வீரன் | வீரன் |
| 446 | வேதம் Wedam | வேதம் | வேதம் |
| (b) | வேப்பிலை Wepalai | வேப்பிலை | வேப்பிலை |
| 447 | வைசியா Waisya | வணிகன், ஜாவா, பாலி அரசர்கள் பட்டப் பெயர் | வைசியன் |
| (b) | வைரம் Wairam | வைரம் | வைரம் |
| 448 | ஜகத் Jagat | உலகம் | சகம் |
| 449 | ஜயா Jaya | வெற்றி | சயம் |
| 450 | ஜனு Jana | பிறப்பிடம் | ஜனனம் |
| 451 | ஜாதி Jati | சிறந்தவகை | சாதி |
| (a) | ஜாமீன் Jamin | பிணை | ஜாமீன் |
| 452 | ஜீவா Jiwa | உயிர் | ஜீவன் |

| வ. எண் | மலாய் | பொருள் | தமிழில் வழங்கும் சொல் |
|---|---|---|---|
| 453 | ஜூகி<br>Jugi | யோகி | யோகி |
| 454 | ஜெஞ்சலா<br>Jenjala | சஞ்சலம் | சஞ்சலம் |
| 455 | ஜெந்தாயு<br>Jentayyu | சடாயு | சடாயு |
| 456 | ஜெந்திரா<br>Jentera | இயந்திரம் | எந்திரம் |
| 457 | ஜெலாட்ரி<br>Jelad(e)ri | கடல் | சமுத்திரம் |
| | ஜென்டேலா<br>Jendela | சன்னல் | சன்னல் |
| 458 | ஜோகி<br>Jogi | யோகி | யோகி |
| 459 | ஜோடா<br>Jodo(h) | ஜோடி | சோடி, ஜோடி |
| 460 | ஸ்டாஹ<br>Tahana | பதவி, இடம், உயர்வு | தானம் |
| (a) | ஸ்லெசெமா<br>ஸ்ல்செமா<br>ஸெமாஸ்<br>ஸெசெமா<br>Selesema<br>Selsema<br>Semas<br>Sesema | சளி | சிலேட்டுமம் |
| | ஸாகாபாட்<br>Sahabat | தோழன் | சகபாடி |
| 461 | ஸூக<br>Suka | விருப்பம், இன்பம், காதல் களிப்பு, விளையாட்டு | சுகம் |

3

முற் கூறியாங்கு இப்பட்டியலிலுள்ள சொற்களுள் பல வடமொழி வேருடையனவே. ஆயினும் அவை 'வடவெழுத் தொரீஇ' மிகப்பெரும்பாலும் செந்தமிழ் 'எழுத்தொடு புணர்ந்து' தமிழில் வழங்கும் தன்மையன. அதனினும் சிறப்பாகக் கருதத் தக்கது அத்தகைய வடமொழி வேர்கொண்ட தமிழ் வழக்குச் சொற்களும் 'திரைகடலோடியும் திரவியம் தேடி'ய தமிழர் வாயிலாகவே மலாய் நாட்டில் குடியேறியிருத்தல் கூடும்—வேண்டும்—என்பதே ஆகும்.

ஒரோவழி அவை வடநாட்டினின்றும் போயிருத்தலும் ஒல்லும். ஆயினும் அச்சொற்கள் பெரிதும் தமிழ் வழக்குப் பெற்றுவிட்டமையானும் மலாயாவில் அங்கு வாழும் இந்திய இனத்தவருள் தமிழர் செல்வாக்கே பெருமளவிற்று ஆதலாலும் தமிழ்—தமிழர்-வாயிலாகவே அச்சொற்கள் மலாய் மொழியை மருவி இருத்தல் இயற்கை. எனவேதான் இச்சொற்கள் மேற்கண்ட பட்டியலில் இடம் பெறலாயின. இவ்வுண்மை முன்னரே சுட்டியாங்குத் தமிழ் வழக்கே பெறாத பல வடமொழிச் சொற்கள் மலாய் மொழியில் இடம்பெற்றுள்ளமையை ஒப்பு நோக்குதலாலும் எளிதில் உணரலாம்.

மேலே உள்ள பலநூறு சொற்களுடையே பட்டியலில் அடே!, ஆ!, ஓ!, சூ-சூ, சே ஆகிய ஐந்து சொற்களே உணர்ச்சி மொழி ஒலிக்குறிப்புச் சொற்கள். இவை தமிழில் இருந்துதான் மலாய் மொழிக்குச் சென்றிருக்கவேண்டும் என்ற கட்டாய

யில்லை. ஆயினும் இருமொழி இனத்தார் உணர்ச்சி ஒற்றுமையின் வேரை இவை சுட்டும்.

செந்தமிழ்ச் சொற்கள் மலாய் மொழியில் சிவணும் போது பெறும் ஒலியல் மாற்றங்களை மொழியியல் கண் கொண்டு ஆராய்ந்து முடிவுகாணல் இன்றியமையாதது. ஆயினும் மலாய் மொழியிலும் தக்க புலமையுடைய ஒருவரால் தனித்துச் செய்தற்குரிய ஆராய்ச்சி அதுவாதலின் ஈண்டு அஃது இடம்பெறவில்லை.

அடுத்துக் கருதத் தக்கது மேற்கண்ட பட்டியலுள் இடம் பெற்றுள்ள சொற்களுள் நூற்றுக்கு மேற்பட்டவை தூய தனித்தமிழ்ச் சொற்களேயாம். அவற்றின் வகையும் தொகையும் தூய்மையும் தொன்மையும் வட்டாரப் பண்பும் பிறவும் ஆராய்ந்து மகிழ்தற் குரியன. சான்று சில காண்போம்:

ஒரு சமுதாயத்தின் உயிரணுவாய் விளங்குவது குடும்பம். அதன் இதயத்துடிப்பாய் இலங்குவன உறவு முறைப் பெயர்கள். அவற்றுள் இன்றியமையா எட்டுச்சொற்கள்—தூயதனித்' தமிழ்ச் சொற்கள்—மலாய் மொழிக்குப் பலவகை வடிவில் வாழ்வு வழங்கியுள்ளன. அவை அப்பா, அம்மா, ஐயா, அண்ணன், தம்பி, ஆச்சி, மாமன், மாமி ஆகியனவாகும். இவற்றுள் ஆச்சி என்பது அக்காளைக் குறிக்க செட்டி நாட்டாரால் வழங்கப்பெறும் வட்டாரச் சொல். இச்சொல் மலாய் மொழியில் இடம்பெற்றுள்ள ஏற்றம் அச்சொல்லுக்குரிய நாட்டுக்கோட்

டை நகரத்தார்க்கு மலாய் மக்கள் வாழ்வில் உள்ள பெரிய செல்வாக்கைப் புலப்படுத்தும்.

இனி குறிக்கத் தக்கது மலாய் மொழியில் இடம் பெற்றுள்ள ஆறு (வழி என்னும் பொருளில்) தாலம், திரை (அலை என்னும் பொருளில்) நிரை, பரிசை, மண்டு-மண்ணு (நீராடு என்னும் பொருளில்) மணூட்டுப் பெண் ஆகியன பெரிதும் இலக்கிய வழக்குடைய செந்தமிழ்ச் சொற்களே ஆகும் என்பதே.

இக்கட்டுரையை முடிக்குமுன் இறுதியாக ஆனல் உறுதியாக குறிக்கத்தக்க கருத்து ஒன்று உண்டு. அது ஏறத்தாழ இருபது மொழிகளின்[11] செல்வாக்கைப் பெற்றுள்ள மலாய்மொழியில் தமிழின் செல்வாக்கே தொன்மை சான்றது, வன்மைமிக்கது என்பதே ஆகும்.[12]

11. இம்மொழிகளின் பட்டியலை அறிய பார்க்க:— Sir Richard Winstedt: An unabridged Malay-English Dictionary [1960] P-6.

12. மேற்குறிப்பிட்ட வின்ஸ்டெட் அகராதியுள் உள்ள ஏறத்தாழ 13500 சொற்களுள் தமிழ் வழக்குச் சொற்கள் ஏறத்தாழ 4 சதவீதம்; இவற்றுள் தூய தனித் தமிழ்ச்சொற்கள் ஏறத்தாழ 1 சதவீதம். எனினும் பிறமொழிச் சொற்களின் தொன்மையோடும் தன்மையோடும் ஒப்பிடும்போது தமிழ்ச் சொற்களின் தனிச்சிறப்புப் புலனாகும்.

# 3

# தமிழர் உலகுக்கு வழங்கியவை*

தமிழர் உலகுக்கு வழங்கிய தனிப்பெருஞ் செல்வங்களுள் தலைமை சான்றன கடல் முத்துக்களும் கலை முத்துக்களுமே ஆகும். இவ்வுண்மையை ஆராய்வதற்குப் பெருந்துணை புரியும் வைப்புகளுள் (Sources) குறிக்கத்தக்கன, பழந்தமிழ் இலக்கியங்களும், அயலகத்தார் தமிழகம் பற்றி வரைந்து வைத்த குறிப்புக்களும், கல்வெட்டுக்களும், கிழக்கு மேற்கு நாடுகள் பற்றி எழுந்துள்ள கலையாராய்ச்சி உரைகளுமே.

பழந்தமிழகம் உலகின் பிற பகுதிகளோடு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்து கொண்டிருந்த தரைவழி-கடல்வழி வாணிபத் தொடர்பு அதன் பல்வளங்களும் பாரெங்கும் பரவுதற்குப் பெருந்துணை புரிந்தது. பழந்தமிழகம் உலகின் பிற பகுதிகளோடு கொண்டிருந்த வாணிபத் தொடர்பின்

---

*மார்ச்–1961-ஆண்டு வெளியிடப்பெற்ற பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் மணிவிழா மலர்க்கட்டுரை.

வாய்மையைப் புலப்படுத்தவல்ல சான்றுகள் பல தமிழ் இலக்கியத்துள்ளும் அயல் நாட்டார் குறிப்புக்களுள்ளும் புதைந்து கிடக்கின்றன. அவை பற்றிய ஒரு சில ஆராய்ச்சிக் கருத்துக்கள் வருமாறு :—

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பழந் தமிழர் பற்றி ஆங்கிலத்தில் எழுந்த தலைசிறந்த ஆராய்ச்சி நூல், பேரறிஞர் திரு. வி. கனகசபைப் பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் வரைந்தளித்த நூலே ஆகும். அண்மையில் வெளிவந்துள்ள அதன் தமிழாக்கத்தினின்றும் சில பகுதிகளை ஈண்டுக் காணலாம்:

"மிகத் தொடக்க காலத்திலிருந்தே தமிழகத்தின் பொருள் வளங்கள் தொலை நாடுகளில் வணிகர் கவனத்தைக் கவர்ந்து வந்தன. சாலமன் ஆட்சியின் போது (கிட்டத்தட்டக் கி. மு. 1000-ல்) 'மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தார் ஷிஷின் கப்பல்கள் தங்கம், வெள்ளி, தந்தம், குரங்குகள், மயில்கள் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு சென்றன' என்று கேள்விப்படுகின்றோம். இவை தமிழகத்திலிருந்தே சென்றனவாகல் வேண்டும். ஏனெனில், இறுதிப் பொருள்கள் இரண்டையும் குறிக்க எபிரேய மொழியின் திருநூலில் (விவிலிய நூலில்) வழங்கிய பெயர்கள் 'கபிம்', 'துகிம்' என்பன. இவை அன்று முதல் இன்று வரை தமிழில் வழங்கும் 'கவி', 'தோகை' ஆகிய தமிழ்ச்சொற்களே.

"பின்னாட்களில் அராபியர்களும் கிரேக்கர்களும் இத்தமிழக வாணிகத்தைத் தொடர்ந்து நடத்தி

னர். அரிசி, இஞ்சி அல்லது இஞ்சிவேர், கருவாப் பட்டை ஆகியவற்றுக்குக் கிரேக்க மொழியில் வழங்கிய பெயர்கள் (ஒருசா, ஜிஞ்சிபேர், கர்ப்பி-யன் ஆகியவை) கிட்டத்தட்ட அவற்றின் தமிழ்ப் பெயர்களே. கிரேக்க வாணிகர்கள் இப்பொருள் களுடன் இவற்றின் தமிழ்ப் பெயர்களையும் தமிழகத் திலிருந்து கொண்டுசென்று ஐரோப்பாவில் பரப்பி னர்கள் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

* * *

"அண்மையிலே புதுவதாகக் கண்டு பிடிக் கப்பட்டு மும்முரமாக நடந்து வருகிற பயணம்' என்று குறிப்பிட்டு, பிளினி இந்தியக் கடல் வாணி கப் பயணம் பற்றிக் குறிப்பிடுகிருர். அவர் குறிப் பிடுவதாவது:—

* * *

"நெல்குந்தாவும் பக்காராவும் இரண்டுமே உள் நாட்டில் வாழ்கிற ஓர் அரசன் ஆட்சிக்கு உட் பட்டவை.

"மிளகு, வெற்றிலை ஆகிய இரு சரக்குகளும் நாடி இத்துறைமுகத்துக்குக் கப்பல்கள் மிகுதியாக வருகின்றன. பேரளவான மணப் பொருள்களை வணிகர் இங்கே கொண்டு வருகிருர்கள்.................. இங்கே கிடைக்கும் பொருள்களுள் முக்கியமானது உள்நாட்டின் முக்கிய விளைவான மிளகு. மற்றெல் லாப் பொருள்களையும் பார்க்க மிகுதியாக அது இத் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. இம் மிளகு 'கொட்டனரிகன் (அதாவது குட்டநாடன்)

என்ற பெயருடைய வகையைச் சார்ந்தது. தலை சிறந்த முத்துக்களின் பெருங்குவியலும் இங்கே வாங்கப்பெறுகிறது. மற்றும் தந்தம், பட்டு நூலிழை, கங்கைக் கரையிலிருந்து வரும் வெட்டி வேர், கிழக்குப் பகுதிகளிலிருந்து வரும் வெற்றிலை, பல்வேறு வகைப்பட்ட ஒளிக்கற்கள், வைரங்கள், மாணிக்கங்கள், பொன்னாட்டிலிருந்து அல்லது விமுரிகேக்கு அப்பாலுள்ள தீவுகளிலிருந்து வரும் ஆமையோடு முதலியவையும் இத்துறைமுகத்தில் வந்து வாங்கப்படுகின்றன.

* * *

"கொமாரிலிருந்து தொடங்கும் பகுதி கொல்கி (கொற்கை) வரை நீண்டு கிடக்கிறது. முத்துக் குளிக்குமிடம் இதுவே ... இக்கண்டத்தின் தென் பகுதியாகிய இம்மாநிலம் முழுவதும் பாண்டியன் ஆட்சியில் ஒரு கூறு ஆகும்.

* *

"கொல்கி தாண்டியபின் முதல் முதல் கடக்குமிடம் உள்நாட்டுப் பகுதியாகிய அர்கலஸ் அடுத்துக் கிடக்கும் அர்கலஸ் விரிகுடாவேயாகும். எபி டோரஸ் தீவில் முத்துத் தொழிலில் முத்துக்கள் கிடைக்கின்றன. இம்முத்துக்கள் துளையிடப்பட்டு வாணிகக் களத்துக்கு உரியனவாக உருவாக்கப்படும் இடம் உலகில் இது ஒன்றுதான். இதே தீவிலிருந்துதான் முத்துக்கள் கோத்த நேர்த்தியான மஸ்லின் ஆடைகள் உண்டுபண்ணப்படுகின்றன.

"விமுரிகெ வாணிகக் களங்களுக்கென்று எகிப்தில் உண்டுபண்ணப்படும் பொருள்கள் யாவும்

இந்த இடங்களுக்குக் கொண்டுவரப்படுகின்றன. இந்த வாணிகத்தால் உறிஞ்சப்படும் எகிப்தின் வள முழுவதும் இந்தக் கரையில்தான் வந்து சேரு கின்றன. அதுமட்டுமன்று. விமுரிகெயின் விளைவு, வளங்களும் வந்திறங்கும் துறை இதுவே.

"தமிழகத்துடனும் இந்தியாவில் மற்றப் பகுதிக ளுடனும் உள்ள உரோம வாணிகத்தின் அளவு மிகப் பெரியதாகவே இருந்தது என்று பிளினியின் கூற்றால் அறிகிறோம். உரோமப் பேரரசின் செல்வத்தை இந்தியா 55 இலக்கம் செஸ்டர்ஸ்கள் (9,86,976 ஆங்கிலப் பொன்கள்) அளவில் குறையா மல் ஆண்டுதோறும் இறைத்து வந்தது என்று அவர் கூறுகிறார். இச்செல்வத்துக்கீடாக இந்தியா அனுப்பிய சரக்குகள் தம் மூல விலைக்கு நூறு மடங்காக விற்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டு உள்ளார்."[1]

பழந்தமிழகம் உலகத்திற்கு வழங்கிய பண்டங் களின் மதிப்புப்பற்றி வரலாற்று ஆசிரியர்கள் கூறும் வாய்மையினை இதுகாறும் பார்த்தோம். அடுத்துத் தமிழர் உலகுக்கு வழங்கிய முத்தினும் சிறந்த முத்தமிழ் பற்றிச் சிந்திப்போம்:

முத்தும் முத்தமிழும் தமிழர் உலகுக்கு வழங்கிய தனிப்பெருஞ்செல்வங்கள் என்னும் உண்மையை

1. (அ) ஆயிரத் தொள்ளாறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்: (1956)-தமிழாக்கம்:கா. அப்பாத்துரை, பக், 58–72.

(ஆ) மற்றும் பார்க்க: The History of the Pearl Fishery of the Tamil Coast— (1952) M. Arunachalam, M. A., M.Litt.

எண்ணும்போது 'முத்தும் முத்தமிழும்' என்ற தொடர் பயிலும் கம்பன் கவிதை நம் உள்ளத்தில் இன்பத்தேன் பாய்ச்சுகின்றது.[2]

முத்தமிழின் மாண்பு பற்றிக் கற்றோரும் எண்ணி இன்புறச் செய்யும் அரிய கட்டுரை ஒன்றை இந்த மணிவிழாவுக்குரிய நமது மதிப்பிற்குரியபேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் மணிவிழா மணிமலருக்கு அளித்துள்ளார்கள்.[3] ஒப்புயர்வற்ற அவ்வரும் பெருங்கட்டுரையின் உயிர் ஒலி வருமாறு:

'ஆகவே, மனக்கருத்தின் அமைதியே இயற்றமிழ். இயற்கை வாய் ஒலியின் அமைதியே இசைத் தமிழ். மெய்யின் இயக்க விளக்கமே கூத்துத் தமிழ். இவ்வாறு உயிர் முத்திறத்தாலும் தன்னியல்பை வெளிப்படுத்துநிலையில் சிறப்பாக விளங்குவன முத்தமிழாம்.

* * *

'இசை, இன்ப ஒலியும் துன்ப ஒலியுமாக எழக் காண்கின்றோமாதலின், உணர்ச்சி நிலை அல்லது விருப்பாற்றலின் இயக்கம் எனலாம். மனக் கருத்தை விளக்கும் இயற்றமிழ் அறிவுநிலை அல்லது அறிவாற்றலின் இயக்கம் எனலாம். செயல் நிலை அல்லது செயலாற்றலின் இயக்கமே கூத்துத் தமிழாம்.

2. கம்பராமாயணம்— ஆறுசெல்-53

3. இக்கட்டுரையைப் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் தம் கட்டுரைத் தொகுதியாகிய 'பிறந்தது எப்படியோ?' என்ற நூலுள்ளும் காணலாம்.

'வீட்டு நெறியெனும் மெய்யுணர்வே அறத்துப் பாலின் முடிபாதலின் அறம் அறிவு நிலையின் பயன் எனலாம். உலகில் மக்கள் அரசும் குடிகளுமாய் வாழும் வாழ்க்கையைக் கூறும் பொருட்பால் செயல் நிலையின் பயன் எனலாம். முடிந்த முடிபாம் இன்பத்துப்பால் உணர்ச்சி நிலையின் பயன் எனலாம். எனவே, முப்பாலும் முத்தமிழாக முடிகின்றன.

*   *   *

'அறியும் ஆன்ம அறிவு குறை நீங்கி நிறைவாம் வீட்டு நிலையில் மெய்யறிவு நிலையாக எங்கும் நிறைந்த இறைவன் அடிப்படையான உண்மை நிலையாக விளங்க மயங்கி நின்ற இருளுலகம் முற்றும் மாறி இன்ப நிலையாக விளங்க இவ்வாறு இவை மூன்றும் ஒன்றித்து முதிர்ந்து பழுத்து முற்றி நிற்கும் முத்தி நிலையும் முத்தமிழ் நிலைதானே?

*   *   *

'இவ்வாறு உயரப் பறப்பதைவிட்டு மண்ணிற் றவழ்ந்து வரும்போது முத்தமிழ்க் கொள்கையின் பெருமை விளங்குகிறது. இக்காலத்துக் கல்வி அறிவு நிலை ஒன்றையே வளர்க்கின்றது. இதன் பயனாகத் தலை கொழுத்து உள்ளம் வற்றி உடல் வாடி நிற்கின்ற மக்களையே காண்கின்றோம். போரும் மூண்டெரிகின்றது. முத்தமிழ் நெறியே கல்வி கற்றிருந்தால் முழுமன வளர்ச்சி பெற்ற சான்றோர் களாய், தனக்கென வாழாப் பிறர்க்குரியாராய் விளங்கியிருப்பர் அன்றோ?

'உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற தனித் தமிழ்ச் சிறப்புச் சொற்கள் முத்தமிழின் இயல்பை

விளக்க எழுந்தன போன்றமைந்துள்ளன. இன்ப மாய்ப் பொங்கி அறிவாய் விளங்கும் உள்பொருளை உள்ளத்தாலும் வாயாலும் மெய்யாலும் வழிபட்டு அதுவாய் நிற்கும் முறை இதுவேயாகும். தூய மனத்தில் பொங்கி எழுந்தது இயற்றமிழ். தூய வாயின் முழக்கமே இசைத் தமிழ். தூய மெய்யின் இயக்கமே கூத்துத் தமிழ். இவை மூன்றும் உண்மைக்கு மாருக இருத்தலாகாது என்பது தமிழர் கண்ட முடிபு. இவற்றின் ஒற்றித்த வடிவமே 'முருகு' எனும் அழகாம். உணர்ச்சிநிலையின் அழகை யாவரும் அறிவர். 'கல்வி யழகே யழகு" என அறிவு நிலையையும் அழகாகக் கண்டனர் நாலடி பாடிய தமிழர். 'ஒழுக்கத்தழகு' எனச் செயல் நிலை அழகினையும் அழகாகக் கண்டார் தமிழ்ப் பெரியார். கிரேக்கர்கள் உண்மை, அழகு, நன்மை என்பனவற்றைப் பொன்னுலான முக் கோணமாகப் பாராட்டி வந்தனர். உண்மை என் பது அறிவையும், அழகு உணர்ச்சியையும், நன்மை ஒழுக்கத்தையும் குறிப்பனவாகலின், அவையும் முத்தமிழ்க் கொள்கையை விளக்குதல் காண்க. ஆனல், கிரேக்கர்க்கு அவை குறிக்கோளாக விளங்கத் தமிழர்க்கு இவை கல்வி முறையாகி அன் ஞருடைய வாழ்க்கையாய் விளங்கின...... பரத நாட்டியத்திலும் **பாவம்** எனும் மனக் குறிப்பும் இராகம் எனும் இசையும் தாளம் என்பதும் ஒத்தி யைதல் வேண்டும் என்றனர் வடமொழியாளர். முத்தமிழை வெவ்வேருகப் பிரித்துப் பேசிலும்,' பிரிக்க முடியாதபடி ஒன்றிய மனக் கருத்தாய்

அரும்பி, இசையாய்ப் பூத்துக் கூத்தாய்ப் பழுத்து முற்றியபோதுதான் உயரிய வாழ்க்கையாய் இனிக்கக் காண்கிறோம்.

* * *

'முத்தமிழ் வழியே கடவுளை அடைதலும் கூடும் எனக்கண்ட நற்றமிழ் ஞானசம்பந்தர் 'ஆடல் நெறி, பாடல் நெறி' எனப் புதிதாகக் கூறியுள்ளார். பாடல் நெறி இயல் இசை என்ற இரண்டையும் குறிப்பதால், முத்தமிழும் இங்கே குறிக்கப்பட்டமை காண்க.[4]

* * *

இவ்வாறு நம் தலைமுறையின் தலை சிறந்த புலவரேற்றால் விளக்கப் பெறும் முத்தமிழ், தமிழர் உலகுக்குக் கொடுத்த பெருஞ்செல்வமே ஆகும். ஆனால், ஆரவாரம் மிகுந்த உலகம் இன்னும் அதன் பெருமையைத் தக்கவாறு உணர்ந்ததாகத் தெரியவில்லையே!

அம்மட்டோ? அம்முத்தமிழுள்ளும் முதன்மை படைத்த இயல் தமிழின் அகப்புறப் பாகுபாடுகளும் சொல் திணைப் பாகுபாடுகளும் தமிழர் உலகுக்கு வழங்கிய சிறந்த இலக்கியப் பாகுபாடுகள் அல்லவா?

'அகம்புறமாய்ப் பாகுபட்டு விளங்கும் பழந்தமிழ் இலக்கியத்துள் காணப்படும் ஐந்திணை அமைதி உலக இலக்கியம் எதுவும் காணாத ஒரு பெரும்புதுமை—பெருமை' என்று அண்மையில் (3-11-1960)

4. பண்டிதமணி மணிமலர் (1941) –பக்கம், 71–75.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் மொழியாராய்ச்சி வட்டத்தின் (Linguistic Circle) சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய டாக்டர் சுனித்குமார சட்டர்ஜி (நன்னெறி முருகனார்) கூறிய அமுத மொழி உலகப் பேரறிஞர் திருச்செவிகளில் சென்று சேரும் நாள் எந்நாளோ!

தமிழ் இலக்கியங்களுள்ளேயே தலைமை சான்ற திருக்குறள் உலகத்திற்குத் தமிழர் வழங்கிய பெருந்திருவன்றோ?

அது குறித்து 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று கவியரசர் பாரதியார் பாடியது காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் பொய்யா மொழி அன்றோ?

முத்தையும் முத்தமிழையும் மிகு பழங்காலத்திலேயே உலகுக்கு வழங்கிய தமிழர், பின்னளில் மொழிச் செப்பத்தையும் கலைப்பண்புகளையும் உலகுக்கு வழங்கியுள்ளனர். இவ்வுண்மையைக் கிழக்காசிய நாடுகளில் பரவியுள்ள தமிழ் நாகரிகம் பற்றிய அறிஞர் பெருமக்கள் ஆராய்ச்சி உரைகளால் நன்கு உணரலாம்.[5] சான்றாகச் சிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம்:

மலாய் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள் மலிந்துள்ளன. இவ்வுண்மையைப் பேராசிரியர் வி. ரா. இராமசந்திர தீட்சிதர் அவர்கள் சென்னைப்

5. இப்பொருள் பற்றிக் கற்கத்தக்க சிறந்ததொரு நூல், பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாத்திரியாரின் South Indian Influences on South East Asia (1949) என்பதாகும்.

பல்கலைக்கழகத்தில் 1940-ஆம் ஆண்டு நிகழ்த்திய சங்கர பார்வதி நினைவுச் சொற்பொழிவில் அழகுறப் புலப்படுத்தியுள்ளார்கள். அவர்கள் கூறிய ஆங்கில வாசகத்தின் தமிழாக்கம் வருமாறு[6]:-

'மலேயாவின் மொழிகளை ஆராய்ந்தால் அவற்றில் மிகுதியான இந்தியச் சொற்களை-அதிலும் சிறப்பாகத் தென்னிந்தியச் சொற்களைக் காண்கிறோம். ஆனால், திராவிட மொழிகளில் மலேயச் சொற்கள் மிகக்குறைவாக அருகியே வழங்குகின்றன. இது பழந்தமிழர் பலர் மலேயாவில் குடியேறி இருந்தனர் என்பதையும் அதற்கு மாறாக ஒரு சில மலேயரே தென்னிந்தியாவில் குடியேறியிருந்தனர் என்பதையும் விளக்குகிறது.'

சொற்செல்வத்தையே அன்றித் தமிழர் கிழக்கு நாடுகட்குக் கலைப் பண்புகளையும் சமயக் கருத்துக்களையும் வாரிவழங்கியுள்ளனர். ஆனால், ஒருவகையில் தமிழினத்தின் தீவினை,[7] 'இந்து சமயம்'—'இந்தியப்

6. (i) Origin and Spread of Tamils-V. R. R. Dikshitar (1947) p.- 9.

(ii) 'மலாய் மொழியில் வழங்கும் தமிழ் வழக்குச் சொற்கள்' பற்றிய விரிவான பட்டியலுக்கும் கட்டுரைக்கும் பார்க்க.-'மலாய்மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள்'—ந. சஞ்சீவி.

—Annals of Oriental Research, University of Madras. Volume XVI—(1959-60) Part 2.

(iii) இந்நாலில் இரண்டாவது கட்டுரை.

பண்பு'-என்ற தலைப்புகளுள் தமிழர் வழங்கிய கொடை மறைந்துள்ளது. வடமொழியின் வரம்பற்ற செல்வாக்கால் பின் நூற்றாண்டுகளில் கிழக்குத்திசை நாடுகளில் பேரளவில் பணைத்து ஓங்கிப் பரவிய 'இந்து' 'இந்திய'க் கோட்பாடுகட்குக்கூடக் காரணம் 'திரைகடலோடித் திரவியம் தேட'த் தமிழர் மேற்கொண்ட முயற்சியே. இவ்வுண்மையை விளக்க வல்ல பல சான்றுகளைக் கிழக்கு மேற்கு நாட்டு அறிஞர் பெருமக்கள் அந்நாடுகளின் வரலாறு கலை பற்றி வரைந்துள்ள ஆராய்ச்சி நூல்களால் நன்கு அறியலாம்.

இலக்கியங்களாலும் கல்வெட்டுகளாலும் வரலாற்று நூல்களாலும் சோழப் பேரரசர்கள் காலத்தில் கிழக்கு நாடுகளில் தமிழரசு ஆட்சி செலுத்திய உண்மை உறுதி பெறும். அதன் பயனாக, படையெடுத்தும் கடையெடுத்தும் சென்ற தமிழ் மன்னரும் தமிழ் மக்களும் அருந்தமிழ்ப் பண்புகளையும் அலைகடலுக்கு அப்பால் கொண்டு சென்றுள்ளனர். இது பற்றி மேலைநாட்டு வரலாற்றறிஞர் ஒருவர் கூற்றையும் உலகஞ்சுற்றிய தமிழர் ஒருவர் கூற்றையும் நாம் நினைவுபடுத்திக்கொள்ளுதல் பயன் தருவதாகும்.

அம்மேற்கோள்கள் வருமாறு:

* * *

'இந்தியாவே மலாயா மக்களின் உலகியல் வாழ்க்கையிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டு

---

7. இவ்வுண்மைக்கு அரண் செய்யும் மேற்கோள்கள் சிலவற்றிற்குப் பிற்சேர்க்கை 1 பார்க்க.

வரை மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. அதன் விளைவாக எழுத்து, சமயம், அரசியல் முறை, சட்டம், சோதிடம், மருத்துவம், இலக்கியம், சிற்பம், உலோகவேலை, பட்டு நெசவு ஆகிய துறைகள் அனைத்திலும் மலாயா மக்கள் இந்தியாவிற்கே பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள்.'[8]

* * *

'பாலியின் (பாலித் தீவு) நாகரிகம் இந்து நாகரிகமே ஆகும்........... ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முன், இந்து மதமும் நாகரிகமும் எவ்வாறு இருந்தன என்பதைப் பார்க்க வேண்டுமானால் பாலிக்குச் செல்ல வேண்டும்..........

'வெற்றிலைப் பெட்டிகளில் எத்தனை விதம்! எத்தனை விதமான வர்ணம்! இராமாயண பாரதக் கதைகளை எல்லாம் சித்திரங்களாகத் தீட்டியிருந்தார்கள் அவற்றில்.

'பாக்கு வெட்டியில் எத்தனை விதம்! பாக்கு வெட்டித் தலைப்பு முனை இருக்கிறதல்லவா, அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் உருவம். உருவம் என்றால் கரடி, புலி, சிங்கத்தின் உருவம் அல்ல. அர்ச்சுனன், கிருஷ்ணன் ஆகிய அழகிய உருவங்கள்.'[9]

* * *

மேற்கண்ட செய்திகட்கு மேலும் அரண் செய்யும் வகையில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழின் ஏற்

8. (i) Sir Richard Winstedt-Malaya and its history pp. 24-32
(ii) மலாய் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள்- Oriental Research, Vol. XVI-1959-60, Part 2.

9. மலேயா முதல் கானடா வரை-ஏ.கே. செட்டியார் (1958), பக்கம் 62-63.

றத்தின் தோற்றமாய்—பெருமையாய்—விளங்கும் 'கலைக்களஞ்சிய'க் கட்டுரைகளிலிருந்து சில பகுதிகளை இந்நூல் பிற்சேர்க்கை எண் II-ல் காணலாம்.

தமிழக நாகரிகத்தின் செல்வாக்கு, கிழக்கு நாடுகளில் பரவிய அந்த அளவிற்கு மேற்கு நாடுகளில் பரவவில்லை—பரவும் வாய்ப்பில்லை—என்பது உண்மையே ஆயினும், ஐரோப்பிய மொழிகளிலும் நாகரிகத்திலும் ஓரளவேனும் தமிழ்க்கூறுகள் உள்ளமையை எவரும் மறுத்தலோ,மறைத்தலோ இயலாது. ஹீப்ரு, கிரேக்க மொழியிலுள்ள திராவிடச் சொற்கள் பற்றி ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பேரறிஞர் கால்டுவெல் ஆராய்ந்து கூறியுள்ளார்.[10] மேற்கு ஆசிய நாட்டு மொழிகளுள்ளும் 'பிடி' என்ற தமிழ்ச்சொல் குடி புகுந்திருத்தல் கூடும் என்று பேரறிஞர் சுனித் குமார சட்டர்ஜி கருதுகிறார்[11]. சென்ற ஆண்டு (1962) சென்னைப் பல்கலைக் கழகத்தில் சர். வில்லியம் மேயர் நினைவு நிதிச் சொற்பொழிவாகத் 'திராவிடர் தோற்றம்' பற்றி நிகழ்த்திய ஆறு அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளில் பேராசிரியர் உயர்திரு-டி. பாலகிருட்டிண நாயர் அவர்கள் இப்பொருள் தொடர்பாகப் பல சிறந்த புதுக் குறிப்புகளைப் புலப்படுத்தியுள்ளமை நன்றியோடு போற்றற்குரியதாகும்.

சில ஆண்டுகட்கு முன் காஞ்சீபுரத்தில் கிறித்துவ சமயத் தொண்டாற்றிக்கொண்டிருந்த ஒரு ஸ்காட்

10. Dravidian comparative Grammar 1956 pp. 88-105.

11. பேராசிரியர் திரு. தெ. பொ. மீ. மணிவிழா மலர், பக்கம், 396–400.

லாண்டு பாதிரியார் என் உறவினர் ஒருவர் திருமணத்திற்கு வந்தபோது அவர்கள் நாட்டுத் திருமணத்தின்போதும் உள்ள நெல் தூவல் தமிழ் நாட்டிலிருந்து வந்த வழக்கமாகவே இருத்தல் கூடும் என்று என்னிடம் தெரிவித்தார்.[12]

ஆப்பிரிக்கா, ஐரோப்பா, மேற்கு ஆசியா, நாடுகளின் வாழ்வில் ஏற்பட்ட தமிழர் செல்வாக்கின் சுவடுகளை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ்க் கலைக்களஞ்சியம் தரும் ஒரு குறிப்பையும் அருட்டிரு டாக்டர். தனிநாயக அடிகளார்தம் 'தமிழ்த்தூதி'ல் தரும் இரு குறிப்புகளையும் ஈண்டு நினைவு கூர்தல் பொருத்தமும் பயனும் உடையதாகும்.

* * *

## 'இந்திய சமுத்திரமும் வாணிபமும்[13]

இந்திய சமுத்திரம் உலகிலுள்ள மிகப்பெரிய வியாபார வழிகளுள் ஒன்று. பண்டைக்கால முதல் இக்கடல் வழியாக இந்தியாவுக்கு எகிப்து, மெசப்பொட்டேமியா, கிழக்கு மத்தியதரைக்கடல் நாடுகள் ஆகியவற்றுடன் வியாபாரம் நடந்து வந்ததாகத் தெரிகிறது. தமிழ் நாட்டிலிருந்து மயில் தோகை, அகில் முதலிய பொருள்கள் பாபிலோனியா சென்றன என்று கிறிஸ்தவ வேதத்தால் தெரிய வருகின்றது. தமிழ் நாட்டுத் தேக்குமரம் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த கல்தேயர் நகரமாகிய

12. உறவினர் பெயர்: திரு. ப. கோ. நாதமுனி முதலியார்; பாதிரியார் பெயர்: ரெவரண்டு ஆர். எல். மான் சென்.

13. கலைக்களஞ்சியம்—தொகுதி, 1; பக். 568

ஊர் (Ur) என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து பல் பொருள்கள் ரோமாபுரிக்குச் சென்றதாகத் தமிழ் நூல்களிலிருந்தும், ரோம ஆசிரியர் பிளினியின் நூல்களிலிருந்தும் தெரிகிறது. யவனர்களாகிய கிரேக்கர்கள் காவிரிப்பூம்பட்டினம் போன்ற தமிழ் நாட்டுத் துறைமுகங்களுக்கு வந்து வியாபாரம் செய்தனரென்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

* * *

'பண்டைக் காலத்தில் கிரேக்க நாடு, ரோம் நாடு போன்ற மேல் நாடுகளுடன் தமிழ் மக்கள் கொண்ட வாணிகத் தொடர்பு மிகவும் சிறந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரமும் நல்ல உறுதி படைத்த ஆதாரங்களாய் அமைகின்றன. அரிசி, இஞ்சி வேர், கருவாப் போன்ற தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் உள்ளன. ஆயினும், Paleography, Paleontology போன்ற சொற்களில் வரும் 'பழைய' என்னும் பகுதியும், இக்காலக் கிரேக்க மொழியில் நீருக்கு, 'நேரோ' என்னும் சொல்லும், இன்னும் நாம் கிரேக்கம் போன்ற பண்டைய மொழிகளில் ஆய்வு செய்வதற்கு இடமுண்டு என்பதைக் காட்டுகின்றன. கிரீட்டுத் தீவின் பண்பாட்டில் காளை மாட்டின் வழிபாடும், ஏறு தழுவுதல் போன்ற விளையாட்டுக்களும் கி. மு. இரண்டாயிரத்திற்கு முன் நிலவிய மினோஸ் காலத்தின் பண்பாட்டில் இடம் பெற்றுள்ளன. இன்றும் செட்டி நாட்டில் இடம்பெறும் விளையாட்டும் முல்லைக் கலி கூறும் ஏறு தழுவுதலும் தமிழர் கிரீட்டரின்

பண்டைத் தொடர்பினைக் காட்டுகின்றது என்பது அறிஞர் சிலரது முடிபு.”[14]

‘தமிழ் நாட்டிற்கு வடமேற்குத் திசையிலிருக்கும் நாடுகளிலும் தமிழ் ஆராய்ச்சிக்கு எல்லையற்ற இடமுண்டு. இன்று வரையிலும் நாம் அறிந்த பண்புள்ள பண்பற்ற திராவிட மொழிகள் ஏறக்குறைய இருபது என்று கூறுவர். மொகஞ்சதரோவை நான் பார்க்கப் போயிருந்தபொழுது அங்கே பிராகுவி மொழி பேசும் மாந்தர் சிலருடன் உரையாடினேன். பாகிஸ்தானத்தில் கிணறு தொடும் குலத்தினர் ஒரு சிலர், ‘ஒட்டர்’ எனப் பெயரிடப்பெறுவர் என்றும், அன்னார் திராவிட மொழி போன்ற ஒரு மொழியைப் பேசி வருகின்றனர் என்றும் என்னிடம் கூறினார். நான் ‘ஒட்டர்’ எனும் மக்களை நேரில் கண்டு அவர்களுடன் பேசுவதற்குரிய வாய்ப்பினைப் பெற்றிலேன். அண்மையில் மாஸ்கோ மாநகரில் ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்த ஆங்கில அறிஞர் ஒருவருடன் உரையாடியபொழுது, அவர் ஆப்கானிஸ்தானத்தில் ஒரு வகுப்பினர் (ஏறக்குறைய் 200 குடும்பங்கள்) திராவிட மொழி போன்ற மொழி ஒன்றினைப் பேசி வருகின்றனர் என்றும், இதுகாறும் அம்மொழியினை அறிஞர் எவரும் ஆராய்ந்திலர் என்றும் செப்பினர். எனவே, நம் அறிஞர்கள் இந்நாடுகளுக்குச் சென்று இம் மொழிகளைப் பேசும் மக்களைப் பற்றிய செய்திகளை ஆய்ந்து வருவார்களாயின், இன்னும் சில திராவிட

14. அருட்டிரு-டாக்டர் தனிநாயக அடிகள்: ‘தமிழ்த்தூது பக். 123.

மொழிகள் இயங்கி வருவதாக நாம் அறிய நேர்ந்தாலும் நேரலாம்.

'பின்னிஷ் (Finnish) மொழி திராவிட மொழிகளுடன் தொடர்புடையது எனக் கால்டுவெல் முன் கூறியுள்ளதை மீண்டும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக அறிஞர் பரோ (Burrow) என்பவர் இக்காலத்திலும் வற்புறுத்தி வருகின்றார்.'[15]

இச்செய்திகளுடன் நாம் கருதத்தக்க மற்றொரு சிறந்த செய்தி அமெரிக்காக் கண்டத்தில் குறிப்பாக மெக்ஸிக்கோ–மாயா நாகரிகத்தில் கிழக்காசிய நாடுகள் வழியாகச் சென்ற தமிழர் நாகரிகம் ஊடுருவிய ஒரு பேருண்மையைப் பற்றியதே ஆகும். இது பற்றிய வியத்தகு ஆராய்ச்சிக் குறிப்புகள் சில வருமாறு :

அருட்டிரு–டாக்டர் தனிநாயக அடிகளார் தமது 'தமிழ்த்தூது'ல் தெரிவிப்பது:

* * *

'தென்னமெரிக்காவிலே, பண்டை நாகரிகம் படைத்தவரும் பழங்குடிகளுமான இலத்தீன் வழித் தோன்றல்கள், இந்தியாவின் பெருமையை நன்றாய் அறிந்திருப்பதாகத் தெரிந்தது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பழைய நாகரிகங்கள் அரும்பி மலர்ந்து வாடின. மெக்ஸிக்கோவில் அஸ்தெக்கரும், தேல்தெக்கரும்,பெருவில் இன்காக்களும்,வரலாற்று நூல்களில் பெயரும் புகழும் பெற்ற மக்கள். அவர்

15. அருட்டிரு டாக்டர் தனிநாயக அடிகள்: "தமிழ்த் தூது" பக். 121-122.

களுடைய கோட்டைகளையும் மாளிகைகளையும் நான் கண்ட போது, திராவிட மக்களின் கட்டடத்திறன் என் நினைவிலே தோன்றியது. இவர்கள், இத் திறனில் கட்டடக்கலைஞருடைய வியப்பையும் புகழையும் பெற்றவராயினும், இலக்கிய நூல்களை யாத்தவர்களல்லர். இப்பண்டை நாகரிகங்களுடன் தமிழ்ப் பண்பு நிலையைப் பிணைத்துப் படித்து ஆராய்ச்சி செய்வதும், தமிழாராய்ச்சியின் புதிய தொரு துறையாகும்.'[16]

*    *    *

தமிழ் மக்கள் மொழி, இலக்கியம், கலை, சமயம் ஆகிய துறைகளில் மட்டுமேயன்றி, விஞ்ஞானத் துறையிலும் உலகிற்குப் பெரிய அறிவுக்கொடை வழங்கியுள்ளனர் என்ற உண்மை மொழி–சாதி–இனப்பற்றுகளைக் கடந்த உள்ளத்தின் ஆராய்ச்சிக்குத் தெள்ளிதின் புலனாகும். சான்றாக, விஞ்ஞானக் கலைகள் அனைத்திற்கும் வேராய் விளங்குவது கணக்குக்கலை. அக்கலையின் உயிராய்த் திகழ்வது இலக்கமுறை. இன்று உலகெங்கும் பரவியுள்ள இலக்கமுறைக்கு வித்திட்ட மரபு நம் தாய்க்குலமாம் தமிழ்க் குலத்தின் தனி மரபேயென்று கடந்த

16. (i) அருட்டிரு—டாக்டர். தனிநாயக அடிகள்: 'தமிழ்த் தூது' (1962)—பக்கம்-22.

(ii) இப்பொருள் பற்றிய விளக்கப் படங்களுடன் கூடிய விரிவான ஆராய்ச்சி காண விரும்புவார், Chaman Lal—Hindu America? (1960) பார்க்க இந்நூலிலிருந்து எடுக்கப் பெற்ற ஒரு சில இன்றியமையாக் குறிப்புகட்கு மட்டும் பார்க்க: பிற்சேர்க்கை iii

பல்லாண்டுகளாகவே அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து கூறியுள்ளார்கள்.[17]

அவற்றுள் ஈண்டு மேற்கோளாக எடுத்துக் காட்டத் தக்க அரியதொரு விளக்கக் குறிப்புப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் 'மொழி வரலாறு' என்னும் நூலின் மணிமுடி போலத் திகழும் முடிவானதொரு மணிவாசகமே ஆகும். அது வருமாறு:

'1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என இன்று உலகமெங்கும் எழுதப்படும் எண்கள் அரபி எண்கள் எனக் கூறப்படுகின்றன. ஆனால், அரபியர்களுக்கு இந்த எண்களின் பழைய வரலாறு பற்றி ஒன்றும் தெரியவில்லை; அவர்கள் இவற்றை இந்திய எண்கள் என்கிறார்கள்; வடநாட்டு அறிஞர்களுக்கும் இவற்றின் தோற்றம் பற்றி ஒன்றும் விளங்கவில்லை. தமிழ் நாட்டின் பழைய எண் வடிவங்களைப் பற்றி இவர்கள் அறியாமலிருந்ததலே இவ்வாறு அனைவரும் தடுமாறுவதற்குக் காரணம் ஆகும். அரபி எண்கள் என்றும் இந்திய எண்கள் என்றும் இவ்வாறு தடுமாறிக் கூறப்படும் அந்த எண்கள் (1, 2, 3, முதலியவை) பழைய தமிழ் எண்களே என்பது, பின் வரும் பழந் தமிழ் எண் வடிவங்களை நோக்கின் உணரப்படும்.

இவற்றை நோக்கி எண்ண வல்லவர்க்கு 1, 2, 3 முதலிய எண்களின் எழுத்து வடிவம் தமிழகம்

17. (i) தமிழ் இலக்க வரலாறு-ஆ. முத்துத்தம்பி பிள்ளை, 'செந்தமிழ்', மூன்றும் தொகுதி—பக்கம் 149.
(ii) தென்மொழி-கா. அப்பாத்துரை-பக்கம் 100-119.

உலகிற்கு அளித்த கலையே என்னும் உண்மை புலப்படும்.'[18]

| எண்கள் | இன்று உள்ளவாறு | கல்வெட்டுக்களில் உள்ள வளர்ச்சி |
|---|---|---|
| 1 | ௧ | |
| 2 | ௨ | |
| 3 | ௩ | |
| 4 | ௪ | |
| 5 | ௫ | |
| 6 | ௬ | |
| 7 | ௭ | |
| 8 | ௮ | |
| 9 | ௯ | |



இப்பழம்பெருந்தமிழ்க் கணக்கியல் முறை இற்றை நாளில் குற்றுயிராய்க் கிடப்பது உண்மையே. ஆயினும், இங்குமங்கும் நல்லோர் சிலர் இம்முறையைப் போற்றி வருவது பாராட்டற்குரியது. அண்மையில் என் பழைய மாணவ நண்பர் திரு. இரா. முத்துக்கிருட்டிணன் அவர்கள் இப்பழங் கணக்கியல் முறையைப் பயிற்றுவிக்கும் 'திண்டுக்கல் அங்கு இங்குப் பழைய முறைப் பள்ளிக்கூடம்'

18. டாக்டர் மு.வ. மொழி வரலாறு (1954) பக். 444.

பற்றிய செய்திகளைச் சொல்லிய போது யான் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவு இல்லை.

கணக்கியல் கலையில் வல்லுநராய் விளங்கியமை போலவே கடற் பயணக் கலையிலும் பண்டுதொட்டே விளங்கிய தமிழ் மக்கள் நிலவரைப் படங்கள் வரைவதிலும் வல்லுனர்களாய்த் திறமை பெற்றுத் திகழ்ந்த உண்மை தாம் படித்த ஒரு நூலில் பொறிக்கப் பெற்றிருந்த தித்திக்கும் செய்தியை ஆராய்ச்சி அறிஞர் மயிலை-சீனி -வேங்கடசாமி அவர்கள் இக் கட்டுரைப் பொருள் பற்றி அளவளாவிக்கொண்டிருந்த போது அன்புடன் எனக்குத் தெரிவித்தார்கள்.

விஞ்ஞானத்திற்குத் தொண்டாற்றியது போன்றே தமிழர் மெய்ஞ்ஞானத்திற்கும் பணி புரிந்தனர். சிறப்பாகச் சைவ சித்தாந்த நெறி அவர்கள் உயிருயர்வு (ஆன்மிக) உலகிற்கு வழங்கிய பெருங்கொடை ஆம். 'நீலமேனி வாலிழை பாகன்' சிவசத்தியாய் விளங்கும் தத்துவம் சீன நாட்டு இலச்சினைகளிலும் இடம் பெற்றிருப்பதை 'நீலமும் சிவப்பும்' கலந்திருக்கும் அவ்விலச்சினைகளைக் காட்டி 1960இல் யான் சிங்கப்பூர்த் தமிழர் பிரதிநிதித்துவ சபையார் வேண்டுகோட்கிணங்கித் தமிழர் திருநாள் சொற்பொழிவாற்ற மலாயாவிற்குச் சென்றிருந்த போது சுவாமி சத்தியானந்தர் தமது கோலாலம்பூர் ஆச்சிரமத்தில் வைத்து விளக்கியருளினர்.

தமிழர் உலகுக்கு வழங்கிய தனிப்பெருஞ்செல்வங்கள் பற்றி நம்மவர் பலர் நவில்வதினும் அயலவர்

ஒருவர் நடுவு நிலையோடு ஆய்ந்து கூறுவதே பெரு மதிப்பிற்கு உரியது. அவ்வகையில் செக்கு நாட்டுச் செந்தமிழ்ப் பேராசிரியரும் இந்நூலுக்கு அணிந் துரை வழங்கிப்பெருமை செய்துள்ள அறிஞர் பெருந் தகையுமாகிய டாக்டர் கமில் சுவிலபிலின் அவர்கள் 'தமிழ் கல்சர்' (Tamil Culture) முத்திங்கள் இதழில் ஏழு ஆண்டுகட்கு முன்பே (அக்டோபர் 1956) எழுதி யுள்ள கட்டுரையொன்றில் தமிழர் உலகுக்கு வழங் கிய ஏழு பெருஞ்செல்வங்களைப் பற்றிக் குறித் திருப்பது நினைவில் இருத்தத்தக்கது. செக்குப் பேராசிரியர் கருத்துக்கள் வருமாறு:

உலகப் பண்பாட்டுக் களஞ்சியத்திற்குத் தமிழர் தம் படைப்புப் பெருந்திறம் வழங்கிய பெருங் கொடைகளுள் குறிக்கத்தக்கன பின் வரும் கலை இலக்கியச் செல்வங்களாகும். இவை, ஹோமரின் பாடல்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்கள், ரெம்பி ராண்டின் ஓவியங்கள், பிரான்சின் கோயில்கள், கிரீசின் சிற்பங்கள் போலவே மன்பதை முழுதும் நன்கறிந்தனவாக வேண்டும்; எல்லோராலும் போற்றிக் காதலிக்கப் பெறவேண்டும்.

## 1. எட்டுத்தொகைப் பாடல்கள்

இவ்விலக்கியத் தொகுதி ஆற்றலும் தனிச் சிறப்பும் வாய்ந்தது; விரிவான மெய்ம்மையியல் நிரம்பியது; திறமை துலங்க இயற்றப் பெற்றது. எனவே ஒருவேளை இப்பாடல்கள் பழைய கிரேக்க இசைப்பாடல்கள் சிலவற்றோடு மட்டுமே ஒப்பிடத் தக்க ஒண்மையுடையது.

## 2. திருக்குறள்

இது உலகின் பெருநூல்களுள் ஒன்று. உடன்பாட்டு வகையில் அன்பையும் மன்னிப்பையும் அமைதியையும் வற்புறுத்தும் பண்புடைய மனித ஆன்மா இதயத்தின் தனிச்சிறப்பார்ந்த வெளிப்பாடு.

## 3. சிலப்பதிகாரப் பெருங்காப்பியம்

இது மானுடக் காதலின் அவல முடிவை உரைக்கும் கதையாலும் பெருங்காப்பியச் சிறப்பாலும் வரிப்பாடற்பகுதிகளின் கவிதைக் கவர்ச்சியாலும் மந்திர ஆற்றலாலும் மன்பதையின் தலை சிறந்த பெருங்காப்பியக் குழுவுள் சேரும்.

## 4. பத்திப் பனுவல்கள்

பரம்பொருளைக் காண மனிதன் காதலாகிக் கசிந்துருகிச் செய்த முயற்சிகளுள் ஒன்றே வைணவ சைவ பத்தி இயக்கம். அதன் மிக உயர்ந்த இலக்கியச் சொல்வடிவே மாணிக்க வாசகர் ஞான சம்பந்தர் நம்மாழ்வார் ஆண்டாள் பத்திப் பனுவல்கள்

## 5. சைவசித்தாந்தம்

இது மனித சிந்தனையுள் மிகுந்த விழுப்பமும் மதிநுட்பமும் படைத்த தத்துவ நெறிகளுள் ஒன்று.

## 6. சோழர் காலத் தென்னக உலோக உருவங்கள்

மன்பதையின் மிகச் சிறந்த படைப்புக்களைச் சார்ந்த மிக உயர்ந்த வியத்தகு திருவுருவங்கள் இவை.

## 7. திராவிடக் கோயிற்சிற்பக் கலை

இக்கலையின் தலை சிறந்த எடுத்துக்காட்டுகள் தஞ்சை, சிதம்பரம், மதுரைக் கோயில்கள்.

இவ்வெழுவகை வேறுபட்ட வீறுடைய கொடை வகைகளைப் பெறுமல் இருந்திருப்பின் இந்த உலகம் உறுதியாக வறுமையும் வாட்டமுமே அடைந்திருக்கும். எனவே, தமிழ்ப் பண்பாட்டில் ஆர்வமுடைய அனைவராலும் இவ்வெழுவகைச் சிறப்புகளும் கவனிக்கப்படுதல் வேண்டும். அவர்கள், தமிழ்ப் படைப்புப் பெருந்திறனின் உச்சிகளாய் விளங்கும் இச்சிறப்புகளை உலகம் முழுதும் நன்ருகவும் நெருக்கமாகவும் உணரத் தங்கள் காலத்தையும் முயற்சிகளையும் காணிக்கையாக்க வேண்டும்.

இக்கருத்துகளையே பேராசிரியர் அவர்கள் யான் அனைத்திந்திய வானெலி வாயிலாக 18-10-62-இல் சென்னை நிலைய வானெலி மன்றத்தில் பேட்டி கண்ட போதும் வற்புறுத்தினர்கள்.

தொன்று தொட்டு இன்று வரை எத்தனை எத்தனையோ வகைகளில் மன்பதையை மாண்புறுத்தும் தமிழினம் தான் கடந்த இரு நூற்ருண்டுகளில் ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றிற்கும் வழங்கியுள்ள மனித உழைப்புக் கொடையின் மதிப்புப் பெரிது; மிகப் பெரிது. இவ்வுண்மையை ஒரு நூறு ஆண்டுகட்கு முன்பே உணர்ந்து கூறிய பெரியார் டாக்டர் - கால்டுவெல் அவர்களே. அவர் வாசகம் வருமாறு[19]:

19. (iii) Dravidian Comparative Grammar (1956) pp.—7-8

'ஈழநாடு முழுவதிலும் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் அனைவரும் தமிழர்களே.

'பெகு, பினங்கு சிங்கப்பூரிலும், தொலை கிழக்கு நாட்டில் உள்ள பிற இடங்களிலும் வாழும் இந்துக்களில் பெரும்பிரிவினர் தமிழரேயாவர். மேற்கிந்திய தீவுகளுக்குக் கூலிகளாக, மிகப் பெருந் தொகையில் குடியேற்றப்பட்டவர் தமிழர்களே. சுருங்கச் சொன்னல், செல்வம் சேர்க்கும் முயற்சி எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம், இந்திய இனத்தவருள் குறைந்த மூடநம்பிக்கையும், சிறந்த முயற்சியும் தளரா உழைப்பும் உடைய தமிழர் கூட்டம் கூடிவிடும்.'

இக்கருத்துக்கு மேலும் விளக்கமாக இலங்கும் சில செய்திகளை அறியப் பிற்சேர்க்கை i-ல் காண்க.

இனி, இக்கட்டுரையின் இறுதியில் குறிப்பிடத் தக்க முக்கியச் செய்தி ஒன்று உண்டு. அது உலக நாகரிகத்திற்கே தமிழ் நாகரிகமே வித்தும் வேரும் ஆகும் என்பதே. இவ்வுண்மையைப் பல்லாண்டுகளாகவே அறிஞர் பெருமக்கள் அவ்வப்போது ஆராய்ந்து கூறி வந்துள்ளார்கள். சான்றாகச் சென்னைப் பச்சையப்பர் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியராய் விளங்கிய டி. ஆர். சேஷ ஐயங்கார் போன்ற மறைந்த சான்றோர்களும், டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் போன்ற இன்று

நம்மிடையே வாழும் அறிஞர் பெருமக்களும் ஆக்கித் தந்துள்ள ஆராய்ச்சியுரைகளைக் குறிப்பிடலாம்.[19a]

உலகிற்குத் தமிழ் நாகரிகத்தை உதவிய தாயினம் தமிழினமே என்னும் உண்மையை மிகச் சிறந்த முறையில் பல்லாண்டுக்கு முன்பே ஆராய்ந்து வெளிப்படுத்திய வரலாற்றுப் பேராசிரியர், காலஞ் சென்ற வி. ஆர். இராமசந்திர தீட்சிதர் அவர்களே. இப்பெரும்பணிக்காக அவர்களுக்குத் தமிழகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அவர்க்கு அவ்வாறு நாம் செலுத்தும் நன்றி கலந்த வணக்கங்கட்குச் சான்றாக, இக்கட்டுரையைத் 'தமிழர் தோற்றமும் பெருக்கமும்' என்னும் தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள ஆங்கில நூலிலிருந்து சில பகுதிகளைத் தமிழாக்கி நிறைவு செய்வதே பொருத்தமும் பயனும் உடையதாகும். அவை வருமாறு:

"இச்சூழ்நிலைகளையெல்லாம் நாம் உள்ளத்தில் கொண்டு நுணுகி ஆராய்வோமானால், கிழக்கு, நடுவுநிலைப் பண்பாடுகளின் தந்தையர் திராவிட மொழிகளைப் பேசிக்கொண்டு தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களே என்பது தெளிவாகும்........ அதனால், என்னுடைய அடக்கமான ஆராய்ச்சிப்

19. (a) (i) T. R. Sesha Iyengar–Dravidian India.

(ii) உலகெங்கும் தமிழரிடமிருந்து நாகரிகம் பரவியது என்பது—அ. சிதம்பரநாதன் (இப்போதுடாக்டர் அ. சிதம்பர நாதன் செட்டியார் அவர்கள்) - செந்தமிழ்ச் செல்வி - சிலம்பு 4, பரல் 12, பக்கம் 706 - 711.

பயன் நாகரிகத்தின் வருங்காலம் பிறந்தது நடுவு நிலைப் பகுதி அன்று, இந்தியத் தீபகற்பத்தின் கடற்கரை ஓரமே ஆகும் என்பதேயாகும். சிறப்பாக, அந்நாகரிகம் பிறந்த இடங்கள் காவிரி, தாமிரவருணி, பெரியாறு, அமராவதி ஆகிய ஆற்றங்கரைகளே ஆகும். அவற்றுடன் கிருஷ்ணை, கோதாவரி, நருமதை ஆற்றோரங்களையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.[20]

'.......நாம் இங்குக் குறிப்பிட வேண்டுவது தென்னிந்தியா தனக்குத் தேவையான பொழுது அயலகப் பண்பாடுகளையும் ஏற்றுக்கொண்டது.[21]

'.......சீன நாட்டுக்கு மிகு பழங்காலத்திலேயே இந்தியாவிலிருந்து சென்றவர்களுள், கி. பி. ஆறும் நூற்றாண்டில் காஞ்சிபுரத்து இளவரசர் ஒருவர், போதிதருமர் என்று திருப்பெயர் சூடிச் சீன நாட்டுக்குச் சென்ற சீனர்களால் 'ஜ-ன்' என்று வழங்கும் தியான நெறியைப் பரப்பினர்.[22]

".......உலகப் பண்பாட்டுக்குத் திராவிடம் வழங்கிய தனிச் சிறப்பு வாய்ந்த கொடை திராவிட மொழியே ஆகும். ஒரு சில விதி விலக்குகள் நீங்கலாக உலகில் உள்ள ஒட்டியல் மொழிகள் அனைத்தும் பழந்தமிழையே தலைமை வாய்ந்த தாயூற்றாகக் கருதுகின்றன. அதனால், திராவிடத்தின் தொண்டு பேச்சற்றவர்களுக்குப் பேச்சாற்றல் வழங்கிய பெருந்தொண்டு என்று கூறலாமல்லவா?"[23]

20. Origin and Spread of the Tamils-V. R. R. Dikshitar pp. 27
21. ,, ,, pp. 34-35
22. ,, ,, pp. 37
23. Origin and spread of the Tamils. V. R. R. Dikshitar-pp. 39

'......இதுகாறும் கூறியவை என்னதான் மேற்போக்கான ஆராய்ச்சியாயினும், அதுவேயுங்கூடத் தென்னிந்தியப் பண்பாட்டின் அடிப்படை ஒருமையை வலியுறுத்தும் வல்லமை மிக்க சான்றாகும். காலந்தோறும் விரிந்து பரந்து வந்துள்ள அதன் வரலாறு இடையீடின்றி உள்ளது. அயலகப் பண்பாடுகளில் சிறந்தன அனைத்தையும் அது தன் வயமாக்கிக்கொண்ட போதிலும், தன் தனித்தன்மை நிறைந்த உயிராற்றலை இழக்காமலே இன்னும் இருக்கிறது பழங்கால, நடுக்கால, இக்கால உலகில் அதன் இடம் தனிச் சிறப்பும் கவர்ச்சியும் வாய்ந்தது. பழைய உலகத்தைத் தன் கலைகளாலும் தொழில்களாலும் சமயத்தாலும் மொழியாலும் அது நாகரிக ஒளி பெறச் செய்தது. பண்பாடாம் கைவிளக்கின் சுடரொளியை அது எங்கணும் பரப்பியது. மத்திய காலத்தில் படையெடுப்புகளையும் செய்தது. இன்றுங்கூடத் தமிழன் தொழிலாளியாகவோ, அலுவலாளனாகவோ உலகின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றான்; வையகத்திற்குத் தன்னால் இயன்ற நன்மைகளை எல்லாம் காணிக்கையாக்குகின்றான். நல்வினைப்பயனாக இன்றும் நம்மிடையே வாழும் இந்தப் பழம்பண்பாடு மேலும் வலிமை பெறுவதாக.'[24]

---

24. Origin and Spread of the Tamils—V. R. R. Dikshitar, pp. 52-53.

இப்பொன்னுரைகளே வரலாற்றுப் பேராசிரியர் தீட்சிதரின் முற்குறித்த ஆராய்ச்சிச் சொற்பொழிவின் முடிவாகவும் அமைந்துள்ளன.

# 4

# கட்டுரைக் கலை

## 1

இலக்கியக் கலையின் உயிர் கவிதைக் கலை என்றால், இலக்கியக் கலையின் உள்ளம் கட்டுரைக் கலை எனலாம். கட்டுரைக் கலையாகிய உள்ளம் உயிரொளி பெறும் போது கவிதைக் கலை தோன்றும். 'கட்டுரைக் கலை'யாகிய மயில் தனது கற்பனைச் சிறகுகளை விரித்தாடும் காட்சியே கவிதைக் கலை என்றும் அழகுணர்ச்சி துளும்பக் கூறலாம். நீலவானத்தை அணி செய்யும் ஞாயிறும் திங்களும் போல இலக்கிய வானத்தை எழில் செய்யும் இருபெருஞ்சுடர்கள் கட்டுரையும் கவிதையும் என்றும் கருதிக் களிக்கலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கட்டுரைக் கலை தமிழ் மொழியில் தழைத்து வளர்ந்த திறத்தினை ஆராய்வதே இக்கட்டுரையின் தலையாய நோக்கம். இவ்வாராய்ச்சியில் ஈடுபடுதற்குரிய தோற்றுவா

---

*சென்னைப் பல்கலைக்கழகக் கிழக்கு நாட்டுக்கலை ஆராய்ச்சி இதழில் (Vol. No: XVII—1960—61) வெளியிடப்பெற்றது.

யாகக் 'கட்டுரை' என்ற சொல்லின் பழமையையும் பொருண்மையையும் முன்னர்க் காண்போம்:

'கட்டுரை' என்ற ஒரு சொல் நீர்மைத்தாய சொற்றொடரில் கட்டு+உரை என்ற இருசொற்கள் அடங்கியுள்ளன என்பது தெளிவு. 'உரை' என்ற சொல் அடையடுத்தே 'கட்டுரை' ஆகிறது. இவ்விரு சொற்களும் வழங்கும் பொருள்களைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி பின் வருமாறு சுட்டுகிறது:

* * *

## (அ) உரை:[1]

1. Speaking, utterance; உரைக்கை. உரை மேற்கொண்டு (திவ். இயற். 1: 25) 2. Word, expression, saying; சொல் (திவா) 3. Explanation, interpretation, commentary, exposition, gloss; வியாக்கியானம், உரையாமோ நூலிற்கு நன்கு (நாலடி, 319), 4. Sound of a letter; எழுத்தொலி (பிங்.) 5. Fame, reputation; புகழ். உரைசால் பத்தினிக்கு (சிலப்பதி. 56), 6. Sacred writings, holy writ; ஆகமப் பிரமாணம் (சி. சி. அளவை, 1,) 7. Roar, loud noise; முழக்கம். குன்றங் குமுறிய வுரை (பரிபா. 8: 35), 8. Mantra recited aloud; பிறருக்குக் கேட்கும்படி செபிக்கும் வாசக செபம் (சைவச. பொது. 151)

* * *

1. Tamil Lexicon—Vol. I—Part I—p. 451

**(ஆ) கட்டுரை :**[2]

1. Avowal, solemn declaration; உறுதிச் சொல். கட்டுரை விரித்தும் கற்றவை பகர்ந்தும் (மணி, 23: 5), 2 Pithy, sententious expression; பொருள் பொதிந்த சொல். (சிலப். பதி. 54, உரை), 3. Proverb; பழமொழி உற்றலாற் கயவர் தேறு ரென்னுங் கட்டுரை (தேவா. 523,8) 4. Figurative language, magnifying or depreciating; புனைந்துரை, பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி (கலித். 14), 5. Falsehood, fabrication; பொய். மிண்டர் கட்டிய கட்டுரை (தேவா. 1033: 10) 6. Essay, literary composition; வியாசம்.

* * *

போகராதி தரும் இப்பொருள்களால் 'உரை, கட்டுரை' என்னும் இரு சொற்களும் எழுத்து, சொல் இரண்டையுமே தொடக்கம் தொட்டே குறித் தமை புலனாகும். ஆயினும், 'கட்டுரை' என்ற சொல் எழுதப்படும் எழுத்தினும் சொல்லப்படும் சொல்லை யே மிகுதியாகச் சுட்டியது. இவ்வுண்மை பின்வரும் சான்றுகளால் இனிது புலனாகும்.

**I. தொல்காப்பியம் :**[3]

(1) கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து
முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்,
மொழியசையாகியும் வழியசை புணர்ந்துஞ்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

2. ஷை—Vol. II—Part—I, p. 654

3. தொல்காப்பியம், செய்யுள்—122 (தொல்—மூலம், கழகப் பதிப்பு)

(2) அவைதாம்,
நூலி னுரை, உரையி னுரை,
நொடியொடு புணர்ந்த பிசியி னுரை.[4]

(3) உரைவகை நடையே நான்கென மொழிப.[5]

(4) தொன்மை தானே
உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றே.[6]

(5) சூத்திரத் துட்பொருள் அன்றியும், யாப்புற
இன்றி யமையாது இயைபவை யெல்லாம்
ஒன்ற உரைப்பது உரைஎனப் படுமே.[7]

## II. திருக்குறள் :

(6) நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை[8]

## III. பத்துப்பாட்டு :

(7) சேரிதொறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ[9]

## IV. எட்டுத்தொகை :

(8) பலபல கட்டுரை பண்டையின் பாராட்டி[10]

## V. சிலப்பதிகாரம் :

(9) கோட்டமில் கட்டுரை கேட்டனன் யானே[11]

---

4. ,, ,, 163
5. ,, ,, 171

6. தொல்—செய்—235. 7. தொல்—மரபு—104. 8. திருக்குறள்—193. 9. மதுரைக்காஞ்சி—615—6. 10. கலித்தொகை—14 : 7

11. சிலப்பதிகாரம்—பதிகம்—அடி—54

(10) கட்டுரை காதையும்............[13]

(11) உலவாக் கட்டுரை பலபா ராட்டி [14]

(13) காவுந்தி யையையோர் கட்டுரை சொல்லும்.

(14) காவியங் கண்ணார் கட்டுரை எட்டுக்கு [16]

(15) கட்டுரை யாட்டியேன்.................[17]

(16) பட்டனி ராதலிற் கட்டுரை கேணீ.[18]

## VI. மணிமேகலை:

(17) கட்டுரை வகையும்..............[19]

(18) பழைமைக் கட்டுரை பலபா ராட்டவும் [20]

(19) கட்டுரை விரித்திங் கற்றவை பகர்ந்தும் [21]

(20) பான்மைக் கட்டுரை பலர்க்குரை யென்றே [22]

(21) தெய்வக் கட்டுரை தெளிந்ததை யீரு [23]

(22) .................முட்டைமுந் திற்றோ
பனைமுந் திற்றோ வெனக்கட் டுரைசெய் [24]

12. சிலப். மனையறம்-அடி—82
13. ,, ,, -அடி—37
14. ,, ,, -அடி—81
15. ,, காடுகாண்—அடி—151
16. ,, ஊர்காண்—அடி—138
17. ,, கட்டுரை காதை—அடி—23
18. சிலப்பதிகாரம்—கட்டுரை காதை—அடி : 170
19. மணிமேகலை—2 : 26
20. ,, 20 : 37
21. ,, 23 : 5
22. ,, 23 : 47
23. ,, 23 : 89
24. ,, 30 : 243-5

இது வரை 'உரை, கட்டுரை' என்னும் சொற்கள் பழந்தமிழ்ச் சான்றோர்கள் பாடல்களுள் பயின்று வரும் பான்மையைக் கண்டோம். இவ்வாட்சிகள் சிலவற்றிற்கு உரையாசிரியர்கள் வரைந்துள்ள உரைப் பகுதிகள் சிலவற்றை இனி நினைவு கூர்வோம். அவை வருமாறு :

## I. அடியார்க்கு நல்லார் உரை :

(1) கட்டுரை — பொருள் பொதிந்த சொல்; உறுதியுடைய சொல்லுமாம்.[25]

## II. பரிமேலழகர் உரை :

(2) பாரித்துரைக்கும் உரை—விரித்துரைக்கும் உரை [26]

## III. நச்சினார்க்கினியர் உரை :

(3) உரையும்—புனைந்துரைகளும் [27]

இன்று தமிழில் 'கட்டுரை' என்னும் சொல் குறிக்கும் பொருளை ஆங்கில மொழியில் 'Essay' என்ற சொல் குறிக்கும். அவ்வாங்கிலச் சொல்லுக்கு முதன்முதல் அகராதிப் பொருள் வரைந்த டாக்டர் ஜான்சன் 'A lose sally of mind' என்று

25. (1) சிலப்பதிகாரம்-அடியார்க்கு நல்லார் உரை, பதிகம்-அடி-53,4, (2) ஷை 2 : 37, (3) ஷை 2 : 81 (4) ஷை 11 ; 151, (5) ஷை 14 : 138, அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும், (6) ஷை 23 : 23, (6) ஷை 23 : 23 அரும்பதவுரை.
26. 193-ஆம் குறளுரை
27. மதுரைக் காஞ்சி, 616-ஆம் அடி உரை

குறித்துள்ளார்.[28] அடியார்க்கு நல்லார் 'கட்டுரை'க் குக் கண்ட பொருளுக்கும் அறிஞர் ஜான்சன் 'Essay'க்குக் கண்ட பொருளுக்கும் எத்துணை வேறுபாடுள்ளது!

## 2

இவ்வாறு 'உரை'யும் பெரும்பாலும் வாயால் சொல்லும் சொல்லிற்கே பயன்பட்டிருந்த நிலை மாறி, 'வியாசம்' என்ற வடசொல்லாலும், 'Essay' என்ற ஆங்கிலச் சொல்லாலும் கருதப்படும் பொருளை உணர்த்தும் தன்மையைப் பிற்காலத்தே பெற்றிருக்க வேண்டும். அதன்பின் தமிழிலக்கியத் தில் கட்டுரைக்கலை இன்று நாம் போற்றும் வடிவத்தில் உருப்பெற்றது ஐரோப்பியப் பாதிரி மார்களின் தமிழக வருகைக்குப் பின்பே. தமிழ் உரைநடை அறப்பழமை வாய்ந்தது தான். கிரேக்க மொழியைப் போன்றே தமிழ் மொழியும் பழமை யாகவே உரைநடையைப் பெற்றிருக்க வேண்டும் என்னும் உண்மையைத் 'தமிழ் உரைநடை' என்னும் நூலில் பேராசிரியர் உயர்திரு. அ.மு.ப. அவர்கள் அழகுற விளக்கியுள்ளார்கள்.[29] ஆயினும், முற்றிலும் உரைநடையால் இயன்ற தமிழ் நூல்கள்—இன்று நாம் கருதுவது போன்ற உரைநடை நூல்கள்—பழங்காலத்தில் இருந்தனவாகத் தெரியவில்லை. உரை நடையிட்ட பாட்டுகளும் இலக்கிய இலக்

28. An introduction to the study of literature (1946) p. 331.

29. தமிழ் உரை நடை, பக்.-39 - 42

கணப் பாக்கட்கு எழுந்த உரை நூல்களுமே பழந்தமிழ்ப் பெட்டகத்தில் இன்று நாம் பார்ப்பன.

முற்காலத் தமிழ் உரைநடை என்று எண்ணும் போது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் செய்த இளங்கோ அடிகளையும் இறையனார் அகப் பொருளுக்கு உரைகண்ட நக்கீரரையும் நன்றியுடன் நினைக்க வேண்டியுள்ளது. பழந்தமிழ் உரை நடையை அதன் தனிச் சிறப்பு வாய்ந்த வடிவத்தில் காண இயல்வது சிலப்பதிகாரக் காவியத்திலேயே ஆகும். ஆனால், சங்க காலத்தில் ஒலி வடிவம் பெற்று ஏறத்தாழ எட்டு நூற்றாண்டுகள் எழுதா மறையாய்ப் பழந்தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்றவர்களால் போற்றப்பெற்றுப் பின்னர் வரி வடிவம் கண்ட தமிழ் உரைநடை, இறையனார் அகப்பொருளுரை. வரி வடிவம் பெற்ற நிலையில் சிலப்பதிகார உரை நடைக்குப் பிற்பட்டது ஆயினும், இறையனார் அகப் பொருள் உரை நடை பல்லாற்றானும் தனிச் சிறப்பு வாய்ந்தது ஆகும். அதனாலேயே அதனை 'உரை நடையின் ஊற்றிடம்' என்றும் ஆராய்ச்சி அறிஞர் போற்றுவர்.[30] 'கட்டுரைக் கலை' பற்றிச் சிறப்பாக ஆராயும் நாம் எண்ணி மகிழ்தற்குரியது இக்கலைக்குரிய கரு இறையனார் அகப்பொருள் உரையில் அமைந்திருத்தலே ஆகும். இறையனார் சூத்திரங்கட்கு நக்கீரர் வகுத்துள்ள உரை பலவும் தனித்தனி கட்டுரைகளாகப் போற்றத்தக்க வடிவும் சுவையும் பெற்றுள்ளன. 'தமிழ் உரை

30. மாணவர் மன்றம் வெள்ளி விழா மலர் (1957) பக்.-17-21

நடை' நூலின் ஆசிரியர், இறையனார் யாத்த இரண்டடிச் சூத்திரம் ஒன்றிற்கு நக்கீரர் கண்ட உரை அறுபது பக்கங்கட்கு அமைந்துள்ள பான்மையினை எண்ணி வியக்கிறார்.[31] 'உரை நடையின் ஊற்றிடம்' பற்றிக் கட்டுரை வரைந்த பேராசிரியர் டாக்டர். மொ. அ. துரை அரங்கனார் அவர்கள் இறையனார் அகப்பொருள் உரை இன்பம் பற்றிக் கலையுணர்வோடு கூறி நம்மை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துகிறார். அவர்தம் வாசகம் வருமாறு:[32]

"இவர் உரையே ஓர் அழகிய தமிழ்ச்சோலை; பூமரங்களும் பழமரங்களும் நிறைந்து மணமும் சுவையும் பயப்பதோர் இன்பச் சோலை; தண்ணிழல் தந்து, நண்ணுவார்க்கெல்லாம் வெயர்வை போக்கி அயர்வைத் தீர்க்கும் அருட்சோலை; பூந்தடம் நிறைந்து மாந்துவார்க்கெல்லாம் இன்சுவை மிகத்தரும் இணையிலாச் சோலை. உரைநடை இலக்கியம், இவ்வாறு இன்பச் சோலையாய் இலங்கக் கூடும் என நக்கீரர் காட்டுவதை அவர் உரை நடையில் புகுந்து பார்த்துத் தெளிவது தமிழ் மாணவர் கடன். எனவே, இன்றைய உரைநடை இலக்கியங்கட்கெல்லாம், நக்கீரர் உரை நடையே ஊற்றிடம் எனலாம் அன்றோ!"

எனவே, தமிழ் உரை நடைக்குத் தந்தையார் இளங்கோ அடிகள் எனினும், தமிழ் உரைநடையில் கட்டுரைக் கலைக்குத் தந்தையார் நக்கீரர் பெருமானார் என்று போற்றல் பொருத்தமே. இவ்வாறு

31. தமிழ் உரை நடை (1959)-பக்-99
32. மாணவர் மன்றம் வெள்ளி விழா மலர்-பக்.-21

நாவீறு படைத்த நக்கீரர் பெருமானால் வித்திடப் பெற்ற கட்டுரைக்கலை, இளம்பூரண அடிகள் தொடங்கிச் சிவஞான முனிவர் ஈறாகச் சான்றோர் பலர் போற்ற வளர்ந்தது. உரையாசிரியர் பெருமக்கள் பனை ஓலை வாயிலாகவே தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தித் தமிழ்ப்பணி புரியவேண்டியிருந்தமையால், அச்சுப் பொறி வருவதற்கு முன் தமிழ் உரை நடை பரி போலப் பாய்ந்து ஓடாது ஆமை போலவே நகர்ந்தது. எனினும் உரையாசிரியர்பலர் இலக்கிய இலக்கண நுட்பங்கள் குறித்து ஆங்காங்கு எழுதியுள்ள ஆய்வுரைகள் அழகிய கட்டுரைகளாக உருக்கொள்ளுதற்குரிய உரம் வாய்ந்தவை. அவ்வாறே சமய சாத்திர அறிஞர்கள் வரைந்த வியாக்கியானங்களும் 'கட்டுரைக் கலை' வளர ஒருவாறு துணை புரிந்தன. இவ்வுண்மைகளையெல்லாம் ஆராய்ச்சி வல்லுனர் எழுத்துகளில் விரிவாகக் காணலாம்.[33] ஆயினும், 'தமிழ்க் கட்டுரை' என்ற தனித் தலைப்பில் அப்பொருள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை இரத்தினச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளப் பேராசிரியர் உயர்திரு. அ. ச ஞானசம்பந்தம் அவர்கள் கலைக்களஞ்சியக் கட்டுரை பெரிதும் பயன்படும்.[34]

---

33. (1) History of the Tamil Prose Literature — V. S. C. Pillai.
    (2) தமிழ் உரை நடை—அ. மு. பரமசிவானந்தம்
    (3) வளரும் தமிழ்—சோம. லெ.

34. கலைக் களஞ்சியம்—தொகுதி—3, பக். 42-3

இந்நிலைகளை எல்லாம் கடந்து தமிழ் மொழியில் கட்டுரைக் கலை தனி வடிவும் தனிச் சிறப்பும் பெறத் தொடங்கியது ஐரோப்பியப் பாதிரிமார்களின் தமிழக வருகைக்குப் பின்பே. அக்காலம் பற்றி ஆராய்ச்சி அறிஞர் உயர்திரு. மயிலை-சீனி-வேங்கடசாமி அவர்கள் 'கிறிஸ்தவமும் தமிழும்' என்ற தமது நூலில் தெளிவுபெறக் கூறியுள்ள பகுதி வருமாறு:

"தமிழில் தனி வசன நூல் ஐரோப்பியரால் முதல் முதல் உண்டாக்கப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. எப்போது, யாரால், என்ன வசன நூல் முதல் முதல் உண்டாக்கப்பட்டது என்பதை இங்கு ஆராய்வோம்: பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், தமிழ் நாட்டில் வந்து வாழ்ந்திருந்த இத்தாலித் தேசத்தவரான பெஸ்கி என்னும் வீரமாமுனிவர்தாம் தமிழில் முதல் முதல் வசன நூல் இயற்றினவர் என்பது பெரும்பான்மையோர் கருத்து. பெரும்பான்மையோர் கருத்து என்றாலும், இது தவறான முடிபாகும். வீரமாமுனிவருக்கு முன்னரே, பதினேழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வந்து வாழ்ந்திருந்த இத்தாலித் தேசத்தவரான இராபர்ட்டு நொபிலி என்னும் தத்துவ போதக சுவாமியைப் பற்றி அனேகருக்குத் தெரியாது. வீரமாமுனிவருக்கு முன்னரே இவர் தமிழ் வசன நூல்கள் இயற்றியிருக்கிறார். என்றாலும், இவரைத் 'தமிழ் வசன நூலின் தந்தை' என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், இவருக்கும் முன்னரே பதினாறாம் நூற்றாண்டில் தமிழ் வசன நூல்கள் உண்டாயிருந்தன

என்பதற்குச் சான்றுகள் உள்ளன. கி. பி. க௫எஎ-ஆம் ஆண்டில்தான் தமிழில் முதல் முதல் வசன நூல் உண்டானதாகத் தெரிகிறது. இந்த நூலுக்கு 'கிறிஸ்தவ வேதோபதேசம்' (Flos Sanctorum) என்பது பெயர். ஏசுவின் சபைப் பாதிரிமாரால் எழுதி அச்சிடப்பட்ட இந்த முதல் தமிழ் வசன நூல் இப்போது இந்தியாவில் இல்லை என்பது தெரிகிறது. ஒரு வேளை ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள புத்தக சாலைகளிற் கிடைக்கக்கூடும். இந்த நூலை யார் இயற்றினார் என்பது தெரியவில்லை. சவேரியார் என்னும் செயின்ட் ஸேவியர் எழுதினார் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது தவறு. ஏனென்றால், சவேரியாருக்குத் தமிழ் எழுதப் படிக்கத்தெரியாது. ஆகையால், இந்த முதல் தமிழ் வசன நூலை அவர் இயற்றியிருக்க முடியாது. இந்த நூல் அச்சிட்ட பிறகு, க௫எ௩ல் 'கிறிஸ்தவ வணக்கம்' என்னும் நூல் அச்சிடப்பட்டது. இந்த வசன நூலை எழுதியவர் ஆன்றிக் (Anriquez) என்னும் ஏசுவின் சபையைச் சேர்ந்த பாதிரியார் என்று தெரிகிறதேயன்றி, அவரைப்பற்றிய வேறு வரலாறு ஒன்றும் தெரியவில்லை. இந்த நூலும் நமது தேசத்தில் இப்போது கிடைக்கவில்லை. பாரிஸ் நகரப் புத்தகசாலையில் இந்தப் புத்தகத்தின் பிரதியொன்று இருப்பதாக நிச்சயமாகத் தெரிகிறது. க௬-ஆம் நூற்றாண்டில், மேற்சொன்ன இரண்டு நூல்களைத் தவிர ஏசுவின் சபையைச் சேர்ந்த ஐரோப்பியப் பாதிரிமார் தமிழ் கற்பதற்காகச் சில நூல்கள் அச்சிடப்பட்டன

35. கிறிஸ்தவமும் தமிழும் (1936), பக். 22-4.

வாகத் தெரிகின்றன. ஆனால், அந்நூல்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. தமிழில் முதல் வசன நூல் உண்டானது கஙளஎ-ல் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

"கஙள-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, மேலே சொல்லியபடி களஎ-ஆம் நூற்றாண்டில், ராபர்ட் நொபிலி என்னும் தத்துவ போதக சுவாமி, சில வசன நூல்களை எழுதினார். இந்த நூற்றாண்டில் இவரைத் தவிர அருளானந்தர் என்னும் பெயருள்ள ஜான் -டி-பிரிட்டோ பாதிரியார் சில வசன நூல்களைத் தமிழில் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அருளானந்த சுவாமி எழுதிய நூல்கள் எமக்கு இது வரை கிடைக்கவில்லை.

"அதன் பிறகு கஅ-ஆம் நூற்றாண்டில் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் சில வசன நூல்களை இயற்றியிருக்கின்றார். இவர் காலத்திலே, தஞ்சைக் கடுத்த தரங்கம்பாடியில் வாழ்ந்திருந்த ஸீகன் பால்கு முதலான ஜெர்மனித் தேசத்துப் பாதிரிமார்களும் சில வசன நூல்களை இயற்றியிருக்கின்றனர். இதே நூற்றாண்டில்தான் திருவாவடுதுறையாதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ மாதவ சிவஞான சுவாமியும் சில வசன நூல்களை இயற்றினார்."

இவ்வாறு சங்ககாலத்தில் அருவியாய்ப் பிறந்து, சமயகாலத்தில் ஆறாய்ப் பெருகி, சமுதாய காலமாகிய கடந்த இரு நூற்றாண்டுகளில் பொதுவாகத் தமிழ் உரை நடையும், சிறப்பாகக் கட்டுரைக்கலையும் கடலாய்ப் பொங்கத் தொடங்கிய காலம் பத்

தொன்பதாவது நூற்றாண்டே ஆகும். இவ்வுண்மையையும் ஆசிரியர் திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் தமது 'கிறிஸ்தவமும் தமிழும்' என்னும் நூலில் ஐயத்திற்கிடமின்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் கருத்து வருமாறு.[36]

"தமிழ் வசன நூல் முதல் முதல் தோன்றியது கசு-ஆம் நூற்றாண்டில் என்றாலும், அது வேரூன்றி நிலைபெற்று வளரத் தொடங்கியது சென்ற கசு-ஆம் நூற்றாண்டிலேதான். கஎ, கஅ-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் வசன நூல்கள் அதிகமாக ஏற்படவில்லை. கருளஎ முதல் வசன நூல் உண்டானதற்குப்பிறகு, இருநூறு ஆண்டுகள் வரையிலும் தமிழ் வசனம் வளர்ச்சி பெறாமலே குன்றியிருந்தது. சென்ற கசு-ஆம் நூற்றாண்டிலேதான் தமிழ் வசன நூல்கள் ஏராளமாக வெளிப்படத் தொடங்கின."

ஆராய்ச்சி அறிஞர் மயிலை-சீனி-வேங்கடசாமி அவர்கள் கூறுமாறு வீரமாமுனிவரைத் 'தமிழ் உரை நடையின் தந்தை' என்று கூற இயலாது. ஆயினும், இன்று நமக்குக் கிடைக்கும் பாதிரிமார் படைப்புகளைக் கொண்டு பார்க்கும் போது வீரமாமுனிவர் இயற்றிய 'வேதியர் ஒழுக்கம்' கட்டுரைக் கலைக்குச் சிறந்த வழி காட்டியாய் அமைந்துள்ள திறம் புலனாகும். இருபது அதிகாரங்களையும், எட்டுச் சோதனைகளையும், நூற்றுத்தொண்ணூறு பக்கங்களையும் கொண்ட 'வேதியர் ஒழுக்க'த்தின் பாயிரம் வருமாறு:[37]

36. கிறிஸ்தவமும் தமிழும் (1936), பக். 24-5.
37. வேதியர் ஒழுக்கம் (1888), பக். 8-10.

"மேற்குல மனிதர்க்குரிய ஆறு தொழில்களில் வேதத்தைப் போதித்தல் ஒன்றாகையில் மேற்குலத் தோரை வேதியர் என்பார். ஆயினும் இப்பெயர் தொழிற்பெயரானபடியால் அந்தத் தொழிலைச் செய்பவர் யாவரும் எக்குலத்திற் பிறந்தாராயினும் வேதியரென்னப்படுவது நியாயமாமே. ஆகையால், வேதத்தைப்போதிக்குங்குருக்களும் இவர்களிடமாக வேத உணர்ச்சிகளைச் சொல்ல அனுப்பப்பட்ட உப தேசிகளும் வேதியர் என்னப்படுவார்கள். இது மெய்யாயினும் வேதியர் ஒழுக்கம் என்னும் இப்புத் தகத்தை நாம் எழுதத் துணிந்த போது வேதியர் என்னும் பெயராற் குருக்களைக் குறித்தோம் என்று நினைக்கவேண்டாம். காரணக் குருக்கள் யாவரும் பொன்மலை உச்சிமேல் விளங்கின செஞ்சுடரொப்ப நிற்க நாம் அவர்கள் பாதத்தை அண்டி அவர்க ளிடத்தில் ஒரு கதிர் இரந்து சிறுமீனாக நின்றோ மாகிற் பாக்கியந்தானே. அவர்கள் வழுவாதொழு கும் உத்தம முறையைக் கண்டு நாமுந் தூரமா யினும் பின் சென்று ஒழுக வருந்துவோமொழிய அவர்கள் பிடிக்கவேண்டிய ஒழுக்கத்தைக் காட்ட நினைப்போமோ? ஆகையால், இதிலே வேதியர் என்னும்போது விசேஷமாய் உபதேசிகளைக் குறித் தோம் என்று அறியக் கடவீர்கள். விசேஷமாய் என்றோம், அதேதென்னில், மனிதர் கரையேற விலக்க வேண்டிய தீவினை, செய்ய வேண்டிய நல் வினை, அறியவேண்டிய சத்தியங்கள் இவையெல்லாம் பிறர்க்கு உணர்த்துவது உபதேசிகளுக்கு மாத்திரந் தொழிலாமென்று நினைக்கத் தேவையில்லை. இந்

தத் தொழிலைச் செய்வது உபதேசிகளுக்கல்லாதே சில பெயர்களுக்குங் கடனாகி, எவர்க்கும் பெரும் பலனாமே. தாய் தகப்பன் தம் மக்களுக்கும், ஆண்டவர்கள் தங்கள் அடிமைகளுக்கும், மூப்பர் தம்மைச் சேர்ந்த இளையோருக்குந் தீவினை விலக்கி நன்னெறி காட்டி அவர்களை மேற்கதியிற் கரையேற்ற வருந்துவது கடன்றானே. இக்கடனில்லாதவர்கள் முதலாய்ப் பிறர் ஆத்துமங் கெடுவதைக் கண்டு இரங்கிப் பிறரையுங் கதியிற் சேர்க்கப் பிரயாசைப்பட்டால் இந்த அரிய தயையால் தங்களுக்கு உத்தம பலனைப் பெறுவதுமன்றி, விளைந்த பலனை ஒரு நாளும் போக்கடியாமல் வர்த்திப்பிக்கலாம் என்பதுஞ் சந்தேகமற்ற நிச்சயந்தானே. ஆதலால் இதிலே உபதேசிகளை விசேஷமாய்க் குறித்து இப்புத்தகத்தை எழுதினாலும் பொதுப்பட யாவருக்கும் நன்மையாக முடிக்கப் பிரயாசப்படுவோம். இதனால் இத்தொழில் இயல்பும் மாட்சியும் இன்னதென்று சொன்ன பின்னர் இத்தொழில் எவர்க்கும் பொதுத்தொழில் என்று காட்டுவோம்.

"மீளவுந் தான் கரை ஏறுவதன்றியே பிறரையுமேற்ற வருந்துவது உத்தம தேவதொழிலாயினும் இதிலே பிறர்க்கும் உதவியின்றித் தனக்குங் கேடாக யாதொருவன் பிழை செய்தால் எல்லா நிர்ப்பாக்கியங்களினும் நிர்ப்பாக்கியமாகும் என்றமையால் இத்தொழிற் செய்வதற்கு ஆயத்தமும் பிறர்க்கு உதவத் தன்னைக் காத்தலுந் தன்னைக் காப்பது வேண்டிப் பிறரை மறவாதிருத்தலும் இதற்கு அஞ்சினவர்க்கு உறுதியுஞ் சொல்லி இத்

தொழில் பலிக்கும்படிக்கு வழிகள் பலவற்றையும் இதனை நன்றாய் முடிக்கும் பற்பல முறைகளையுங் காட்டி இருபது அதிகாரங்களாக இப்பயனை வகுத்துத் தருவோம். நாம் இதைக் குறை வழுவின்றி முடிக்கவும், இதிலே நாம் நினைத்த பலனை எவருங் கைக்கொள்ளவும், மனிதரை இரட்சிக்கும் இத்தொழிலைச் செய்ய மனுக்குலத்து ஒரு மகனாக வந்த சேசுநாதர் உதவ மன்றாடி அவர் திருப்பாதத்தை நமது தலையணியாக ஏற்றி வணங்குகிறோம்.”

வீரமாமுனிவர்க்குப்பின் கட்டுரைக் கலைக்கு ஒளியூட்டிய பெரியார் இராமலிங்க அடிகளார் ஆவார். கல்லையும் கனிவிக்கும் அருட்பாக்களைப் பாடிய இராமலிங்க அடிகளார் படைத்துள்ள அரிய உரைப்பகுதிகளும் பல.[38] அவற்றுள் ‘ஜீவகாருண்ய ஒழுக்க’மும் ‘மனுமுறை கண்ட வாசக’மும் பெரும்புகழ் பெற்றவை. ஈண்டு இராமலிங்க அடிகளார் வளர்த்த கட்டுரைக்கலைக்கு ஒரு சான்று காண்போம்.[39]

**‘காயமே கோயில்:**

“கிழக்கு-முகம், மேற்கு-கால், வடக்கு—வலதுகை, தெற்கு—இடதுகை, கொடிமரம்-தொப்புள், கொடி மரத்தின் அளவு-உள்நாக்கு, பலிபீடம்-வயிற்றின் மேடு, நந்தி-ஆணவம் முதலிய மலங்கள் உள்ள பசு, சிவலிங்கமே மூலாதாரத்தின் உள்ளங்கம்.

38. திருவருட்பா—சென்னைச் சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடு (1942).

39. திருவருட்பா-சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடு(1942),வசனபாகம், பக். 109.

**“பூர்வ ஜென்மம் உத்தர ஜென்மம்.**

“பூர்வ ஜென்மம் என்பது - கர்ப்பகோள வாசம். உத்தர ஜென்மம் என்பது - ஜனன காலம்.

**“கடவுள் மனித தேகத்தில் காரியப்படுதல்:**

“கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனிததேகத்தில் காரியப்படுவது உத்தமமாக இருக்க, சிலா விக்கிரக பூத தாரு முதலியவைகளில் கடவுளை வெளிப்படுத்திக்கொள்வது மந்த ஞானம். அதில் கடவுள் தோன்றி, அனுக்கிரகிப்பதாகச் சொல்வது ஜாலம். காய்ந்த கட்டையினிடத்தில் அக்கினி அதி சீக்கிரம் பற்றுதல் போல், பக்குவர்களாகிய ஜீவர்களிடத்தில் கடவுள் அருள் வெளிப்பட்டால், சுத்தமாதி மூன்று தேகசித்தியும் அக்தருணமே வரும். பக்குவமில்லாதவர்க்கு அருள் செய்தாலும், வாழையினிடத்தில் அக்கினி செல்வது போலவாம். ஆதலால், கடவுள் அருள் வெளிப்படுவதற்கு முன் அபக்குவர்கள் தங்கள் செயற்கையாகிய ராகத்துவேஷாதி அசுத்தங்களைப் போக்கிக்கொள்வது உத்தமம்.”

இராமலிங்கரை அடுத்துத் தமிழ் உரை நடையில் கட்டுரைக் கலையைச் சிறப்புற வளர்த்த பெருமை ஆறுமுக நாவலர் தனியுரிமை. சிறப்பாக அவர் வரைந்தருளிய பாலபாடம் நான்காவது புத்தகம், அவர் வளர்த்த கட்டுரைக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வுண்மையைத் திருமணம் செல்வக் கேசவராய முதலியார் அவர்களின் வசனம் பற்றிய

கட்டுரையும் ஆணித்தரமாகச் சுட்டுகிறது.[40] அத்தகு புகழ் வாய்ந்த பாலபாடத்தில் அழுக்காறு பற்றிய பாடம் வருமாறு :[41]

## "அழுக்காறு

"அழுக்காறாவது பிறருடைய கல்வி செல்வ முதலியவற்றைக் கண்டு பொறாமையடைதல். பொறாமையுடையவன் தன்னுடைய துன்பத்துக்குத் தானே காரணனாகின்றான். அக்கினியினாலே பதர் எரிவது போலப் பொறாமையினாலே மனம் எரிகின்றது. ஆதலினாலே பொறாமையுடையவனுக்குக் கேடு விளைத்தற்கு வேறு பகைவர் வேண்டா. அப்பொறாமை ஒன்றே போதும்.

"பொறாமையுடையவனுடைய மனசிலே ஒருபோதும் இன்பமும் அமைவும் உண்டாகா. பொறாமையாகிய துர்க்குணம் மனிதனுக்கு இயல்பாகும். அதுதோன்றும்பொழுதே அறிவாகிய கருவியினால் அதைக் களைந்துவிடல் வேண்டும்; களைந்துவிட்டால் அவன் மனசிலே துன்பம் நீங்கி இன்பம் விளையும். பொறாமையுடையவனிடத்தே சீதேவி நீங்க, மூதேவி குடி புகுவள். பொறாமையானது தன்னையுடையவனுக்கு இம்மையிலே செல்வத்தையும் புகழையும் கெடுத்து, எல்லாப் பாவங்களையும் விளைவித்து, மறுமையிலே நரகத்திற் செலுத்திவிடும்."

40. தமிழ் வியாசங்கள் (1945), பக். 89-90
41. பால பாடம்—நான்காம் புத்தகம், பக். 27.

ஆறுமுக நாவலரை அடியொற்றிக் கட்டுரைக் கலையை வளர்த்த பெரியோராகக் கருதத்தக்கவர் சங்கத் தமிழ் வளர்த்த சாமிநாத ஐயரே. பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்கப் பெற்ற அப்பெரியார், எளிய இனிய தமிழ் நடையைக் கையாண்டு, கட்டுரைக்கலை தழைத்திடச் செய்தார். அவர் எழுதியளித்த 'நினைவு மஞ்சரி', 'நல்லுரைக் கோவை', 'புதியதும் பழையதும்', 'நான் கண்டதும் கேட்டதும்' முதலிய நூல்கள் சிறந்தகட்டுரைத் தொகுதிகளாகும். அப்பெரியாரின் கட்டுரை நடைக்குச் சான்றொன்று வருமாறு:[42]

"மருதபாண்டியர்

"சிவகங்கை ஸம்ஸ்தானத்திற்குத் தலைவராக ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முன்பு மருத சேர்வைகாரர் என்று ஒருவர் இருந்தார். அவருடைய பெருமையையும் நல்லியல்பையும் அறிந்த குடிகளும், வித்துவான்களும் அவரை மருத பாண்டியர் என்று வழங்கி வந்தனர்; மகாராஜாவென்றும் தங்களுக்குள்ளே பேசிக் கொள்வார்கள். அவர் பல வித்துவான்களை ஆதரித்துப் பல வகையான பரிசுகளை வழங்கினர். தமிழறிவுடையவராதலால், வந்த வித்துவான்களோடு சல்லாபம் செய்து சாதுர்யமாக அவர்களுக்கு ஏற்பப் பேசுதலும் அவர்கள் கூறுவனவற்றைக் கேட்டு மகிழ்ந்து உடனுடன் பரிசளிப்பதும் அவர்க்கு இயல்பு. அவர்மீது வித்துவான்கள் பாடிய பிரபந்தங்களும், சமயத்திற்கேற்ப இயற்றி

42. நான் கண்டதும் கேட்டதும், பக். 66-7.

யுள்ள பல தனிப்பாடல்களும் அங்கங்கே வழங்கி வருகின்றன. அவர் சிறந்த வீரர். அவர் ஆட்சி யின் எல்லையில் திருடர்கள் பயம் முதலியன இல்லை யென்று சொல்வார்கள். அவருடைய ஆணைக்கு அஞ்சி யாவரும் நடந்து வந்தனர்.

"அவர் தெய்வபக்தி உடையவர். தம் ஆட்சிக்கு உட்பட்ட ஆலயங்களில் நித்திய நைமித்திகங்கள் விதிப்படி காலத்தில் நடந்து வரும் வண்ணம் வேண் டியவற்றைச் செய்து வந்தார். பல ஸ்தலங்களில் அவர் திருப்பணிகள் செய்துள்ளார். ஆலயங்களுக் குத் தேவதானமாக நிலங்களை அளித்திருக்கின்றார். முருகக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள முக்கிய ஸ்தலமாகிய குன்றக்குடியில் திருவீதிக்குத் தென்பாலுள்ள ஒரு தீர்த்தத்தைச் செப்பஞ்செய்து படித்துறைகள் கட்டுவித்தனர். அக்குளம் மருதாபுரி என்று அவர் பெயராலேயே வழங்கும். அதனைச் சூழ அவர் வைத்த தென்னமரங்களிற்சில இன்றும் உள்ளன. குன்றக்குடி மலைமேற் சில மண்டபங் களை அவர் கட்டியிருக்கின்றனர். அவை கட்டப் பட்ட பொழுது மிக உயர்ந்த சாரங்கள் அமைக்கப் பெற்றன. அவற்றில், மேலே உள்ளது மருது பாண்டியரால் அமைக்கப்பட்ட சாரம். கீழேயுள்ள சாரம் வெங்களப்ப நாயக்கர் என்னும் ஒரு ஜமீன் தாரால் அதற்குமுன் கட்டப்பட்டது. அவற்றைக் குறித்து 'மேலைச் சாளரம் எங்களப்பன், கீழைச் சாளரம் வெங்களப்பன்' என்னும் பழமொழி ஒன்று அந்தப் பக்கத்தில் வழங்கி வருகிறது. அக் காலத்தில் ஜனங்கள் மருதபாண்டியரை 'எங்களப்

பன்' என்று சொல்லி வந்தனரென்பதனாலேயே அவருடைய உத்தம குணங்களும் குடிகளுக்கு அவர் பால் இருந்த அன்பும் புலப்படும்.'

பெரும்புலவர் சாமிநாத ஐயரை அடுத்துக் கட்டுரைக்கலையை ஆங்கில இலக்கியப் புலமையோடு புது மெருகு பெறச்செய்த பெருந்தகை மறைமலை அடிகளாவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் செம்மையாகக் கற்றுப் புலவர் ஏறாய்த் திகழ்ந்த மறைமலை அடிகளார், தமிழ் மொழியில் தமிழ் மக்களின் நல்வாழ்வு கருதி வேற்றுமொழிச் சொற்களைக் கலவாத[43] விழுமிய தமிழ்

43. ஒருமொழியில் பிறமொழிச் சொற்களைத் தவிர்க்கவே முடியாத நெருக்கடியிலன்றி பிறபொழுதுகளில் கலத்தல் எவ்வளவு கொடியது என்ற உண்மைக்கு எத்தனையோ சான்றுகளை எடுத்துக் காட்டலாம். நம் தமிழ் நாட்டு ஊர்ப் பெயர்களும்—ஏன்—தெய்வப் பெயர்களுமே பல வரம்பற்ற வடமொழிச் செல்வாக்கால் செத்தே போன செய்தி தன்மான முடைய எந்தத் தமிழன் இதயத்தைத்தான் குத்திக் குடையாது? அந்தோ! பழமலை விருத்தாசலம் ஆயிற்றே! வழித்துணைநாதர் மார்க்க சகாயர் ஆயினரே! பிறமொழிக் கலப்பால் விளையுங் கேடுபற்றி நம் நாட்டு 'மேதை'கள் சிலரும் அறிவுறம் பெற மலாய்-ஆங்கில அகராதி ஆசிரியரின் பின்வரும் பொன் மொழி பயன்படுதல் உறுதி. ஆங்கில மூலத்தில் உள்ள அதன் தமிழாக்கம் வருமாறு :

"இந்தோனீசிய நேசியம் பற்றிய ஒரு விந்தைக் குறிப்பு அது வளமான சொற்றொகுதியோடு திறனற்ற மொழி பெயர்ப்பையும் அன்றாடப் பேச்சு வழக்கு முற்றிலும் அறியா நகைக்கத்தக்க போலி ஐரோப்பியச் சொற்றொடர் அமைப்பையும் ஏற்றுக்கொண்டமையே. இந்த அயலகக் கடன் வழி வழிப்பட்ட மலாய் மொழியின் அளவையியலார்ந்த தெளிவை அறவே பாழாக்கிவிட்டது.

—Sir Richard Winstedt: An unabridged Malay-English Dictionary, Preface.

நடையைக் கையாண்டார்; அதன் பயனாகத் 'தனித் தமிழ்' இயக்கத்தின் தந்தையாருமானார். 'அறிவுரைக்கொத்து', 'சிறுவர்க்கான செந்தமிழ்' முதலியன அவர் படைத்த சிறந்த கட்டுரைச் செல்வங்களாம். மேலும், தமிழ் மொழியில் 'கட்டுரைக் கலை' சிறக்க ஆங்கிலக் கட்டுரைக் கலை பற்றிய அறிவும் பரவவேண்டும் என்று கருதிய அடிகளார் அடிசன் எழுதிய கட்டுரைகள் சிலவற்றைச் 'சிந்தனைக் கட்டுரைகள்' என்ற பெயரால் தமிழாக்கம் செய்து வெளியிட்டார். மொழிப் பற்றும் சமயப் பற்றும் நிரம்பப் படைத்த மறைமலை அடிகளாரின் கருத்து நலம் கனிந்த கவினுர் கட்டுரை நடைக்குத் தக்கதொரு சான்றை அடிகளார் ஆக்கிய 'முல்லைப் பாட்டு ஆராய்ச்சி' என்னும் இற்றைநாள் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகட்கு முன்னோடியாய் விளங்கும் எழுத்தோவியத்தினின்றும் காணலாம். அவ்வெழுத்தோவியத்திலேதான் எத்தனை எத்தனை எழில் ஓவியங்கள்! அப்பகுதி வருமாறு:

"இன்னும் எங்கெங்கு நம் அறிவைத் தம் வயப்படுத்துகின்ற பேரழகும் பேரொளியும் பெருந்தன்மையும் விளங்கித் தோன்றுகின்றனவோ, அங்கெல்லாம் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும். இதனை விளக்கிக் காட்டுமிடத்துப் பேரழகாற்சிறந்த ஓர் அரசி தான் மேற்போர்த்திருந்த நீலப்பட்டு ஆடையினைச் சிறிது சிறிதாக நீக்கிப், பின் அதனைச் சுருட்டிக் கீழே எறிந்துவிட்டுத் துயில் ஒழிந்து, ஒளி விளங்கு தன் தனிமுகம் காட்டி எழுந்ததையொப்ப, இருட்கூட்டஞ் சுருண்டு மடங்கி அலைகடலிற் சென்று

அடங்கவிடுமாறு இளைய ஞாயிறு உருக்கித் திரட்டிய பசும்பொற்றிரளை போலத் தளதளவெனக் கீழ்த் திசையில் தோன்றவும், அத்திசையின் பரப்பெல் லாம் பொன் உரைத்த கற்போற் பொலிந்து திகழ வும், பசுமை பொன்மை நீலம் சிவப்பு வெண்மை முதலான நிறவேறுபாடுள்ள பொன் வெள்ளிகள் உருகி ஓடுகின்ற நிலம்போல வான் இடமெல்லாம் பலவண்ணமாய் விரிந்து விளங்கவும், கரிய முகில்க ளெல்லாஞ் செவ்வரக்கு வழித்த அகன்ற திரைச் சீலைகள் போலவும், வெளிய முகில்களெல்லாம் பொற்பட்டுத் துகில் போலவும் ஆங்காங்குச் சொல் லுதற்கரிய பேரொளியோடு திகழவும், உலகமங்கை நகைத்தாற்போலப் புதுமையுற்றுத் தோன்றும் விடியற்கால அழகெல்லாம் பாட்டென்றே அறிதல் வேண்டும். ஆ! இங்ஙனந் தோன்றும் அவ்விடியற் கால அழகினைக் கண்டு வியந்த வண்ணமாய் மீன் வலையொடு கடற்கரையில் நிற்குஞ் செம்படவனைக் காட்டினுஞ் சிறந்த புலவன் யார்?

"அவ்விடியற்காலையிலே முல்லை நிலத்து மேய்ப் பர்கள் ஆன் கன்றுகளைத் தொழுவத்திலே தாம்பி னாற் கட்டிவைத்து, ஆன் நிரைகளை அடுத்துள்ள மலைச்சாரலிற் கொண்டுபோய்ப் பசிய புல் மேய விட்டுத் தாம்மர நிழலிற் சாய்ந்திருந்து கொண்டு, தமக்கெதிரே பச்சிலைப் போர்வை மேற்கொண்டு கரிய முகில்கள் நெற்றித் தழுவிக் கிடப்பப் பெருந் தன்மையொடு வான் அளாவித் தோன்றும் மலை யினை அண்ணாந்து பார்த்தவாறாய் அவர்கள் அச்ச மும் மகிழ்ச்சியும் அடையும்போது அங்கும் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும்.

"காதலினாற் கட்டுண்ட இளைஞரும் மகளிரும் நெகிழாத காதலன்பின் மிகுதியால் தோளோடு தோள் பிணையத் தழுவிக்கொண்டு, மலையடிவாரத்தில் உள்ள பூஞ்சோலைகளிற் களிப்பாய் உலவுந்தோறுந் தூங்கணங்குருவிகள் மரக்கிளைகளில் வியப்பான கூடு கட்டுதலையும்; ஆண் மயில்கள் தம் அழகிய தோகையினை விரித்துப் பெடைமயில் கண்டு களிப்ப ஒருபுறம் ஆடுதலையும்; மலையிலிருந்தொழுகும் அருவி நீர் கூழாங் கற் படையின்மேற் சிலுசிலுவென்று ஓடிவந்து அச்சோலையின் ஒரு பக்கத்துள்ள ஆழ்ந்த குட்டத்தில் நிரம்பித் துளும்ப, அதன்கண் உள்ள செந்தாமரை முகிழ்கள் அகன்ற இலைகளின்மேல் இதழ்களை விரித்து மிகச் சிவப்பாய் அலர்தலையும் விரும்பிக் கண்டு, நறுமணங் கமழும் பூக்களை மரங்களினின்றுந் தாவிப் பறித்துக் கரிய கூந்தலில் மாறிமாறி அணிந்துஞ், சிவக்கப் பழுத்த கொவ்வைக்கனி போன்ற தம் இதழ்கள் அழுந்த முத்தம் வைத்துக்கொண்டுந், தேன் ஒழுகினாலென இனிய நேயமொழிகள் பேசிக்கொண்டும் அவர்கள் செல்லுமிடத்து அங்கும் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும்."[43]

அந்தணராயினும் மறைமலையடிகளைப்போலவே தனித்தமிழ்ப் பற்றுக்கொண்ட மற்றொரு பெரியார் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் என்ற தமது பெயரையே தனித் தமிழ்ப் பெயராக மாற்றி அமைத்துக்கொண்ட பரிதிமாற் கலைஞர். தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வராகிய அச்செம்மல்

43. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை (1956) பக். உ-ரு.

யாத்துள்ள 'தமிழ் வியாசங்கள்,' 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' ஆகிய நூல்கள் கட்டுரைக் கலை வளர்ச்சியை ஆராயும் கண்ணோட்டத்தோடு இன்றும் படித்து இன்புறத்தக்கன.

மறைமலை அடிகளைத் தொடர்ந்து இதழ்கள் வாயிலாகவும் நூல்கள் வாயிலாகவும் கட்டுரைக் கலையை வளர்த்த தமிழ்ச் சான்றோர் திரு. திரு. வி. க. அவர்கள். 'தேச பக்தன்', 'நவ சக்தி' போன்ற இதழ்கள் வாயிலாகவும், 'முருகன் அல்லது அழகு' 'பெண்ணின் பெருமை', 'இந்தியாவும் விடுதலையும்' 'பைந்தமிழ்ச் சோலை', 'பரம்பொருள் அல்லது வாழும் வகை' முதலான நூல்கள் வாயிலாகவும் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் வளர்த்த கட்டுரைக்கலை நாட்டு மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது; வீட்டு மக்கள் எல்லாம் நாட்டு மக்களாய் வீறுகொண்டு எழச் செய்தது. இலக்கியம், அரசியல், பொருளாதாரம், சமயம், சீர்திருத்தம் முதலாய துறைகளில் எல்லாம் 'கட்டுரைக் கலை' வாயிலாகத் தொண்டாற்றிய தண்டமிழ் மேதை திரு. வி. க. அவர்கள் தமிழ் நடை தனிச்சிறப்பு வாய்ந்ததாய்த் திகழ்ந்தது. தமிழ் உரை நடை உலகில் 'திரு. வி. க. நடை' தனிப்புகழ் பெற்றது, தமிழின் அழகையும் ஆற்றலையும் தம் கட்டுரை நடையால் உலகம் போற்றச் செய்த பெருமை திரு. வி. க. அவர்களின் தனியுரிமை. அவர்தம் அழியாப் படைப்பாகிய 'பெண்ணின் பெருமை'யினின்று ஒரு பகுதி வருமாறு:[44]

44. பெண்ணின் பெருமை (1945), பக். 105.

"தன்னலமேலீட்டான் வெளி வரும் போலிச் சந்நியாசிகள் எழுதி வைத்துள்ள நூல்களை நம்பி உலகம் மோசம் போதலாகாது. இவர்கள் என்னென்னவோ எழுதி வைத்திருக்கிறார்கள்! இவர்களின் குணம் குற்றம் ஓராது, பெண்ணுடன் வாழும் புனிதர்கள் இவர்கட்குச் சோறிட வேண்டுமாம்! கூறையளித்தல் வேண்டுமாம். இப்'பெரியோர்கள்' நிஷ்டையில் திளைத்துக்கொண்டிருக்கும் வேளையில் இவர்கட்குச் சிற்றின்ப நினைவு தோன்றினுந் தோன்றுமாம்! தோன்றுமேல் அந்நினைவைக் கழித்துக்கொள்ளச் 'சுவாமிகள்' வரைவின் மகளிரில்லம் போந்து துயில் நீத்துப் பின்னை 'நிஷ்டை' கூடுவார்களாம்! இந்'நிஷ்டாபரணர்'பொருட்டு மன்னரும் மற்றவரும் காமச்சத்திரங் கட்டி நடத்துவது அறமாம்! அந்தோ! அந்தோ! உலகம் எப்படி ஏமாற்றப்பட்டது! ஏமாந்த உலகமே! இன்னுமா ஏமாறுவை? ஏமாந்தது போதும்! போதும்!

* * *

"தமது நலத்துக்கெனப் பெண்ணை வெறுக்கும் போலித் துறவோரால் பெண்ணை வேண்டுமென்றே வெறுத்துத் தள்ளாது உயிர்கள்மீது கொண்ட இரக்கத்தால் தொண்டுக்கென வெளி வரும் அறவோர்க்கும் இவ்வுலகில் இன்னல் விளைகிறது. இருவர்க்கும் புறத்தே வேற்றுமை காண்டல் மிக அரிதாயிருக்கிறது. தொண்டில் குறிக்கொண்டு தனித்து வாழும் அறவோர் திருவடி எனது முடியணி என்று ஈண்டு அறிக்கை செய்கிறேன். அத்தகைத் தொண்டர் இந்நாளில் மிக அரியர்; அரியர்."

தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் வாழ்ந்த நாளில் வாழ்ந்து, கட்டுரையால் மட்டுமன்றி, 'கனலும் தீயும் காற்றும்' கலந்த கவிதையாலும்நாட்டுப்பற்றை மூட்டும் தொண்டாற்றிய சான்றோர், பெருங்கவிஞர் பாரதியார். 'இந்தியா', 'சுதேசமித்திரன்' முதலான இதழ்களின் துணைகொண்டு கட்டுரைக் கலையை வளர்த்த கவிஞர் திலகம் அவர். பின்னாள்களில் சிவஞான முனிவரைப் போன்று கவிதை பாடுவதிலும் கட்டுரைகள் புனைவதிலும் தமது தனிப்பண்பு விளங்கச்செய்த பாரதியாரின் கட்டுரைத் தமிழுக்கு ஒரு சான்று வருமாறு:[45]

"தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது.

"உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான ஸங்கீத வித்துவான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக்கண்ணாடியிலே போய்ப் பார்.

* * *

"தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்

45. கட்டுரைகள் (1947)—பக். 292-5.

களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்.

"ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. 'ஜாதி யிரண்டொழிய வேறில்லை,' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

"பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர், மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

"வேதங்களை நம்பு, அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்துகொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்துகொள்ளாதே.

"தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பெரிய கதைகள் மிதமிஞ்சிவிட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகிகக் கொள்கைள், வைதிக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடங்கொடுத்துவிட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும், எப்போதும் நேர்மையிருக்க வேண்டும்; உண்மையிருக்கவேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்ற வரை தடுக்கவேண்டும். எல்லாப் பேறுகளைக்காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை

சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்துமாவின் கண்ணுடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

"தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை, எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. 'முந்திய சாஸ்திரந்தான் மெய்; பிந்திய சாஸ்திரம் பொய்' என்று தீர்மானம் செய்துகொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? 'தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்!' என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

* * *

"இன்பம் என்பது, இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸ வஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக."

* * *

மறைமலை அடிகளார் சில ஆங்கிலக் கட்டுரைகளைத் தமிழாக்கம் செய்தது போன்றே தாகூரின் அழகிய வங்கக் கட்டுரைகள் சிலவற்றையும் தமிழாக்கம் செய்த பாரதியார் திறன் இங்கு நினைவுகூர்தற்குரியது.

பாரதியாரை அடுத்துக் கட்டுரைக் கலையை வளர்த்துத் தமிழ் உலகின் வாழ்த்திற்கும் வணக்கத் திற்கும் உரியவர்களாகி இன்று வானுலகு புகுந்து விட்ட பெருமக்கள் பலர். அவருள் சிறந்த சிலரைப் பற்றியுங்கூட தனித்தனியாகக் கருதற்கு ஈண்டு இடமில்லையாதலின், அவர்தம் பெயர்ப்பட்டியலை மட்டுமேனும் நன்றியுடன் நினைவு கூர்வோமாக.

1. நாவலர் சோமசுந்தர பாரதியார்
2. ரா. இராகவையங்கார்
3. மு. இராகவையங்கார்
4. எல். உலகநாதப் பிள்ளை
5. கா. சுப்பிரமணியப் பிள்ளை
6. பண்டிதமணி கதிரேசச் செட்டியார்
7. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்
8. திருமணம்-செல்வக்கேசவராய முதலியார்
9. மணி-திருநாவுக்கரசு முதலியார்
10. கா. நமச்சிவாய முதலியார்
11. எஸ். வையாபுரிப் பிள்ளை
12. மகிழ்நன்
13. நீலாம்பிகை அம்மையார்
14. இராஜேஸ்வரி அம்மையார்
15. வ. ரா.
16. டி. கே. சி.
17. கல்கி

மேலுள்ள பட்டியல் முழுமையானதன்று. எனி னும், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வர லாற்றில் கட்டுரைக் கலையை வளர்த்தோருள் குறிக் கத்தக்கவர்கள் இவர்கள். இப்பெரியார்களுள் நாவலர்

பாரதியார் நடை சற்றுக் கடினமானது; பழைய உரை யாசிரியர்கள் நடையைத் தழுவியது; செறிவும் சிறப் பும் வாய்ந்தது; கற்றூர்க்குக் கழிபேருவகையளிப் பது. இவர்கள் எழுதிய 'தயரதன் குறையும் கைகேயி நிறையும்', 'திருவள்ளுவர்', 'சேரர் வஞ்சி', 'பழந்தமிழ் நாடு' என்னும் நூல்கள் 'கட்டுரைக் கலை' வளர்ச்சியில் கருதத்தக்க படைப்புகளாகும். திரு. ரா. இராகவையங் கார், திரு. மு. இராகவையங்கார், நாவலர்-நாட்டார், பண்டிதமணி, உலகநாதப் பிள்ளை, செல்வக் கேசவராய முதலியார், திருநாவுக் கரசு முதலியார், நமச்சிவாய முதலியார், கா. சு. பிள்ளை, வையா புரிப் பிள்ளை ஆகியோர் பழந்தமிழ் மரபுக்குக் கேடின்றி இலக்கியக் கட்டுரைகளையும் ஆராய்ச்சிக் கட்டுரை களையும் எழுதுவதில் புகழ் பெற்றவர்கள். மகிழ்நன் கட்டுரைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனிச் சிறப்புப் பெறத்தக்கன. தமது கூர்ந்த அறிவும் ஆழ்ந்த நகைச்சுவையும் புலப்படக் கட்டுரைகளை எழுதியவர் மகிழ்நன் அவர்கள். 'மகிழ்நன் கட்டுரைகள்', 'வடக்கும் தெற்கும்' முதலாய அவர் நூல்களைக் கற்பார் தமிழ் மொழியில் இற்றை நாளில் சிறந்து வளர்ந்து வரும் நகைச்சுவைக் கட்டுரைகட்கு அவரே முன் ஞேடி என்பதை அறிவர். மறைமலையடிகளாரின் திருமகளாராகிய திருவரங்கம் நீலாம்பிகை அம்மையார் அவர்கள் எழுதிய 'தனித்தமிழ்க் கட்டுரைகள்' அடிகளாரின் தனித்தமிழ் இயக்கத் தின் தலைமைப் பரிசாகும்.[46] திருவாட்டி ஈ. த.

46. இவ்வுண்மைபற்றிய வரலாற்று விளக்கத்திற்குப்-பார்க்க: மறைமலையடிகள் வரலாறு—மறை-திருநாவுக்கரசு (1959)—பக். 29, 299-325.

இராஜேஸ்வரி அம்மையாரின் இலக்கிய வளங் கொழிக்கும் விஞ்ஞானக் கட்டுரைகளோ அவ்வகையில் ஈடு இணையில்லாதவை. விஞ்ஞானத்துறையில் தமிழ் வளர இவ்வம்மையார் செய்த தொண்டு அழியாப்புகழ் வாய்ந்தது ஆகும்.

திரு. வ. ரா. அவர்கள் சிறப்பாக வாழ்க்கைச் சித்திரங்களை எழுதுவதில் தனிச்சிறப்புப் பெற்று விளங்கினர். திரு. டி. கே. சி. அவர்கள் இலக்கியச் சுவைக் கட்டுரைகளைத் தமக்கே உரிய 'பாவ'த்தோடும் 'பாணி'யோடும் எழுதுவதில் நிகரற்று விளங்கினர். இவ்விருவரும் பழைய இலக்கண விதிகள் பற்றிக் கவலைப்படாதவர்கள்; பேசுவது போலவே எழுத வேண்டும் என்ற கொள்கை படைத்தவர்கள். எனினும், புதிய சிந்தனைக்கு முதலிடம் தந்தமையால், இவர்கள் கட்டுரைகள் இலக்கிய அரங்கில் அழியா இடம்பெற்றன.

திரு. கல்கி அவர்கள் பழைமைக்கும் புதுமைக்கும் பாலமிட்டவர்கள்; தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களிடம் தாம் பெற்ற பயிற்சியை மறவாது பத்தியோடு தமிழ் வளர்த்த தகைமையாளர். அருவியின் வேகத்தோடு அறிவார்ந்த நகைச்சுவையையும் தம் கட்டுரைகளில் களிநடம் செய்ய வைத்த 'கல்கி' ஆசிரியரின் எழுதுகோல், தமிழர் எண்ணத்தில் தக்க இடம் பெற்றுவிட்டது.

இவ்வாறு தமிழ் மொழியிற் கட்டுரைக் கலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளரச் செய்த பெருமக்களுள் பலர் மறைந்துவிட்

டனர். அப்பெருமக்கள் வரிசையில் தோன்றிக் 'கட்டுரைக்கலை' மேலும் பல புதுமைகளையும் பெருமைகளையும் பெறத் தம் வாழ்வைப் பயன் படுத்தி வரும் நல்லறிஞர்—அத்துறையில் உழைத்து மறைந்தோரினும் பலராய் இன்று நம்மிடையே மண்டியிருப்பவர்—எத்தனையோ பேர். அவர்களைப் பற்றியெல்லாம் மின்னல் வேகத்தில் குறிப்பிடுதற்கும் இக்கட்டுரை இடந்தராது எனவே, நம்மிடையே வாழும் அந்த நல்லோர் கூட்டத்தின் தலைவராய்-ஒன்றுக்கு மேற்பட்ட உயர்ந்த காரணங்களால் தமிழ் மக்கள் இதயத்தில் கலை வளர்க்கும் சான்றோர்களுள் தந்நிகரற்ற தலைவராய்ப்-போற்றப்பெறும் பெரியாரை மட்டுமேனும் ஈண்டு நன்றியுடன் நினைவு கூர்தல் பொருத்தமுடையதாகும். ஆண்டாலும் அறிவாலும் பட்டுணர்வாலும் மூத்து முதிர்ந்த அப்பெரியார் பேராசிரியர் டாக்டர் சேதுப் பிள்ளை அவர்களே ஆவர்.[47] அவர்தம் தமிழ் வாழ்வையும் அருள் நிறைந்த தொண்டையும் ஆராயும்போது, சங்க இலக்கியம் பயின்றோர்க்குச் சிறுபாண் ஆற்றுப் படையுள் வரும்,

'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்'[48]

என்னும் அடிகள் நினைவுக்கு வருதல் இயற்கையே.

47. பேராசிரியர்—டாக்டர்—ரா. பி.சே.அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் எழுதப்பெற்றது.

48. சிறுபாணாற்றுப்படை, 113-5.

கடந்த இரு தலைமுறைகளாகத் தமிழிலக்கியம் வாழ்வும் வளமும் பெறத் தொண்டாற்றிய பேராசிரியர் அவர்கள் இதுகாறும் எழுதியுள்ள கட்டுரைகள் மூந்நூற்றுக்கு மேற்பட்டன. 'திருவள்ளுவர் நூல் நயம்', 'சிலப்பதிகார நூல் நயம்', 'கடற்கரையிலே', 'தமிழ் இன்பம்', 'தமிழ் விருந்து', 'தமிழ் வீரம்', 'அலையும் கலையும்', 'வேலின் வெற்றி', 'ஆற்றங்கரையிலே' என்னும் நூல்கள் இந்த நூற்றாண்டில் தமிழ் மொழி பெற்ற சிறந்த கட்டுரைச் செல்வங்களாகும். பேராசிரியர் அவர்கள் கட்டுரை நடை எளிமையும் இனிமையும் நிறைந்தது; கற்பார் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் உரனுடையது. அச்சிறப்பினைப் பேராசிரியர் கா. சு. பிள்ளை, அறிஞர் திரு. வி. க. போன்ற மறைந்த சான்றோர்கள் மனமாரப் போற்றியிருத்தலை முன்னவர்தம் 'தமிழ் இலக்கிய வரலாற்'றுள்ளும் பின்னவர்தம் 'வாழ்க்கைக் குறிப்புக'ளுள்ளும் காணலாம்.[49]

இதுகாறும் கட்டுரைக்கலையின் இறந்த காலம் பற்றியும் நிகழ்காலம் பற்றியும் கண்டோம். இனி அதன் எதிர்காலம் பற்றியும் சிறிது சிந்திப்போம். கடந்த கால் நூற்றாண்டாகத் தமிழ் மொழியில் கட்டுரைக்கலை வளர்ந்துவரும் நோக்கையும் போக்கையும் நுணுகி ஆராயுங்கால், பரந்துபட்டதோர் எதிர் காலம் அதற்குக் காத்திருக்கிறது என்பது இனிது புலனாகும். ஏறத்தாழ இருபத்தைந்துக்குக் குறையாத பொருள் பற்றி இன்று அது வளரத் தொடங்கியுள்ளது. அப்பொருள்களாவன:

49. (1) இலக்கிய வரலாறு, பக். ருச0,
(2) திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள், பக். 212.

1. அரசியல்
2. இலக்கணம்
3. இலக்கியம்
4. உளவியல்
5. கல்வெட்டு
6. குழந்தை
7. சமயம்
8. சமூகம்
9. சிந்தனை
10. தத்துவம்
11. தன் வரலாறு (Auto-biography)
12. தொழில்
13. கலைகள்
14. கற்பனை
15. புகலுரை (Narrative essays)
16. புனைவுரை (Descriptive essays)
17. பொருளியல்
18. பொழிவுரை (Written Speeches)
19. மானுடவியல்
20. மொழி
21. வரலாறு
22. வாழ்க்கை ஓவியம்
23. வாழ்க்கை வரலாறு (Biography)
24. விஞ்ஞானம்
25. வேளாண்மை

இவ்வகைக் கட்டுரைகளும் மேலும் பல புது வகைக் கட்டுரைகளும் வருங்காலத்தில் பெருகும் என்ற நம்பிக்கையை நமக்குத்தரும் கருவிகளுள் பல்

வகைத் தமிழ் இதழ்களும் அடங்கும். மேலும் சென்ற சில தலைமுறைகளாகத் தொடங்கி நன்றி யுள்ள தமிழ்மக்கள் அவ்வப்போது தாங்கள் போற் றும் நிலையங்களின் சார்பாகவும் புலவர்களின் பெயராலும் வெளியிட்டு வரும் சிறப்ட மலர்கள் வாயிலாகக் கட்டுரைக் கலையின் தரம் பெரிதும் உயர்ந்துள்ளது. சான்றாகப் பின் வரும் சில சிறப்பு மலர்களைக் குறிக்கலாம். அவையாவன:

(1) டாக்டர் சாமிநாத ஐயர் சதாபிஷேக மலர்
(2) கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளி விழா மலர்
(3) பண்டிதமணி மணி மலர்
(4) மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன் விழா மலர்
(5) மேலைச் சிவபுரி சன்மார்க்கசபைப் பொன் விழா மலர்
(6) புதுவைக் கல்விக்கழகக் கட்டுரை
(7) மகாவித்துவான் மே. வீ. வே. மணிவிழா மலர்.

இம்மலர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது கட் டுரைக்கலை வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்த சில அரிய இலக்கிய இதழ்கள் பற்றியேனும் நன்றியோடு குறிப்பிட வேண்டும். அவையாவன:—

(1) செந்தமிழ்
(2) கலாநிலையம்
(3) லோகோபகாரி
(4) ஆனந்தபோதினி
(5) குமரன்

கட்டுரைக்கலையின் வரலாறு பற்றியே பெரிதும் இக் கட்டுரையில் இதுவரை கருதி வந்துள்ளோம். எனினும் கட்டுரைப் பண்பு பற்றி ஒருசிறு குறிப் பேனும் ஈண்டு பொறித்தல் தகும். கட்டுரை எழுதுவது எப்படி என்னும் தலைப்பில் அறிஞர்கள் அவ்வப் போது கட்டுரைகள் வரைந்துள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை திரு. இராஜாஜி, பேராசிரியர் துரை அரங்கனர் போன்றவர்கள் எழுதியுள்ளன வாகும். இக்கட்டுரைகட்கு எல்லாம் பெரும்பகுதி அடிப்படையாய் விளங்குவது 'பன்ன ருஞ் சிறப்பிற் பவணந்தி முனிவர்' நன்னூல் பொதுப்பாயிரத்தில் பத்துக் குற்றம் பற்றியும் பத் தழகு பற்றியும் பாடியருளிய இரு சூத்திரங்களே.[50]

தமிழ் மொழியில் கட்டுரை நடை இளங்கோ அடிகள் காலத்து இருந்தது போன்றோ, இறையனர் அகப்பொருள் காலத்து இருந்தது போன்றோ-ஏன்?- சிவஞான முனிவர் காலத்து இருந்தது போன்றோ கூட இப்போது இல்லை. இன்றுள்ள நிலையும் இன் னும் பல்லாண்டுகள் கழித்து இருக்கும் என்று உறுதி சொல்ல முடியாது. காரணம், கன்னித்தமிழ் சாகா வரம் பெற்றது; காலத்துக்கேற்ற கோலம் கொள்ளும் கடப்பாடுடையது. இந்நீர்மை வாழும் மொழிகள் அனைத்திற்கும் இன்றியமையாது வேண் டுவதாகும்[51]. அதனலேயே உரையாசிரியர்கள் உரைக்கு உரையாசிரியர்களைத் தேடும் நிலை மாறிப்

50. நன்னூல்—12,13

51. An Introduction to the Study of Literature-W. H. Hudson (1946), p 335.

'பல்லை உடைக்கும் பண்டித நடை' என்பதெல்லாம் போய்—கல்லையும் கனிவிக்கும் கன்னல் தமிழ் நடை இன்று மக்கள் மன்றில் அரசோச்சுகின்றது. வருங் காலத்தில் மொழிச் செம்மையே தகளியாக, இலக் கியச் சுவையே நெய்யாக, எளிமைப் பண்பே இடு திரியாக, சிந்தனையே சுடராகக் கொண்டு தமிழ்க் கட்டுரை விளக்கு ஏற்றப்படுதல் திண்ணம்.

தமிழ் மொழி மிகு தொன்மை வாய்ந்தது. அதைச் சுட்டிக் காட்டும் கலங்கரை விளக்கே தொல் காப்பியம். ஆராய்ச்சி அறிஞர்[52] வியந்து போற்றும் பெரும்பழமைசான்ற இந்நூலுள்ளேயே[53]'கட்டுரைக் கலை'யின் வித்தைக் கண்டோம். பல நூற்றாண்டு களாய் அவ்வித்துக் கண்ட விளைவையும் ஒருமித்துப் பார்த்தோம். நம் தலைமுறையில் அக்கலையின் வளர்ச்சியால் கருத்து வேறுபாடுகட்குரிய இரு சிக்கல்கள் எழுந்துள்ளன. ஒன்று, தனித்தமிழ் பற்றியது; மற்றொன்று பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் ஒன்றாய் இருத்தல் வேண்டுமா வேண்டாவா என்பது பற்றியது. இவ்விரு சிக்கல்கள் பற்றியும் மொழிப் புலமையும் முற்போக்குணர்வும் படைத்த அறிஞர்கள் ஆராய்ந்து தெளிவுபடுத்தி உள்ளார் கள்.[53] அவர்கள் கருத்துவழி நின்று, தனித்தமிழைப் பெரிதளவு போற்றியும், பேச்சுத் தமிழின் கொச்சை

52. The Antiquity of Tamil & Tholkappiar—Prof. S. Arumugha Mudaliar—Tamil Culture—Vol. II, Nos. 3 and 4.

53. (1) மறுமலர்ச்சி உரை நடை – பேராசிரியர் பூ. ஆலால சுந்தரனார், மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன் விழா மலர்.

(2) வளருந்தமிழ் – சோம. லெ.

நிலையைக் களைந்தும் பணி செய்தலே அறிவும் அறமுமாகும்.

'வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.'[54]

என்று பாடினர் வள்ளுவப் பெருந்தகையார். இப் பொன் மொழியைப் பல்வேறு கருத்துகட்கும் பொருத்திப் பார்க்கலாம். அந்த வகையில் கவிதைக் கலைக்கு அடுத்த நிலையில் கட்டுரைக் கலையை எந்தச் சமுதாயம் உணர்ந்து உவந்து போற்றுகின்றதோ, அந்தச் சமுதாயத்தின் அறிவு நிலை போற்றுதற்கு உரியதாகும். காரணம், சிறு கதையினும் தொடர் நிலைக்கதைகளினும் தரமுயர்ந்த கட்டுரைகளைப் படைத்தற்கு அறிவும் உணர்வும் ஒழுங்கும் உறுதியும் தேவை. இப்பண்புகளைக் கொண்டு படைக்கப் பெறும் கட்டுரைக்கலையைப் போற்றவும் இப்பண்புடைய உள்ளங்கள் தேவை. எனவே, கட்டுரைக் கலையின் வளர்ச்சி சமுதாய அறிவின் உயர்ச்சி என்றும் கூறலாம்.

இத்தகு பண்பு வாய்ந்த கட்டுரைக்கலை வருங் காலத்தில் மேலும் வளர்ச்சி பெறச் சில வழிகளையும் மேற்கொள்ளலாம். சிறப்பாக, (1) உலகின் பல்வேறு மொழிகளிலும் வெளிவந்துள்ள-வெளி வரும்—தலை சிறந்த கட்டுரைகளை அவ்வப்போது தமிழில் ஆக்கி வெளியிடலாம். (2) தமிழ் மொழியில் இது வரை வெளி வந்துள்ள சிறந்த கட்டுரைகளைப் பல்வேறு கோணங்களினின்றும் ஆராய்ந்து தேர்ந்து, ஒரு

54. திருக்குறள், 595.

பெருங்'கட்டுரைக் களஞ்சிய'த்தைத் தொகுதி தொகுதியாகத் தொகுத்து வெளியிடலாம். (3) புதுப் புது வகைகளில் கட்டுரைக் கலை வளரப் பல்வகையான நன்முறைகளில் தமிழ் எழுத்தாளரை ஊக்குவிக்கலாம்.

இன்னோரன்ன வகைகளில் எல்லாம் இன்றியமையாததும், உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியதுமாகிய ஒரு கடமை தமிழகப் பல்கலைக்கழகங்களில் எம். லிட்., பிஎச். டி. பட்டங்கட்காகத் தமிழர்–மொழி–இலக்கியம்–வரலாறு–பண்பாடு–சமயம் முதலியனபற்றி எழுதப்படும் ஆராய்ச்சியுரைகள் மட்டுமேனும் தமிழிலேயே எழுதப்படுமாறு விதிமரபு வகுக்கப்பட வேண்டும். இவ்வாராய்ச்சியுரைகளின் மூலம் தமிழாக இருந்தால்தான் உயர் ஆராய்ச்சியும் ஓங்கும்; செறிவையும் செம்மையையும் இரு கண்களாகக் கொண்டு, தமிழ்க் கட்டுரைக் கலையும் ஓங்கி உயரும்; அசல் ஆங்கிலமாகவும் நகலே தமிழாகவும் இருக்கும் குறையும் மறையும்.

இவ்வாறெல்லாம் கண்ணும் கருத்துமாய்க் கட்டுரைக் கலையைப் போற்றி வளர்ப்போமானல் வருங்காலத்தில் தமிழ்க் கட்டுரை மேலும் தழைத்து உலக நாடுகள் போற்றும் உயர்வைப் பெறும். பிற மொழிகளிலிருந்து தலை சிறந்த கட்டுரைகளைத் தமிழில் ஆக்கி, அதனல் புத்தூக்கம் பெற்றுப் புதுப் புது வழிகளில் கட்டுரைகளைப் படைக்கும் நிலை மாறி, பொலிவுடனும் வலிவுடனும் நாம் படைக்கும் ஒளி நிறைந்த கட்டுரைகளை உலக அறிஞர் பலரும் தங்கள்

தங்கள் மொழிகளிலே ஆக்கம் செய்து போற்றும் நிலை ஏற்படும். அந்நாளே 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்,'[55] என்ற பாரதியாரின் பாட்டுப் பயன் பெறும் பொன்னாளாகும்.

55. பாரதியார் கவிதைகள் (சென்னை அரசினர் வெளியீடு), பக். 37.

# 5

# பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் பெருந்தமிழ்த்தொண்டு

## ஓர் ஆராய்ச்சி★

## (அ)

## வாழ்க்கை நலன்கள்

**முன்னுரை:** 'செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை'[1] என்று போற்றினர் சுத்தானந்த பாரதியார். இப் புகழுரை பல்லாற்ருனும் பொருள் செறிந்த பொன்னுரையே என்பதைப் பேராசிரியர் சேதுப் பிள்ளையின் தமிழுருவான தொண்டு வாழ்க்கையை எண்ணிப் பார்ப்பவர் எவரும் எளிதில் உணர்ந்து இன்புறுவர். செந்தமிழ்ப் பேச்சுக்கும் செந்தமிழ் எழுத்துக்கும் மட்டுமன்றி, செந்தமிழ் வாழ்வுக்குமே பேராசிரியர் அவர்கள் ஏறத்தாழ அரை நூற்ருண்டுக்காலம் ஆற்றியுள்ள அருந்தமிழ்த் தொண்டு தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தகும். பேராசிரியர் ஆற்றிய தொண்டின் பயனையும் பெருமையையும், பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் உண்மையும் உணர்ச்சியும் கலந்த உரைகளால் ஏழு ஆண்டுகட்கு

---

*பேராசிரியர் – டாக்டர் ரா. பி. சே. அவர்கள் வெள்ளி விழா நினைவு மலரில் வெளியிடப் பெற்றது.

1. தமிழின்பம் (1959)-சேதுப்பிள்ளை, முன்னுரை, பக்.V.

முன்பே கோவை மாநகரில் பூ. சா. கோ. கலைக் கல்லூரியில் நிகழ்த்திய கலைவிழாப் பேச்சொன்றில் எடுத்து விளக்கியுள்ளமை ஈண்டு நினைந்து மகிழ்தற் குரியது. டாக்டர் மு. வ. அவர்கள் வாசகம் வருமாறு:—

'தமிழ் இலக்கிய அரங்கிலே மாறுதல் செய்தார் சேதுப்பிள்ளை. சென்னையிலே இலக்கியக் கூட்டங்களானால் 50 பேர் வந்துகொண்டிருந்தனர். தம் முடைய சொற்பொழிவுகளின் மூலம் 50-ஐ 50,000 ஆக்கித் தந்தவர் அவர். தமிழுக்கு ஒரு நல்லது என்றால், அவர் உடலிலே தெம்பு; முகத்திலே உவகை. தமிழுக்கு ஓர் இடையூறு என்றால், அவர் உடலிலே தளர்ச்சி; முகத்திலே கவலை. இப்படியாக அவர் தமிழைத் தம் வாழ்வோடு வாழ்வாக இணைத்து வாழ்கிறார்.[2]

**இராசவல்லிபுரம்**: இத்தகு பெருமை வாய்ந்த பேராசிரியரின் வாழ்க்கை இற்றைக்கு அறுபத்தைந்து ஆண்டுகட்கு முன்னே 'திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி'க்கு அண்மையில் அமைந்துள்ள அழகிய சிற்றூராகிய இராசவல்லிபுரத்தில் அரும்பியது. பொருநை ஆற்றங்கரையில் பொலிவுடன் விளங்கும் இராசவல்லிபுரம் இயற்கை அமைதியும், இறையருளும், வரலாற்றுச் சிறப்பும் நிரம்பப் படைத்த பெருமை உடையது. இவ்வுண்மையைப் பிறந்த மண்ணின் பெருமைபேசும் நன்றி சான்ற நல்லுள்ளத்தோடு பேராசிரியர் அவர்களே தமது

2. பி. எஸ். ஜி. கல்லூரிக் கலை மலர் (1954), பக்-58.

அழகிய கட்டுரை ஒன்றிலே ஆர்வத்தோடு குறிப்பிடுதலைக் காணலாம். அச்சொல்லோவியம் வருமாறு :[3]

"பொருநையாற்றின் கரையிலே செப்பறை என்றொரு தலம் உண்டு; தனியே அதற்கொரு நலம் உண்டு. சோலையும் வயலும் சூழ்ந்த அத்திருப்பதியில் தனக்குவமையில்லாத் தலைவன் தன்னந்தனியனாய்த் தாண்டவம் புரிகின்றான்.

"இத்தகைய செப்பறையைச் சேர்ந்த சிற்றூர் இராசவல்லிபுரம் எனப்படும். பயிர்த்தொழில் செய்யும் கார் காத்த வேளாளர் பண்புற்று வாழும் அவ்வூரில் அகிலாண்ட நாயகி கோயில் கொண்டுள்ளாள். அவ்வம்மையை மதுரத் தமிழால் பாடினார் மாதவச் சிவஞான முனிவர்.

'அருள்ஞான வாரியே! ராசைமே வியசெல்வ
அகிலாண்டம் என்னும் அரசே!'

என்பது அவர் திருவாக்கு."

**பெருமாள் பிள்ளை – சொர்ணம்மாள் :** சிறப்பு வாய்ந்த இச்சிற்றூரில் கார்காத்த வேளாளர்குடியில் தோன்றிச் சீர் பெற வாழ்ந்த செம்மல் பெருமாள் பிள்ளை என்பவராவர். குடிப்பண்புக்கு ஏற்ப வேளாண் வாழ்க்கையில் விருப்பும் சிவ வழிபாட்டில் தணியா வேட்கையும் கொண்டு விளங்கிய சான்றோர் அவர். அவர்தம் இனியவாழ்க்கைத் துணைவியாரே நம் பேராசிரியரைப் பெற்றெடுத்துப் பெரும்புகழ்

3. ஆற்றங்கரையினிலே (1961), பக், 215.
ஊரும் பேரும் (1950), பக், 103-4.

கொண்ட சொர்ணம்மாள். பெயருக்கேற்ற பண்பு படைத்த இப்பெற்றோர்கள் வரமிருந்து பெற்ற பிள்ளையே நம் பேராசிரியர். ஆம். 'வரமிருந்து' என்று சொல்வது வெற்று உபசாரம் அன்று. உண்மையாகவே அப்பெற்றோர் வரம் கிடந்தனர். காரணம், பேராசிரியருக்கு முன் பிறந்த பதினொரு பிள்ளைகளையும் காலனுக்குப் பறிகொடுத்துக் கலங்கியிருந்தனர் அச்சான்றோர். அந்நிலையில் பெற்றோர் துயர் தீர்க்கும் ஒரு மருந்தாய்—பிறந்த நாட்டின் பிணி தீர்க்கும் பெருமருந்தாய்–1896-ஆம் ஆண்டில்[4] பிறந்தவரே நம் பேராசிரியர். ஒரு குலத்துக்கு ஒரு மைந்தராய்த் தோன்றிய பிள்ளையை உயிரெனப் போற்றி வளர்த்தார் இன்று மைந்தர் புகழை எல்லாம் தம் புகழாய்க் கொண்டு விளங்கும் அன்னையார் சொர்ணம்மாள் அம்மையார். அந்த 'முன்னறி தெய்வம்' காட்டிய பேரன்பில் ஊறி வளர்ந்த பேராசிரியர் உள்ளத்தில் பிள்ளைப்பருவம் முதலே தமிழன்பும் தாயன்பும் போட்டியிட்டு வளர்ந்தன.

**கல்விப் பயிற்சி:** பேராசிரியர் அவர்களது எழுத்துப் பயிற்சி இராசவல்லிபுரத்துத் திண்ணைப் பள்ளிக்கூடத்திலேயே தொடங்கியது. அப்பயிற்சியில் தேர்ச்சியுற்ற பின்னர், நம் பேராசிரியர் ஐந்தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பாளையங்கோட்டை அர்ச். சேவியர் உயர்நிலைப் பள்ளி[5]யிலும், இடைக்கலை வகுப்பின்[6] இரண்டாண்டுகளையும் திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும்,[7] இளங்கலை

4. துன்முகி ஆண்டு, மாசித் திங்கள், பூச நல்லோரை.
5 St. Xavier's High School.
6. Intermediate, 7. M. D. T. Hindu College, Tirunelvely

வகுப்பின்[8] இரண்டாண்டுகளையும் சென்னைப் பச்சை யப்பர் கல்லூரியிலும் பயின்று வெற்றி பெற்றார். அக்காலத்தில் பேராசிரியர் அவர்களுக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர்களுள் தலை சிறந்தவர் இருவரா வர்: ஒருவர், உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் விளங்கிய திரு. சுப்பிரமணியப் பிள்ளை; மற்றொரு வர், இந்துக் கல்லூரித் தமிழாசிரியராய் விளங்கிய தொல்காப்பிய வல்லுநர் திரு. சிவராமப் பிள்ளை. ஆங்கிலமும் தமிழும் வல்ல அவரே பிள்ளை அவர்கள் பின்னாள்களில் சிறந்த தமிழ்ப்புலமை பெற வித்திட்டு வாழ்த்தியவர்.

பேராசிரியர் அவர்கள் மாணவ வாழ்க்கை யிலேயே பெரும்புகழுடன் திகழ்ந்தார்; சிறப்பாகத் தமிழ்த் தேர்வுகளிலும் தமிழ்ப் பேச்சுப் போட்டி களிலும் தமிழ்நலத் தொண்டுகளிலும் தலை சிறந்து விளங்கினார். சென்னைப் பச்சையப்பர் கல்லூரியில் இளங்கலை வகுப்பில் பயின்றுகொண்டிருந்தபோது நடைபெற்ற பேச்சுப்போட்டி ஒன்றில் சிறப்பாகப் பேசிப் புகழ்பெற்றமையே பிள்ளை அவர்களின் பிற் கால நல்வாழ்விற்கு வித்திட்டது எனல் மிகை யாகாது. அப்பேச்சுப் போட்டியில் பிள்ளை அவர் களின் சொற்றிறம் கண்ட அந்நாள் பச்சையப்பர் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் உயர்திரு. கே. பி. இராமநாதன் அவர்கள், கூடுதலான சம்பளம் கொடுத்துப் பிள்ளை அவர்களைப் பச்சையப்பர் கல் லூரித் தமிழ்த்துறையில் சிற்றாசிரியராய்ப்[9] பணி

8. B. A.

9. Tutor-என்ற ஆங்கிலச் சொல்லிற்குச் 'சிற்றாசிரியர்' என்று தமிழாக்கம் கண்டவரும் நம் பேராசிரியரே.

புரியும்படி ஏற்பாடு செய்தார். அப்போது பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கிய பெருந்தகையார் திருமணம் - செல்வக்கேசவ ராயர். 'தமிழுக்குக் கதியாவார் கம்பரும் திருவள்ளுவருமே' என்ற அழகிய கருத்தை வெளியிட்டும், அருந்தமிழ்க் கட்டுரைகள் பல வரைந்தும், பன்னூறு மாணவர்களைத் தமிழமுதூட்டி வளர்த்த பெருமானாகிய செல்வக்கேசவராயரின் சீரிய தலைமையில் தொண்டாற்றும் பேற்றினைப் பெற்ற சேதுப்பிள்ளை அவர்களின் ஆசிரிய வாழ்க்கை, சென்னைப் பச்சையப்பர் சல்லூரித் தமிழ்த் துறையில் தொடங்கியது எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது. தலைசிறந்த கொடையாளராகிய பச்சையப்பர் புகழ் பரப்பும் அறநிலையத்தில் தொடங்கிய பேராசிரியர் பணி, நாளும் பொலிவு பெற்று, இன்று தமிழகம் தலைவணங்கும் நிலை எய்தியுள்ளது. சிற்றாசிரியராய்ப் பணி புரிந்த காலத்திலேயே கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் கடமை உணர்வும் மிகுதியாகப் படைத்திருந்த பிள்ளை அவர்களிடம் அந்நாளில் தமிழ் கற்ற மாணவர்களுள் ஒருவரே புகழ் பெற்ற உயர்மன்ற நடுவராய் ஒளிர்ந்து அண்மையில் ஓய்வு பெற்ற உயர்நடுவர் என். சோமசுந்தரம் அவர்கள்.

**வழக்கறிஞர்—நகராட்சித் துணைத்தலைவர் :** பேராசிரியர் அவர்கள் சென்னைப் பச்சையப்பர் கல்லூரியில் சிற்றாசிரியராய்ப் பணி புரிந்தபோதே சட்டக் கல்லூரியிலும் மாணவராய்ச் சேர்ந்து சட்டக் கலை பயின்றார்கள். அந்நாளில் சென்னைப் பச்சை

யப்பர் கல்லூரிக்கு அண்மையிலேயே சட்டக் கல்லூரி அமைந்திருந்தது இங்கு நினைவு கூர்தற்குரியது. இன்று பச்சையப்பர் உயர்நிலைப்பள்ளி மட்டும் இருக்கும் இடமே அன்று பச்சையப்பர் கல்லூரியும் இருந்த இடம். 1940-ஆம் ஆண்டிலேதான் சென்னைப் பச்சையப்பர் கல்லூரி நம் அருமைத் துணைவேந்தர் பெருந்தகையார் சர். ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமை சான்ற பெருமுயற்சியால் நகரத்தின் நெருக்கடி நிறைந்த சூழ்நிலையிலிருந்து நீங்கிச் சேத்துப்பட்டில் சிறப்பிடம் பெற்றது.[10] சட்டக் கல்லூரியில் இரண்டாண்டுப் பயிற்சியை வெற்றியுடன் முடித்த பின்னர், பிள்ளை அவர்கள், காலஞ்சென்ற வழக்கறிஞர் பெருந்தகையும் முன்னாள் சென்னை மாநில அமைச்சருமாகிய உயர்திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்களிடம் தொழிற்பயிற்சி பெற்றார்கள்; அதன் பின்னர் வழக்கறிஞர் தொழிலை வளம்பெற நடத்தத் தமது சொந்த ஊராகிய திருநெல்வேலிக்குச் சென்றார்கள். அங்கே சில ஆண்டுகள் அத்தொழிலைச் சிறப்புடன் நடத்திய பிள்ளை அவர்கட்கு அத்தொழிலிலும் பெரும்புகழ் கிட்டியது. மேலும், அந்தச் சில ஆண்டுகளிலேயே அவர்கள் கூர்த்த மதியையும் ஒழுக்க உயர்வையும் நன்குணர்ந்த நெல்லை நகர மக்கள் அவரை அந்நகரின் நகராட்சி மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்தது மட்டு

10. 'It was during the presidentship of Dr. A. Lakshmanaswami Mudaliar that the new buildings at Chetput rose upin the course of 18 months as if at the touch of a magic wand, and the college was shifted to its new habitation.'—Dr. T. M. P. Mahadevan (Pachaiyappa's College, Madras—Centenary Commemoration Book-1942-p. 95).

மன்றி, அப்போது அந்நகராட்சியின் முதல் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தார்கள். அக்காலத்தில் இப்பதவிக்கு இருந்த சிறப்புச் சிறிதன்று. இருபத்து மூன்று ஆண்டு இளைஞராயினும் பிள்ளையவர்கள் நகராட்சியில் பொறுப்பேற்ற ஒரு சில ஆண்டுகளிலேயே பொதுநலப் பணியில் ஈட்டிய புகழ் பெரிது.

**மீண்டும் தமிழாசிரியர் தொழில்**—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இங்கிலையில் வழக்கறிஞர் தொழிலில் நம் பேராசிரியர் வாழ்க்கை வளங்காண்பதினும் தமிழாசிரியர் தொழிலில் புண்ணியம் திரட்டுவதே சாலச்சிறப்புடையது என்று கருதினன் தில்லை அம்பலவன். அவன் திருவருளால் நெல்லை நீங்கித்தில்லையின் எல்லையில் அமைந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராய் அமர்ந்தார் சேதுப்பிள்ளை. பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளை, விபுலானந்த அடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகிய மூவர் தலைமையிலும் பிள்ளை அவர்கள் ஆறு ஆண்டுகள் அருந்தமிழ்ப் பணி ஆற்றினர்கள்.

திருநெல்வேலியில் வழக்கறிஞராய் இருந்த போதும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராய் இருந்த நாள்களிலும் பேராசிரியர் எழுதிய மிகச் சிறந்த நூல்களே 'தமிழ் நாட்டு நவமணிகள்', 'திருவள்ளுவர் நூல் நயம்', 'சிலப்பதிகார விளக்கம்', 'கால்டுவெல் ஐயர் சரிதம்' என்பவை; இந்நூல்களின் சிறப்பும் நூலாசிரியர் புகழும் பேரா

சிரியர் கா. சு. பிள்ளை அவர்களால் 'இலக்கிய வரலாற்'றிலேயே[12] பொறிக்கப் பெற்றுள்ளன என்றால் வேறு புகழுரையும் வேண்டுமோ?

**சென்னைப் பல்கலைக் கழகத்தில்:** அண்ணாமலையில் ஆறு ஆண்டுகள்[13] பணியாற்றிப் பெரும்புகழுடன் விளங்கிய பேராசிரியர் அவர்கள், 1936-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் முதல் தலைமைத் தமிழ் விரிவுரையாளராய்ச்[14] சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொறுப்பேற்றார்கள். அப்போது தமிழ்த் துறைத் துணைப் பேராசிரியராயும் தமிழ்த் துறைத் தலைவராயும்[15] விளங்கிய திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களுடன் ஒத்துழைத்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் வெளியிடப் பெற்ற தமிழ்ப் பேரகராதியின் இணைப்புத் தொகுதியை இனிது முடிக்கத் துணை புரிந்தார்கள்.[16]

**பல வகைப் பணி:** சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் சேர்ந்த பின் பிள்ளை அவர்கள் பெருந்தமிழ்த் தொண்டால் சென்னைப் பல்கலைக் கழகம் மட்டுமே அன்றி, சென்னை மாநகரும் செந்தமிழ் நாடும் புத்தொளி பெற்றன. சேதுப் பிள்ளையவர்களின் பேச்சைக் கேட்கச் சென்னை மாநகர மக்களும் செந்தமிழ் நாட்டு மக்களும் கூட்டம் கூட்டமாய்க் கூடினார்கள். 'தமிழில் பேசுவது

11. First Municipal Vice-Chairman.
12. இலக்கிய வரலாறு—கா. சு. பிள்ளை (1930), பக். 540.
13. 1930—1936
14. Senior Lecturer in Tamil
15. Reader and Head of the Dept. of Tamil
16. Tamil Lexicon—Supplement (1939), P. V.

தாழ்வு' என்று அந்நாளில் இருந்த சூழ்நிலையைப் பேராசிரியர் அவர்கள் தமது எடுப்பான தோற்றத்தாலும் மிடுக்கான பேச்சாலும் அறவே மாற்றியருளினார்கள். ஆங்கில உடை அணிந்து அருந்தமிழில் சொற்பொழிவு செய்த பேராசிரியர் அவர்களின் பேச்சைக் கேட்கக் கல்லூரி இளைஞர்களும் அலுவலக ஆணையாளர்களும் போட்டியிட்டுக்கொண்டு மன்றங்களில் குழுமினார்கள். அக்காட்சியைக் கண்ட பிள்ளை அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை. வான் கண்ட வண்ணமயில்போலத் தமிழர் கூட்டம் மகிழப் பிள்ளையவர்கள் களிகொண்டு தமிழ் மழை பொழிவார்கள். அவ்வாறு அவர்கள் அந்நாள்களில் பொழிந்த சொற்பொழிவால் விளைந்த வெள்ளப் பெருக்கின் விளைவு இந்நாளில் விளைந்துள்ள தமிழ் வளத்திற்குத் தலையாய காரணங்களுள் ஒன்று என்றால், அது ஒரு சிறிதும் மிகையாகாது. இந்த வகையில் பேராசிரியர் அவர்கள் சென்னை மாநகரில் ஒய். எம். சி. ஏ. வில் நடத்திய கம்ப ராமாயணச் சொற்பொழிவுகளையும், ஒய். எம். ஐ. ஏ. வில் நடத்திய சிலப்பதிகாரச் சொற்பொழிவுகளையும், கந்த கோட்டத்தில் நடத்திய கந்தபுராணச்சொற்பொழிவுகளையும், தங்கசாலையில் நடத்திய திருக்குறட்சொற்பொழிவுகளையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

**ஆராய்ச்சிக் கட்டுரைகள்:** மேடைப் பேச்சால் தமிழுணர்ச்சியையும் தமிழறிவையும் பெருக்கியதைப்போன்றே பிள்ளை அவர்கள் தமது ஆராய்ச்சித் திறனாலும் எழுத்தாற்றலாலும் 'கட்டுரைக் கலை'யையும் தமிழாராய்ச்சித் துறையையும் வளர்த்து

வாழ்வித்தார்கள். பேராசிரியர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொண்டாற்றிய கடந்த 25 ஆண்டு எல்லையில் பல்கலைக் கழக வெளியீடாகவும், பல்கலைக் கழக இசைவோடும் வெளியிட்ட தமிழ் நூல்கள் இருபத்தொன்று[17] ஆகும். இவையன்றி, சென்னைப் பல்கலைக் கழகக் கிழக்கு நாடுகட்கலை ஆய்வு மலரில்[18] ஆங்கிலத்தில் வரைந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஒன்பது;[19] தமிழில் வரைந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் இரண்டு.[20] பேராசிரியர் அவர்கள் 1955-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடிய அனைத்திந்தியக் கிழக்கு நாடுகட்கலை ஆராய்ச்சி மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நிகழ்த்திய பேருரை சென்னைப் பல்கலைக் கழக 1954–55-ஆம் ஆண்டுகட்குரிய கிழக்கு நாடுகட்கலை ஆய்வு மலரில் வெளியிடப் பெற்றுள்ளது.[21] இவையே அன்றி, இந்த நூற்றாண்டின் சிறந்த வெளியீடாகிய தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் பேராசிரியர் அவர்கள் வரைந்துள்ள கட்டுரைகள் ஐந்து.[22] அவ்வப்போது வெளியிடப் பெற்ற புகழ் பெற்ற இதழ்களின் ஆண்டு மலர்களிலும், சிறப்பு மலர்களிலும், பெருமக்கள் பாராட்டு மலர்களிலும் பேராசிரியர் அவர்கள் வரைந்த கட்டுரைகளுள் சிறப்பானவை பதின் மூன்று.[23] இவற்றுள் ஆறு தமிழ்; ஏழு ஆங்கிலம். பெருமை சான்ற இப் பணியே அன்றிப் பேராசிரியர்

17. இணைப்பு—I. பார்க்க
18—21. இணைப்பு—II. பார்க்க
22. இணைப்பு—III. பார்க்க
23. இணைப்பு—IV. பார்க்க

அவர்கள் தமது பல்கலைக் கழக வாழ்க்கையில் மகிழ்வுடன் ஈடுபட்டது அனைத்திந்தியக் கிழக்கு நாடுகட்கலை ஆராய்ச்சி மாநாட்டுப் பணியே ஆகும். பிள்ளை அவர்கள் 1937-ஆம் ஆண்டு தொடங்கி, 1955-ஆம் ஆண்டுவரை இரண்டாண்டுகட்கு ஒருமுறை நடைபெறும் அம்மாநாட்டில் ஏழு முறை கலந்துகொண்டு பயனுடைய ஆராய்ச்சி உரைகளை நிகழ்த்தினார்கள்.[24] 1955-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடியமாநாட்டில் திராவிடப் பகுதிக்குத் தலைமை தாங்கியும் சிறப்பித்தார்கள்.

**அகராதி—ஆராய்ச்சிப் பணி:** அடுத்துப் பேராசிரியர் அவர்கள் பல்கலைக் கழக வாழ்க்கையில் செய்த சிறப்பு வாய்ந்த பணிகள் நான்கு. முதலாவது, 1954-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்ற 'தமிழ்ச் சுருக்க அகராதி'க்குத் துணை புரிந்தமை.[25] இரண்டாவது, மொழி இலக்கிய நலம் கருதி நிபுணர் நுழைபுலக் குழுக்கள் ஏழில் இருந்து தொண்டாற்றியமை.[26] மூன்றாவது, முதலில் சென்னைப் பச்சையப்பர் கல்லூரியிலும் பின்னர்ச் சென்னைப் பச்சையப்பர் கல்லூரி—சென்னை மாநிலக் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளிலும் பயிற்சி பெற்ற தமிழ் ஆனர்ஸ்—எம். ஏ. வகுப்பு மாணவர்கட்குச் சிறப்பு வகுப்புகள் நடத்தியமை. நான்காவது, பல்கலைக் கழகத் துறையில் உள்நாட்டு-அயல் நாட்டு ஆராய்ச்சி மாணவர்

24. இணைப்பு—V. பார்க்க
25. பார்க்க: Annals of O. R. — Centenary number—Vol. XIII-Part II-p. VIII.
26. இணைப்பு—VI. பார்க்க

கட்கு வழி காட்டித் துணை புரிந்தமை. பேராசிரியர் அவர்களிடம் ஆராய்ச்சித் துறையில் பயிற்சி பெற்ற மாணவர்களுள் இது வரை ஒருவர் டி. லிட் பட்டமும், மற்றொருவர் பி. எச். டி. பட்டமும், பலர் எம். லிட். பட்டமும் பெற்றுள்ளனர்.[27] பேராசிரியர் அவர்களிடம் பயிற்சிபெற்ற அயலக அறிஞர்களுள் குறிக்கத் தக்கவர் இங்கிலாந்து நாட்டு டாக்டர்-மார் அவர்களும் பிரஞ்சு நாட்டு அருள். சீராக அவர்களும் ஆவர்[28]

பேராசிரியர் அவர்களது பல்கலைக் கழக வாழ்க்கையைக் கருதும்போது தோன்றும் மிகப் பெரிய சிறப்பு, அவர்கள் தமது கால் நூற்றாண்டுக் காலத் தொண்டில் தமிழ்த் துறைக்கு மட்டுமன்றிச் சென்னைப் பல்கலைக் கழக இந்திய மொழித் துறைகள் அனைத்திற்கும் வழி காட்டியாயும் துணைவராயும் விளங்கிய திறமும், தென்னாட்டுப் பல்கலைக் கழகங்கள் பலவற்றின் தமிழ்த்துறையும் செழிக்கப்பல்லாற்றானும் துணை புரிந்த சீர்மையுமே ஆகும். சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் சிறப்பாகக் குறிக்கத் தக்கன, அவர்கள் முயற்சியாலும் துணையாலும் வெளி வந்த 'திராவிடப் பொதுச் சொற்கள்', 'திராவிடப் பொதுப் பழமொழிகள்' ஆகிய இரண்டுமாகும்.[29]

27. இணைப்பு vii பார்க்க

28. பார்க்க, Annals of O.R—centenary number Vol. XIII—part II—p. VIII—X

29. I. Dravidian Common Vocabulary- (1959)Published by the Madras University

II. Common Dravidian Proverbs1956—published by S. L. B. T.

இதுகாறும் குறித்த ஒரு சில குறிப்புகளாலேயே சிற்றாசிரியர், வழக்கறிஞர், நகராட்சித் துணைத்தலைவர், விரிவுரையாளர், தலைமை விரிவுரையாளர், துணைத் தமிழ்ப் பேராசிரியர், பேராசிரியர் என்று விரிவடைந்த பிள்ளை அவர்களது வாழ்க்கை ஓயாத உழைப்பு நிறைந்த வாழ்க்கை–சலியாத தொண்டு நிறைந்த வாழ்க்கை–என்பது இனிது புலனாகும். அடுத்துப் பண்பும் பயனும் செறிந்த அவர் தம் வாழ்வின் அழியா அடையாளங்களாய் விளங்கும் நூல்களால் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியமும் தமிழ் மக்களும் பெற்ற பெருஞ்சிறப்புகளை ஒரு சிறிது ஆராய்வோம்:

## (ஆ)

## புலமை நலன்கள்

**நூல் வகை:** இது வரை வெளிவந்துள்ள பேராசிரியர் தமிழ் நூல்களை (1) ஆராய்ச்சிக் கட்டுரைகள், (2) வாழ்க்கை வரலாறுகள், (3) பதிப்புகள் என்று மூவகையாகப் பாகுபடுத்தலாம். அவற்றுள் கட்டுரை நூல்கள் பதினொன்று; வாழ்க்கை வரலாற்று நூல்கள் மூன்று; பதிப்பு நூல்கள் நான்கு. பிள்ளை அவர்கள் 'குமரன்' இதழில் பல்பொருள் பற்றியும் 'ஆனந்தபோதினி'யில் 'கம்பன் கவியின்பம்' பற்றியும் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் இன்னும் நூல் வடிவம் பெறவில்லை. அவை நூல்களாக உலாக் கொள்ளும் நாளைத் தமிழகம் ஆர்வத்துடன் எதிர் நோக்கியுள்ளது.

**கட்டுரைக்கலை:** பேராசிரியர் அவர்கள் எழுத்தாற்றலால் தமிழ்மொழியில் கட்டுரைக் கலை தனிச் சிறப்புற்றுள்ளது என்ற வாய்மையை ஒப்புக் கொள்ளாத தமிழ்ப் பேரறிஞர் எவரும் இலர். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வருவதற்கு முன்பே பிள்ளை அவர்கள் சொற்பொழிவுக்கலையில் சிறந்திருந்தது போன்றே கட்டுரை எழுதும் ஆற்றலி லும் சிறந்திருந்தார்கள் என்றசெய்தியைப் பேராசிரி யர் கா. சு. பிள்ளை அவர்கள் தமது இலக்கிய வரலாற்றிலேயே குறிப்பிட்டுள்ளார்கள்.[30] பேராசிரியர் அவர்கள் எழுதிய முதல் ஆராய்ச்சிக் கட்டுரை நூல் 'திருவள்ளுவர் நூல் நயம்' என் பதே ஆகும். பிள்ளை அவர்கள் முதல் நூல் தமிழ் மறை தந்த திருவள்ளுவரைப் பற்றியே அமைந்தது போற்றற்குரியது. இந்நூலின் சிறப்புப் பற்றிப் பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்கள் இந்நூலின் முன்னுரையில்[31] கூறியிருக்கும் கருத்துகள் யாவும் பொய்யில் பொருளுரைகளே ஆகும். பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்கள் நான்கு பக்கங்களில் 'திரு வள்ளுவர் நூல் நயம்' என்ற புத்தகத்துள் அமைந் துள்ள ஒவ்வோர் இயலையும் ஆராய்ந்து எழுதியுள்ள முன்னுரை, முன்னுரைக்கு ஓர் இலக்கணமாகவும், 'திருவள்ளுவர் நூல் நய'த்தின் பெருமையைப் பிறங்கச் செய்யும் பெருங்கருவியாகவும் அமைந்துள் ளமை கற்பார்க்குக் களிபேருவகை தரவல்லது. அம் முன்னுரையையும் நூலையும் ஒருசேரக் கற்பார் உள்

30. இலக்கிய வரலாறு—கா. சு. பிள்ளை (1930) பக். 540
31. திருவள்ளுவர் நூல் நயம் (1956) பக். ௩-௬.

ளத்தில் 'நூலுக்கேற்ற முன்னுரை; முன்னுரைக் கேற்ற நூல்' என்ற கருத்தே உறுதியாகத் தோன்றும்.

முப்பது ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பெற்ற 'திருவள்ளுவர் நூல் நயம்' என்ற நூல், 'திருவள்ளுவர்' பற்றிய ஆராய்ச்சிக்கே ஒரு புதுத் திருப்பத்தை அமைத்த திறத்தைப் பேராசிரியர் க. சு. பிள்ளை அவர்களே தமது அருமையான முன்னுரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளார்கள். அவ் வாசகம் வருமாறு:[32]

"உலகமெலாம் உய்வான் பொதுமறை வகுத்த ஆசிரியர் திருவள்ளுவனாரது அளப்பரிய மாண்பினைப் பாவலரும் நாவலரும் கற்றோரும் மற்றோரும் இந்நாள் வரை பொது வகையாற் பலபடச் சீராட்டிப் பாராட்டிப் போந்தனர். ஆசிரியரது நூலின் பிண்டப்பொருளை நுணுகி ஆய்ந்து அதன் சொற் பொருள் நயங்களை யாவருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் தெள்ளென வகுத்தோதி ஊக்கமூட்டும் செவ்விய உரைநடை நூல் ஒன்று இல்லாத குறையை நிறைவு செய்த பெரும்புலவர் இத்'திருவள்ளுவர் நூல் நயம்' எழுதிய திருவாளர் சேதுப்பிள்ளையே யாவர்."

திருவள்ளுவர் நூல் நயம் சிறந்த கட்டுரை நூல் மட்டுமன்று; தெளிவும் துணிவும் நிறைந்த ஆராய்ச்சி நூலுமாகும். திருக்குறளுக்குப் பரிமேலழகர் கண்ட உரை சிறந்ததே எனினும், பல இடங்களில் அவர்

32. திருவள்ளுவர் நூல் நயம், பக். ௩.

கண்ட பொருள் திருவள்ளுவர் உட்கிடைக்கு ஒவ்வாது என்ற உண்மையை முப்பது ஆண்டுகட்கு முன்பு இவ்வளவு நயமாகவும் விளக்கமாகவும் எழுதிய திறம் நம் பேராசிரியரையே சாரும். இச்சிறப்பையும் பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்களே தமது முன்னுரையில் உவப்புடன் சுட்டியுள்ளார்கள்.[33]

'திருவள்ளுவர் நூல் நய'த்தைத் தொடர்ந்து பேராசிரியர் அவர்கள் வரைந்த கட்டுரை நூல் 'சிலப்பதிகார விளக்கம்' என்பது. இதை அடுத்து எழுந்ததே 'வீரமாநகர்'. இந்த முறை வைப்பை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இலக்கிய வரலாற்று முறையிலேயே அமைந்த பேராசிரியர் அவர்கள் நூல்களின் போக்கு இனிது புலனாகும். எழுத்திலும் பேச்சிலும் எண்ணத்திலும் பாரதியாரைப் போன்றே நம் பேராசிரியரும் பெரும்பாலும் எடுத்தாண்டு போற்றும் மூன்று புலவர் பெருமக்கள் திருவள்ளுவரும் இளங்கோவும் கம்பருமேயாவார்கள். இந்த உண்மையை அறிந்தவர்கள் பிள்ளை அவர்கள் நூல்களை ஆராயும்போது அவருடைய இலக்கிய நோக்கும் போக்கும் அடிநாள் தொட்டு நடுக்கமின்றி அமைந்துள்ள நீர்மையை நினைந்து வியந்து போற்றுதல் திண்ணம்.

பிள்ளை அவர்கள் படைத்துள்ள கட்டுரை நூல்கள் பதின்மூன்றையும் தனித்தனியே ஆராய்வதற்கு இச்சிறு கட்டுரை இடந்தாராது. எனவே, பேராசிரியர் அவர்கள் கட்டுரைகளால் நாட்டுக்கும் மொழிக்

33, திருவள்ளுவர் நூல் நயம், பக். ரு, சா.

கும் ஏற்பட்ட நன்மைகளுள் தலையாய சிலவற்றை மட்டும் சிந்திப்போம்:

கணக்கிட்டுப் பார்க்கும்போது இது வரை பேராசிரியர் அவர்கள் எழுதுகோல் உருவாக்கி நூல் வடிவு பெற்ற தமிழ்க் கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கை இருநூற்று ஐம்பதிற்குமேல் செல்கின்றது. மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கையோ, இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்குமேல் செல்கின்றது. நூல் வடிவு பெறாத கட்டுரைகளையும் கருதினல், கட்டுரைகளின் தொகை முந்நூற்றைம்பதாகவும் பக்கங்கள் தொகை நாலாயிரமாகவும் பெருகும். இக்கட்டுரைகளுள் பல தமிழகத்தின் மதிப்பிற்குரிய இதழ்களை—வெளியீடுகளை—அணி செய்தவை; மற்றும் பல, வானொலியில் நிகழ்த்திய உரைகள். 'உரை', 'கட்டுரை' ஆகிய சொற்கள் எழுத்து, பேச்சு இரண்டையுமே பழங்காலத்தும் சுட்டிய பான்மையை ஆராய்ச்சி அறிஞர் அறிவர்.[34] அவ்வகையில் பல மேடைப் பேச்சுகளும் வானொலிப் பேச்சுகளும் பேராசிரியர் அவர்கள் கட்டுரைத் தொகுதிகளுள் இடம் பெற்றிருத்தல் பொருத்தமே ஆகும். மேலும், மேடைப் பேச்சுக்கு இலக்கணம் கூறும் கட்டுரை[35] மட்டுமன்றி, மேடைப் பேச்சுக்கு இலக்கியமாய் அமைந்த கட்டுரைகளும் பேராசிரியர் அவர்கள் கட்டுரைத் தொகுதிகளுள் இடம் பெற்றுள்ளன.[36] இச்சிறப்பை எண்ணிப்

34. Words and their Significance—R. P. Sethu Pillai (1953) pp. 39, 60.

35. அலையும் கலையும் (1958), கட்டுரை எண்-16.

36. (1) அலையும் கலையும் (1958) -, கட்டுரை எண்கள்-5,21.
(2) தமிழின்பம் (1959) -கட்டுரை எண்கள் - 1 முதல் 5 வரை.

பார்க்கும்போது தோன்றும் கருத்து ஒன்று உண்டு. அது பேராசிரியர் அவர்கள் மேடைப் பேச்சு நடையும் கட்டுரை நடையும் ஏறத்தாழ ஒரு தன்மையாகவே அமைந்துள்ளமை. இந்த வகையில் பேராசிரியர் அவர்கட்கு முன்னேடியாய் விளங்கியவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களே. அது ஒரு சிறந்த காரணம் போலும், சுத்தானந்த பாரதியார் அவர்கள் 'தமிழின்பம்' என்னும் நூலின் முன்னுரையில், ''உரை நடையில் தமிழின்பம் நுகர வேண்டுமானால் திரு. வி. க., சேதுப்பிள்ளை ஆகிய இரு புலவர்களின் செந்தமிழைச் செவிமடுக்க வேண்டும்.''[37] என்று கூறியமைக்கு! 'பேசுவது போன்றே எழுதவும் வேண்டும்,' என்பது மறுமலர்ச்சி எழுத்தாளர் சிலர் கருத்து. இக்கருத்தைப் பெரும்பாலும் அறிஞர் உலகம் ஏற்பதில்லை.[38] காரணம், பேச்சு நடையில் உள்ள கொச்சைப் போக்கு எல்லாம் எழுத்திலும் இறங்கிவிடுமானால், மொழிப் பண்பும் இலக்கியப் பண்பும் பாழ்பட்டுவிடும் என்பதே. ஆனால், இந்த அச்சத்திற்குத் தமிழ்ப்பெரியார் திரு. வி. க., பேராசிரியர் சேதுப்பிள்ளை போன்றவர்களிடம் இடமே இல்லையல்லவா?

**பண்பு**: இவ்வாறு தமது பேச்சொலியையே பெரும்பாலும் எழுத்தொலியிலும் பதிய வைத்துப் பேராசிரியர் அவர்கள் படைத்த இலக்கியப் படைப்

37. தமிழின்பம் (1959), முன்னுரை - பக். V.
38. மறுமலர்ச்சி - உரைநடை - பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார் - மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர், பக். 378-9.

புகளுள் ஒளி வீசும் உயரிய பண்புகளுள் சிலவற்றை இனிக் காண்போம்:

டாக்டர் ரா. பி. சே. அவர்கள் தமிழ் உரை நடை, செய்யுளின் இனிமை கொண்ட செந்தமிழ் நடை. மறைந்த சான்றோர் பலரும் இவ்வுண்மையை மனமாரப் போற்றியுள்ளனர். நாவலர் சோமசுந்தர பாரதியார் 'தமிழர் வீரம்' என்னும் நூலின் முக வுரையில் 'இவ்வினிய உரைச் செய்யுள் எழுதிய புலவர்'[39] என்றும், 'திருக்காவலூர்க் கோவில்' என்னும் நூலின் தந்துரையில், அருட்திரு - நல்லூர் - சுவாமி ஞானப் பிரகாசர் 'செய்யுள் ஓசை ஒழுகுகின்ற அவரது தெள்ளிய தமிழ் நடை'[40] என்றும் குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவு கூர்தற்குரியது.

செய்யுள் நலஞ்சான்ற பேராசிரியர் அவர்கள் செந்தமிழ் உரைநடையில் கற்றார்க்கும் மற்றார்க்கும் களிப்பருளும் களிப்பாய் இருப்பது, எதுகை மோனை இன்பமே. இந்த இன்பத்தை எழுத்து - பேச்சு - இரண்டிலுமே வாரி வழங்கும் வண்மை பேராசிரியர் அவர்கட்கு இயற்கையாகவே வாய்த்துள்ளது.[41] அறையில் உரையாடும்போதும், அரங்கில் முழங்கும் போதும், ஏட்டில் எழுதும் போதும் பேராசிரியர் அவர்களிடம் எதுகை மோனைகள் கெஞ்சுவதையும் கொஞ்சுவதையும் காணலாம். சான்றாக, அவர்கள் நூல்களின் தலைப்புகளையும் கட்டுரைகளின் தலைப்பு களையுமே குறிக்கலாம். அவற்றுட் சில:

39. தமிழர் வீரம் (1959)-பக். iii.
40. திருக்காவலூர்க் கோவில் (1952)-பக். v.
41. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் (1944), பக். 212

I. நூல்களின் தலைப்புகள்:—

(1) ஊரும் பேரும்
(2) வேலும் வில்லும்
(3) வழிவழி வள்ளுவர்
(4) அலையும் கலையும்
(5) வேலின் வெற்றி

II. கட்டுரைகளின் தலைப்புகள் :—

(1) நாடும் நகரமும், (2) குடியும் படையும், (3) குலமும் கோவும், (4) தேவும் தலமும்,[42] (5) வடதிசை வணங்கிய வீரம், (6) கடலாண்ட காவலர் (7) பெண்ணை நாட்டுப் பெருவீரர், (8) வீர விளையாட்டு, (9) வீர விருதுகள், (10) பேர் தெரியாப் பெருவீரர்,[43] (11) அரக்கர்கோன் அருந்தவம், (12) சிறையிருந்த செல்வி,[44] (13) நாடும் நடையும், (14) பாண்டிப் பழந்துறைகள், (15) ஏற்றமும் தோற்றமும், (16) மனையற மாண்பு, (17) பண்பும் பயனும், (18) மூப்பும் முடிவும்,[45] (19) அறத்தின் திறம், (20) இன்ப இயல்,[46] (21) ஆடையும் அணியும்,[47] (22) முருகன் பெருமை, (23) கம்பரும் கச்சியப்பரும், (24) மூவர் தமிழும் முருகனும்[48] (25) கலையும் கற்பனையும், (26) வாழ்க்கையும் வைராக்கியமும், (27) மணிமேகலையும் மதுவிலக்கும்,[49]

42. ஊரும் பேரும் (1-4)
43. தமிழர் வீரம் (5-10)
44. வீரமாநகர் (11-12)
45. கால்டுவெல் ஐயர் சரிதம் (13-18)
46. திருவள்ளுவர் நூல் நயம் (19-20)
47. அலையும் கலையும் (21)
48. வேலும் வில்லும் (22-24)
49. தமிழ் விருந்து (25-27)

(28) காதலும் கற்பும், (29) மாதரும் மலர்ப்பொய்கையும், (30) முருகனும் முழு மதியும், (31) பயிர் வண்டும் படர்கொடியும், (32) நல்ல மரமும் நச்சு மரமும், (33) காயும் கனியும், (34) சேரனும் சீரனும், (35) பாரியும் மாரியும், (36) வண்மையும் வறுமையும், (37) இறையவரும் இன்னுயிரும், (38) ஆண்மையும் அருளும், (39) கர்ணனும் கும்பகர்ணனும், (40) காளத்தி வேடனும் கங்கை வேடனும்[50].

பேராசிரியர் அவர்கள் எதுகை மோனை இன்பத்தோடு எளிய வகையில் சிலேடை இன்பத்தையும் சமயம் அறிந்து வழங்க வல்லவர்கள். ஒரு சான்று:

"இச்செய்திகளை நண்பர் வாயிலாக அறிந்த ஐயர் 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்,' என்னும் பொய்யாமொழியின் வழி நின்று, அன்னார் இன்னாரென்றறிந்தும், நன்னயம் புரிவாராயினர்."[51]

'இன்னார்' என்னும் சொல் இன்னவர்கள், கொடியவர்கள் என்னும் இரு பொருளும் தருமன்றோ?

பேராசிரியர் அவர்கள் பைந்தமிழ் நடையில் குறிக்கத்தக்க பெருஞ்சிறப்புகள் வேறு இரண்டு உண்டு. ஒன்று, 'முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னேபோற் போற்றும்'[52] திறன்; மற்றொன்று, ஏற்ற இடங்களில் சிறந்த

50. தமிழ் இன்பம் (28-40)
51. கால்டுவெல் ஐயர் சரிதம் (1936), பக். 110.
52. நன்னூல் - பொதுப் பாயிரம், சூ. 9.

இலக்கியப் பகுதிகளை அளவறிந்து மேற்கோளாக எடுத்துக் காட்டல். பின்னதற்கும் மேற்கண்ட மேற்கோளே ஒரு சான்று.[53] இவ்விரு சிறந்த பண்பு களாலும் பேராசிரியர் அவர்கள் உரைநடையை ஊன்றிப் பயில்வார், இலக்கிய உணர்வும் தமிழ்ப் புலமையும் எளிதில் பெறுவர். அடுத்துக் குறிப்பிடத் தக்கது ஊர்ப் பெயர்களின் உண்மை வடிவு வரலாறு குறித்து அவர்கள் வாய்ப்பு நேரும் போதெல்லாம் வரையாது குறிப்பிடும் பான்மையே ஆகும். சான்முக 'அலையும் கலையும்' என்னும் நூலில் உள்ள 'சென்னைக் கடற்கரை', 'கொச்சைத் தமிழ்' ஆகிய கட்டுரைகளில் ஊர்ப் பெயர்கள் பற்றி வரும் பகுதி களைக் குறிப்பிடலாம்.

பேராசிரியர் அவர்கள் கட்டுரைத் தமிழுக்கு ஒளியும் உரமும் ஊட்டும் உயர்பண்புகள் எளிமையும் இனிமையும் தெளிவும் திண்மையுமாகும். இவற்றோடு சேர்த்துக் குறிப்பிடத்தக்க மற்றொன்று, பேராசி ரியர் அவர்களின் தனித்தமிழ் நடை. அரசியல் அரங்கில் தனித்தமிழ் இயக்கத்தை வீறுகொண்டு போற்றுவோரும் எதுகை மோனை இன்பத்திற்காக வடமொழிச் சொற்களை வரம்பின்றிக் கையாண்டு விடுவர். ஆனல், பேராசிரியர் அவர்கள் செந்தமிழ்

53. இலக்கியப் பொன்மொழிகளை மேற்கோளாக எடுத் துக்காட்டலே அன்றி அப்பொன்மொழிகளைத் தம்மொழி களாகவே ஆக்கித் தமிழ் உரைநடைக்கு உரமூட்டியதும் பேராசிரியர் ஆற்றியதொரு பெருஞ்செயலாகும். மேற்குறிப் பிட்ட 'கால்டுவெல் ஐயர் சரித'த்தில் மட்டும் ஆசிரியர் ஏறத் தாழப் பத்துப் பக்கத்திற்கு ஓர் இலக்கியப் பொன்மொழியை யாவது தம் மொழியாகவே ஆக்கி அளித்துள்ளார்.

நடையில் வடமொழிச் சொற்கள் நூற்றுக்கு ஒன்று விழுக்காடாகக்கூட நுழைவதில்லை. அவர்கள் தனித் தமிழ் ஆர்வம் ஆரவாரமற்றது; திட்ப நுட்பஞ் சான்றது. சான்று ஒன்று காண்போம்:

'திரை கடலோடியும் திரவியம் தேடு,' என்பது பழமொழி. 'கால்டுவெல் ஐயர் சரி'தத்தில் இப்பழமொழியின் கருத்தைப் பேராசிரியர் அவர்கள் 'திரை கடலோடியும் திருவினைத் தேடிய யவனரும்' என்னும் சொற்களால் குறிப்பிடக் காணலாம்.[54]

பேராசிரியர் அவர்கள் நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது வேற்றுமொழிச் சொற்களை அறியாமையாலோ ஆணவத்தாலோ பயன்படுத்தலை அறவே வெறுப்பவர். அவருடைய கட்டுரைகளே இது பற்றிய அவருடைய ஆழ்ந்த கோட்பாட்டை விளக்கக் காணலாம். சான்றாகப் பின் வரும் பகுதிகளைச் சுட்டலாம்:

* * *

"அருமையான தமிழ்ச்சொல் ஒன்று இருக்க, ஆங்கிலத்தை எடுத்தாளுதல் அறிவீனம் அல்லவா? கரும்பிருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ?"[55]

* * *

"இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்கள் வழங்கிவருகின்ற அருமையான சொற்களில் வானொலி என்பதும் ஒன்று. அச்சொல் பல ஆண்டு

54. கால்டுவெல் ஐயர் சரிதம் (1936), பக். 45.
55. அலையும்-கலையும் (1958), பக். 32.

களாக நம் செவியிலே விழுந்து பழைய ஓசையாய் விட்டது. இந்த நிலையில், தமிழ் நாட்டு வானொலி நிலையங்கள் சில காலமாக 'ஆகாஷ் வாணி' என்று சொல்வதைக் கேட்கின்றோம். 'வானொலி' என்ற இனிய எளிய தமிழ்ச்சொல் இருக்க, வேண்டாத வட சொல்லை வழங்குதல் முறையன்று என்பது என் கருத்து.''[56]

*　　　*　　　*

இத்தகைய மொழிப்பற்றுக் காரணமாகவே பேராசிரியர் அவர்கள் உறுப்பினராய் இருந்த 'கலைச் சொல்லாக்கக் குழு'க்கள் அனைத்திலும் தமிழன்னைக்குத் தம்மால் இயன்ற அரும்பணி ஆற்ற முடிந்தது.

பேராசிரியர் அவர்கள் மொழிப்பற்றுக்கு இணை அவர்தம் நாட்டுப் பற்றே. இவ்விரு வகைப் பற்று களையுமே ஆரவாரமின்றி ஆக்க வேலையில் செறித்த பெருமை அவர்கட்கு உண்டு. அரசியல் இயக்கம் எதிலும் பங்கு பற்றும் விழைவு பேராசிரியர் அவர் கட்கு எப்போதும் இருந்தது இல்லை. ஆயினும், ஆங்கில ஆட்சியை அவர்கள் மனமார வெறுத்த உண்மை அவர்தம் கட்டுரைகளால் இனிது புலனாகும். ஒரு சான்று:[57]

*　　　*　　　*

"கவிஞர்:

'காலெட்' என்பது அவன் பெயர். பேராசை பிடித்த அவ்வெள்ளையன் சென்னையிலே தன்பேரை நிலைநாட்ட

56. அலையும் கலையும் (1958), பக்.197
57. 　　　,, 　　　(1958), பக். 29.

ஆசைப்பட்டான்; திருவொற்றியூரில் ஒரு பேட்டையை உண்டாக்கினன்; 'காலெட் பேட்டை' என்று அதற்குப் பேரிட்டான். அதைக் 'காலாடிப் பேட்டை' யாக்கிவிட்டார்கள் அவ்வூர் மக்கள்.

"மனைவி: வெள்ளையர்கள்மீது சென்னை மக்களுக்கு உள்ள வெறுப்பு இதனால் வெளிப்படுகிறதே!"

*　　*　　*

மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் நிறைந்த பேராசிரியர் அவர்கள் கட்டுரைகளில் ஆங்காங்கே அழகிய கற்பனைகளும் அணிசெய்யக் காணலாம். 'கால்டுவெல் ஐயர் சரித'த்திலிருந்து ஒரு சான்று வருமாறு:[58]

"இங்ஙனம் கலத்திற் கலை பயின்ற கால்டுவெல் ஐயர் தனியராய்த் தம் அறையிலமர்ந்திருக்கும் பொழுது கண்ணுக்கடங்காத கருங்கடலின் நீர்மையை எண்ணி மகிழ்வார்; கலஞ்செல்லும் நெறியில் மீன்கள் துள்ளியெழுந்து மீண்டும் நீரில் மூழ்கி மறையும் அழகினைக் கண்டு வியப்பார்; கடலெங்கும் காரிருள் விரியுங்கால் விண்ணிலே மிளிரும் எண்ணிறந்த மீன்களின் விளக்கங் கண்டு களிப்பார்; கருங்கடலில் ஊர்ந்து செல்லும் நிறைமதியின் ஒளி கண்டு நெஞ்சம் தழைப்பார். இங்ஙனம் இயற்கை இன்பம் நுகர்ந்து மனங்குளிர்ந்த கால்டுவெலின் உடலும் நலனுறுவதாயிற்று."

58. கால்டுவெல் ஐயர் சரிதம் (1934) பக். 7.

பேராசிரியர் அவர்கள் கட்டுரைக் கலையைப் பற்றி ஆராயும் போது போற்றவேண்டுவதாயுள்ள ஒரு பெருஞ்சிறப்பு, அவர்கள் தம் வாழ்நாள் முழுதும் எழுதிய கட்டுரைகளில் ஒன்றுகூட இலக்கிய நெறிக்கும் வரலாற்றுச் சிறப்புக்கும் மாறுபடாமையே ஆகும்.

பேராசிரியர் அவர்கள் கட்டுரைகளில் பெரும்பாலானவை இலக்கியச் சுவை தரும் கட்டுரைகளே ஆயினும், 'சென்னைக் கடற்கரை,'[59] 'சிவனடியார் முழக்கம்',[60] 'தெய்வம் படும் பாடு'[61], 'சரம கவிராயர்',[62] முதலான நகைச் சுவைக் கட்டுரைகளையும் 'திருவள்ளுவர்-எல்லீசர் உரை'[63] 'புதுவை மாநகரம்'[64] போன்ற இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் பிறவகைக் கட்டுரைகளையும் பேராசிரியர் அவர்கள் நூற்றொகுதியுள் காணலாம். ஆனால், பேராசிரியர் அவர்கள் எழுதிய கட்டுரை நூல்களுள் தனிச் சிறப்பு வாய்ந்ததொரு நூல் 'கடற்கரையிலே' என்பது ஆகும். பேச்சு வடிவான கட்டுரைகளைக் கொண்ட இந்நூல் பேராசிரியர் அவர்களுடைய கற்பனைத் திறனுக்கு ஈடு இணையற்ற எடுத்துக்காட்டு ஆகும். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை வரலாற்றில் கற்பனைப் பேச்சுகளாக (கட்டுரைகளாக)[65]

59. அலையும் கலையும் (1958), கட்டுரை எண்-4.
60. தமிழின்பம் (1959), கட்டுரை எண் 19
61. ,, ,, கட்டுரை எண் 30
62. ,, ,, கட்டுரை எண் 20
63. அலையும் கலையும் (1958), கட்டுரை எண் 13
64. ,, ,, கட்டுரை எண் 6
65. 'கட்டுரை' என்னும் சொல் எழுத்து (வியாசம்)பேச்சு இரண்டையும் குறிக்கும். Tamil Lexicon — Vol II-Part I-p. 451 பார்க்க.

அமைந்த இந்நூல் தனிச் சிறப்புப்பெறல் திண்ணம்.

பேராசிரியர் அவர்கள் வளர்த்த கட்டுரைத் தமிழை மேலை நாட்டு அறிஞர்களின் இலக்கிய ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து மதிப்பீடு செய்யும் அரிய நூல்கள் பல தமிழ் மொழியில் வெளி வருங்காலம் சேய்மையில் இல்லை. காரணம் சில பல ஆண்டுகட்கு முன்பே இம்முயற்சியில் அறிஞர் பெருமக்கள் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். முன்னரே இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டது போல இம்முயற்சிக்கு வித்திட்ட சான்றோர் 'இலக்கிய வரலாறு' எழுதிய உயர்திரு. கா. சு. பிள்ளை அவர்களே. அவர்களைப் பின் பற்றி 'இலக்கிய வரலாறும்', 'உரைநடை வரலாறு'ம் எழுதும் பணியில் ஈடுபட்ட அறிஞர் பலரும் பேராசிரியர் அவர்கள் கட்டுரைச் செல்வத்தின் அருமையைப் பாராட்டுதலைப் பெரும்பேறாகவே கருதியுள்ளனர்.[66]

ஆங்கில இலக்கிய அறிஞர்களாகிய ஸ்விப்டு[67]

66. (1) தமிழிலக்கியம்-சு. இராமசாமி நாயுடு (1957), பக். 127-8.

(2) வளருந்தமிழ்-'சோம. லெ' (1960) பக் 72-4.

(3) The western influence on Tamil Prse—Dr. K. K, Pillai-(Tamil Culture-Vol. VI, No.3,pp. 159-60)

67. I should be glad to see you the instrument of introducing into our style that simplicity which is the best and truest ornament of most things in life, which the politer age always aimed at in their building and dress **Simplex munditiis** as well as in their productions of wit. It is manifest that all new affected modes of speech whether borrowed from the court, the town, or the theatre, are the first perishing parts in any language; and as I could prove by many hundred instances, have been in ours.

—Jonathan Swift, from The Bickerstaff Papers (Tatler, No. 230)

என்பாரும் பென்சன்[68] என்பாரும் சிறந்த உரை நடை, முறையே எளிமையையும் இனிமையையும் பெற்றிருக்க வேண்டும் என்று தம் ஆராய்ச்சியுரைகளில் தெளிவுபடுத்தியுள்ளனர். இவ்விரு பண்புகளையுமே தன்னிரு கண்களாகக் கொண்டது பேராசிரியர் அவர்களின் உரைநடைத் தமிழ். மேலே குறிப்பிட்ட பென்சன் என்ற அறிஞர் 'கட்டுரையாளன் கலை'[69] என்னும் தமது கட்டுரையில் கூறுவது போல, பேராசிரியர் அவர்களுடைய வாழ்க்கையை எந்த எளிமைப் பண்பும் இனிமைப் பண்பும் அணி செய்கின்றனவோ, அப்பண்புகளே அவர்களுடைய உரைநடைக்கும் ஒளியும் உரமும் தந்துள்ளன.

**வாழ்க்கை வரலாறுகள்:** கட்டுரைக்கலையைப் போலவே வாழ்க்கை வரலாற்று நூல்கட்கும் வளரும் தமிழில் வாழ்வு தேடித்தந்த பெருமை பேராசிரியர் அவர்கட்கு உண்டு. 'தமிழ் நாட்டு நவமணிகள்', 'கால்டுவெல் ஐயர் சரிதம்', 'கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர்' என்னும் மூன்று நூல்களும் பேராசிரியர் படைத்த வாழ்க்கை வரலாற்று நூல்களாகும். இவற்றுள் முதன்முதலாக எழுதப்

68. An essay is a thing which some one does himself; and the point of the essay is not the subject, for any subject will suffice, but the charm of personalities. It must concern itself with something "Jolly", as the school boy says, something smelt, heard, seen, perceived, invented, thought but the essential thing is that and writer shall have formed his own impression, and that it shall have taken shape in his own mind; the the charm of the essay depends upon the charm of the mind that has conceived and recorded the impression.

—Arthur Christopher Benson

69. The Art of the Essayist.

பட்டது 'தமிழ்நாட்டு நவமணிக'ளே. ஆதிரையார், விசாகையார், மருதியார், கோப்பெருந்தேவியார், மணிமேகலையார், கண்ணகியார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் ஆகிய ஒன்பதின்மர் வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கி உரைக்கும் இந்நூலே பேராசிரியர் அவர்கள் எழுது கோல் படைத்த முதல் நூல். திரு. பரலி. சு. நெல்லையப்பரின் 'லோகோபகாரி'யில் நாற்பதாண்டுகட்கு முன் வெளி வந்த இந்நூல் நடை உலகிலும் வாழ்க்கை வரலாற்றுத் துறையிலும் சாதித்த சாதனையை இந்நூலுக்கு முன்னுரை புகன்ற சர். திரு. டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள்[70] திறம்பெறக் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதற்குரியது. அவர் வாசகம் வருமாறு:[71]

"திருவாளர் ஆர். பி. சேதுப்பிள்ளையவர்கள் எழுதியிருக்கும் 'தமிழ்நாட்டு நவமணிகள்' என்னும் இந்நூலைப் பார்வையிட்டு மிகவும் மகிழ்வெய்தினேன். பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கைச் சிறப்பை இக்காலத்துத் தமிழ்ச் சிறார்க்கு எடுத்தோதும் புத்தகங்களும், பண்டுதொட்டுச் சரித்திர வாயிலாகவும் பனுவல்கள் மூலமாகவும் அறியக் கிடக்கும் நம்நாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளும் தற்காலம் வெளிப்போந்துள்ள நூல்களுள் காண அரிதாயினவே என்று நெடுநாளாக நானும் என் போன்ற பிற பலரும் கருதியிருந்த ஒரு பெருங்குறையை இப்

70. த. நெ. சிவஞானம் பிள்ளை-முன்னாள் சென்னை மாநில அமைச்சர்.

71. தமிழ் நாட்டு நவமணிகள்-முன்னுரை.

போது ஆசிரியர் நிறை செய்துள்ளார்..............அத்துடன் இப்புத்தகத்தைப் படிக்கும் பிள்ளைகட்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலாய பண்டைய நூல்களைத் தாமே ஆராய்ந்தறிய ஊக்கம் பிறக்கும் என்பது திண்ணம்.''

'தமிழ் நாட்டு நவமணிகளை'த் தொடர்ந்து பேராசிரியர் அவர்கள் இயற்றிய 'கால்டுவெல் ஐயர் சரிதம்' தனிச் சிறப்பு வாய்ந்தது. இந்நூலின் நலங்கள் பல வற்றை முன்னரே வேறு காரணங்கள் பற்றிக் கண்டிருக்கிறோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கட்குக் கால்டுவெல் ஒப்பிலக்கணம் நடத்திக்கொண்டிருந்தபோது அந்நூலின் அருமை பெருமைகளில் ஈடுபட்ட பேராசிரியர் அவர்கள் ஒப்புயர்வற்ற அந்நூலை உருவாக்கிய ஒரு பேரறிஞரின் வாழ்க்கையை அறிந்துகொள்வதில் பெருவேட்கை கொண்டனர். நல்லறிவாளர்கட்கு இயற்கையாக ஏற்படும் இவ்வேட்கை[72] அவர்கட்கும் எழுந்ததன் விளைவே 'கால்டுவெல் ஐயர் சரிதம்.'

இக்காலத் தமிழ் உரைநடையில் தாம் நேரில் கண்டு பழகியறியாத ஒருவரின் வாழ்க்கை வரலாறு

72. Our interest in the writings of any great author being once aroused, the desire will inevitably be stimulated to learn something of the man himself, as a man, beyond that which his work reveals to us. We shall be curious to see him in the social surroundings in which he lived, and in his daily converse with his fellows to know the chief facts of his outward history—his ambitions, struggles, success, failures—and the connection of his books with these; the way in which and the conditions under which such books were written; his intellectual habits and methods of work. Curiosity on such and similar points is entirely natural and legitimate and we need not scruple to gratify it.

—An Introduction to the Study of Literature (1946) W.H. Hudson, P.22.

ஒப்புயர்வற்ற வகையில் எழுதப்பட்டிருக்குஞ் சிறப்பினைக் 'கால்டுவெல் ஐயர் சரித'த்திலே காணலாம். கால்டுவெல் பெரியாரைப் போன்றே தமிழுக்காகப் பாடு பட்ட ஒன்பதின்மர்க்கு மேற்பட்ட உத்தமரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கி உரைப்பதே பேராசிரியர் அவர்களின் 'கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர்' என்னும் நூல்.

"பெருமக்களின் வாழ்க்கைகளே வையகத்தின் சிறந்த ஆசிரியர்கள்" என்று பவுலர்[73] என்ற அறிஞரும், "நன்றாக எழுதப்பட்ட ஒரு வாழ்க்கை வரலாறு நன்றாக வாழப்பட்ட ஒரு வாழ்க்கையைப்போன்றே அரியது. படிப்பதற்கு மிகவும் இன்பமும் பயனும் பயக்க வல்லன வாழ்க்கை வரலாறுகளே," என்று கார்லைல்[74] என்ற அறிஞரும் மனமாரப் போற்றியுள்ளனர். இத்தகு சிறப்பு வாய்ந்த வாழ்க்கை வரலாற்று நூல்களைத் தமிழன்னைக்குச் சிறந்த அணிகலன்களாகத் தந்த பெருமை பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கட்கு உண்டு. 'கால்டுவெல் ஐயர் சரித'த்தை அழகொழுகும் தமிழில் எழுதியளித்த அவர்கள் புகழ் அழியாத தன்மை வாய்ந்தது.

**ஆராய்ச்சிப் பெருநூல்—ஊரும் பேரும்:** பேராசிரியர் அவர்கள் படைத்த தமிழ் உரை

73. "The best teachers of humanity are the lives of great men." —Fowler.

74. ".........a well-written life is almost as rare as a well-spent one ............Biography is the most universally p'easant and profitable of all reading."

—The New Dictionary of Thoughts

நடை நூல்கள் பதினேழு. ஆயினும், அவற்றுள் தலைசிறந்ததாய் — பேராசிரியர் அவர்களின் வாழ்நாள் பணி நூல் (Life-Work) என்று போற்றத் தக்கதாய்—உள்ள பெரும்புகழ் சான்ற நூல் 'ஊரும் பேரும்' ஆகும். டாக்டர்-ரா. பி. சே. அவர்களது நுண்மாண் நுழைபுலத்தில் விளைந்த ஆராய்ச்சிக் கருத்துகள் பலவும் அவர் படைத்த நூல்கள் அனைத்திலும் ஆங்காங்கே செறிந்து சிறந்து விளங்குகின்றன. எனினும், முற்ற முற்றி முதிர்ந்த ஆராய்ச்சிப் பெருநூலாய் விளங்குவது, அவர் அரிதின் முயன்று ஆய்ந்தளித்த 'ஊரும் பேரும்' என்னும் உயரிய ஆராய்ச்சிக் கருவூலமே ஆகும்.

இலக்கிய ஆராய்ச்சிப் பேரறிஞர் ஹட்சன் 'இலக்கியக் கல்விக்கு அறிமுகம்' என்னும் பொருள் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய சிறந்த நூலில்[75] உண்மையாகவே ஒரு பெருநூலின் அடையாளம் அது புதியதாகவும் தனக்கே உரியதாகவும் எதையாவது சொல்லுவதாய் அமையவேண்டும்—அப்படிச் சொல்லுவதையும் புதிய முறையிலும் தனக்கே உரிய பாணியிலும் சொல்லவேண்டும்,' என்று கூறுகிறார். இவ்விலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாய் விளங்கும் தன்மை பேராசிரியர் அவர்கள் நூல்கள் அனைத்திற்கும் உண்டாயினும், மிகச் சிறப்பாகக் குறிக்கத் தக்கன 'ஊரும் பேரும்' என்னும் தமிழ் நூலும்

75. "The mark of a really great book is that it has something fresh and original to say, and that it says this in a fresh and independent way."
—An Introduction to the Study of Literature—W. H. Hudson (1946), p. 15.

'சொற்களும் அவற்றின் பொருட்சிறப்பும்'[76] என்னும் ஆங்கில நூலும் 'செந்தமிழும் கொச்சைத் தமிழும்'[77] என்னும் ஆங்கிலத்தில் உள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அனைத்திந்தியக் கிழக்குக்கலை மாநாட்டுச் சொற்பொழிவுகளுமே[78] ஆகும்.

இவற்றுள் 'ஊரும் பேரும்' என்னும் நூல் ஆயிரத்து முந்நூறுக்கு மேற்பட்ட ஊர்களின் பெயர்களை ஆராய்ந்து விளக்குகிறது. இந்நூலின் தனிப்பெருஞ் சிறப்புக் குறித்துத் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களினும் நடுநின்று மதிப்பீடு செய்ய வல்லார் யார்? அவர்தம் மணி மொழிகள் வருமாறு:

"சில நாடுகளின் ஊரும் பேரும் அடங்கிய ஆராய்ச்சி நூல்கள் வெளி வந்து உலவுகின்றன. அத்தகைய உலாவைத் தமிழ் நாட்டிற் காண்டல் அருமையாயிருந்தது. அவ்வருமையைப் போக்கும் வாய்ப்பு அறிஞர் சேதுப்பிள்ளை அவர்கட்குக் கிடைத்தது தமிழ்நாட்டின் தவப்பயனாகும். தமிழ் கொழிக்கும் பொருநைக்கரையில் பிறந்து, தமிழ் பொங்கும் பொதிகைத் தென்றலில் வளர்ந்து, தமிழார்ந்த மனமொழி மெய்களைப் பெற்றுத் தமிழ் வண்ணமாய்த் தமிழ் பொழியும் ஒரு பெருங்கொண்டலிடை உதித்த மின்னொளி இந்நூல். இதைத் தமிழ் நாட்டின் தவப் பயன் என்று சாற்றலாமன்றோ?

76. Words and their Significance (A study in Tamil Linguistics)

77. Tamil — Literary & Colloquial — Annals of O. R. Vol. II- p-II.

78. இணைப்பு—ii, v பார்க்க

"ஆசிரியர், நிலம்—மலை—காடு—வயல்—ஆறு—கடல்—நாடு—நகரம்—குடி—படை—குலம்—கோ—தேவு—தலம் முதலியவற்றை அடியாகக்கொண்டு, இந்நூற்கண் நிகழ்த்தியுள்ள ஊர் பேர் ஆராய்ச்சியும், ஆங்காங்கே பொதிந்துள்ள குறிப்புகளும், பிறவும் தமிழ்ச் சரித்திர உலகுக்குப் பெருவிருந்தாகும் என்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டில் சில ஊர்ப்பேர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முதனிலையை இழந்துள்ளன. அவை மீண்டும் பழைய நிலை எய்திப் பண்புறுதற்கு இந்நூல் பெருந்துணை செய்தல் ஒருதலை. இந்நூலுள் பொலிவுதரும் சில ஊர்ப்பேர்களின் வரலாறு சாம்பியும் சோம்பியும் நலிந்தும் மெலிந்துங் கிடக்கும் நம் மக்கட்கு அமிழ்தாகிப் புத்துயிர் வழங்கல் உறுதி. நூலின் நடைக்கண் நடம் புரியும் பீடும் மிடுக்கும் வீறும் நாட்டின் சவலையை நீக்கி, அதன்மாட்டு வேட்கையை எழுப்பி அதை ஊக்குவனவாம்.

"'ஊரும் பேரும்' என்னும் இந்நூல் காலத்துக்கேற்றது என்று சுருங்கச் சொல்லலாம். இவ்விழுமிய நூலைச் செவ்விய முறையில் யாத்து உதவிய ஆசிரியர்க்கு என் வாழ்த்தும் நன்றியும் உரியனவாக. அவர்க்குத் தமிழ் நாடு கடமைப்படுவதாக. இத்தகைய நூல் பல, ஆசிரியரால் முகிழ்த்தல் வேண்டுமென்று தமிழ்த்தெய்வத்தை வழுத்துகிறேன். தமிழ் வாழ்க; தமிழ் வெல்க!"[79]

**ஆங்கில மொழியில் தமிழ் ஆராய்ச்சி:**

பேராசிரியர் அவர்கள் தமிழ் நூல்கள் பலவும்

79. தமிழகம் ஊரும் பேரும்-முகவுரை.

தமிழின் சிறப்பைப் பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்பி, 'பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரை எல்லாம் விழி பெற்று' எழச் செய்யும் விழுமிய குறிக்கோளுடையன. அவர்தம் ஆங்கிலக் கட்டுரைகளும் நூல்களும், தமிழ் மொழியின் சொல் வளத்தின் அருமையை உலகறியச் செய்யும் உயர்நோக்கம் உடையவை. பேராசிரியர் அவர்களுடைய ஆங்கில நடையிலும் தமிழின் எளிமையும் இனிமையும் ஊர்ந்திருப்பது படிப்பார்க்குப் பேரின்பம் தருவதாகும். எதுகை மோனை இன்பம் ததும்ப அவர்கள் 'அறமும் மறமும்' [80] பற்றி ஆங்கிலத்தில் வரைந்துள்ள கட்டுரையை இதற்கு ஒரு சான்றாக எடுத்துக்காட்டலாம். பேராசிரியர் அவர்களின் ஆங்கில உரைநடையிலும் அவர்களின் தமிழ் உரைநடைச் சாயலைக் காணும் போது அறிஞர் கார்லைல், 'நடை என்பது ஓர் ஆசிரியன் அணியும் ஆடை அன்று. அது அவன் உடலோடு ஒட்டிய தோலே ஆகும்,'[81] என்று கூறிய பட்டுணர்வு மொழியே நினைவுக்கு வருகின்றது.

ஆங்கில மொழியில் பேராசிரியர் அவர்கள் வரைந்துள்ள கட்டுரைகளுள் பல, தமிழின் மொழியியல்[82] பண்புகள் பற்றிய ஆராய்ச்சிகளே ஆகும். வேறு சில தமிழிலக்கிய நலங்கள் பற்றிய ஆராய்ச்சியாகும். இத்தன்மையவே பேராசிரியர் அவர்களுடைய அனைத்திந்திய கிழக்கு நாட்டுக் கலை மாநாட்டு ஆராய்ச்சி உரைகளும்.

80. 'Right Verses Might'—Annals of O. R. Vol. XI, Parts 1 & 2 1953-54.

81. An Introduction to the Study of Literature—W. H. Hudson (1946), p. 27.

82. Linguistics.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் வெளியிடப்படும் கிழக்குக்கலை ஆராய்ச்சி இதழின் முதல் தொகுதியிலேயே பேராசிரியர் அவர்களின் 'சொற்களும் அவற்றின் பொருட்சிறப்பும்'[83] என்னும் ஆங்கில ஆராய்ச்சியுரை வெளி வந்தது. அதைத் தொடர்ந்து 'செந்தமிழும் கொச்சைத் தமிழும்'[84] பற்றியும் 'ஊரும் பேரும்'[85] பற்றியும் ஆங்கில மொழியில் ஆராய்ச்சி உரைகள் வழங்கப்பட்டன. இவற்றுள் 'சொற்களும் அவற்றின் பொருட்சிறப்பும்' என்பது சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாகவே 1953-ஆம் ஆண்டில் வெளி வந்துள்ளது.

பேராசிரியர் அவர்களுடைய மொழியாராய்ச்சி பற்றிய கட்டுரைகள் தமிழ் மொழியில் ஆராய்ச்சித் துறையில் ஒரு புதுத் திருப்பத்தையும் மேம்பாட்டையும் அளித்தன என்பது உறுதி. பேராசிரியர் அவர்கள் இருபது ஆண்டுகட்கு முன்னர் வித்திட்ட இம்மொழியாராய்ச்சித் துறை இன்று மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது.

பேராசிரியர் அவர்களுடைய சொல்லாராய்ச்சி பற்றிய நூலும் கட்டுரைகளும் பேராசிரியருடைய நூலறிவிற்கும் நுண்ணறிவிற்கும் சிறந்த சான்றுகளாய் விளங்குகின்றன. 'சொற்களும் அவற்றின் பொருட்சிறப்பும்' என்னும் நூலில் மட்டும் ஏறத்தாழ ஐந்நூறு சொற்கள் ஆராய்ச்சிக்கு இலக்காகியுள்ளன.

83. 'Words and their significance'—Annals of O. R. Vol. I.
84. 'Tamil—Literary & Colloquial' — Annals of O. R. Vol. II, p-II.
85. 'Place name Suffixes in Tamil' — Annals of O. R. Vol. IV. to VI.

'செந்தமிழும் கொச்சைத் தமிழும்' பற்றிய கட்டுரை களில் ஏறத்தாழ ஆயிரம் சொற்களும் 'ஊரும்பேரும்' பற்றிய கட்டுரைகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஊர்ப் பெயர்களும் ஆராய்ச்சிக்கு உரியனவாகி யுள்ளன. இவ்வாறு ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களை மொழியியற்கண்ணோடு ஆராய்ந்து பல உண்மைகளைத் தேர்ந்து தெளிவுபடுத்தியுள்ள பேரா சிரியர் அவர்களுடைய உழைப்பும் திறனும் மன மாரப் போற்றுதற்கு உரியன அல்லவா?

பேராசிரியர் அவர்களுடைய உண்மை உணர்ச்சி யோடு கூடிய ஆராய்ச்சிகள் அனைத்திலும் அணி செய்யும் உயர்ந்ததொரு பண்பினை ஈண்டுச் சிறப் பாகக் குறிப்பிடல் பொருத்தமும் பயனுமுடைய தாகும். அப்பண்புதான் மாக்ஸ் மூல்லர் போன்ற ஆராய்ச்சி அறிஞரும் போற்றும் ஒப்பாராய்ச்சித் திறன்.[86] சொல்லொடு சொல்லையும் கருத்தொடு கருத்தையும் ஒப்பு நோக்கிச் சுவையும் பயனும் காணும் திறன் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர் கட்கு இயற்கையாகவே அடிநாள் தொட்டே அமைந் துள்ள உண்மையை அவருடைய கட்டுரைகளையும் நூல்களையும் காலமுறைப்படியே ஆராய்ந்து பார்ப்ப வர் உணர்வது திண்ணம்.

பேராசிரியருடைய பதிப்புகள் (1) கந்த புரா ணத் திரட்டு, (2) பாரதியார் இன்கவித் திரட்டு, (3) செஞ்சொற்கவிக்கோவை, (4) தமிழ்க் கவிதைக் களஞ்சியம் ஆகிய நான்குமாகும். இவற்றுள் முத

86. "All higher knowledge is gained by comparison, and rests on comparison," — Max Muller—Lectures on the Science of Religion, p. 12.

லாவதாகிய கந்த புராணத் திரட்டு 1934-ஆம் ஆண்டில் சென்னைக் கந்தகோட்டத்தில் பேராசிரியர் அவர்கள் கந்த புராண வகுப்பு நடத்திய போது அவ்வகுப்பிற்காகக் கந்தபுராணத்தில் ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு பாடல்களைத் திரட்டிப் பொழிப்புரையுடன் மூன்று பகுதிகளாக வெளியிட்டார்கள். ‘வேலின் வெற்றி’ என்னும் உரைநடை நூல் இந்தக் கந்த புராணத் திரட்டைத் தழுவி எழுந்ததே ஆகும்.[87]

‘பாரதியார் இன்கவித் திரட்டு’ சாகித்திய அக்காடெமி வெளியீடு; பாரதியார் பாடல்களுள் சிறந்தன பலவற்றின் தொகுப்பாய இந்நூல் இரு நூற்றுப் பதினொரு பக்கங்களைக் கொண்டது. ‘செஞ்சொற் கவிக்கோவை’ தென்மொழிகள் புத்தக அறப்பொறுப்பு வெளியீடு. சங்கப் பாடல் தொட்டுப் பாரதியார் பாடல் ஈறாகப் பல இனிய தமிழ்ப் பாடல்களின் தொகுப்பு நூற்று நான்கு பக்கங்களைக் கொண்ட இந்நூல். ‘தமிழ்க் கவிதைக் களஞ்சியம்’ சாகித்திய அக்காடெமி வெளியீடு. இந்நூல்கள் முறையே அவ்விரு நிறுவனங்களின் தனிச்சிறப்பு வெளியீடுகளாய் அமைந்த பெருமை உடையன ஆகும். பழந்தமிழ்ப் பாட்டுத் தொட்டு மறுமலர்ச்சிக் கவிதை ஈறாக வளர்ந்து வந்துள்ள தமிழ்க்கவிதைகள் பலவற்றின் தொகுப்பு முந்நூறு பக்கங்களைக் கொண்ட ‘களஞ்சியம்’. இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக வளர்ந்து வந்துள்ள தமிழ்க் கவிதைகளின் அருமை பெருமைகளை ஓதி உணர்ந்து இன்

87. வேலின் வெற்றி—முன்னுரை

புற்றுப் பயன் பெறும் வகையில் ஆங்கில மொழிப் பேராசிரியர் **பால்கிரேவ்** 'பொற்கருவூலம்' என்னும் பொருள் கொண்ட தலைப்போடு தொகுத்த தொகை நூல் போன்ற தொகைகள் பலவற்றைத் தொகுக்க வேண்டும் என்று தமிழறிஞர்கள் பல காலமாகவே கருதி வந்துள்ளார்கள்.[88] அவ்வெண்ணம் பேராசிரியர் அவர்கள் தொகுத்துள்ள இத்தொகை நூல்கள் வாயிலாகச் சிறந்த முறையில் முதன் முதலாக நிறைவேறியுள்ளது என்றே கூறவேண்டும். பேராசிரியர் அவர்கள் இந்நூல்கட்கு அளித்துள்ள நீண்ட ஆராய்ச்சிகளும் விரிவான விளக்கக் குறிப்புகளும் 'செவிநுகர் கனி'களின் 'செஞ்சொற்கவியின்பம்' தேர்வார் சிந்தைக்குப் பெருவிருந்தாகும்.

**பயன்:** இனிப் பேராசிரியர் அவர்கள் கட்டுரைகளால் நாட்டுக்கும் மொழிக்கும் விளைந்த பெரு நலங்களுள் சிலவற்றைக் காண்போம். இந்த வகையில் முதலாவதாகக் குறிப்பிடத் தக்கது பேராசிரியர் அவர்களின் நூற்றுக்கணக்கான கட்டுரைகளால் தமிழ் மக்கள் உள்ளத்தில் பெருக்கெடுத்த தமிழார்வமே ஆகும். பேராசிரியர் அவர்கள் முப்பது ஆண்டுகட்கு முன்பு கட்டுரை எழுதத் தொடங்கிய காலத்தில் இன்று போலத் தமிழ் நாட்டில் தமிழார்வம் கரை புரண்டு ஓடவில்லை. நாட்டுப் பற்றாளர்-கப்பலோட்டிய தமிழர்-வ. உ. சிதம்பரனார் போன்றவர்களின் முனைத்த முயற்சிகளால் தமிழகம் தனது ஆழ்ந்த அடிமைத் துயிலினின்றும் நீங்கி அப்போது தான் கண்களை நிமிட்டிக் கசக்கிக்கொண்டிருந்தது.

88. புறத்திரட்டு (1938) முன்னுரை, பக். xvii. ixiv.

அந்த நிலையில் அரசியல் சூழல் எதிலும் சிக்கிக் கொள்ளாமல் அருந்தமிழ்ப் பணியை மொழிப்பற்றோடும் நாட்டுப்பற்றோடும் வெற்றி ஒளியோடும் நடத்திய விழுமிய செயல் பேராசிரியர் அவர்கட்குத் தனிப் பெருமை தருவதாகும். முப்பது ஆண்டுகட்கு முன்னே பேராசிரியர் அவர்கள் அழகும் ஆற்றலும் நிறைந்த தமிழில் எழுதிய அழகிய கட்டுரைகள் இன்று நாட்டில் பெருக்கெடுத்துள்ள தமிழார்வ வெள்ளத்திற்குக் கட்டியங்கூறின. ஆற்று வெள்ளம் அடுத்து வரும் குறி தோன்றும் 'ஈழ மின்னல் மலையாள மின்னலாய்' அக்கட்டுரைகள் இலக்கிய வானில் ஒளிர்ந்தன.

பேராசிரியர் அவர்கள் கட்டுரைகள் நாட்டு மக்கள் நெஞ்சில் தமிழார்வத்தைப் பெருக்கியதோடு தமிழாராய்ச்சி ஆர்வத்தையும் பெருமளவிற்குத் தூண்டின. எவ்வாறு 'ஆங்கில மோகம்' கொண்ட தமிழர்களின் செவிகளையும் சிந்தையையும் பேராசிரியர் அவர்களின் குற்றால அருவி போன்ற பேச்சுகள் தமிழ் மயமாக்கினவோ, அவ்வாறே பேராசிரியர் அவர்களின் பொருநைப் புனல் போன்ற கட்டுரைகள் தமிழ் மக்களின் கண்களையும் கருத்தையும் தமிழ் மயமாக்கின. அதன் விளைவாகத் தமிழகத்தில் புது யுகம் பூத்தது. கலை பயிலும் இளமாணவர்களும் அலுவல் பார்க்கும் மூத்த மக்களும் பாடல்களை ஓதி ஓதி இலக்கிய இன்பம் நுகர்வது போன்றே பேராசிரியர் அவர்களின் பைந்தமிழ்க் கட்டுரைகளையும் படித்துப் படித்துத் 'தமிழின்பம்' கண்டனர்; 'தமிழ் விருந்து' உண்டனர்; 'தமிழ் வீரம்' கொண்டனர்.

அம்மட்டோ! பேராசிரியர் அவர்கள் எழுத்து இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரை நடையில் கட்டுரைக் கலைக்குப் பெருவாழ்வு நல்கியது;[89] இதழ்களில் வரும் எளிய தொடர்நிலைக் கதைகளையே சுவையோடு படித்து வந்த வாசகர்களை இனிய இலக்கியக் கட்டுரைகளையும் சுவையோடு படித்துப் பயன் பெறத் தூண்டியது; புகழ் பெற்ற கிழமை இதழ்களும் பேராசிரியர் இலக்கியக் கட்டுரைகளைத் தாங்கி வருதல் பெருமைக்குரியது—படிப்பார் தொகையைப் பெருக்கும் வாய்ப்பைத் தருவது என்று கருதச் செய்தது; எளிய தமிழ்ப் படிப்புடையவர்களும் இலக்கிய ஆர்வமும் அறிவும் பெற வழி கோலியது; மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் மக்கள் மன்றத்தில் வேரூன்றச்செய்தது; சீர்குலைந்த ஊர்ப் பெயர்களைச் சீர்பெறச் செய்தது. ஊர்ப் பெயர்கள் ஆராய்ச்சியில் அறிவாளர் சிந்தனையைத் திருப்பியது; தமிழ்ப்பெருங்காவியங்களின் பண்பை ஒரு சிறிது தமிழ் கற்றவரும் உணர்ந்து போற்றச் செய்தது; தக்க இலக்கியச்சொற்களையும் சொற்றொடர்களையும் மணிமிடை பவளம் போல, கட்டுரைகளில் எடுத்தாண்டமையால் படிப்பவர்களின் தமிழ் உரைத் திறத்தை உயர்த்தியது; தமிழக எல்லைகள்—தமிழகத் தலைநகர் பற்றித் தமிழ் மக்கள் உணர்ச்சியும் உறுதியும் கொள்ளச் செய்தது; தனித்தமிழின் இனிமையையும் ஏற்றத்தையும் மெய்ப்பித்தது; ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்புப் போன்ற அரிய நூல்களின்

89. பார்க்க; 'கட்டுரைக் கலை' — ந. சஞ்சீவி — Annals of Oriental Research, Vol. XVII—1960-'61—Part 1.

பெருமையை நாடறியச் செய்தது; கால்டுவெல் முதலான கிறித்தவ தமிழ்த் தொண்டர்களின் பெருந் தொண்டை தமிழகம் உணர்ந்து போற்ற வழி வகுத்தது; தமிழ்ச்சொற்கள் பலவற்றின் சிறப்பையும் வரலாற்றையும் அறிஞர் உலகிற்குத் தெளிவு படுத்தியது; சுருங்கச் சொல்லின், பெரியதொரு தமிழ் மறுமலர்ச்சியைப் பேராசிரியர் ரா. பி. சே. அவர்களின் எழுத்துகள் தமிழ் மக்கள் இதயத்தில் தோற்றுவித்தன எனலாம். தமது பெயருக்கேற்ப முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் சிறந்ததொரு 'சேது'வாய் அமைந்த பேராசிரியர் படைத்த நூல்களால் இன்று தமிழன்னை பெற்றுள்ள தோற்றமும் ஏற்றமும் பெரிய—மிகப் பெரிய! கார்காத்த வேளாளர் குடியில் பிறந்த பேராசிரியர் அவர்கட்கு இத்தலைமுறையில் தமிழ்ப்பயிர் காத்த பெருமை உறுதியாக உண்டு. 'கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும்'[90] மிக்க சொல்லேருழவராகிய அவர்கள் 'வேலி ஆயிரமாக' வித்தி விளைத்த கலையுணர்வுகளின் விளையுளை இன்னும் பல தலைமுறைகட்குத் தமிழினம் உண்டு மகிழ்ந்து உய்யும்.

90. பவணந்தியார் வாக்காகிய இச்சொற்றொடர் பேராசிரியர் அவர்கட்கு மிக விருப்பமான ஒன்று; அடிக்கடி அவர்களால் எடுத்து ஆளப் பெறுவது.

## பண்பு நலன்கள்

**புலமையினும் சிறந்த பண்பு:** பதினைந்து ஆண்டுகட்கு மேலாகப் பேராசிரியர் அவர்களிடம் மாணவனாய் நெருங்கிப் பழகும் பெறலரும்பேற்றினைப் பெற்ற இக்கட்டுரையாளனுக்கு அப்பெரியாரின் ஆழ்ந்த புலமையினை அளவிட்டுரைத்தல் எவ்வளவு அரியதோ, அதனினும் அரியது அப்பெருந்தகையின் பண்பு நலன்களை அளவிட்டுரைத்தல். புலமையினும் சிறந்த பண்பு படைத்த பேராசிரியர் அவர்கள் தமது புலமைத் திறத்தால் தமிழ் மக்கட்குச் செய்த தொண்டிற்கு எவ்வாற்றானும் குறையாத தொண்டைத் தமது பண்பு நலன்கள் பழுத்த தமிழ் தழீஇய வாழ்க்கையால் ஆற்றியுள்ளார்கள் என்பதை 'நவில்தொறும் நூல் நயம்' போற்றும் எவரும் அறிவர். பேராசிரியர் அவர்களோடு நெருங்கிப் பழகியவர்கள் அவர்தம் புலமையினைக் கண்டு வியப்பதினும், அவர்தம் பண்புநலன்களை உணர்ந்து உள்ளம் களித்தலும் நெஞ்சம் நெகிழ்தலுமே செய்வார்கள்.

**கலையுணர்வு:** பேராசிரியர் அவர்களுடைய பண்பு நலன்களுள் எல்லாம் பொன்னொளி வீசுவது அவர்களுடைய கலையுணர்வே. பேராசிரியர் அவர்களுடைய பொறிபுலன்கள் யாவும் கலையுணர்வையே குறிக்கோளாகக் கொண்டவை. கலையுணர்வுக்கு மாறான எதையும் எப்போதும் எதற்காகவும் அவர்

கள் விரும்புவதும் இல்லை; போற்றுவதும் இல்லை. பேராசிரியர் அவர்களுடைய கலையுணர்வின் ஆழத்தை அவர்கள் கட்டுரைகளைச் சொல் சொல்லாகச் சொல்லி எழுதச் சொல்லும் போது அப்பணியை மேற்கொண்ட ஒரு சிலர் நன்கறிவர். அப்பேற்றினைப் பல காலம் பெற்ற இக்கட்டுரையாளன் பேராசிரியர் ஆழ்கடலில் மூழ்கி முத்துக் குளிப்பவர் போல உணர்வுக் கடலில் மூழ்கி மூழ்கி உண்மையுணர்வு முத்துகளை முங்கிக் கொண்டுவந்து மெல்ல மெல்ளக் காட்டிய–கொட்டிய–காட்சியைக் கண்ட போது அடைந்த மெய்ப்பாடுகள் உணர்வுக்கு இனியன; உரைக்கு அரியன.

முத்தமிழ்த் துறையிலும் நெஞ்சைப் பறிகொடுத்த பேராசிரியரின் எழுத்துக்கும் பேச்சுக்கும் ஊற்றாய் இருக்கும் அவர்கள் எண்ணங்கள் யாவும் கலையுணர்வில் ஊறி எழுந்தவையே. தலை சிறந்த தமிழ்க் கவிஞர்களின் உணர்வோடு உணர்வாகி ஒன்றிப்போன அவர்கள் வாழ்க்கை வேறு வகையாக இருத்தல் இயலாதன்றோ? தமது கூர்த்த மதியால் எதையும் ஊடுருவிக் காணும் ஆற்றல் பெற்றிருந்த தமிழ்ப் பெரியார் திரு. வி.க. அவர்களே பேராசிரியர் அவர்களுடைய எழுத்தையும் பேச்சையும் எண்ணத்தையும் துருவிப் பார்த்து இவ்வுண்மையைக் கண்டறிந்துள்ளார்கள் என்னும் உண்மை அவர்தம் 'வாழ்க்கைக் குறிப்புகளை'ப் படிப்பார்க்கு இனிது புலனாகும்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் மணிமொழிகள் வருமாறு:

"கம்பர் தமிழை வளர்ப்பதற்கென்று தமிழ் நாட்டில் அவ்வப்போது சிலர் பிறப்பதுண்டு. அவருள் சேதுப் பிள்ளை ஒருவர். இவ்வுலகம் கம்பர் கழகமானால், உள்ள நிறைவு கொள்வோருள் சேதுப் பிள்ளை முதல்வராக இருப்பர். எவ்விடத்திலும் எம்மேடையிலும் எப்பேச்சிலும் அவர் கம்பரை மறப்பதில்லை. அவர் நா, கம்பரின் உறையுளாகியது.

* * *

"என் தலைமையில் சேதுப்பிள்ளை பல முறை சொற்பொழிவாற்றியுள்ளார். அப்பொழிவு பொழிலாகும். பொழில் மென்காற்றை வீசும்".[91]

பேராசிரியர் அவர்களின் கலையுணர்வின் சிறந்த வெளிப்பாட்டை அவர்களோடு உரையாடும் பேறு பெற்றவர் நன்றாக உணர்வர். மேல் நாடுகளில் உரையாடல் ஒரு சிறந்த இலக்கிய—நாகரிக—பண்பாட்டுக் கலையாகப் பல நூற்றாண்டுகளாகவே சிறந்து வளர்ந்து வந்துள்ளது. டாக்டர்-ஜான்சன் போன்றவர்கள் இக்கலையில் சிறந்து விளங்கிய சீர்மையினை, பாஸ்வெல் எழுதிய 'ஜான்சன் வாழ்க்கை வரலாறு'[92] எடுத்துரைக்கும். ஆனால், இக்கலை மேல்நாடுகளில் வளர்ந்துள்ள பான்மையில் தமிழ் நாட்டில் உண்ணும் கலங்கட்கு முன்னே ஓங்கி வளரவில்லை என்றாலும், புலவர்கட்கு இடையே இலக்கிய உரையாடல் இன்பம் புதியதன்று. இல்லையேல்,

91. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் (1944), பக். 212.

92. Boswell's Life of Johnson

'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.'[93]

என்னும் ஈரடியும்,

'தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி.'[94]

என்னும் நாலடியும் பிறந்திரா அல்லவா?

பேராசிரியர் அவர்களோடு உரையாடும்போது பொழுது போவதே தெரியாது. எவ்வளவோ சுவையும் பயனுமுடைய செய்திகளை எல்லாம் கதை கதையாக அவர்கள் சொல்லுவார்கள். கதை சொல்லும் ஆற்றல் ஒரு சிலர்க்கே வாய்க்கும். எளிதாகத் தோன்றும் அக்கலை மிக அரிய ஒன்று ஆகும். அக்கலையில் வல்லவர் நம் பேராசிரியர். அவர்கள் நிகழ்ச்சிகளைச் சித்திரித்துச் சொல்லும்போது அவர்களைச் சிறந்த ஒரு சொல்லோவியராகக் கண்டு மகிழலாம். பழங்காலச் செய்திகளை எல்லாம் திரைப்படக் காட்சி போல நம் அகக்கண்களுக்கு முன்னே நடைபெறச் செய்யும் ஆற்றல் அவர்கள் நாவிற்குக் கலைமகள் அளித்த தனிப்பரிசு போலும்! இலக்கிய மேதையாகிய ஷேக்ஸ்பியர் உரையாடற்கலைபற்றி, "உரையாடல் இழிநகையற்ற இனிமையுடையதாய், செயற்கையற்ற சதுரப்பாடு உடையதாய், தாழ்வற்ற தாராளம் உடையதாய், கரவற்ற கல்வி நலம் உடையதாய், பொய்மையற்ற புதுமையுடையதாய்

93. திருக்குறள், 394.
94. நாலடியார், கல்வி-7.

இருத்தல் வேண்டும்,"[95] என்று அழகுறக் கூறியுள்ளார். இவ்விலக்கணத்திற்கு ஏற்ற இலக்கியம் பேராசிரியர் அவர்களின் உரையாடல்கள்.

ஆங்கிலத்தில் ஆழ்ந்த பொருட்சிறப்புடைய அரியதொரு சொற்றொடர்நிலை உண்டு. அதன்படி ஆன்றவிந்தடங்கிய சான்றோரை 'His scholarship is vast, but he carried its weight with graceful ease' என்று போற்றுவது மரபு. இப்புகழ்மொழி பேராசிரியர் அவர்கட்கு முற்றிலும் பொருந்தும். அது பொருந்துமாற்றைப் பேராசிரியர் அவர்கள் எழுத்தையும் பேச்சையும் கூர்ந்து ஆராய்ந்தவர்கள் நன்கறிவர். அப்பெரியார் அறையில் பேசிய போதும் அரங்கில் முழங்கிய போதும் அன்புக் கடிதங்கள் வரைந்த போதும் தொல்லை கொள்ளாமலும் தொல்லை கொடுக்காமலும் கருத்துகளைக் காவிரியாறென—சான்றோர் கவியென—வெளிப்படுத்தும் திறம் வியப்பிற்குரியது. அவர் எழுத்திலும் பேச்சிலும் சுவை உண்டே அன்றி, சுமை ஒரு போதும் இராது; பயன் உண்டே அன்றி, பளு எப்போதும் இராது.[96]

---

95. 'Conversation should be pleasant without scurrility, witty without affectation, free without indecency, learned without conceitedness, novel without falsehood.
— Shakespeare

96. (i) திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் அவர்கள் 'நித்திலக் குவியல்' திங்கள் இதழில் பேராசிரியர் அவர்களைப் பற்றி வரைந்துள்ள கட்டுரைகளைக் காண்க.

(ii) கடிதக் கலையிலும் கைவந்தவர் என்னும் உண்மைக்குச் சான்றாய் இணைப்பு x காண்க.

**கடவுள் உணர்வு:** பொன்னனைய கலையுணர்வு பொருந்திய பேராசிரியர் அவர்கள் மணி வாழ்வில் வைர ஒளி வீசுவது அவர்களுடைய கடவுள் உணர்வே. இளமை தொட்டே இறையுணர்வு நிறைந்த வாழ்க்கையை நடத்திய பெருமை பேராசிரியர் அவர்கட்கு உண்டு. சிவ வழிபாட்டில் சிறந்து விளங்கிய தந்தையார்க்குத் தவமைந்தராய்ப் பிறந்த அவர், இளமை தொட்டே இறையுணர்வோடு வாழ்க்கையை நடத்துவதில் மன நிறைவு கண்டுள்ளனர். பேராசிரியர் அவர்கள் எழுத்திலும் பேச்சிலும் ஊறிக்கிடக்கும் இவ்வுணர்வு, அவர்கள் விடும் ஒவ்வொரு மூச்சிலும் கலந்து இழைகிறது எனல் மிகையாகாது. சிறந்த சைவ சமயப் பற்றுடைய அவர்கள் சமரச நோக்குப் படைத்தவர்களாய்த் தொடக்க நாள் தொட்டு விளங்கியமையாலேயே அவர்கள் கிறித்தவ சமய அறிஞர்களைப்பற்றி எழுதிய நூல்களைப் படிக்கும்போதெல்லாம் 'இதை எழுதியவரினும் சிறந்த கிறித்தவர் இருத்தல் இயலுமோ!' என்று எண்ணுமாறு அமைந்துள்ளது. இந்த வகையில் வள்ளுவரும் இளங்கோவும் இந்நாட்டுச் சமயங்கள்பால் காட்டிய சமரசப் போக்கினைப் பேராசிரியர் அவர்கள் வெளிநாட்டுச் சமயங்கள்பாலும் காட்டியுள்ள பெருந்தகைமை போற்றி மகிழ்ந்து பின்பற்றற்கு உரியது. இவ்வுண்மையை ஆழ உணர்ந்து கிறித்தவ சமயப் பேரறிஞர்களே[97] போற்றியிருத்தல் ஈண்டு நினைவுகூரத்தக்கது.

97. திருக்காவலூர்க் கோவில், தந்துரை, பக். v—vi. பார்க்க.

உண்மையான சமயவுணர்வு வாழ்க்கையில் பொலிவுபெற வேண்டும்; வெற்று வாய்ச்சொல்லில் இருந்தால் பயனில்லை. அடக்கம்-ஒழுக்கம்-அருள் ஆகிய மூன்று சிறந்த பண்புகள் வாயிலாக (பேராசிரியர் அவர்களுடைய ஆழ்ந்த இறை உணர்வு) என்றென்றும் ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது.

தமிழ்மறை கண்ட திருவள்ளுவர், மாந்தர்க்கு உறுதி பயப்பனவாய் அவர்கள் பின்பற்றி ஒழுகுதற்குரியனவாய் வகுத்துள்ள எத்தனையோ அதிகாரங்கட்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் வாழ்க்கை வாழும் பேராசிரியர் அவர்கள் அடக்கமே உருவமாக அமைந்திருப்பதில் வியப்பொன்றும் இல்லை. ஆயினும், அவர்கள்பால் குடிகொண்டுள்ள பண்புகள் பலவற்றினும் சிறந்த அணியாய்த் திகழும் பண்பு அடக்கமே. அடக்கத்தால் உலகை ஆண்ட அண்ணல்களுள் பேராசிரியர் அவர்களும் ஒருவர். செருக்கு என்பதை ஒரு சிறிதும் எப்போதும் கொள்ளாமல் வாழ்ந்த அவர்கள் வாழ்க்கையைக் கருதும்போதெல்லாம் "நற்பண்புகள் அனைத்திற்கும் உலையாத அடிப்படை அடக்கமே"[98] என்றும், "உண்மையாகவே ஒரு பெரிய மனிதனை அறிவதற்குரிய முதல் ஆய்வு அவனது அடக்கப் பண்பே"[99] என்றும், "என்னை நீங்கள் 'சமயத்துறையில் முதலாவது எது?' என்று கேட்டால் நான் அதில் முதலாவது, இரண்டாவது, மூன்ருவது—ஏன்? — எல்லாமே அடக்கமுடைமை

98. "Humility is the solid foundation of all virtues"—Confucius.
99. 'I believe the first test of a truly great man is this humility' —Ruskin.

தான் என்று மறுமொழி பகர்வேன்,''[100] என்றும் சான்றோர்கள் கூறிய மொழிகளே நினைவுக்கு வரும்.

இங்ஙனம் அடக்கமே உருவாய பேராசிரியர் அவர்கள் எழுத்திலும் பேச்சிலும் செயலிலும் எண்ணத்திலும் ஊடுருவியுள்ள ஒழுக்க உணர்வு நமது வாழ்த்திற்கும் வணக்கத்திற்கும் உரியது.

**ஒழுக்கம்** எவ்வளவு எளிமையாகவும் இனிமையாகவும் பேசினாலும் எள்ளளவும் தரக்குறைவுடைய சொற்களேயோ கருத்தையோ பேராசிரியர் அவர்களிடம் எப்போதும் எதிர்பார்க்க முடியாது. இவ்வுண்மையை நினைக்கும்போதெல்லாம்,

'ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.'[101]

என்னும் திருக்குறளே நம் நினைவுக்கு வரும். பேராசிரியர் அவர்கள் சொற்களில் காணப்படும் இப் பண்பு அவர்கள் வாழ்க்கையின் எல்லாக் கூறுபாடுகளிலும் இலங்கக் காணலாம். பெரிய படிப்பும் பெரிய பதவியும் உடையவர் ஒழுக்கக் குறை உடையவர்களாய் இருப்பார்களாயின், அதனால் விளையக் கூடிய கேடுகள் நம்மால் கற்பனை செய்தற்கும் இயலாதன. அந்நிலையில் பேராசிரியர் அவர்கள் வாழ்க்கை ஒழுக்க மணங்கமழும் தன்மையதாய் அமைந்தது நாடு செய்த நல்வினைப் பயனே ஆகும்.

---

100. 'Should you ask me, 'what is the first thing in religion?' I should reply, the first, second, and third thing therein—nay. all—is humility'—Augustine.

(All from the The New Dictionary of thoughts)

101. திருக்குறள், 139.

அடக்கத்தையே இயற்கை நல்லணியாகவும் ஒழுக்கத்தையே உயிர்த்துடிப்பாகவும் கொண்டு விளங்கும் பேராசிரியர் அவர்கள் உள்ளம் அருளே வடிவாகியது. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள் பணியாற்றியபோதும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இடையருது தொண்டாற்றிய போதும் பேராசிரியர் அவர்கள் மாணவர்களிடம் காட்டிய அருளுடைமை நினைப்பார் நெஞ்சை நெகிழ்விப்பதாகும். தம்மைப் பகைவராய்க் கருதுவோருக்கும் அருள்பாலிக்கும் பண்பு படைத்தவர்கள் நம் பேராசிரியர் என்ருல், அவர்களுடைய அருளுடைமையை விளக்க வேறென்ன கூறவேண்டும்?

**அருள்**

பேராசிரியர் அவர்கள் தம்முடைய தனி வாழ்க்கையில் 'குடத்து விளக்காய்'ப் போற்றி வந்த இவ்வருளுடைமை சென்ற சில ஆண்டுகளாகக் 'குன்றின் மேலிட்ட விளக்காய்'க் காட்சி தரல் கண்டு உலகு கொண்டுள்ள உவப்புக்கும் வியப்புக்கும் எல்லை இல்லை. அலந்தோர்க்கும் அயர்ந்தோர்க்கும் ஓசை படாமல் எத்தனையோ உதவிகளைச் செய்துவரும் பேராசிரியர் அவர்கள் தம் நற்ருயார் பெயரால் இருபத்தையாயிரம் ரூபாய் அளித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அதே அளவு தொகை ஈந்து, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழாராய்ச்சிச் சொற்பொழிவுகட்கு ஏற்பாடு செய்துள்ளமைக்குத் தமிழுலகு என்றென்றும் மாரு நன்றி பாராட்

டுங் கடப்பாடுடையது.[102] பேராசிரியர் அவர்களின் வற்ரு அருள் உணர்வின் பயனுக இன்னும் தமிழகம் அன்னையார் சொர்ணம்மாள் பெயரால் காணப் போகும் அறங்கள் எத்தனை எத்தனையோ![103]

102. இவ்வறக்கட்டளைகள் சார்பில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் இது வரை நிகழ்ந்துள்ள சொற்பொழிவுகள் பற்றிய விவரத் துக்குப் பிற்சேர்க்கை பார்க்க.

103. (1) பேராசிரியர் தாம் வாழ்ந்த காலத்திலேயே சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளிக்கு ரூபாய் 5000 கட்டட நிதிக்கு நன்கொடை வழங்கிஞர். அப்பள்ளியில் அவர் பெயரால் ஓர் அறை உள்ளது. இந்திய இளைஞர் கிறித்துவ சங்கத்தில் பேராசிரியர் பெயரால் ஆண்டுதோறும் பேச்சுப்போட்டியில் வெற்றி பெறும் கல்லூரிக்கு வழங்க ஒரு சுழல் கிண்ணம் நிறுவி யுள்ள டாக்டர் சு. சங்கரராசு அவர்கள் மேற்படி பள்ளியில் பேராசிரியர் பெயரால் உள்ள அறையில் அணிசெய்ய பேராசிரியரின் திருவுருவப் படம் ஒன்றை வழங்கி உள்ளார். இப்படம் பேராசிரியர் அவர்கள் தனி மருத்துவராய் விளங்கியவரும் பேராசிரியர் நன் கொடை வழங்கிய காலத்துப் பள்ளியின் தலைவராய் இருந்தவருமாகிய டாக்டர் இரத்தினவேலு சுப்பிர மணியம் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

(2) பிள்ளைப்பேறில்லாமல் வாழ்ந்த பேராசிரியர் தம் சொந்த ஊராகிய திருநெல்வேலியில் ஒரு பிள்ளைப் பேறு விடுதி அமைய பெருவிருப்பம் கொண்டார். (தற்போது புதுவைத் தலைமை நடுவராக உள்ள) திரு. எஸ். மகராசன் அவர்களை ஒரே நிறைவேற்றுநராக அமைத்துப் பேராசிரியர் அவர்கள் வரைந்துள்ள விருப்பாவணத்தில் தமது உடைமைகள் அனைத்தும் திருநெல்வேலிப் பிள்ளைப் பேறு விடுதிக்கே அமைய வேண்டும் என்று எழுதியுள்ளார். பேராசிரியருடைய துணைவியார் திருமதி ஆழ்வார் சானகி அம்மையாரும் தம் கணவரைப்போன்றே தம் உடைமை எல்லாம் அப் பிள்ளைப்பேறு விடுதிக்கே உரியன என்று தனியொரு விருப்பாவணம் எழுதிஞர். இருவரும் இப்போது இல்லை. எனினும் அவர்கள் ஏற்படுத்திய அறம் வளர்

## 4. பரிசும் பாராட்டும்

தமிழ் மொழிக்குத் தலைசிறந்த பரிசுகளையும் பாராட்டுகளையும் பலவாக நல்கிய பேராசிரியர் அவர்களது வாழ்க்கை பெற்ற பரிசுகளும் பாராட்டுகளும் பலவாகும். அவற்றுள் சிலவற்றை மட்டுமேனும் ஈண்டு நினைவுகூர்தல் பொருத்தம் அன்றோ? பேராசிரியர் அவர்கள் எத்தனையோ புதுப்புதுத் துறைகட்குத் தமிழிலக்கிய உலகில் தோற்றுவாய் செய்தவர்கள். அவர்களையே முதல்வராகக்கொண்டு பலப்பல பரிசுகளும் பாராட்டுகளும் தமிழறிஞர்கட்குத் தரும் மரபும் தமிழ் நாட்டில் தோன்றியதும் வேரூன்றியதும் சாலச் சிறப்புடையன அல்லவா?

பிற்காலத்தில் தமிழ் வளர்க்கும் தலைசிறந்த நிலையங்களாய் விளங்கிய பெருமை தமிழ் நாட்டு மடங்கட்கு உண்டு.

அந்த மரபில் வந்த தருமை ஆதீனம் 1950-ஆம் ஆண்டில் பேராசிரியர் அவர்கட்குச் 'சொல்லின் செல்வர்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. எத்தனையோ ஆண்டுகளாகப் பேராசிரியர் அவர்கள் வழங்கிய சொல்லமுதைப் பருகிப் பருகித் திளைத்த மக்கள் தங்கள் நாவார மனமாரச் சொல்லி வந்த

---

கிறது—வாழ்கிறது. பேராசிரியர்—அவர் துணைவியார் உடைமைகள் ஈந்த ஒரு லட்ச ரூபாய்க்கு ஈடாகத் தமிழக அரசு ஒரு லட்ச ரூபாய் வழங்கியது. இதன் பயனாகத் திருநெல்வேலியில்—'டாக்டர் ரா.பி.சே. பிள்ளைப் பேறு விடுதி—கண்டியப்பேரி' கால் கொண்டுள்ளது.

பட்டத்தையே அவர்கட்கு அளித்துச் சிறப்பித்தது வாயிலாகத் தருமை பெருமை பெற்றது. "தமிழ் எழுத்தாளர் சங்கம் பேராசிரியர் கல்கி அவர்கள் தலைமையில் சிறப்புற இயங்கியபோது முதன் முத லாகத் தலைசிறந்த எழுத்தாளர்கட்குக் கேடயம் வழங்கும் நன்மரபைத் தோற்றுவித்தது. அதன்படி முதன்முதல் (1954) தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கேடயம் பெற்ற தமிழ்ப்புலவர் சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களே.

அடுத்துக் குறிக்கத் தக்கன தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 1948-ஆம் ஆண்டில் காலஞ் சென்ற தமிழ்ப் பெரியார் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் சங்கத் தமிழ் வளர்த்த மதுரையில் நடைபெற்ற முதற்பெரு மாநாட்டில் பேராசிரியர் அவர்களுடைய புகழ் பெற்ற ஆராய்ச்சி நூலாகிய 'ஊரும் பேரும்' என்பது தலைசிறந்த ஆராய்ச்சி நூல் என்பதற்காக முதன் முதலாகச் சென்னை அரசின் ரூ 500- பரிசை தமிழ் வளர்ச்சிக் கழக வாயிலாகப் பெற்றதும், 1955-ஆம் ஆண்டில் பேராசிரியர் அவர்களுடைய புகழ் பெற்ற கட்டுரைத் தொகுதியாகிய 'தமிழின் பம்', 'விடுதலைக்குப்பின் வெளி வந்த சிறந்த தமிழ் நூல்' என்பதற்காக முதன் முதல் இந்திய அரசின் ரூ. 5000 பரிசை சாகித்திய அகாதமி வாயிலாகப் பெற்றதுமே ஆகும்.

பேராசிரியர் அவர்கள் தம் வாழ்நாளில் பெற்ற சிறப்புகள் அனைத்திற்கும் தலைமை தாங்கும் பெருஞ் சிறப்பு, சென்னைப் பல்கலைக் கழகம் தனது நூற்

ருண்டு விழாவின்போது (1957) 'இலக்கியத் துறைப் பேரறிஞர்'[104] என்று அவர்க்கு வழங்கிய பட்டமே ஆகும். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முறையாகப் பயின்ற மாணவர்களுள் தமிழ்த் துறையில் உழைத் தமைக்காக 'இலக்கியப் பேரறிஞர்' என்ற பட்டம் முதல் முதலாக வழங்கப்பெற்றது, பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கட்கே ஆகும். சென்னைப் பல் கலைக்கழகம் வாயிலாகப் பேராசிரியர் அவர்கள் பெற்ற பெருஞ்சிறப்புச் செந்தமிழ் மொழிக்குக் கிடைத்த பெருஞ்சிறப்பு என்று அறிஞர் உலகம் எக்களிப்புக் கொண்டது; தமிழ் பற்றிய தலைசிறந்த ஆங்கில முத்திங்கள் வெளியீடாகிய 'தமிழ்ப் பண் பாடு'[105] (Tamil culture) பேராசிரியர் அவர்கள்

104. (1) இப்பட்டம் வழங்கப்பெற்றபோது துணைவேந்தர் டாக்டர் சர். ஏ. எல். முதலியார் படித்த அறிமுகப் பாராட்டு (Citation) வருமாறு:

Here we have a great scholar in Tamil one whose erudition has been acknowledged by eminent authorities. Professor R. P. Sethu Pillai is the first professor of Tamil in the University of Madras and is the author of many valuable publications. His great literary gifts received appropriate recognition by the Presidential award bestowed on him. In South India, his scholarship has been greatly appreciated. We, in the University, regard him as a great savant in Tamil literature.

Mr. Chancellor, I present to you Professor R. P. Sethu Pillai, who has been unanimously recommended by the syndicate and the Senate of this university as a fit and proper person by reason of his eminent position and attainments, to receive the Degree of Doctor of literature (Honoris causa) to which I pray that he may be admitted.

இக் குறிப்பையும் பேராசிரியர் அவர்கள் பட்டம் பெற்றபோது எடுக்கப்பெற்ற படத்தையும் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாகிய Centenary Celebrations 1957 என்னும் நூலில் காண்க.

105. Tamil culture—Professor Sethu Pillai Doctorate Commemoration Number—Vol. vii—No. 3

பெயரால் சிறப்பு மலர் வெளியிட்டுச் சீர் செய்தது.

இதுபோழ்து (1961) பேராசிரியர் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கால் நூற்றுண்டுக் காலம் ஆற்றிய அருந்தமிழ்ப் பணியினைப் போற்றி எடுக்கப்பெறும் வெள்ளிவிழாவும் தனிச்சிறப்பு வாய்ந்தது அன்றோ? பெருமைசான்ற எத்தனையோ துறைகளுள்ளும் வகைகளுள்ளும் முதன்மை பெற்று விளங்குவது போன்றே சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கும் அவர்களைப் போற்றிப் பெரியதொரு பாராட்டு மலர் வெளியிட்டும் அழகியதொரு நெய்வண்ண ஓவியப் படம் திறந்தும், அரியதோர் அறக்கட்டளை நிறுவியும் அவர்தம் அண்மை நூலாகிய 'ஆற்றங் கரையிலே' என்பதை வெளியிட்டும் தமிழன்பர்கள் செய்யும் விழா,[106] புதுவாழ்வு பெற்றிலங்கும் தமிழ்த்

106. (1) 1961 ஏப்ரல் தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் சென்னைப் பல்கலைக்கழகப் (பழைய) பட்டமளிப்பு விழா மண்டபத்தில் நடைபெற்ற பேராசிரியர் வெள்ளி விழாப் பாராட்டுக் கூட்டத்தில் இப்படத்தை விழாத் தலைவர்—(வெள்ளிவிழாத்) துணைவேந்தர் டாக்டர் சர் ஏ. எல். முதலியார் திறந்துவைத்தார்.

(2) வெள்ளிவிழா மலரை தற்போது மலேசியப் பல் கலைக்கழகத்தின் இந்தியத் துறைப் பிரிவுத் தலைவராய் உள்ள பேராசிரியர் அருட்டிரு—தனிநாயக அடிகளார் வெளியிட்டார்.

(3) 'ஆற்றங்கரையினிலே' நூலை தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் வெளியிட்டார்.

(4) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் திரு. தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் செயற்பட்ட வெள்ளிவிழாக் குழு இவ் வாறு பேராசிரியர் அவர்கட்குப் பலவகையாலும் செய்த பாராட்டு என்றும் போற்றி மகிழ்தற்கு உரியது.

தாய்க்குத் தமிழ் மக்கள் எடுக்கும் தனிப்பெரு விழா வன்றோ?

பேராசிரியர் டாக்டர் ரா. பி. சே. அவர்கள் அருந்தமிழ்ச் செல்வர்; பெரும்புகழ்ச் செல்வர். அதனாலேதான் போலும் அவர் 'சொல்லின் செல்வர்' என்று போற்றப் பெறுகின்றார். 'சொல்' என்ற சொல்லுக்கு 'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும்'[107] பொருள் தரும் சொல்லென்றும் எஞ்சாத வாழ்க்கைக்குப் பின்னும் எஞ்சி நிற்கும் எச்சமாகிய புகழ் என்றும் இருபொருளும் உண்டன்றோ?[108] அந்த வகையில் இரு பொருளுக்கும் உரிய 'சொல்லின் செல்வராய்' விளங்கும் பேராசிரியர் அவர்களின் பெருந்தமிழ்த் தொண்டை ஆராயும் இக்கட்டுரையில் அவர்தம் தொண்டின் பயனெல்லாம் தமிழகம் நுகர அருள் பாலித்த செப்புதற்கரிய செழுஞ் சுடர்க் கடவுளை—அடியார் சிந்தையுட்புகுந்த செல்வத்தை—சிவபெருமானை — பரம்பொருளை — நாம் நன்றியுடன் தொழக் கடமைப் பட்டவர்கள் ஆவோம். அவ்வாறே தென்னாடுடைய சிவனருளால் எந்நாட்டவரும் போற்றப் பிறந்த மைந்தரை ஆராக் காதலோடு பெற்று எடுத்து வளர்த்த அன்னையார் சொர்ணம்மாளையும் தந்தையார் பிறவிப் பெருமாள் பிள்ளையையும் நாம் வாழ்த்தி வணங்கக் கடமைப் பட்டவராவோம். அத்துடன் ஒப்பரிய வாழ்க்கைத் துணைவியாராய்ப் பொருந்திப் பல்லாண்டுகளாய்ப் பேராசிரியர் அவர்கட்கு நலம் பாலிக்கும் திருமிகு

107. நன்னூல்—பதவியல்-1

108. Tamil lexicon—Vol. III—p. 1654.

ஆழ்வார் சானகி அம்மையாரையும் நாம் போற்றி வணங்கக் கடமைப்பட்டவராவோம்.

பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் நீடு வாழ்க! அவர்தம் பெருந்தமிழ்த் தொண்டு வெல்க!*

* கடந்த சில ஆண்டுகளாவே நீரிழிவுக்கு இரையான பேராசிரியர் தமக்கு நடந்த வெள்ளி விழாவிலும் கலந்துகொள்ள முடியா நிலையில் நோய்வாய்ப்பட்டார். நன்றியோடு தமிழ் மக்கள் எடுத்த விழாபற்றி நினைந்து நினைந்து இன்பக் கண்ணீர் வடித்த நிலையில் ஏப்ரல் 25ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். அவர்தம் துணைவியாரும் ஓராண்டுக்குள்ளேயே அவரைப் பின்பற்றி ஆண்டவன் அடி அடைந்தார்.

## இணைப்பு—I

### பேராசிரியர் டாக்டர் ரா. பி. சே. அவர்கள் இயற்றிய நூல்கள்
### (கால முறைப்படி)

| வரிசை எண் | நூலின் பெயர் | வெளியிடப் பட்ட ஆண்டு |
|---|---|---|
| 1. | தமிழ் நாட்டு நவமணிகள் | 1926 |
| 2. | திருவள்ளுவர் நூல் நயம் | ,, |
| 3. | சிலப்பதிகார விளக்கம் | ,, |
| 4. | வீரமாநகர் | 1932 |
| 5. | கால்டுவெல் ஐயர் சரிதம் | 1936 |
| 6. | கந்தபுராணத் திரட்டு* | 1944 |
| 7. | வேலும் வில்லும் | 1944 |
| 8. | தமிழ் விருந்து | 1945 |
| 9. | கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர் | 1946 |
| 10. | தமிழகம்—ஊரும் பேரும் | 1946 |
| 11. | திருக்காவலூர்க் கோவில் | 1947 |
| 12. | தமிழர் வீரம் | 1947 |
| 13. | தமிழின்பம் | 1948 |
| 14. | கடற்கரையிலே | 1950 |
| 15. | வழிவழி வள்ளுவர் | 1953 |
| 16. | Words and their Significance | 1953 |
| 17. | வேலின் வெற்றி | 1954 |
| 18. | Tirukkural—Ellis commentry* | 1955 |
| 19. | பாரதியார் இன்கவித் திரட்டு* | 1957 |
| 20. | செஞ்சொற் கவிக்கோவை* | 1957 |
| 21. | Dravidian comparative vocabulary, vol. I | 1959 |
| 22. | தமிழகம்—அலையும் கலையும் | 1958 |
| 23 | தமிழ்க் கவிதைக் களஞ்சியம்* | 1960 |
| 24. | ஆற்றங்கரையினிலே | 1961 |
| 25. | Common Dravidian Proverbs | 1961 |

* இவ்வுடுக்குறியிட்டன பதிப்பு நூல்கள்

# இணைப்பு—II

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாகிய கிழக்குலகக்கலை ஆய்வு மலரில் (Annals of oriental research) வெளியிட்ட கட்டுரைகள் (கால முறைப்படி)

| வரிசை எண் | கட்டுரைகளின் தலைப்பு | வெளியிடப்பட்ட தொகுதி எண் | வெளியிட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | Words and their Significance | vol. I | 1943—44 |
| 2 | Tamii—Literary and Colloquial | Vol. II—Part II | 1944—45 |
| 3. | do | Vol. III—Part I | 1945—46 |
| 4. | do | Vol. III—Part II | 1945—46 |
| 5. | Place name suffixes in Tamil | Vol. IV—Part I | 1946—47 |
| 6. | do | Vol IV—Part II | 1946—47 |
| 7. | do | Vol. V—Part I | 1946—47 |
| 8. | do | Vol. V—Part II | 1947—48 |
| 9. | கம்பரும் கச்சியப்பரும் | தொகுதி 6 பகுதி 2 | 1948—49 |
| 10. | தேம்பாவணி—நாட்டு வளம் | தொகுதி 9 பகுதி 2 | 1951—52 |
| 11. | Right Versus Might | Vol. XI, Parts 1 & 2 | 1953—54 |
| 12. | All India Oriental conference Presidential address (Dravidian Section) | Vol. XII, Parts 1 & 2 | 1954—55 |

## இணைப்பு —III

### கலைக் களஞ்சியம் தொகுதிகட்கு உதவிய கட்டுரைகள்

### (கால முறைப்படி)

| வரிசை எண் | கட்டுரைகளின் தலைப்பு | வெளியிடப் பட்ட தொகுதி |
|---|---|---|
| 1. | அரசியல் கருத்துகள் | தொகுதி—I |
| 2. | இளங்கோவடிகள் | ,, —II |
| 3. | ஊரும் பேரும் | ,, —II |
| 4. | கம்பர் | ,, —III |
| 5. | கம்ப ராமாயணம் | ,, —III |

# இணைப்பு—IV

## பல்வேறு சிறப்பு மலர்கட்கு எழுதிய கட்டுரைகளின் பட்டியல்

| வரிசை எண் | கட்டுரையின் தலைப்பு | வெளியிடப்பட்ட மலரின் பெயர் |
|---|---|---|
| 1. | வீரமாமுனிவர் நாடு | கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா மலர் —தஞ்சை |
| 2. | Missionary Services to Tamil Literature | C. R. Reddi Commemoration Volume —Andhra University |
| 3. | The Dravidian Philologist | Radha Kumuda Mukherjee Presentation Volume (1943) |
| 4. | Tamil India and Ceylon | Rev. Kingsbury Commemoration Volume, Colombo |
| 5. | The Rival states in the Ramayana | Golden Jubilee Commemoration Volume of the Indusadanam, Jaffna |
| 6. | Some historical place names of South India | K. V. Rangaswami Iyengar Commemoration Volume, Madras. |

| வரிசை எண் | கட்டுரையின் தலைப்பு | வெளியிடப்பட்ட மலரின் பெயர் |
|---|---|---|
| 7. | கம்பன் கண்ட தமிழகம் | இராமகிருஷ்ண விஜயம் வெள்ளிவிழா மலர் |
| 8. | இருவர் சாட்சி | சென்னைக் கம்பர் கழகக் கம்பர் மலர் |
| 9. | புறநானூற்று மாநாட்டுத் தலைமையுரை | புறநானூற்று மாநாட்டுச் சொற்பொழிவுகள். (சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு) |
| 10. | The Madras state and Tamil Literature | Republic Day Souvenir published by the Govt. of Madras. (1951) |
| 11. | ஆடையும் அணியும் | மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர் |
| 12. | Cognate Terms and Cultural Unity | Madras Corporation Chronicle |
| 13. | திருக்குறள் — எல்லீசர் உரை | தென்காசித் திருவள்ளுவர் கழக வெள்ளி விழா மலர் |
| 14. | Patrons & Place names | Raja Sir Annamalai Chettiar Commemoration Volume |
| 15. | Tamil literature | Literatures In Indian Languages published by Govt. of India |

(இப்பட்டியல் முழுமையானதன்று பேராசிரியர் வேறு மலர்களில் எழுதிய கட்டுரைகளின் விவரம் அறிந்தோர் அன்புகூர்ந்து அறிவிக்கவும்).

# இணைப்பு—V

**அனைத்திந்தியக் கீழ்க்குலகக் கலை மாநாட்டில் நிகழ்த்திய ஆராய்ச்சி உரைகளின் தலைப்புகள்**

| வரிசை எண் | மாநாடு நடைபெற்ற இடம் | ஆண்டு | ஆராய்ச்சியுரையின் தலைப்புகள் |
|---|---|---|---|
| 1 | திருவனந்தபுரம் | 1937 | The 'Standard language of South India' |
| 2. | திருப்பதி | 1940 | Dialectical variation of the distinctive consonants of Tamil |
| 3. | காசி | 1944 | Semantics with Special reference to Tamil |
| 4. | நாகபுரி | 1946 | The Sacred place-names of Tamilnad |
| 5. | பம்பாய் | 1949 | The Pandiya Dialect of Tamil |
| 6. | ஆமதாபாது | 1953 | The Linguistic Value of Anandharangam Pillai's Diary |
| 7. | அண்ணாமலை நகர் | 1955 | Presidential address at the Dravidian Section of the Conference |

## இணைப்பு—VI

### பேராசிரியர் பணியாற்றிய வல்லுநர் குழுக்கள்

1. சென்னை அரசினர் நியமித்த கவி பாரதியார் நூல்கள் வெளியீட்டுக் குழு.
2. இந்திய அரசினர் அரசியலமைப்பைத் தலைமை யான இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும் பொருட்டு அமைத்த அரசியலமைப்புச் சொற்கள் மொழியாக்க வல்லுநர் குழு, புது தில்லி.
3. சாகித்திய அகாதமியில் அறிவுரைக் குழு, ஆட்சிக் குழு, புது தில்லி.
4. தென்னிந்திய மொழிகள் புத்தக அறப்பொறுப்பின் அறிவுரைக்குழு.
5. சென்னை அரசினர், சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம் தயாரித்த ஆட்சிச் சொற்களை முடிவு செய்ய அமைத்த வல்லுநர் குழு.
6. அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கம்பராமாயண ஆராய்ச்சிப் பதிப்புக் குழுத்தலைவர்.
7. சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் அறிவுரைக் குழுத்தலைவர்.

# இணைப்பு—VII

**பேராசிரியர் அவர்களிடம் ஆராய்ச்சி புரிந்து பட்டம் பெற்றோர்:**

| வரிசை எண் | மாணவர் பெயர் | ஆராய்ச்சியின் தலைப்பு |
|---|---|---|
| | **டி. லிட். (கல்கத்தா)** | |
| 1 | கே. மகாதேவ சாஸ்திரி | தெலுங்கு மொழியின் வரலாற்றிலக்கணம் |
| | **பிஎச். டி. (இந்தி)** | |
| 2 | சு. சங்கரராசு நாயுடு | கம்ப ராமாயணமும், துளசி ராமாயணமும் ஓர் ஒப்பு நோக்கு |
| | **எம். லிட்.** | |
| 3 | திரு. அழகிய சொக்கலிங்கம் | பழந்தமிழக வரலாற்றுச் சிறப்பு இடங்கள் |
| 4 | எம். கனக சுந்தரி | சிலப்பதிகாரச் சொற்கள் |
| 5 | பி. எஸ். இந்திரா | சங்கச் சொற்பொருளாய்வு |
| 6 | இராம. சண்முகம் | சங்கத் தமிழர் சமூக வாழ்க்கை |
| 7 | ப. பாலசுப்பிரமணியம் | தொண்டைமண்டல இலக்கியம் |
| 8 | வி. டி. பாலசுப்பிரமணியன் | திருநாவுக்கரசர் தேவாரம் |
| 9 | எம். ஈ. சரசுவதி | பெரியபுராணப் பெண்மணிகள் |
| 10 | எஸ். இராசலட்சுமி | திருஞானசம்பந்தர் தேவாரம் |

| வரிசை எண் | மாணவர் பெயர் | ஆராய்ச்சியின் தலைப்பு |
|---|---|---|
| 11 | கே. வி. தாட்சியாயணி | கம்பராமாயணத்தில் அரசியல் கருத்துகள் |
| 12 | கோ. சங்கரராசுலு | தமிழிலக்கியத்தில் சமயக் கருத்துகளின் வளர்ச்சி |
| 13 | எஸ். குமாரவேலு | கம்ப ராமாயணத்தில் பரதன் |
| 14 | ஆ. ரா. இந்திரா | கம்ப ராமாயணத்தில் சிறு பாத்திரங்கள் |
| 15 | ந. சஞ்சீவி | புறநானூற்று ஆராய்ச்சி |
| 16 | மு. க. தங்கவேல் | பழந்தமிழ் இலக்கியத்தில் முருகன் |
| | **பிஎச். டி.** | |
| 17 | * தவத்திரு. ஞானப்பிரகாச அடிகளார் சே.ச. | வீரமாமுனிவர் |
| 18 | * கே மீனாட்சிசுந்தரம் | தமிழுக்கு ஐரோப்பியர் தொண்டு |

*சிறிது காலம் பேராசிரியர் அவர்களிடமும் பின்னர்த் துணைப்பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களிடமும் ஆராய்ச்சி புரிந்து பிஎச். டி. பட்டம் பெற்றனர்.

## இணைப்பு—VIII

### அன்னை சொர்ணம்பாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்*

| வரிசை எண். | சொற்பொழிவு நிகழ்ந்த கல்வி ஆண்டு | சொற்பொழிவாளர் பெயர் | சொற்பொழிவின் பொருள் |
|---|---|---|---|
| 1 | 1958—'59 | திரு. சு. நடேச பிள்ளை (இலங்கை) | திருவள்ளுவர் காலம் |
| 2 | 1959—'60 | தவத்திரு. சேவியர் தனிநாயகம் | தமிழ்ப்பண்பாட்டின் சில கூறுகள் |
| 3 | 1960—'61 | டாக்டர் ப. நடராசன் | திருக்குறளில்பொருளியல் |
| 4 | 1961—'62 | கு. கோதண்டபாணிப் பிள்ளை | காமத்துப்பால் |
| 5 | 1962—'63 | தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் | திருவள்ளுவர் மெய்யியல் |
| 6 | 1963—'64 | டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி | திருக்குறள் அறவியல் |
| 7 | 1964—'65 | திரு. நல். முருகேச முதலியார் | திருக்குறளில்ஆட்சியியல் |
| 8 | 1965—'66 | டாக்டர் மு. அறம்வளர்த்தான் | தற்கால உலகிற்குத் திருக்குறள் |
| 9 | 1966—'67 | கே. எம். பாலசுப்பிரமணியம் | ,, ,, |
| 10 | 1967—'68 | திரு. மா. சண்முகசுப்பிரமணியம் | திருக்குறளிற் சட்டவியல் |
| 11 | 1968—'69 | திரு. ச. ஆறுமுக முதலியார் | திருக்குறள் பொதுமை |
| 12 | 1969—'70 | திரு. பாலூர்-கண்ணப்ப முதலியார் | புனிதவதியார் நூல்கள் |

1. இறுதி இரண்டு தவிரச் சொற்பொழிவுகள் யாவும் ஆங்கிலத்தில் நிகழ்த்தப் பெற்றவை.

2. சொற்பொழிவுகள் சென்னைப் பல்கலைக் கழக வெளியீட்டகத்தில் விலைக்குக் கிடைக்கும்.

3. Annals of Oriental Research என்ற சென்னைப் பல்கலைக் கழக வெளியீட்டில் பெரும்பான்மைச் சொற்பொழிவுகள் அச்சேறியுள்ளன.

4. திருவள்ளுவர் காலம் பற்றிப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் முடிவுகளைத் தூள் தூளாக்கிய திரு. நடேச பிள்ளை அவர்களின் சொற்பொழிவு (இவ்வரிசையில் முதல் சொற்பொழிவு) பாதுகாத்து அச்சேறாமல் போனமை நினைந்து நினைந்து வருந்தற்குரியது; தமிழர் செயல் திறனின்மையைச் சுட்டிக் காட்டுவது.

5. திரு. மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் சொற்பொழிவின் கருத்துகளின் விரிவை அவர்தம் 'குறள் கூறும் சட்டநெறி' என்ற நூலில் (சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு–1967ல்) கண்டு மகிழலாம்.

# இணைப்பு—IX

## பேராசிரியர் வெள்ளி விழா நினைவுச் சொற்பொழிவுகள்

| வரிசை எண். | சொற்பொழிவு நிகழ்ந்த கல்வி ஆண்டு | சொற்பொழிவாளர் பெயர் | சொற்பொழிவின் பொருள் |
|---|---|---|---|
| 1 | 1962—'63 | டாக்டர் கமில் சுவெலபில் | * தமிழ் மொழியின் வரலாற்றிலக்கணம் |
| 2 | 1963—'64 | டாக்டர் அ. சிதம்பரநாதன் | சிலப்பதிகாரம் |
| 3 | 1964—'65 | மயிலை சீனி. வேங்கடசாமி | சேரவேந்தன் செங்குட்டுவன் |
| 4 | 1965—'66 | பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை | தமிழ்—அன்றும் இன்றும் |
| 5 | 1966—'67 | பேராசிரியர் சி. விசுவநாத ஐயர் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 6 | 1967—'68 | டாக்டர் ஆர் ஈ. ஆஷர் | * தமிழ் உரை நடையில் சில திருப்பு முனைகள் |
| 7 | 1968'—69 | பேராசிரியர். பூ. ஆலாலசுந்தரனார் | தேவார திருவாசகங்களில் ஒன்பான் சுவைகள் |
| 8 | 1969—'70 | பேராசிரியர். க. வச்சிரவேல் முதலியார் | திருக்குறளில் அறம் |

1. முதல் மூன்று சொற்பொழிவுகள் சென்னைப் பல்கலைக்கழக நூல் விற்பனை நிலையத்தில் விலைக்குக் கிடைக்கும்.

2. வரிசை எண் 1, 2, 3, உடைய சொற்பொழிவுகள் Annals of Oriental Research என்ற சென்னைப் பல்கலைக் கழக வெளியீட்டில் அச்சேறியுள்ளன.

4. 'தமிழ் – அன்றும் இன்றும்' தனி நூலாக அச்சிடப்பெற்று, பாரி நிலையம், சென்னை-1 என்ற முகவரியில் விற்பனையாகிறது.

* இவ்வுடுக்குறியிடப்பெற்றவை ஆங்கிலப் பேச்சுகள்.

# இணைப்பு—X

## அன்னை சொர்ணம்பாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் (அண்ணமலைப் பல்கலைக் கழகம்)

| வரிசை எண். | சொற்பொழிவு நிகழ்ந்த ஆண்டு | சொற்பொழிவாளர் பெயர் | சொற்பொழிவுப் பொருள் |
|---|---|---|---|
| 1 | 1959 | டாக்டர் திரு. மு. வரதராசனார் | இளங்கோவடிகள் |
| 2 | 1960 | டாக்டர் தனிநாயக அடிகளார் | அற இயல் உலகில் திருவள்ளுவர் |
| 3 | 1961 | ... ... ... | ... |
| 4 | 1962 | திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் | பெருங்கதை-கொங்குவேள் |
| 5 | 1963 | திரு. பொ. திரிகூடசுந்தரம்பிள்ளை | சிலப்பதிகாரம் |
| 6 | 1964 | டாக்டர் வ. சுப. மாணிக்கம் | கம்பர் |
| 7 | 1965 | டாக்டர் மா. இராசமாணிக்கம் | சேக்கிழார் |
| 8 | 1966 | ... ... ... | |
| 9 | 1967 | பேராசிரியர் ச. ஆறுமுகமுதலியார் | தமிழ் இலக்கியத்தில் சமயக் கிளர்ச்சிக் காலமும் அதில் திருநாவுக்கரசருக்கு உரிய இடமும் |
| 10 | 1968 | சு. கோதண்டபாணிப் பிள்ளை | தொல்காப்பியர் |
| 11 | 1969 | ச. தண்டபாணி தேசிகர் | சங்க இலக்கியம் |

* முதற்சொற்பொழிவு பாரி நிலையத்திலும் பிற அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலும் கிடைக்கும்.

# இணைப்பு—XI

**பேராசிரியர் அவர்கள் நூல்கள் சிலவற்றிற்கு அணிந்துரை வழங்கிய சான்றோர்கள்** (கால முறைப்படி)

| வ. எண் | நூலின் பெயர் | அணிந்துரை வழங்கிய சான்றோர் பெயர் | அணிந்துரை தந்த நாள் அல்லது ஆண்டு |
|---|---|---|---|
| 1 | தமிழ் நாட்டு நவமணிகள் | சர். தி. கெ. சிவஞானம் பிள்ளை | 2—2—1926 |
| 2 | திருவள்ளுவர் நூல் நயம் | பேராசிரியர். கா. சுப்பிரமணிய பிள்ளை | 1926 |
| 3 | வீரை மாநகர் | திரு. வெ. ப. சுப்பிரமணிய முதலியார் | 16—11—1932 |
| 4 | தமிழகம் ஊரும் பேரும் | திரு. திரு. வி. கலியாண சுந்தரனர் | 16—5—1946 |
| 5 | திருக்காவலூர்க்கோவில் | அருட்டிரு. நல்லூர். ஞானப்பிரகாசர் | 1947 |
| 6 | தமிழர் வீரம் | நாவலர். ச. சோமசுந்தர பாரதியார் | 6—5—1947 |
| 7 | தமிழின்பம் | சுத்தானந்த பாரதியார் | 1948 |
| 8 | ஆற்றங்கரையினிலே | திவான்பகதூர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை | 1961 |

## இணைப்பு—XII

**பேராசிரியர் அவர்களிடம் மட்டுமே அணிந்துரை பெற்ற நூல்கள்** (காலமுறைப்படி)

| வ. எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் அல்லது பதிப்பாளர் பெயர் | அணிந்துரை வழங்கிய நாள், ஆண்டு |
|---|---|---|---|
| 1 | இளந்தமிழா! | திரு. ம. ப. பெரியசாமி தூரன் | 4—10—1949 |
| 2 | சூரியநாராயண சாஸ்திரி | பேராசிரியர் ந.சுப்பிரமணியன் | 5—3—1950 |
| 3 | திருக்குறளும் பொது நோக்கமும் | பேராசிரியர். ஆறுமுக முதலியார் | 1—12—1951 |
| 4 | மலரும் உள்ளம் | திரு அழ. வள்ளியப்பா | 2—3—1954 |
| 5 | கலை உள்ளம் | திருமதி. சிதம்பரநாதன் பெரியநாயகி | 25—11—1954 |
| 6 | செட்டி நாடும் தமிழும் | திரு. 'சோமலெ' | 1—12—1954 |
| 7 | நல்ல தமிழ் எழுத வேண்டுமா? | திரு. அ. கி. பரந்தாமனுர் | 1—1—1955 |
| 8 | நாமிருக்கும் நாடு | டாக்டர் மு. ஆரோக்கியசாமி | 15—12—1955 |
| 9 | குறிஞ்சிப் பாவை | திரு. ம. ரா. இளங்கோவன் | 15—3—1958 |

| வ எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் அல்லது பதிப்பாளர் பெயர் | அணிந்துரை வழங்கிய நாள், ஆண்டு |
|---|---|---|---|
| 10 | தென்றலிலே தேன் தமிழ் | டாக்டர் மொ. அ. துரை-அரங்கசாமி | 15—9—1958 |
| 11 | காற்றிலே மிதந்தவை | திரு. ந. சஞ்சீவி | 28—10—1958 |
| 12 | அணியும் மணியும் | திரு. ரா. சீனிவாசன் | 1959 |
| 13 | சைவசமயச் சொற்பொழிவுகள் | திரு. வா. தி. மாசிலாமணி வாலாசாபாது இ.ம பாடசாலை | 21—12—1959 |
| 14 | கட்டுரைச் செல்வம் | திரு.வளவன் பாண்டியன் | 4—3—1961 |

## இணைப்பு—XIII

'இந்து'வில் வந்தது:

**The HINDU**

**Fifty Years Ago**

**Aug. 15 to 21 - 1916**

TAMIL RESEARCH

At the inaugural meeting of the Pachaiyappa's College Tamil Sangam held yesterday evening (August' 14) at the Pachaiyappa's Hall, the Hon'ble Mr. Justice Sadasiva Iyer presiding, Dewan Bahadur L. D. Swamikannu Pillai delivered an interesting address on Tamil Research. The audience was fairly large. The proceedings commenced with a prayer after which the Secretary read the report of the past year. The chairman then distributed prizes to Students SETHU and Sampat, who were the winners in the competitions in Tamil oratory and Tamil Composition.

---

இந்தச் சேது யார்? நம் பேராசிரியர்தாமே? சம்பத்து யார்? அறிவார் அறிவிப்பின் அடியேன் நன்றி அவர்க்கு உரித்தாகும்.

## இணைப்பு-XV

நக்கீரர் கழகச் செயலாளர் **திரு. சிறுவை மோகனசுந்தரம்** அவர்கட்குப் பேராசிரியர் எழுதிய கடிதம்:

**ரா. பி. சேதுப்பிள்ளை**, பி. ஏ., பி. எல், திருக்குற்றாலம்
தலைமைத் தமிழ் விரிவுரையாளர், தென்காசி வழி
சென்னைப் பல்கலைக்கழகம் 13-7-1944.

**அன்புள்ள ஐயா.**

திருமண அழைப்பு, திருக்குற்றாலம் வந்து சேர்ந்தது. நக்கீரர் கழகத்தின் வாயிலாக நலம் பல புரியும் நற்றமிழ்த் தொண்டராய வீர மோகன சுந்தரரை நேரில் வாழ்த்துதற்குரிய வாய்ப்பின்மையை நினைந்து வருந்தினேன். மனையறத்தை மேற்கொண்ட மோகனரும் அனசூயை அம்மையும் அறிவறிந்த வீரமக்களைப் பெற்று அருந்தமிழ்த்தொண்டு புரியும் வண்ணம் இறைவன் திருவருளை வேண்டுகிறேன்.

அன்பன்,
ரா. பி. சேதுப்பிள்ளை.

---

அவரவர் பண்பறிந்து பாராட்டும் பேராசிரியர் திறம் பெரிது.

—ந. ச.

## இணைப்பு—XIV

பேராசிரியர் தம் ஆருயிர் நண்பர்களுள் ஒருவராகிய திரு. **ந. சொ. அரு. அருணாசலம் செட்டியார்** (தலைவர், சொக்கலிங்க வித்தியா சாலை, லட்சுமிபுரம்) அவர்கட்கு வரைந்த கடிதம் :

திருநெல்வேலி,
**18-3-1942.**

**அன்புள்ள ஐயா,**

நலம். மூன்று நாளைக்கு முன் இங்கு வந்தேன். இன்று மாலை மீண்டும் சென்னைக்குச் செல்கிறேன்.

இக்கடிதம் கொண்டுவரும் அன்பர்கள் ஒரு சிவாலய கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள்; தங்கள் உதவியை நாடி வருகின்றார்கள். இப்போதுள்ள நெருக்கடியான நிலையில் தாங்களும் பிற அன்பர்களும் செய்யும் சிறு உதவியும் பேருதவியாகும். இத்தருமத்தில் ஈடுபடக் கூடிய அன்பர்களையும் தூண்டினால் நலமாகும்.

அன்பன்,
**ரா. பி. சேதுப்பிள்ளை.**

---

எண்ணத்தின் கனிவை எழுத்தில் காட்டும் கடிதம் அல்லவா இது! காலநிலை அறிந்த கடமையாளர்–கனிவாளர் – பேராசிரியர்!

— ந. ச.

## இணைப்பு—XVI

**நக்கீரர் கழகச் செயலாளர் திரு. சிறுவை மோகனசுந்தரம் அவர்கட்குப் பேராசிரியர் எழுதிய கடிதம்.**

R. P. Sethu Pillai, B. A., B. L., D. Litt ,
Professor of Tamil ,
University of Madras.

10, Second Main Rd.,
Gandhinagar,
Madras-20. 5-4-'61.

**அன்புடையீர்,**

தமிழ்ப்பெரியார் பெயர் தாங்கி மழலை மொழிகளால் நுங்கள் மனையகத்தை மகிழ்வித்த அருமைக் குழந்தை இயற்கை எய்திய செய்தியறிந்து வருந்துகின்றேன்.

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தல் ஆதிபகவன் காட்டும் மறக்கருணை என்று ஆன்றோர் அறிவுறுத்தியது உண்மையாயிற்று. கடத்தற்கரிய மனத்துயரைப் பொறுத்தற்கேற்ற அறிவின் திறத்தினை அருளுமாறு தமிழ்த்தாயின் கருணையை வேண்டுகிறேன்.

அன்பன்,
**ரா. பி. சேதுப்பிள்ளை.**

---

இக்கடிதம் வரைந்த இருபதாம் நாள் பேராசிரியர் அவர்களும் சிவனடியைச் சேர்ந்தார்கள். இக்கடிதம் அவர்கள் ஆண்டவனடி சேருமுன் எழுதிய கடைசிக் கடிதங்களுள் ஒன்றாகும். இக்கடிதம் காட்டும் அவர்கள் மனப்பண்பு நினைப்பார் நெஞ்சை நெகிழ்விக்கும்.

பேராசிரியர் எழுதிய கடிதங்களை வைத்திருக்கும் நண்பர்கள் அக்கடிதங்களின் படிகளைத் தந்து உதவ வேண்டுகிறேன்.

—ந. சி.

## பிற்சேர்க்கை—1

**Tamil Culture** என்ற முத்திங்கள் இதழைத் தோற்றுவித்தும் தமிழ்க்கலை மன்றம் கண்டும் உலகத் தமிழ் மாநாடுகளை உருவாக்கியும் தவத்திரு. டாக்டர் தனிநாயக அடிகளார் செய்துவரும் அருந்தமிழ்த்தொண்டிற்குத் தமிழ் கூறு நல்லுலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அவர்தம் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகிய 'தமிழ்த் தூது' தரும் செய்திகள் சில வருமாறு:

(1)

'மொழி நூலைக் கற்ற சிலர் திராவிட மொழிகளின் தனித்தன்மையை ஒருவாறு உணர்ந்திருந்தனர். ஆயினும், இந்திய மொழி என்றால் சம்ஸ்கிருதம் என்றும், இந்தியக் கலைகள் என்றால் வடகலைகள் என்றும், இந்திய நாடு என்றால் சிந்து கங்கைப் பெருவெளி என்றும், இந்தியப் பேரூர்கள் என்றால் பம்பாய், டில்லி, கல்கத்தா என்றும் நினைக்கும் அளவிற்கு இந்தியாவின் வடபிரிவினது பெருமையையே இதுகாறும் மாறுபட உணர்ந்துள்ளனர்'*

* தவத்திரு. டாக்டர் தனிநாயக அடிகளார்: 'தமிழ்த் தூது' (1962, பக். 14-15.

(2)

'இந்திய வரலாற்று நூல்களை எடுத்து நோக்குமின். Discovery of India என்றும், History of Indian Literature என்றும் பலபடப் புனைந்து வெளி வரும் ஏடுகளை விரித்துப் பார்மின். மாக்ஸ் முல்லர், வின்றர் னிட்ஸ் போன்றவர் முதலாகப் பலரும், வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர்.

அவ்விந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே, தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ, திராவிட நாகரிகத்தைப் பற்றியோ, ஒரு சொல்லேனும், ஒரு குறிப்பேனும், ஒரு கருத்தேனும் காணக்கிடையா. இந்தியப் பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர் மொழிவனவெல்லாம், திராவிடப் பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக் கலைகள், திராவிட மொழிகள்- இவற்றையே அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும், பல்லாண்டுகளாக நடுவுநிலை கடந்தோர் பலர், இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையின், இன்று இவ்வுண்மையை எடுத்துக் கூறுவதும், மக்கள் மனத்தில் ஐயம் விளைப்பதாக இருக்கின்றது. அங்ஙனம் எடுத்துக் கூறுதற்கும், பெரிதும் மனத்துணிவு வேண்டற்பாலதாயிற்று. தமிழராகிய நாமும், நமது இந்திய மொழிகளிலேனும், நம் தமிழைப் பற்றிய உண்மைகளை இதுகாறும் கூறினேம் அல்லேம்.

"மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே."

"பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே."

ஆதலின், உலகம் நம்மை உணராமலும், நாமே நம்மையுணராமலும், 'பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு, நாமமது தமிழர் எனக்கொண்டு' இங்கு உயிர் வாழ்ந்து வந்துள்ளோம்.*

* *தவத்திரு—டாக்டர் தனிநாயக அடிகளார்: 'தமிழ்த் தூது' (1962, பக். 28-29.*

(3)

பல்கலைச் செல்வர் பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் கட்டுரைகள் பலவும் நூல்கள் பலவும் அயலகங்களில் தமிழகத்தின் கலைச் செல்வாக்கைத் திறம்பெறக் காட்டுகின்றன. பாரிசில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் அவர்கள் இப்பொருள் பற்றிப்படித்த ஆய்வுக் கட்டுரை தனிச்சிறப்பு வாய்ந்தது இங்கே அவர்தம் ஆங்கில நூலொன்றிலிருந்து சில வரிகள் காணலாம்.:

The script and the temple towers of the Eastern Islands remind everyone of South India.

..........................................................................

Attempts are however made to minimise this influence of South India on the Eastern Islands...

..........................................................................

It is not our intention to deny the indigenous greatness of Javanese culture and civilisation. But history makes it abundantly clear that it is the contact with India, especially South India, that quickened its growth and development and gave it its peculiar form. Even if the shadow plays were the native ones of Java, in its fully developed form, it shows marked similarity to the shadow plays of Tamil Land. It will be presently seen that this art was popular in the ancient Tamil country long anterior to the Chaya Nataka, the Maha Nataka and the Balitung inscription.

It has a continuous tradition of at least two mill enniums, if not more.

※ The Pagent of Tamil Literature (1966)-pp. 114-15.

**பிற்சேர்க்கை—2**

தமிழர் உலகுக்கு வழங்கிய தனிப்பெருங்கொடைகளை எளிதில் உணர இனிது பயன்படும் நூல் இருபதாம் நூற்றுண்டுத் தமிழின் இமய வெற்றியாய் விளங்கும் **கலைக் களஞ்சியம்**. அதில் கண்டெடுத்த சில நன்மணிகள் வருமாறு:

**அகத்தியர் ***

மேலும் இவர் கடல் கடந்து கடாரம் அடைந்து, இந்தோனீசியா சென்று, போர்னியோ, குசத்திவீபா முதலிய தீவுகளில் தங்கி, இறுதியாக சயாம் அடைந்து, அங்கிருந்து கம்போடியா சென்று யாசோமதியாரை மணந்து வாழ்ந்திருந்ததாகவும் ஒரு செய்தி சொல்லப் படுகிறது.

(* கலைக்களஞ்சியம்—தொகுதி 1, பக்8)

**இந்தோ-சீனு ***

கோயில்களில் வணங்கப்பட்ட தெய்வங்களுள் நடராஜரும் ஒருவர்.

தெற்கு அனும் பிரதேசத்தில் கி. பி. 2ஆம் நூற்றுண்டில் சம்பா என்னும் இந்து இராச்சியம் நிறுவப் பட்டது. இதை நிறுவியவர்கள் தென்னிந்தியா விலிருந்து வந்தவர்கள் என்று கருதப்படுகின்றனர்.

* கலைக்களஞ்சியம்—தொகுதி 1, பக். 734-5

**இந்தோனீசியா**

போர்னியோவில் கி. பி. முதல் நூற்றுண்டிலேயே இந்துக்கள் குடியேறினர். 4-ஆம் நூற்றுண்டிலாண்ட மூலவர்மன் ஒரு யாகம் புரிந்தான். அதைக் குறிக்கும் கல்வெட்டுத் தென்னிந்திய பல்லவ லிபியில் இருக்கிறது.

இவ்வாறு இந்து நாகரிகத்தை இந்தோனீசியாவில் பரப்பியவர்கள் தென்னிந்தியர்களே என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. பல்லவர் காலத்துத் தமிழ் நாட்டுக் கல்வெட்டுகளில் காணப்படும் கிரந்த எழுத்தே இந்தோனீசியக் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. பல்லவ மன்னருடைய பெயர்களும் வர்மன் என்று முடியும். இந்தோனீசியக் கல்வெட்டுகள் குறிப்பிடும் சகம் என்னும் சாலிவாகன சகாப்தமே தென்னிந்தியாவில் வழங்கிவந்ததாகும். வட இந்தியாவில் வழங்கி வந்தது விக்கிரம சகாப்தம். ஒரு கல்வெட்டு, குஞ்சரகுஞ்சம் என்னும் ஊரைச் சேர்ந்த அரச வமிசத்தானை சஞ்சயன் இலிங்கப் பிரதிட்டை செய்ததாகக் கூறுகிறது. வராக மிகிரரால் பிருகத் சங்கிதையில் குஞ்சர என்று குறிக்கப்பட்டுள்ள தென்னிந்திய ஊர் அதுவே என்று கருதப்படுகிறது. மற்ஞெரு கல்வெட்டு அகத்தியர் உருவம் பிரதிட்டை செய்யப்பெற்றதாகக் கூறுகிறது. அகத்தியர் வழிபாடு மிகுந்தது தென் இந்தியாவிலேயே. இவ்வாறு இந்தோனீசியாவுக்குத் தென் இந்தியாவிலிருந்து சென்றவை இந்து மதமும் நாகரிகமுமாகும்.

இந்து மதக்கோயில்கள் பெரும்பாலும் காணப்படுவது 6,500 அடி உயரமுள்ள தயாங் (Dieng) பீடபூமியிலாகும். அங்குள்ள ஐந்து கோயில்களும் மாமல்லபுரத்திலுள்ள கோயில்களைப் போலப் பஞ்ச பாண்டவர்

பெயரால் காணப்படுகின்றன. ஆயினும் இவை அனைத்தும் சிவ வழிபாடுடையனவே. இக்கோயில்கள் திராவிடச் சிற்ப முறையைத் தழுவியவையாகும்.

* கலைக்களஞ்சியம்—தொகுதி 1, பக். 740-1.

**இலங்கை ***

'நாலந்தாவில் பிற்காலத்துப் பல்லவ முறையில் கட்டப்பட்ட கோயில் ஒன்று காணப்படுகிறது. சோழ முறையிலும் பாண்டிய முறையிலும் அமைக்கப்பட்ட சிவன் கோயில்கள் பொலனறுவையில் காணப்படுகின்றன ......................பொலனறுவையில் எழில் மிக்க நடராஜ விக்கிரகமும் வேறு சில சைவ விக்கிரகங்களும் கிடைத்திருக்கின்றன. இவை தென் இந்தியாவில் தோன்றியவையாக இருக்கலாம்.'

* கலைக்களஞ்சியம்-தொகுதி 2, பக். 113.

**கொரியா ***

### கடல் கடந்த கண்ணகி

கொரியாவில் இந்தியக் கலையும் பண்பாடும் சீனு வாயிலாகப் பரவின. கியோட்டோவில் (Kyto) ஆடப்படும் ஒரு தனிப்பட்ட சமய நடனம் இன்றும் கண்ணகி என்ற இந்தியப் பெயராலேயே வழங்கப்பட்டு வருகிறது. இது கோயில் கன்னிகளால் ஆடப்படுவது, தென்னிந்தியாவிலிருந்து சென்றதாகச் சொல்லப்படுகிறது.

* கலைக்களஞ்சியம் தொகுதி-3, பக். 344.

**தாய்லாந்து ***

'தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்த ஒரு வாணிகச் சங்கத்தைக் குறிப்பதும் கி. பி. 8ஆம் நூற்றாண்

டைச் சேர்ந்ததுமான ஒரு தமிழ்க் கல்வெட்டுக் காணப் படுகிறது.'

(✲ கலைக்களஞ்சியம்-தொகுதி 5, பக். 580.)

**நிழலாட்டம் ✲**

மலபார் நிழலாட்டம். தமிழ் நாட்டோடு தொடர்ந்துள்ள சில மலையாளப் பகுதிகளில் இந்த ஆட்டம் வழக்கிலுள்ளது. **கம்பராமாயணக் கதையே இதற்கு அடிப்படை.** விளக்கங்களும் உரையாடல்களும் தமிழிலேயே நடைபெறும்.............................

இந்தியாவில் தோன்றிய இந்த நிழலாட்டம் ஜாவா, சுமத்ரா, போர்னியோ, சீனு முதலிய இடங்களுக்கும் பரவியுள்ளது.

✲ 1. இந்தியா என்பது தமிழ் இந்தியாவையே.
2. கலைக்களஞ்சியம்–தொகுதி, பக். 482.

**பரிபாடல் ✲**

'...................இந்த அம்பா ஆடலே பிற்காலத்தில் திருவெம்பாவையாக மாறிச் சயாம் நாடு வரையில் பரவியது; இதனைச் சயாம் நாட்டினர் 'லோரிப்பாவாய்' என்றும், 'லோ–ஜின்-ஜா' என்றும் சொல்லுகின்றனர்.

✲ 1. கலைக்களஞ்சியம்-தொகுதி 6, பக். 767.
2. இப்பொருள் பற்றிய விளக்கப்படங்களோடு கூடிய விரிவான ஆராய்ச்சிக்குப் பார்க்க. பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீ. அவர்கள் -சயாமில் திருவெம்பாவை-1961.

**பொம்மலாட்டம் ✲**

'இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களையும் பொம்மலாட்டத்தில் தென் இந்தியாவில்

காட்டுகிறார்கள். பொதுவாகத் தென்னிந்தியர் பொம்மலாட்டம், புராணக்கதைகளைக் காட்டும். ஆனால், வட இந்தியப் பொம்மலாட்டத்திலே வரலாற்று நிகழ்ச்சிகளே பெரிதும் இடம்பெறும்...............................
ஜாவா, இலங்கை முதலிய தீவுகளிலும் புராண சம்பந்தமான பொம்மலாட்டம் நடக்கிறது.'

* கலைக்களஞ்சியம்-தொகுதி 7, பக். 657.

**பிற்சேர்க்கை-4**

பின் வரும் சில குறிப்புக்களும் நினைவில் பொறிக்கத் தக்கன:

(1) முதலாவதாக 1962 செப்டம்பர் 13ஆம் நாள் முதல் 12 நாள்கள் நடைபெற்ற இளையாற்றங்குடி 'வித்வத் சதஸ்' பற்றி 1962 அக்டோபர் 7, 14 நாள்களில் வெளிவந்த 'கல்கி' இதழில் இருக்கும் 'கலைவழியே கடவுள் காட்சி' என்னும் கட்டுரையில் காணப்பெறும் சில செய்திகளைக் காண்போம்:

"பாண்டிச்சேரி இந்தியத் தத்துவ ஆராய்ச்சிக்கழகத் தலைவரும் பிரஞ்சுக்காரருமான டாகடர். ஜா. பில்லியோஸா "தாய்லாந்து, ஜாவா முதலிய நாடுகளில் இந்திய ஆகம சிற்பங்களின் வளர்ச்சி" என்ற பொருள் பற்றி விளக்கப் படங்கள் வரைந்து காட்டி அரியதோர் உரையாற்றினார்...............................

சாக சகாப்தத்திலிருந்தே இந்தோ சீனாவிலும், இந்தோனீசியாவிலும் இந்திய நாகரிகம் பரவியுள்ளது; அதிலும் முக்கியமாகத் தென்னக நாகரிகம் பரவியுள்ளது என அவர் குறிப்பிட்டது பூரிப்பு உண்டாக்கியது. தென்னாடு, வடநாடு என்ற பேத உணர்ச்சியில்லாமல் அந்நாள்களில் அந்த அந்நிய நாடுகளில் உள்ள கல்

வெட்டுகளில் தமிழ்ப் பதங்களையுங்கூட சம்ஸ்கிருதத்தில் பொறித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பின்னர்த் தாய்லாந்து தூதுவர் மேன்மை தங்கிய சுகிச் நிர்மன் ஹேமிந்தா 'தாய்லாந்தின் பண்பாடும் ஆலயங்களும்' என்னும் பொருள் பற்றிக் கருத்துச் செறிவும் கவர்ச்சியும் மிக்க உரை ஆற்றினார்.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை திரிஎம்பாவை என்னும் பெயரில் இன்றும் தாய்லாந்தில் இருப்பதாகவும், திரியெம்பாவை விழா எனக் கொண்டாடப்படுவதாகவும், அது தமிழரின் திருவாதிரைத் திருநாள்தான் என்றும் கூறினார்..................நெய், பவளம் போன்ற பல தமிழ்ச்சொற்களும் அதே பொருளில் அவர்கள் மொழியில் வழக்கிலிருப்பதாகவும் அவர் கூறினார்.

**பிற்சேர்க்கை–5**

※'ஹவாய்த் தீவுகளிலும், பொதுவாகப் பசிபிக்குப் பெருங்கடலின் தீவுகளிலும் நம் சங்ககாலப் பழக்கவழக்கங்களிற்சில இடம்பெறுவது தோன்றுகின்றது. மலர்களை அகவொழுக்கத்திற்கும் புறவொழுக்கத்திற்கும் அறிகுறிகளாகக் கையாண்டு வருகின்றனர்.'

(※ தவத்திரு தனிநாயக அடிகளார். தமிழ்த் தூது (1962) பக். 11.

கீழ்த்திசை நாடுகளில் தமிழ்ப்பண்பாடு மிகவும் பழமையான காலத்திலேயே பரவியது. சாவகம், சுமத்திராப் போன்ற இடங்களில், இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ் மக்கள் குடியேறியிருக்கவேண்டுமென்பது கெல்டோன் போன்ற அறிஞர்களின் கருத்து. தமிழ்நாட்டிலிருந்து மரக்கலங்கள் அந்நாடுகளுக்குப் பண்டு சென்று வாணிகம் நடத்தின என்றும், வாணி

கம் நிலைபெற்று நீண்டநாள் நடந்தது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இன்றும், சுமத்திராவில் வாழ்ந்துவரும் 'காலோ பட்டாக்' வகுப்பினரின் உட்பிரிவினராயிருக்கும் சிம்பிரிங் என்போர், தம்மைச் 'சோளியர்', 'சேரர்', 'பாண்டியர்', 'கலிங்கர்' என்று வகுத்திருக்கின்றனர்.

சாவகத்தில் எழுப்பப்பெற்றிருக்கும் 'பிரம்பானுள்' எனும் கோயில், **சைவ சித்தாந்தத் தத்துவங்கள் அடிப்படையாகக்கொண்ட கோயில் என்பர்.** அதே போன்று, 'தியங்' சமவெளியில் உள்ள கோயில்கள் பலவும், 'பனத்தரான்' கோயிலும், கணபதி அகத்தியருடைய கணக்கற்ற சிலைகளும் திராவிடத் தென்னிந்திய மக்களின் கட்டடச் சிற்பக் கலைகளை ஒட்டியே அமைக்கப்பெற்றவை.

இந்தோனேஷியா மொழியில் வழங்கும் சொற்கள் பல, அம்மக்கள் தமிழ் நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பைக் குறிப்பன. எடுத்துக்காட்டாக, 'கப்பல்' என்பதைக் 'கபல்' என்கின்றனர். அவர் வழங்கும் வேறு சில தமிழ்ச் சொற்கள் 'வாடை', 'சுக்கு', 'இஞ்சி,' 'கஞ்சி', 'கொத்துமல்லி', 'குதிரை', 'கூடை', 'பெட்டி', 'பிட்டு'ப் போன்றவை. 'தாலி' என்ற சொல்லைக் 'கொடி' என்ற பொருளிலும் பயன்படுத்திக்கொள்கின்றனர். 'அம்மா', 'அக்கா' 'மாமா', 'தம்பி' போன்ற உறவுச் சொற்களும் அங்குப் பேச்சு வழக்கில் உள.

பாலித்தீவின் பண்பிற்கும் சமூக வாழ்விற்கும் இந்து சமயமே அடிப்படை. அங்கிருக்கும் ஓரிடத்திற்குக் 'கப்பல்' என்பது பெயர். அவ்விடத்தில் தமிழ் நாட்டுக் கப்பல் ஒன்று கரையில் மோதுண்டு உடைந்ததாகக் கூறுவர். பொதுவாகத் தென்கிழக்குத்திசை நாடுகளின் இசையும், நாட்டியமும், நிழற்கூத்தும்

இந்தியக் கலைகளுடன் தொடர்புடையனவென்று கருது வதற்கு இடமுண்டு..................இடங்களுக்குச் சென் றால், அங்கு நான் காணும் தமிழரின் சின்னங்கள் இன் னும் பெருவியப்பைத் தருகின்றன.

வியட்நாமின் துரானில் இருக்கும் பழம்பொருட் சாலையில் உள்ள நந்திகளைப்போல் அழகுவாய்ந்த நந்தி களைத் தமிழ் நாட்டில் நான் கண்டிலேன். மேலும், வியட்நாமின் பல மாவட்டங்களில் சிவலிங்கம் அமைத்த கோயில்கள் பல உள்ளன. மரங்களும் செடி களும் அக்கோயிற்சுவர்களின்மேல் இன்று வளர்ந்தும் படர்ந்தும் வருகின்றன. அந்நாட்டின் ஒரு பகுதி சம்பா என்றே வழங்கப்பெற்றது. சம்பாவில் வாழ்ந்து வரும் சாம்பரின் (Sambar) வரலாற்றைத் தமிழ் அறிஞர்கள் படித்தல் வேண்டும். கம்போதியாவிலிருக் கும் அங்கோர்வாட், அம்கொர்தொம் எனும் பெரு நகரும், கட்டடமும், கிமோர் (Kymor) எனும் இனத் தவரால் பத்தாவது பதினோராவது நூற்றாண்டுகளில் சிறப்புற எழுப்பப்பெற்ற வான் வருடும் கட்டடங்கள். அங்குச் சுவர்கள்மீது செதுக்கப்பெற்றிருக்கும் மகா பாரதம், இராமாயணம் முதலிய வரலாற்றுச் செய்தி கள், இவை யாவையும் இதுகாறும் தமிழ் அறிஞர் பார்வையிட்டனர் அல்லர். அங்குள்ள கட்டடங்கள் பல, சிலைகள் பல, யானை உருவங்கள் பல பல்லவ ருடைய கட்டடச் சிற்ப முறைகளைக் காட்டுவன. கிமேர் இனத்தாரின் அரசரின் பெயர்களும் வர்மன் என் னும் விகுதியைக் கொண்டவை. 'அம்கோர்' என்னும் சொல்லும் 'நகர்' என்னுந் திராவிடச் சொல்லின் திரி பாகும்.

கம்போதியாவின் அரண்மனையில் நடைபெற்று வந்த நாட்டியக்கலை பரதநாட்டியக் கலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது. தைலாந்தில் சிறப்பாகத் தமிழ்ப் பாக்களைத் தை மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடி வருகின்றனர் என்பதை இன்று தமிழருள் சிலரேனும் அறிவர். நான் பாங்கொக்கு மாநகருக்குச் சென்றிருந்த பொழுது இந்து சமய பிராமணர் எனப்படுபவர் இருக்கும் கோவில்களைப் பார்க்கச் சென்றேன். அங்கு அவர்களுடைய ஏடுகளிலிருந்து தம் மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடிவரும் செய்யுள்களை அவர்கள் பாடிய பொழுது தமிழ் என்று அறியாது அவர் பாடும் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை' என்னும் திருவெம்பாவைப் பாட்டைக் கேட்டுப் பெருவியப்பு எய்தினேன்.

திருப்பாவை, திருவெம்பாவைத் திருநாள்களைப் பண்டு மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள் தைநாட்டு மக்கள். அக்கொண்டாட்டம் பொதுமக்களின் கொண்டாட்டமாயும் அமைந்தது என்பதற்கு அங்குள்ள மாபெருங்கோயிலுக்கு அண்மையில் உள்ள உயர்ந்த ஊஞ்சல் நிலைகளே சான்றுவன. இன்றும் திருப்பாவை, திருவெம்பாவைத் திருநாள்களை அப்பிராமணர்கள் கொண்டாடி வருகின்றார்கள். அங்குள்ள அவர்களது கோயில் அமைப்பும் வழிபாடும் தென்னிந்தியக் கோவில் அமைப்புக்களையும், வழிபாட்டு முறையினையும் தழுவி அமைந்ததாக அவர்களின் அரசகுரு எனக்குக் கூறினார்.

தை மொழியில் இருக்கும் இராமாயணம் வான்மீகியின் இராமாயணத்தைத் தழுவியது அன்றென்றும், பெரும்பாலும் கம்பரின் இராமாயணத்தையே தழுவி

இருத்தல் கூடுமென்றும் பியானுமன் எனும் தை அறிஞர் எனக்குத் தெரிவித்தார். மேலும், தம் மொழியில் 'ஐ' விகுதிகளும் 'அன்' விகுதிகளும் கொண்ட சொற்கள் பலவென்றும், தம் இராமாயணத்தின் காவியச் செல்வரின் பெயர்கள் பெரும்பாலும் இராமன், சுக்கிரீவன் என்ற தமிழ்ப் பெயர்களைப் போலவே அமைந்திருக்கின்றனவென்றும் குறிப்பிட்டார்.

மேலும், தை நாட்டின் வெண்கலப் படிவங்கள் பல்லவர் சோழர் காலத்துத் தமிழ் நாட்டுப் படிவங்களைப் போன்றவையென்று தை நாட்டில் சிற்பம் கற்பிக்கும் இத்தாலிய சிற்பியார் ஒருவரும் எனக்குச் சொன்னார். அந்த அறிஞரே 'தங்கம்' என்னும் சொல் தமிழிற்குச் சீனத்திலிருந்து தை நாடு வழியாக வந்த ஒரு சொல் என்றும் கருதினர்.

* *தவத்திரு தனிநாயக அடிகள்; 'தமிழ்த்தூது' (1962,) பக். 116—120.*

**தவத்திரு தனிநாயக அடிகளாரின் 'ஒன்றே உலகம்' தரும் செய்திகள் சில:**

* கம்போதியாவின் கட்டடங்களில் முதன்முதல் அங்கோர்வாட்டையே பார்க்கச் சென்றேன். 'அங்கோர்' என்னுஞ் சொல் 'நகர்', 'நகரா', என்னுஞ் சொல்லின் திரிபு. 'நகர்' என்பது வடமொழிச் சொல்லென்று பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆயினும் அச்சொல், வடமொழியொழிந்த ஏனைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இல்லாமையாலும், திராவிடர் நகரங்களை அமைப்பதில் பண்டு சிறந்து விளங்கியதாலும், 'நகர்' என்னும் சொல் திராவிட மொழிக்கே பண்டு தொட்டு உரிய சொல் என்று கருதுவதற்கு ஆதாரங்கள் சில உள.

கம்போதியாவின் கட்டடச் சிற்பக் கலைகளின் சின்னங்களைப் பார்க்கும்பொழுது, அவை தமிழ் நாட்டுக் கலைகளை எங்ஙனம் தழுவியவையெனும் வினு எழுவதியல்பு. அங்கோரின் பெருமையும் பல்லவர் சோழரின் பெருமையும் ஒரே காலத்தவை. அங்கோர்வாட்டின் கோபுரங்களையும் கட்டட அமைப்புகளையும், திருமாலின் உருவங்களையும் யானைப் பீடத்தையும் ஆராயும்பொழுது மாமல்லபுரம், காஞ்சீபுரம் ஆகிய இடங்களிலுள்ள கட்டடச் சிற்பக்கலையைக் கிமோர் அறிந்திருக்கவேண்டுமென்ற நம்பிக்கை உறுதியாக உண்டாகிறது. மேலும், இவ்வரசரின் 'அன்' விகுதி பெற்ற பெயர்களாகிய சயவர்மன், இந்திரவர்மன், சூரியவர்மன் போன்ற பெயர்கள், பல்லவ மன்னரின் எத்தகைய தொடர்பைக் கொண்டவர்கள் என்ற கேள்வியை எழச் செய்யும்.

அங்கோரை நிறுவிய கிமோரின் வழித் தோன்றல்களைக் கண்டு பேச வேண்டுமென்று அவர்கள் வாழும் சில சிற்றூர்களுக்குச் சென்றேன். பிரஞ்சு மொழி சிறிதறிந்த சிலருடன் உரையாடலானேன். ஆனுல் அவர்கள் தாராளமாகப் பேசவில்லை. தம் மொழியில் குதிரையை 'மா' என்றும், கப்பலைக் 'கப்பால்' என்றும் கூறுவதாகத் தெரிவித்தனர்.

வியட்நாமின் கிழக்குப் பகுதிக்குச் சென்ருல் அங்குள்ள பெருவீதியின் ஓரத்தில் சாம்பர் கட்டிய பல தனிக் கோபுரங்கள் தோற்றமளிக்கும். இக்கோபுரங்கள் பெரும்பாலும் மாமல்லபுரக் கோபுர மரபில் கட்டப்பட்டவை.

நடுச் சாவகத்திலும் கிழக்குச் சாவகத்திலும் உள்ள பொருட்காட்சி நிலையங்களில் கணக்கற்ற நந்திச் சிலை

களும் சிவபெருமான் சிலேகளும் அகத்தியர் சிலேகளும் காணப்படுகின்றன. தமிழ் நாட்டுடன் இந்தோனீசியர் வைத்த தொடர்பு மிகவும் அழுத்தமான தொடர்பு என்பதற்கு அங்குள்ள பல்லவ முறைச் சிற்பங்களும் கோயில்களும் சான்றளிக்கின்றன.

பாலியில் கோயிலேக் 'கூயில்' என்று அழைக்கின்றனர்.

பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பியர் முதன்முதல் அந்நாட்டிற்குச் சென்றனர். கிறித்தவத் திருத்தொண்டரும் தம் திருமறையைப் பரப்புவதற்காக அந்நூற்றாண்டிலேயே அங்குச் சென்றிருந்தனர். அவருள் தலே சிறந்தவர் தூய சவேரியார் ஆவர். சவேரியார் ஜப்பானுக்கு முதன்முதற்சென்ற பொழுது, தமிழ் நாட்டு இளேஞன் ஒருவன் அவருடன் சென்றனன் எனக் கூறப்பெற்று வருகின்றது.

இவர்கள் எனக்குப் பசிபிக் தீவுகளில் வழங்கும் சில பழக்கவழக்கங்கள் தமிழ்நாட்டுப் பழக்கவழக்கங்களேப் போலத் தோன்றின என்று அறிவித்தனர்.

எதியோப்பியப் பகுதிப் பேராசிரியர் ஓர் ஐரோப்பியர்; இவர் பன்மொழிப் புலவரும் ஆவார். என்னுடன் உரையாடும்பொழுது இந்திய மக்களே, கொண்டார் என்னும் இடத்தில் உள்ள அரண்மனேயைக் கட்டியிருக்கவேண்டும் என்ருர். பெருங்கற்பாறைகளேச் செதுக்கி அமைத்த கோயில்கள் மாமல்லபுரத்தில் இருப்பது போல வலிபெல்லா என்னும் இடத்திலும் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

இன்றைய ஈராக் எனும் நாட்டின் நிலப்பரப்பில் எத்துணேயோ பழைய நகர்களும் பண்பாட்டுச்

சின்னங்களும் புதைந்து கிடக்கின்றன. அசீரியா (Assyria) சுமேரியா (Sumeria) எனும் நாடுகள் இங்குத் தான் இருந்தன. யூபரிட்டிஸ் (Euphrates) தைகிரிஸ் (Tigris) எனும் பேராறுகள் இப்பண்பாடுகளுக்குத் துணைக் காரணமாக இருந்தன. ஏனெனில் இவற்றின் கரையோரங்களில் எழுந்த நிம்ரூட், சுமேர், அக்காட் எனும் நகர்களே கிறிஸ்துவுக்கு மூவாயிரம் நாலாயிரம், ஆண்டுகள் முற்பட்ட வரலாற்றை உடையன. இந் நாடுகளே சிந்து நதிப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவையாகக் கருதப்படுகின்றன. சிந்து நதியின் பண்பாட்டில் நாம் காணும் சின்னங்களும் எழுத்து முறைகளும் இந்நாடுகளுடன் தொடர்புள்ள வையாகக் கூறப்படுகின்றன. தமிழர் இந்நாடுகளுடன் பண்பாட்டுத் தொடர்புடையரெனக் கூறுப. காகத்தை யும் தோகையையும் யானைக்கொம்பையும் இந்நாடு களுக்கு முதல்முதல் திராவிட மக்களே கொண்டு வந்த தாகக் கூறுவாருளர். மேலும் 'ஊர்' என்ற நகரின் பெயர் மாபெருங் கல்தேயருடைய ஊரைக் குறிக்கின் றது. அவருடைய பெருங்கடவுளுக்கு 'ஆண்' என்ற பெயர் உண்டு. அவர்களின் கோயில்களிலும், தமிழ்க் கோயில்களில் பணி செய்யப் பெண்களை நியமித் திருந்தது போலக் கோயிற்பணிக்கென்று பெண்களை நியமித்திருந்தனர்.

*** ஒன்றே உலகம்-பக். 23, 26, 27, 30, 42, 46, 73, 208-9, 226-7.**